# TNPSC தேர்வுப் பெட்டகம்

# நடப்பு நிகழ்வுகள் - அக்டோபர் 2023

www.tnpscthervupettagam.com













SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
Best Academy for Civil Services Exam Coaching

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் ........ 11
தமிழ்நாடு செய்திகள் ........ 22
தமிழ்நாடு மாநிலப் பல்லுயிர் வாரியம் ........ 22
2024-25 ஆம் ஆண்டில் மாநிலத்தின் உச்ச தேவை ........ 22
15 ஓதுவார்கள் நியமனம் ........ 23
இந்தியாவின் முதல் பசுமை ஆற்றல் தொல்லியல் தளம் ........ 23
முதன்மை விலங்குகள் பராமரிப்பு மையம் ........ 23
தமிழ்நாட்டில் இரப்பர் தோட்டங்கள் ........ 24
சோழர் கால மானம்பாடி கோவில் ........ 25
தமிழ்நாட்டில் PE-VC முதலீடுகள் ........ 25
இலங்கை அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை ........ 26
வாச்சாத்தி சம்பவம் 1992 ........ 26
2023 ஆம் ஆண்டில் சம்பா சாகுபடி ........ 27
அதிகபட்ச மின்னாற்றல் பற்றாக்குறை ........ 27
காந்தி ஜெயந்தி தின கிராமசபைக் கூட்டங்கள் ........ 28
கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு ........ 28
இந்தியாவில் உள்ள பறவைகளின் நிலை குறித்த (SOIB) அறிக்கை 2023 ........ 29
அரிதான மற்றும் அச்சுறுத்தப்பட்ட நிலையில் உள்ள தாவரங்கள் பாதுகாப்புத் திட்டம் ........ 29
சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு ........ 30
உடன்குடி பனங்கருப்பட்டி – புவிசார் குறியீடு ........ 30
2023 ஆம் ஆண்டில் காவிரி நதி நீர் பங்கீடு ........ 31
தமிழ்நாடு எரிசக்தி திட்டம் 2023 ........ 31
தமிழ்நாட்டில் பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதம் 2023 ........ 32
முதல் நீலகிரி வரையாடு தினம் ........ 32
பாரதி எழுத்து வடிவம் ........ 33
உலகின் மிக நீளமான பாம்பு இனம் ........ 33
வெகுஜன விரைவுப் போக்குவரத்து அமைப்பு (MRTS) ........ 34
2023-24 ஆம் நிதியாண்டில் மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் ........ 34
2023-24 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதி ஒதுக்கீடுகள் ........ 35
இலங்கைக்கு பயணியர் படகு சேவை ........ 35
சமாதான் திட்டம் மறுஅறிமுகம் ........ 36
இஸ்ரோவின் இரண்டாவது விண்வெளி நிலையம் ........ 36
மோட்டார் வாகனங்களுக்கான புதிய ஆயுட்கால வரி விகிதம் ........ 37
பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் ........ 38
ஆம்பூர் சமணர் குகை ........ 39

நீலகிரி வரையாடு வளங்காப்பு திட்டம் ... 39
கணித்தமிழ் 24 ... 40
தேர்தல் நேரப் பறிமுதல் மேலாண்மை அமைப்பு ... 41
குழந்தைகளில் ஊட்டச்சத்து குறைபாடு மேலாண்மைக்கான நெ றிமுறை ... 42
முதல் திலபியா பர்வோவைரஸ் பாதிப்பு ... 43
செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முன் எச்சரிக்கை அமைப்பு ... 43
முதுவன் பழங்குடியினர் ... 44
ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரவரிசை ... 45
உலக எழுத்துரு தரநிலை ... 45
லிக்னைட் உற்பத்தி ... 46
வழக்கறிஞர்களின் உடுப்பு நெறிமுறை ... 46
தமிழ்நாடு வரைவு வாக்காளர் பட்டியல் 2023 ... 47
பிச்வாய் ஓவியம் ... 47
1,300 ஆண்டுகள் பழமையான பல்லவ ஓவியங்கள் ... 48
புலிகளைப் பேணிக் காத்து வனத்தில் விடுதல் திட்டம் ... 49
தேசியச் செய்திகள் ... 49
நான்காவது பாலின சாம்வாத் ... 49
2017 ஆம் ஆண்டு HIV சட்டம் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ... 50
நிலநடுக்க முன் எச்சரிக்கை அமைப்பு ... 50
இந்திய முதியோர் அறிக்கை 2023 ... 51
பழங்குடியினரின் நில உரிமை கோரல்கள் பற்றிய புள்ளி விவரங்கள் ... 52
2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் மின் தேவை ... 53
சங்கல்ப் சப்தா ... 54
CRIIIO 4 Good ... 54
1994 ஆம் ஆண்டு கம்பிவட தொலைக்காட்சி வலையமைப்பு விதிகளில் முக்கிய திருத்தங்கள் ... 55
வெளிநாட்டு நிதியுதவி (ஒழுங்குமுறை) திருத்த விதிகள், 2023 ... 56
தேசிய மருத்துவ ஆணையத்தின் புதிய வழிகாட்டுதல்கள் ... 57
தேசிய மஞ்சள் வாரியம் ... 57
'ஷ்ரம்தான் நிகழ்வு' ... 58
106வது சட்டத் திருத்தம் ... 58
ஸ்வச் பாரத் திட்டம் பற்றிய உலக வங்கியின் அறிக்கை ... 59
மக்களவை உறுப்பினர் தகுதி நீக்கம் ... 60
பண மசோதா பயன்பாடு குறித்த எதிர் மனுக்கள் ... 61
சாகர் பராக்கிரமா கட்டம்-IX ... 62
ஆளில்லா விமானங்கள் (திருத்தம்) விதிகள், 2023 ... 62
சிந்து சமவெளியில் மாபெரும் இடுகாடு ... 63
UMMEED வழிகாட்டுதல்கள் ... 64
சக்ரவத் பயிற்சி 2023 ... 65
குறைந்த வேலைவாய்ப்பின்மை விகிதம் 2023 ... 65

ஷ்ரேஷ்டா திட்டம் .... 66
முக்கிய கனிமங்களுக்கான உரிமத் தொகை விகிதங்கள் .... 67
அஜய் நடவடிக்கை .... 68
இந்தியாவில் தகவல் ஆணையங்களின் செயல்திறன் .... 68
பீமா வாஹக் பற்றிய வழிகாட்டுதல்கள் .... 69
இந்திய இராணுவப் பிரிவுகளின் பாரம்பரிய விழா .... 70
இந்தியா- சுவிட்சர்லாந்து இடையிலான 75 ஆண்டுகால நட்புறவு .... 70
தேசியப் பருவநிலை சேவைக் கட்டமைப்பு .... 71
IGMS 2.0 பொது குறைதீர்ப்பு இணைய தளம் .... 72
மருத்துவம் மற்றும் மருந்து உற்பத்தி துறைக்கான திட்டங்கள் .... 72
மேரா யுவ பாரத் (எனது பாரதம்) .... 73
ஒரு மில்லியன் கல்வி சான்றிதழ் .... 73
தேசிய அளவிடல் வலையமைப்பு .... 74
உள்ளாட்சி ஜனநாயகம் பற்றிய அறிக்கை .... 75
சாகர் மைத்ரி .... 75
தேசியப் பசுமை வரவுத் திட்டம் .... 76
6வது NeSDA – முற்போக்கு மாதாந்திர அறிக்கை .... 77
கிழக்கத்திய பிரத்தியேக சரக்குப் போக்குவரத்து வழித்தடச் செயலாக்கம் .... 78
கருவில் இருக்கும் குழந்தையின் உரிமைகள் .... 79
முதலாவது IndiaAI அறிக்கை .... 79
பொலிவுரு நகரங்கள் திட்டம், இந்தியா : நிலையான மேம்பாட்டு இலக்குகளை உள்ளூர்மயமாக்குதல் .... 80
மருந்தியல் குறிப்பேடு கலந்துரையாடல் குழு .... 81
2022-23 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் தோட்டக்கலை உற்பத்தி .... 81
நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்: 2023 ஆம் ஆண்டிற்கான ASICS அறிக்கை .... 82
2024-25 ஆம் ஆண்டின் ராபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை .... 83
2023 ஆம் ஆண்டிற்கான ATMS தரநிலைகள் மற்றும் விவரக்குறிப்புகள் .... 84
தன்பாலின திருமணம் தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு .... 84
உலக கடல்சார் இந்தியா உச்சி மாநாடு .... 85
தற்காலிக நிலக்கரி புள்ளி விவரங்கள் 2022-23 .... 85
ஒரே நாடு, ஒரே மாணவர் அடையாள அட்டை .... 86
அப்னா சந்திரயான் (உங்கள் சந்திரயான்) .... 87
இந்தியாவின் வெப்ப அலை மிகுந்த இடங்கள் .... 87
நாட்டின் வேலைவாய்ப்புக் குறித்த கண்ணோட்ட அறிக்கை .... 88
PM SVANidhi திட்டம் .... 89
INS இம்பால் .... 90
POSH சட்டத்தின் கீழ் மாவட்ட அதிகாரிகள் .... 90
குறைக்கடத்தி துறை பற்றிய ISRC அறிக்கை .... 91
கழிவுநீர் அகற்றும்போது ஏற்படும் உயிரிழப்பு மற்றும் உடல் குறைபாடுகள் தொடர்பான இழப்பீடு .... 91

மேல்முறையீட்டுத் தீர்ப்பாய விதிகள் 2023 .......... 92
வாடகைத் தாய் (ஒழுங்குமுறை) விதிகள், 2023 .......... 93
சர்வதேசச் செய்திகள் .......... 94
ஷீலாண்டியாவின் புதுப்பிக்கப்பட்ட வரைபடம் .......... 94
ஐக்கிய நாடுகள் சபையின் நாகோர்னோ-காராபாக் திட்டம் .......... 94
ஹூஷ் அதிவேக இரயில் .......... 95
அர்மேனியா – சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் .......... 95
அல்-அக்ஸா ஃபிளட் நடவடிக்கை .......... 96
AIBD அமைப்பின் தலைமை .......... 97
அமெரிக்க சபாநாயகர் கெவின் மெக்கார்த்தி .......... 97
இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கத்தின் தலைமை .......... 98
ஆபத்திலுள்ள உலகப் பாரம்பரியத் தளங்கள் .......... 98
எண்ணிம சேவை வரிகள் தொடர்பான பலதரப்பு ஒப்பந்தம் .......... 99
கப்பல்களின் கடன் ஈடு விற்பனை தொடர்பான பெய்ஜிங் உடன்படிக்கை .......... 99
ஐரோப்பாவின் முதல் தனியார் துறை ஏவுகலம் .......... 100
நிலையான நிதி: ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல் 100
ஹைதி பாதுகாப்பு திட்டம் .......... 101
புடினின் கிர்கிஸ்தான் பயணம் .......... 101
உலகின் முதல் பசுமைப் பத்திரம் .......... 102
UNHRC அமைப்பின் புதிய உறுப்பினர்கள் .......... 102
யானைக்கால் நோய் ஒழிப்பு .......... 103
2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அமேசான் காட்டுத்தீ .......... 103
ஆப்பிரிக்க கடன் மதிப்பீட்டு நிறுவனம் .......... 104
சீனாவின் அணு ஆயுதக் குவிப்பு .......... 105
ஐநா பான் உச்சி மாநாடு 2023 .......... 105
வேளாண்மை மற்றும் உணவுப் பாதுகாப்பில் பேரிடர்களின் தாக்கம் .......... 106
ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு மற்றும் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைப் பயிற்சி .......... 107
'பெரிய, வலுவான, சிறந்த' பல்தரப்பு மேம்பாட்டு வங்கிகளுக்கான செயல் திட்டம் .......... 107
அண்டார்டிக் பகுதியில் முதலாவது பறவைக் காய்ச்சல் பாதிப்பு .......... 108
பொருளாதாரச் செய்திகள் .......... 109
முக்கியத் துறைகளின் உற்பத்தி வளர்ச்சி .......... 109
50 ஆண்டு வரம்பு நிறைவு கொண்ட பத்திரம் .......... 109
ஏஞ்சல் வரி விதிகளில் மாற்றம் .......... 110
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் .......... 111
நாசாவின் OSIRIS-Rex விண்கலம் .......... 111
பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் கலனில் இயங்கும் பேருந்து .......... 111
சந்திரயான்-3 விண்கல சமிக்ஞை நிறுத்தம் .......... 111
ஆதித்யா L1 - STEPS .......... 112
சிட்ரான் .......... 113

ஆதித்யா L1 – புவி ஈர்ப்பிலிருந்து வெளியேற்றம் ........ 114
பார்க்கர் சூரிய ஆய்வு கலத்தின் புதிய வேகப் பதிவு ........ 114
‘நெருப்பு வளையம்’ - சூரிய கிரகணம் ........ 115
வியாழன் கோளின் யூரோபா துணைக்கோளில் CO2 வாயு ........ 116
NexCAR 19 ........ 116
புதிய பரிணாம விதி ........ 117
தாவர அடிப்படையிலான பாலிபினால்கள் ........ 118
K2-18 b கோளில் மீத்தேன் மற்றும் Co2 ........ 118
ககன்யான் TV-D1 திட்டம் ........ 119
மின்காந்தப் பீரங்கி துப்பாக்கி ........ 120
RISUG மருத்துவ பரிசோதனைகள் ........ 120
கடலுக்கடியில் உள்ள "மர்மத் துகள்களை" கண்டறியும் கருவி ........ 121
வியாழன் கோளில் ஜெட் காற்று ........ 121
"கலிக்ஸ்கோகா" தடுப்பு மருந்து ........ 122
சந்திரயான் - எஜெக்டா ஹாலோ ........ 122
இன்சைட் தரையிறங்கு கலம் ........ 123
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 124
கோயம்புத்தூர் குறிச்சி ஏரி ........ 124
ஆர்மகெடோன் ரெட்டெயில் ........ 125
டரான்டுலா ........ 125
உலகின் இருவாழ்விகளின் நிலை குறித்த அறிக்கை 2023 ........ 126
பவளப்பாறைகளுக்கான திருப்புமுனை திட்டம் ........ 127
இந்தியாவில் இரு வாழ்வி இனங்களின் நிலை ........ 128
பருவநிலை மாற்றம் குறித்த டக்கார் பிரகடனம் 2023 ........ 128
படிஸ் லிமாகுமி ........ 129
2030 ஆம் ஆண்டிற்கான வனப் பாதுகாப்பு நடவடிக்கைக்கான கூட்டு அழைப்பு ........ 129
ஆசியக் காட்டு நாய்-புலி சகவாழ்வு ........ 130
மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ‘டேன்ஸிங் ஃப்ராக்’ தவளை இனங்கள் ........ 131
தட்டான் பூச்சி திருவிழா, 2023 ........ 131
இமயமலையில் பறவைகளின் வலசைப் போதல் பாங்குகள் ........ 132
அண்டார்டிக் கடல் பனிப் பரவல் இழப்பு ........ 132
கால்நடைகள் மூலமான மீத்தேன் வெளியேற்றம் ........ 133
திப் மற்றும் நிம்ர் ........ 133
GRAP நிலை II ........ 134
இந்தியாவில் நிலவளம் குன்றல் பற்றிய UNCCD அமைப்பின் அறிக்கை ........ 135
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........ 136
காண்டாமிருகங்களின் நிலை குறித்த அறிக்கை, 2023 ........ 136
THE இதழின் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2024 ........ 137
உலகப் புத்தாக்கக் குறியீடு 2023 ........ 137

உலகத் திறமைகள் தரவரிசை 2023 ..... 138
கடல் போக்குவரத்து மதிப்பாய்வு 2023 ..... 139
மதிப்புமிக்க முன்னணி இந்திய நிறுவனங்கள் அறிக்கை 2023 ..... 139
உலக நீரிழிவு நோய் மருந்து தொழில்துறை குறித்த கண்ணோட்ட அறிக்கை 2023 ..... 140
சர்வதேச எரிசக்தி முகமையின் முக்கிய கனிமங்கள் சந்தை மதிப்பாய்வு 2023 ..... 141
உலகப் பட்டினி நிலைக் குறியீடு (GHI) 2023 ..... 142
உலக உள்கட்டமைப்பு நெகிழ்திறன் பற்றிய அறிக்கை ..... 143
2023 ஆம் ஆண்டு உலக வர்த்தக அறிக்கை: மறு உலகமயமாக்கல் ..... 144
இணைய சுதந்திரம் குறித்த அறிக்கை 2023 ..... 144
பாலினச் சமத்துவமின்மை மற்றும் மகளிர் புற்றுநோய் ..... 145
இடைக்கால எரிவாயு அறிக்கை 2023 ..... 147
மாற்றுத் திறனாளிகள் மற்றும் பேரிடர்கள் பற்றிய உலகளாவிய கணக்கெடுப்பு 2023 ..... 147
நகர்ப்புறப் போக்குவரத்து பற்றிய அறிக்கை ..... 148
உலகளாவிய ஓய்வூதியக் குறியீடு 2023 ..... 149
மலிவு விலை தண்ணீரின் அதிக விலை ..... 149
EFW அமைப்பின் வருடாந்திர அறிக்கை 2023 ..... 150
"மாறும் பருவநிலையில் புலம்பெயர்ந்த குழந்தைகள்" பற்றிய அறிக்கை ..... 151
திருப்புமுனை செயல்பாட்டு நிரல் அறிக்கை 2023 ..... 152
அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் மனநலம் ..... 152
மெர்சி கார்ப்ஸ் அமைப்பின் அறிக்கை ..... 153
உலக ஆற்றல் கண்ணோட்ட அறிக்கை 2023 ..... 154
மாநிலச் செய்திகள் ..... 155
ஒடிசாவின் முதல் பெண் சபாநாயகர் ..... 155
AFSPA சட்ட நீட்டிப்பு ..... 156
பெங்களூரில் "ஸ்பாஞ்ச் சிட்டி" கட்டமைப்பு ..... 156
திரிபுராவில் இணைய வழி அமைச்சரவை முறை ..... 157
குழாய்வழி உரமாக்கல் முறை ..... 158
அசாமில் AFSPA சட்டம் ..... 158
பீகாரின் சாதிவாரி கணக்கெடுப்பு ..... 159
நிறுவப்பட்ட காற்றாலை ஆற்றல் திறன் ..... 160
பாஷ்மினா கைவினைப் பொருள் - புவிசார் குறியீடு ..... 160
தெற்கு லோனாக் ஏரி ..... 161
ராஜஸ்தானின் பள்ளத்தாக்குப் பகுதி ராணி (வேலி குயின்) பாரம்பரிய இரயில் சேவை ..... 162
PUSA-44 நெல் ரகத்திற்குத் தடை ..... 163
கடமா பாலடைக் கட்டிக்குப் புவிசார் குறியீடு ..... 164
மத்தியப் பழங்குடியினர் பல்கலைக்கழகம் – தெலுங்கானா ..... 164
உத்தரப் பிரதேச மாநில நீர்வாழ் விலங்கு ..... 165
பல்வேறு புதிய புவிசார் குறியீடுகள் ..... 166
கேரளாவில் சுற்றுலா வாகனப் பூங்கா ..... 167

மிகப்பெரிய நீரேற்ற நீர்த்தேக்க மின்னாற்றல் உருவாக்கத் திட்டம் ..... 167
கேரளாவின் முதல் முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட கட்டிடம் ..... 168
பைகா பழங்குடியினர் குழு - வாழ்விட உரிமைகள் ..... 168
மஞ்சிரேவுலா வன இடைக் கற்கால பாறைக் கலை ..... 169
இந்தியாவின் முதல் ஈரநில நகரம் ..... 170
சரகர்ஹி நினைவிடம் - ஃபெரோஸ்பூர் ..... 170
இந்தியாவின் முதல் பிராந்திய இரயில் சேவை ..... 171
காசர்கோடு மாவட்டம் – கேரளா ..... 171
லடாக்கில் உள்ள பவளப்பாறை படிமங்கள் ..... 172
மகாராஜ் கஞ்ச் ..... 173
வான்வெளி உற்றுநோக்கல் நிகழ்ச்சி 2023 ..... 173
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ..... 174
M.S. சுவாமிநாதன் ..... 174
சாஸ்த்ரா இராமானுஜன் பரிசு 2023 ..... 175
நோபல் பரிசு - மருத்துவம் அல்லது உடலியல் பிரிவு 2023 ..... 175
டாடா இலக்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது ..... 176
உலகளாவிய இந்தியர் விருது ..... 176
இயற்பியலுக்கான நோபல் பரிசு 2023 ..... 177
வேதியியலுக்கான நோபல் பரிசு 2023 ..... 178
அமைதிக்கான நோபல் பரிசு 2023 ..... 178
இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2023 ..... 179
பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு – 2023 ..... 180
இந்தியாவின் முதல் செவித்திறன் குறைபாடுள்ள வழக்கறிஞர் ..... 181
இராணி துர்காவதியின் 500வது பிறந்தநாள் ..... 181
சரஸ்வதி சம்மான் 2022 ..... 182
முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் - MS கில் ..... 182
கேம்ப்ரியன் ரோந்து இராணுவப் பயிற்சி ..... 183
இந்தியா சிறந்த நகரங்களுக்கான மாநாடு 2023 ..... 183
பிஷன் சிங் பேடி ..... 184
உலக காபி மாநாடு 2023 ..... 184
SBSTTA 25 மற்றும் COP-15 ..... 185
சர் சையத் அகமது கான் பிறந்தநாள் ..... 185
UNTOC அமைப்பின் 20வது ஆண்டு விழா ..... 186
உலக ஆசிரியர் பரிசு 2023 ..... 187
விளையாட்டுச் செய்திகள் ..... 187
ஆசிய விளையாட்டுப் போட்டிகள் - மகளிர் கிரிக்கெட் போட்டி 2023 ..... 187
இந்திய கிராண்ட் பிரிக்ஸ் போட்டி 2023 ..... 188
ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023 ..... 188
வித்யா ராம்ராஜ் - தேசிய சாதனை ..... 188

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023 ........ 189
ஒருநாள் கிரிக்கெட்டில் 3000 சிக்ஸர்கள் ........ 189
19வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் சாதனை ........ 190
லாஸ் ஏஞ்சல்ஸ் - ஒலிம்பிக் போட்டி 2028 ........ 191
மராத்தான் உலக சாதனை ........ 191
முக்கிய தினங்கள் ........ 192
சர்வதேச முதியோர் தினம் - அக்டோபர் 01 ........ 192
சர்வதேச காபி தினம் - அக்டோபர் 01 ........ 192
உலக சைவ தினம் - அக்டோபர் 01 ........ 192
சர்வதேச இசை தினம் - அக்டோபர் 01 ........ 192
சர்வதேச அகிம்சை தினம் - அக்டோபர் 02 ........ 193
உலகப் பண்ணை விலங்குகள் தினம் - அக்டோபர் 02 ........ 193
உலக வாழ்விட தினம் - அக்டோபர் 02 ........ 193
உலக விண்வெளி வாரம் - அக்டோபர் 04/10 ........ 194
உலக இயற்கை தினம் - அக்டோபர் 03 ........ 194
உலக விலங்குகள் நல தினம் - அக்டோபர் 04 ........ 194
உலக ஆசிரியர் தினம் - அக்டோபர் 05 ........ 195
தேசிய வனவிலங்கு வாரம் 2023 – அக்டோபர் 02/08 ........ 195
மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் – அக்டோபர் 01/31 ........ 195
உலக கட்டிடக்கலை தினம் - அக்டோபர் 02 ........ 196
உலகப் புன்னகை தினம் - அக்டோபர் 06 ........ 196
உலகப் பெருமூளை வாதம் தினம் - அக்டோபர் 06 ........ 197
உலகப் பருத்தி தினம் - அக்டோபர் 07 ........ 197
இந்திய விமானப்படை தினம் - அக்டோபர் 08 ........ 198
உலக அஞ்சல் தினம் - அக்டோபர் 09 ........ 199
இந்திய வெளியுறவுப் பணி தினம் - அக்டோபர் 09 ........ 199
உலக ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் கல தினம் - அக்டோபர் 08 ........ 200
உலக மனநல தினம் - அக்டோபர் 10 ........ 200
தேசிய அஞ்சல் தினம் - அக்டோபர் 10 ........ 201
உலக டிஸ்லெக்ஸியா தினம் - அக்டோபர் 08 ........ 202
மரண தண்டனைக்கு எதிரான உலக தினம் - அக்டோபர் 10 ........ 202
சர்வதேசப் பெண் குழந்தை தினம் - அக்டோபர் 11 ........ 203
உலக மூட்டழற்சி தினம் - அக்டோபர் 12 ........ 203
உலக கண் பார்வை தினம் - அக்டோபர் 12 ........ 204
ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச இயற்கைப் பேரிடர் குறைப்பு தினம் - அக்டோபர் 13 ........ 204
உலக முட்டை தினம் - அக்டோபர் 13 ........ 205
உலகத் தர நாள் - அக்டோபர் 14 ........ 205
உலக வலசைப் பறவைகள் தினம் - அக்டோபர் 14 ........ 206
சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் - அக்டோபர் 15 ........ 206

உலகப் பார்வையற்றோர் கைத்தடி (வெண்பிரம்பு) தினம் - அக்டோபர் 15 ....206
உலக கை கழுவுதல் தினம் - அக்டோபர் 15 ....207
உலக மாணவர் தினம் – அக்டோபர் 15....207
உலக உணவு தினம் – அக்டோபர் 16....208
உலக மயக்க மருந்து தினம் – அக்டோபர் 16 ....208
சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் – அக்டோபர் 17 ....208
உலகப் புள்ளியியல் தினம் - அக்டோபர் 20....209
உலக எலும்புப் புரை தினம் - அக்டோபர் 20 ....209
காவல்துறை தியாகிகளுக்கான தினம் - அக்டோபர் 21....210
சர்வதேச சமையல் வல்லுனர்கள் தினம் - அக்டோபர் 20 ....210
சர்வதேச திக்குப் பேச்சு விழிப்புணர்வு தினம் - அக்டோபர் 22 ....210
மோல் தினம் - அக்டோபர் 23 ....211
உலகளாவிய அயோடின் குறைபாடு கோளாறுகள் தடுப்பு நாள் - அக்டோபர் 21 ....212
உலகளாவிய ஊடகம் மற்றும் தகவல் குறித்த அறிவு வாரம் - அக்டோபர் 24/31....212
ஆயுதக் குறைப்பு வாரம் - அக்டோபர் 24/30....213
அரச தூதுவர்களுக்கான சர்வதேச தினம் - அக்டோபர் 24 ....213
ஐக்கிய நாடுகள் தினம் - அக்டோபர் 24....213
உலக பனிச் சிறுத்தை தினம் - அக்டோபர் 23....214
இந்திய-திபெத்திய எல்லைக் காவல் படை உருவாக்க தினம் - அக்டோபர் 24 ....214
உலக போலியோ தினம் - அக்டோபர் 24 ....215
உலக மேம்பாட்டுத் தகவல் தினம் - அக்டோபர் 24....216
உலக அதிர்ச்சி தினம் - அக்டோபர் 17....216
தேசிய ஒருமைப்பாடு தினம் - அக்டோபர் 20....216
சர்வதேச ஈயநஞ்சேறல் தடுப்பு வாரம் - அக்டோபர் 22 முதல் 29 வரை....217
கேட்பொலி காட்சிப் பதிவு பாரம்பரியத்திற்கான உலக தினம் - அக்டோபர் 27 ....218
உலக பக்கவாதம் தினம் - அக்டோபர் 29....218
சர்வதேசப் பராமரிப்பு மற்றும் ஆதரவு தினம் - அக்டோபர் 29 ....219
உலக சிக்கன தினம் - அக்டோபர் 30 ....219
சர்வதேச குள்ளத் தன்மை விழிப்புணர்வு தினம் - அக்டோபர் 25 ....220
ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் - அக்டோபர் 31 ....220
ஹாலோவீன் தினம் - அக்டோபர் 31 ....221
உலக நகரங்கள் தினம் - அக்டோபர் 31 ....221
இதரச் செய்திகள் ....222
ஹைஃபா போரின் 105வது ஆண்டு நிறைவு ....222
டோட்டோ சப்தா சங்கிரகா அகராதி ....222
மத்திய ஆண்டு மனை விற்பனைக் கண்ணோட்ட அறிக்கை 2023....222
"வாக் நாக்" ஆயுதத்தினை மகாராஷ்டிரா கொண்டு வருவதற்கு ஒப்பந்தம் ....223
வெள்ளப் பாதிப்பு அபாய மண்டலங்களில் மனிதக் குடியிருப்புகள் ....224
உலகப் பிரதானக் குடியிருப்பு குறியீடு 2023 ....224

**உலகின் சிறந்த வேலையளிப்பு நிறுவனங்கள் 2023 – NTPC ..... 225**
**பண்டைய மகரந்த பகுப்பாய்வு ..... 225**
**முஷ்க் புட்ஜி அரிசி உற்பத்தி ..... 226**
**சிறிய பனியுகப் பருவநிலை பற்றிய வழக்கமான கருத்துக்கள் ..... 226**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டின் கோவை மாவட்டத்தில் உள்ள வேட்டைக்காரன்புதூர் மற்றும் நீலகிரியில் உள்ள ஹுல்லாடா இரண்டு கிராமங்கள் மத்திய அரசிடமிருந்து சிறந்த சுற்றுலா கிராமங்களுக்கான வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளன.
- இந்திய இராணுவம் மற்றும் அமெரிக்க இராணுவம் ஆகியவற்றுக்கு இடையேயான 19வது யுத் அபியாஸ் பயிற்சியானது அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் நடைபெற்றது.
- பழம்பெரும் பாலிவுட் நடிகை வஹீதா ரஹ்மான் (85 வயது), 2021 ஆம் ஆண்டிற்கான தாதா சாகேப் பால்கே விருதினைப் பெற்றுள்ளார்.
- மதராஸ் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் (IIT-M) முன்னெடுப்புகளுக்காக வேண்டி இந்தியப் பசுமைக் கட்டிடச் சபையின் (IGBC) பிளாட்டினத் தரச் சான்றிதழ் வழங்கி அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- கூகுள் இன்க் நிறுவனமானது செப்டம்பர் 27 ஆம் தேதியன்று தனது 25வது (1998 ஆம் ஆண்டு நிறுவப் பட்டது) தொடக்க நாளினைக் கொண்டாடியது.
- சுற்றுலாத் துறை அமைச்சகமானது, கேரளாவின் காந்தளூர் கிராமத்தினை 2023 ஆம் ஆண்டின் சிறந்தச் சுற்றுலா கிராமமாக தேர்வு செய்து உலகச் சுற்றுலா தின விழாவில் (செப்டம்பர் 27) தங்கப் பதக்கத்தினை வழங்கியுள்ளது.
- உத்தரப் பிரதேச மாநிலமானது அதன் 95,767 கிராமங்கள் அனைத்திலும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத (ODF) மாநிலம் பிளஸ் என்ற அந்தஸ்தைப் பெற்றதன் மூலம் குறிப்பிடத்தக்கச் சாதனையை எட்டியுள்ளது.
- பீகார் மாநிலத்தின் மேற்கு சம்பாரன் மாவட்டத்தில் உள்ள வால்மீகி புலிகள் வளங் காப்பகத்திற்கு (VTR) அடுத்தப்படியாக, கைமூர் மாவட்டத்தில் (கைமூர் வனவிலங்குச் சரணாலயம்) அம்மாநிலத்தின் இரண்டாவது புலிகள் வளங்காப்பகமானது இந்த ஆண்டின் இறுதியில் அல்லது 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அறிவிக்கப்பட உள்ளது.
- அமெரிக்காவின் ஸ்போகேன் நகரில் நடைபெற்ற உலக இளையோர் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியப் பேட்மிண்டன் அணி பிரேசில் அணியினை வீழ்த்தி வெற்றி பெற்றது.
- மேகாலயாவின் கிழக்கு காசி மலைப்பகுதியில் உள்ள கோங்தாங் கிராமம், 2023 ஆம் ஆண்டு தேசியச் சுற்றுலா விருதுகள் விழாவில் மதிப்புமிக்க 'சிறந்த சுற்றுலா கிராமம் (வெண்கலம்)' என்ற விருதைப் பெற்றுள்ளது.
- சர் ஜார்ஜ் எவரெஸ்ட் அருங்காட்சியகம் என்று அழைக்கப்படும் இந்தியாவின் முதல் நில வரைபடவியல் அருங்காட்சியகம் ஆனது முசோரியில் அதிகாரப் பூர்வமாக திறக்கப் பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் ஜீவாரில் அமைக்கப்பட உள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்கு சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகமானது ‘DXN’ எனப்படும் அதன் தனித்துவமான சர்வதேச மூன்றெழுத்து குறியீட்டினை வழங்கியுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியக் குழுவின் நீட்டிக்கப்பட்ட 45வது அமர்வு மற்றும் கடந்த நான்கு ஆண்டுகளில் நடைபெற்ற முதல் நேரடி குழுக் கூட்டம் ஆனது சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

- தி பிரிண்டர்ஸ் (மைசூர்) பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் K.N. சாந்த் குமார், இந்தியா பத்திரிக்கைக் கூட்டமைப்பு மீதான இயக்குநர்கள் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இந்தியத் தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையமானது, 2023 ஆம் ஆண்டு வரைவு தொலைதொடர்பு கைபேசி எண் பெயர்வுத் திறன் (ஒன்பதாவது திருத்தம்) மீதான விதிமுறைகளை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.
- இந்திய ராணுவம் மற்றும் அமெரிக்க ராணுவம் ஆகியவை இணைந்து 13வது இந்தோ-பசிபிக் இராணுவத் தலைமை அதிகாரிகள் மாநாடு (IPACC), இந்தோ-பசிபிக் இராணுவ மேலாண்மைக் கருத்தரங்கு (IPAMS) மற்றும் மூத்தப் பட்டியலிடப்பட்டத் தலைவர்கள் மன்றம் (SELF) ஆகியவற்றைப் புது டெல்லியில் நடத்தின.
- சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பஞ்சாப் அணிக்கு எதிரான 3x3 தேசிய கூடைப்பந்து சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் தமிழ்நாடு ஆடவர் அணி 3x3 கூடைப்பந்து அணி வெற்றி பெற்றது.
- இந்தியப் பசுமைக் கட்டிட சபையானது, டாக்டர் M.G.R. சென்னை மத்திய இரயில் நிலையத்திற்கு பிளாட்டினம் தரச் சான்றிதழை வழங்கியுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் P.N.ஸ்ரீதர் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்தியதற்காக என்று முதலமைச்சரின் 'பசுமை விருதினை' பெற்றுள்ளார்.
- இந்தியாவிற்கு வெளியே வேறொரு நாட்டில் உள்ள B.R அம்பேத்கரின் மிகப்பெரிய சிலையாகத் திகழ உள்ள "சமத்துவச் சிலை" ஆனது, அமெரிக்காவின் மேரிலாந்து நகரில் திறக்கப்பட உள்ளது.
- சென்னையில் அமைக்கப்பட்டுள்ள ஹிட்டாச்சி எனர்ஜி நிறுவனத்தின் மிகப்பெரிய உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மையத்தினைத் தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- சர்வதேச கிரிக்கெட் வாரியமானது, 2023 ஆம் ஆண்டு ஆடவர் கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டிக்கான 'உலகளாவிய தூதராக' சச்சின் டெண்டுல்கரை நியமித்து உள்ளது.
- இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகியவை இணைந்து மேகாலயாவின் உம்ரோய் நகரில், சம்ப்ரிதி எனப்படும் 11வது வருடாந்திரக் கூட்டு இராணுவப் பயிற்சியினைத் தொடங்கியுள்ளன.
- ஹெல்த்வே மிதிவண்டி வழித்தடம் எனப்படும், சூரியசக்தியில் இயங்கும் இந்தியாவின் முதல் மிதிவண்டி வழித்தடமானது ஹைதராபாத்தில் திறக்கப் பட்டு உள்ளது.
- மத்திய சேமக் காவல் படை (CRPF) ஆனது, ஸ்ரீநகரில் இருந்து குஜராத் வரையிலான 'யஷஸ்வினி' எனப்படும் அனைத்து மகளிர் இருசக்கர வாகன ஓட்டிகளின் பயணப் பேரணியைத் தொடங்கி வைத்துள்ளது.
- சாகித்ய அகாடமியானது, திலீப் நோங்மைதேம் என்பவருக்கு அவர் எழுதிய இபேம்மா அமசுங் ஞங்கபெம்மா என்ற புத்தகத்திற்காக 2023 ஆம் ஆண்டிற்கான மணிப்பூரி மொழிப் பிரிவின் 'பால் சாகித்ய புரஸ்கார்' விருதினை வழங்கியுள்ளது.
- நோக்கியா நிறுவனமானது, பெங்களூரில் உள்ள அதன் உலக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் 6G ஆராய்ச்சி ஆய்வகத்தை திறந்துள்ளது.

- திவ்யாஞ்சன்களுக்கென பிரத்யேகமான (மாற்றுத்திறனாளிகள்) இந்தியாவின் முதல் உயர் தொழில்நுட்ப விளையாட்டுப் போட்டிகள் பயிற்சி மையம் ஆனது மத்தியப் பிரதேசத்தின் குவாலியர் நகரில் திறக்கப்பட்டுள்ளது.
- நல்ல முறையான வேலைக்கான உலக தினமானது ஆண்டுதோறும் அக்டோபர் 07 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகமானது "கச்சாப்" எனப்படும் பலநகர நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு, வெவ்வேறு கங்கை ஆமை இனங்களின் 955 குட்டிகளை மீட்டு உள்ளது.
- ஸ்வச் பாரத் திட்டத்தின் கீழ் ஜம்மு-காஷ்மீரில் அமைந்துள்ள 6,650 கிராமங்கள் அனைத்தும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத மாதிரி பிளஸ் கிராமம் என்பதாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பின்படி தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட கர்நாடகா மாநிலத்திற்கு உத்தரவிட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.
- அரசானது, இந்திய மருந்து உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் (IDMA) இணைந்து அக்டோபர் 10 ஆம் தேதியன்று முதலாவது தேசிய நடப்பு மருந்து உற்பத்தி நடைமுறை தினத்தினை (cGMP தினம்) கொண்டாடியது.
- இந்திய நாட்டிற்கு வெளியே வேறொரு நாட்டில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய இந்து கோவிலான BAPS சுவாமிநாராயண் அக்சார்தம் எனும் கோவில் அமெரிக்காவின் நியூ ஜெர்சி நகரில் திறக்கப்பட்டுள்ளது.
- பல கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற லியாண்டர் பயஸ் சர்வதேச டென்னிஸ் புகழ் மன்றத்திற்கு விளையாட்டு வீரர் பிரிவில் பரிந்துரைக்கப்பட்ட முதல் ஆசிய வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ஒன்றிய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஆனது பசுமை ஹைட்ரஜனை வணிகமயமாக்குவதற்கான ஆராய்ச்சி சூழலமைவினை உருவாக்கச் செய்வதற்காக 400 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய பசுமை ஹைட்ரஜன் என்ற திட்டத்திற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயல் திட்டத்தினை வெளியிட்டு உள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஈச்சங்கோட்டையில் அமைந்துள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்குச் சமீபத்தில் காலமான புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி M.S. சுவாமிநாதன் அவர்கள் பெயர் சூட்டப் படவுள்ளது .
- எந்தவொரு வேளாண் விளைபொருட்களையும் இயங்கலையில் வர்த்தகத்தை மேற் கொள்வதற்கான ஒரு வர்த்தக தளத்தினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குமுறை) சட்ட திருத்த மசோதாவானது சமீபத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.
- 49வது அகில இந்திய காவல்துறை அறிவியல் மாநாடானது (AIPSC) உத்தரகாண்ட் மாநிலக் காவல்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
    - இந்த நிகழ்வின் கருத்துரு, "அமிர்த காலத்தில் காவல்துறை" என்பதாகும்.
- இந்திய விமானப் படையானது (IAF) அதன் 91வது ஆண்டு விழாவில் அப்படைப் பிரிவிற்கான புதிய கொடியை வெளியிட்டது.

- சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கி ஆகியவை இணைந்து மொராக்கோவின் மரக்கேஷ் நகரில் அதன் வருடாந்திரக் கூட்டங்களை கூட்டியுள்ளன.
  - அவற்றின் 50 ஆண்டுகால வரலாற்றில் ஆப்பிரிக்க மண்ணில் இந்த அமைப்புகள் தனது முதல் வருடாந்திரக் கூட்டங்களை நடத்துகின்றன.
- வயது முதிர்ந்த கல்வி கற்பவர் என்று அறியப்படுபவரும், மத்திய அரசின் நாரி சக்தி புரஸ்கார் விருது பெற்றவருமான கேரளாவைச் சேர்ந்த கார்த்தியாயினி அம்மா (101) அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- பெங்களுருவில் நடைபெற்ற 62வது தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான 100 மீ. ஓட்டத்தினை 10.23 வினாடிகளில் நிறைவு செய்து இதுவரை இருந்த தேசிய சாதனையை H.H. மணிகண்டா என்பவர் முறியடித்துள்ளார்.
  - 2016 ஆம் ஆண்டில் 100 மீ. ஓட்டத்தினை 10.26 வினாடிகளில் நிறைவு செய்து அமியா மல்லிக் சாதனை ஒன்றைப் படைத்திருந்தார்.
- மங்களூர் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோலிய வேதியியல் குழுமமானது (MRPL), தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் 'சுத்திகரிப்பு துறையில் சிறந்த புத்தாக்கத்திற்கான' விருதினை வென்றுள்ளது.
- இந்தியப் பெருநிறுவன விவகாரங்கள் நிறுவனமானது (IICA), யுனிசெஃப் மற்றும் தேசியப் பங்குச் சந்தை நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து வணிகப் பொறுப்பான்மை மற்றும் நிலைத்தன்மை அறிக்கையிடல் குறித்த ஒரு பயிலரங்கத்தினை மும்பையில் ஏற்பாடு செய்துள்ளது.
- தேசியப் பாதுகாப்புச் சபைச் செயலகமானது (NSCS), 'பாரத் NCX 2023' எனப்படும் இரண்டாவது தேசிய இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியினை ஏற்பாடு செய்து இருந்தது.
- 8வது பிரிக்ஸ் சர்வதேசப் போட்டி மாநாடு ஆனது (2023) (பிரிக்ஸ் ICC 2023), இந்தியப் போட்டி ஆணையத்தால் புது டெல்லியில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.
- தேசிய வேளாண் அறிவியல் கழகத்தினால் (NAAS) ஏற்பாடு செய்யப்பட்ட 16வது வேளாண் அறிவியல் மாநாடானது (ASC) கொச்சியில் நடைபெற்றது.
- பெங்களூரு சர்வதேச விமான நிலைய லிமிடெட் நிறுவனமானது, பெங்களூரில் உள்ள கெம்பேகௌடா சர்வதேச விமான நிலைய வளாகத்தில் தெற்காசியாவின் முதல் விமான மீட்பு பயிற்சிப் பள்ளியை நிறுவியுள்ளது.
- கேரளாவின் வயநாடு பகுதியில், எபிதெமிஸ் வயனாடென்சிஸ் எனப்படும் ஒரு புதிய வகை தட்டான் பூச்சி தென்பட்டதாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பு மருந்து வழங்கீட்டின் பரவலை மேம்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்துவதற்கான தீவிரப்படுத்தப்பட்ட இந்திர தனுஷ் 5.0 பிரச்சாரத்தின் 3வது சுற்று சமீபத்தில் நிறைவடைந்தது.
- 9வது G20 நாடாளுமன்றச் சபாநாயகர்கள் உச்சி மாநாடு ஆனது (P20) புது டெல்லியில் நடைபெற்றது.
- சர்வதேசப் பகுதியளவு வறண்ட வெப்பமண்டலப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் (ICRISAT) ஆனது ஒரு CGIAR (சர்வதேச வேளாண் ஆராய்ச்சிக்கான ஆலோசனைக் குழு) ஒருங்கிணைந்த கூட்டுறவு அமைப்பில் இணைந்துள்ளது.
- ICICI வங்கியானது, வாடிக்கையாளர்கள் தங்கள் சேமிப்பு மற்றும் நடப்புக் கணக்குகள் குறித்தத் தகவல்களை ஒரே தளத்தின் மூலம் பார்க்க வழி வகுக்கும் வகையிலான 'iFinance' என்ற செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.

- ❖ உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த போர்க்களமான சியாச்சின் பனிப் பிரதேசத்தில் முதன்முறையாக BSNL நிறுவனத்தின் கைபேசி அலைவரிசை கோபுரம் என்பது நிறுவப்பட்டுள்ளது.
- ❖ ஜார்க்கண்ட் மாநில முதல்வர் அவர்கள், விரைவில் நடைபெற உள்ள 2023 ஆம் ஆண்டு மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டிக்கான 'ஜூஹி' எனப்படும் உருவச் சின்னத்தினை வெளியிட்டார்.
- ❖ ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா, 2023 ஆம் ஆண்டிற்கான ஆடவர் உலக தடகள வீரர் விருதிற்கு பரிந்துரைக்கப் பட்ட 11 பேரில் ஒருவராக இடம் பெற்றுள்ளார்.
- ❖ சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசரின் அரசு முறைப் பயணத்தின் போது 2023 ஆம் ஆண்டு இந்திய-சவுதி அரேபியா முதலீட்டு மன்றம் ஆனது புது டெல்லியில் ஏற்பாடு செய்யப் பட்டது.
  - ○ இது இரு நாடுகளுக்கும் இடையிலான முதலாவது அதிகாரப் பூர்வ முதலீட்டுக் கருத்தரங்கம் என்ற வகையில் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாகும்.
- ❖ கடந்த ஆண்டின் முதல் பாதியில் 17,306 மெகாவாட்டாக இருந்த தமிழகத்தின் உச்ச கட்ட மின் தேவையானது, 2023-24 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 10.04% அதிகரித்து 19,045 மெகாவாட்டாக பதிவாகியுள்ளது.
- ❖ இந்தியப் போட்டி ஆணையமானது, 8வது பிரிக்ஸ் சர்வதேசப் போட்டி மாநாட்டினை (2023) (பிரிக்ஸ் ICC 2023) புது டெல்லியில் நடத்தியது.
- ❖ இரயில்வே அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இர்கான் இன்டர்நேஷனல் லிமிடெட் (IRCON) மற்றும் RITES Ltd (RITES) ஆகியவை முறையே 15வது மற்றும் 16வது நவரத்தின நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- ❖ தமிழ்நாடு அரசின் Guidance எனப்படும் முதலீட்டு ஊக்குவிப்பிற்கான தலைமை முகமைக்கு, மதிப்புமிக்க ஐக்கிய நாடுகள் சபையின் ஊக்குவிப்பு விருது (2023) வழங்கப் பட்டுள்ளது.
  - ○ அபுதாபியில் நடைபெற்ற 8வது உலக முதலீட்டு மன்றத்தில் ஆற்றல் மாற்ற முதலீடுகளை உயர்த்தியதில் சிறந்து விளங்கியதற்காக இது வழங்கப் பட்டது.
- ❖ அரிந்தம் பாக்சி என்பவர் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மற்றும் பிற சர்வதேச அமைப்புகளுக்கான இந்தியாவின் அடுத்த தூதுவராக/நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ❖ சர்வதேச ஒலிம்பிக் குழுவானது (IOC) மனித உரிமைகள் சார்ந்த தனது முதன்மை உறுதிப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக ஒலிம்பிக் சாசனத்தில் திருத்தம் செய்து உள்ளது.
- ❖ இத்தாலியின் சர்டினியா நகரில் நடைபெற்ற FIDE உலக இளையோர் சதுரங்க விரைவுச் சுற்று சாம்பியன்ஷிப் போட்டியில் மகாராஸ்டிராவின் கிராண்ட் மாஸ்டர் ரவுனக் சத்வானி வெற்றி பெற்றுள்ளார்.
- ❖ 20 பேர் அடங்கிய மலையேறும் வீரர் குழுவினர், நாட்டின் மிக உயர்ந்த மலை உச்சிகளை அடைந்து சாதனையை படைத்துள்ளனர்.
  - ○ இது "ஹர் ஷிகர் திரங்கா" என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒவ்வொரு மலைச் சிகரத்தின் உச்சியிலும் தேசியக் கொடியை ஏற்றி சாதனைப் படைத்தமைக்காக வழங்கப் பட்டது.
- ❖ மத்திய மின்சார ஆணையம் (CEA) ஆனது, 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் தேதி அன்று தனது 50வது ஸ்தாபன தினத்தினைக் கொண்டாடியது.

- இது 2003 ஆம் ஆண்டின் மின்சாரச் சட்டத்தின் கீழ் செயல்படுகிறது.

❖ மைக்ரோசாப்ட் நிறுவனமானது, ஆக்டிவிஷன் ப்ளிஸார்ட் என்ற ஒளிப்படக்காட்சி விளையாட்டு வெளியீட்டு நிறுவனத்தினை 69 பில்லியன் அமெரிக்க டாலர் செலவில் கையகப்படுத்தியுள்ளது.

- மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் 48 வருட வரலாற்றில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய ஒப்பந்தம் இதுவாகும்.

❖ S.P. சிங் என்பவரின் 'ஜாடு தான்' (துடைப்ப தானம்) முன்னெடுப்பானது, 80 வெவ்வேறு இடங்களில் 1 லட்சத்துக்கும் அதிகமான துடைப்பங்களை விநியோகம் செய்ததன் மூலம் மதிப்புமிக்க இந்திய சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

❖ இந்திய அரசின் தலைமையின் கீழான மூன்றாவது G20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் (FMCBG) சந்திப்பானது குஜராத்தின் காந்திநகரில் நடைபெற்றது.

❖ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஆனது, வரைவு "தேசிய ரோபோட்டிக்ஸ் உத்தி" (NSR) ஒன்றை வெளியிட்டுள்ளது.

- இது எந்திரவிய தொழில்நுட்பத்தின் புத்தாக்க சுழற்சியை வலுப்படுத்துவதையும், 2030 ஆம் ஆண்டிற்குள் எந்திரவியல் தொழில்நுட்பத்தில் இந்தியாவின் பெரும் முன்னணித்துவத்தினை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்திய விமானப்படையானது மற்றொரு மைல்கல்லாக வான்வழியாக ஏவப்படும் வகையிலான பிரம்மோஸ் ஏவுகணையின் நீட்டிக்கப்பட்ட (ER) வகையின் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.

❖ G20 அமைப்பின் நிதிநிலை உள்ளடக்கத்திற்கான உலகளாவியக் கூட்டாண்மையுடன் தொடர்புடைய நான்காவது கூட்டமானது மும்பையில் நடத்தப் பட்டது.

❖ சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் (IIT-M) சிலிக்கான் ஊடகம் கொண்ட ஒளியணுவியல் சிறப்பு மையம் (SPRCE) தொடங்கப் பட்டுள்ளது.

❖ இந்திய சதுரங்க கிராண்ட் மாஸ்டர் கார்த்திகேயன் முரளி, கத்தார் மாஸ்டர்ஸ் போட்டியில் உலகின் முன்னணி வீரர் மேக்னஸ் கார்ல்சனை (நார்வே) தோற்கடித்தார்.

❖ மத்தியப் புலனாய்வுப் பிரிவானது, இணைய வெளி வழியான நிதி மோசடியைத் தடுப்பதற்காக 'சக்ரா-II' என்ற நடவடிக்கையை மேற்கொண்டது.

❖ லடாக்கில் உள்ள 13-ஜிகாவாட் திறன் கொண்ட புதுப்பிக்கத் தக்க எரிசக்தி நிலையத்திற்கான பசுமை ஆற்றல் வழித்தடத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் - மாநிலங்களுக்கு இடையேயான பரிமாற்ற அமைப்பிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது, ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி லாஹவுல் மற்றும் ஸ்பிட்டி ஆகிய மாவட்டங்களில் 20 கிலோமீட்டர் தொலைவிற்கு 100க்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துப் பெட்டகங்களை வெற்றிகரமாக கொண்டு சேர்த்துள்ளது.

❖ இலகுரக மின்சார வாகனங்களுக்கான (LEV) உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட உலகின் முதல் ஒருங்கிணைந்த AC மற்றும் DC மின்னேற்ற இணைப்பான்களின் தர நிலைக்கு இந்தியத் தரநிலை வாரியம் (BIS) ஒப்புதல் அளித்துள்ளது.

❖ 1973 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று மைசூர் மாநிலத்தினை கர்நாடகா என்று மறு பெயரிடப்பட்டதன் பொன்விழாவைக் குறிக்கும் வகையில் கர்நாடக முதல்வர் அவர்கள் கர்நாடக சம்ப்ரமா-50 விழாவின் சின்னத்தினை வெளியிட்டார்.

- இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவை இடையேயான முதல் 2+2 வெளியுறவு மற்றும் பாதுகாப்பு பேச்சுவார்த்தையானது புது டெல்லியில் நடைபெற்றது.
- ஐரோப்பிய ஒன்றியம் ஆனது, கடந்த ஆண்டு ஈரானிய அதிகாரிகளால் கைது செய்யப் பட்டு பின்னர் மரணமடைந்த மஹ்சா அமினிக்கு சிந்தனைச் சுதந்திரத்திற்கான சகாரோவ் பரிசை வழங்கியுள்ளது.
- இந்தியப் பட்டயக் கணக்காளார் நிறுவனமானது (ICAI), நிலைத்தன்மை மிக்க அறிக்கையிடலில் அதன் பங்களிப்பிற்காக வேண்டி மிகவும் மதிப்புமிக்க சர்வதேச கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் (ISAR) விருதைப் பெற்றுள்ளது.
- அரசாங்கத்தின் சமீபத்திய அறிக்கைகளின்படி, இந்தியா 2040 ஆம் ஆண்டிற்குள் நிலவிற்கு ஒரு விண்வெளி வீரரை அனுப்புவதையும் 2035 ஆம் ஆண்டிற்குள் ஒரு விண்வெளி நிலையத்தைக் கட்டமைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கூகுள் இந்தியா நிறுவனமானது, அதிகரித்து வரும் நிதி மோசடி முறைகளைக் கண்டு அறிந்து அது குறித்து ஆய்வு செய்வதற்காக என்று வடிவமைக்கப்பட்டுள்ள டிஜிகவாச் எனப்படும் அச்சுறுத்தல்களை முன்கூட்டியே நன்கு கண்டறிதல் மற்றும் எச்சரிக்கை அமைப்பினை அறிமுகம் செய்துள்ளது.
- அருணாச்சலப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த மூன்று புலிகள் காப்பகங்களான நம்தாபா, பக்கே மற்றும் கம்லாங் ஆகியவற்றில் இருக்கும் புலிகளுக்கான சிறப்புப் பாதுகாப்புப் படையினை (STPF) அமைப்பதற்கு அம்மாநிலத்தின் அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- சர்வதேச டி எல் ஆட்டோமொபைல் கூட்டமைப்பு (FIA) மற்றும் Formula E (E-Prix) ஆகிய அமைப்புகள் இணைந்து ஹைதராபாத்தில் 2024 ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் மின்னூர்தி வாகன பந்தயப் போட்டியினை அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளன.
- "How India Travels" அறிக்கையில், 2030ஆம் ஆண்டிற்குள் உலகளவில் அதிகப்படியான பயணச் செலவுகளை மேற்கொள்ளும் நான்காவது பெரிய நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.
- "இந்தியா-ஐ.நா. திறன் மேம்பாட்டு முன்முயற்சி" என்ற கூட்டுத் திறன் மேம்பாட்டு முயற்சியினை இந்தியாவும் ஐக்கிய நாடுகள் சபையும் இணைந்து தொடங்கியுள்ளன.
  - இது உலகளாவிய தெற்கு நாடுகளுடன் கூட்டாண்மைக் கொண்டுள்ள நாடுகளுடன் இந்தியாவின் வளர்ச்சிக் குறித்த அனுபவங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை பகிர்ந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமிர்தா ஷேர்-கிலின் ஓவியமானது சமீபத்தில் $7.4 மில்லியன் (ரூ. 61.8 கோடி) தொகைக்கு ஏலத்தில் விடப்பட்ட நிலையில், இது ஒரு இந்தியக் கலைஞரால் பெறப்பட்ட அதிகபட்ச விலைக்கான சாதனையாக அமைந்துள்ளது.
  - 'தி ஸ்டோரி டெல்லர்' என்ற தலைப்பில் இந்த ஓவியமானது, 1937 ஆம் ஆண்டு திருமதி ஷெர்-கில் என்பவரால் வரையப்பட்டது.
- ஹமூன் மற்றும் தேஜ் இரண்டு புயல்களானது முறையே வங்காள விரிகுடா மற்றும் அரபிக் கடலில் உருவாகின்றன.
  - தேஜ் புயல் என்று இந்தியாவால் அதற்குப் பெயரிடப்பட்ட நிலையில் ஹமூன் என்ற பெயரானது ஈரானால் வழங்கப்பட்டது.
- மாலத்தீவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் சீன நாட்டிற்கு ஆதரவு வழங்கும் தலைவர் முகமது முய்சு வெற்றி பெற்றுள்ளார்.

- ❖ சர்வதேச ஒலிம்பிக் குழுவின் பருவநிலைப் பாதுகாப்பு நடவடிக்கை விருதானது, கொலம்பிய ஒலிம்பிக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ கடலூரில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்டத் தியாகி அஞ்சலை அம்மாள் அவர்களின் சிலையினைத் தமிழக அரசு திறந்து வைத்துள்ளது.
- ❖ பெண்களையும் கோவில் கருவறையில் பூஜை செய்வதற்கு அனுமதித்த செங்கல்பட்டு மாவட்டத்தின் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் நிறுவனரான பங்காரு அடிகளார் (82) சமீபத்தில் காலமானார்.
- ❖ ஸ்விகி, சோமாட்டோ, ஓலா, ஊபர் மற்றும் ராப்பிடோ உள்ளிட்ட இணையம் மூலமாக திரட்டப்பட்ட ஊழியர்களின் நலன் கருதி குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் பயன் பெறும் வகையில் அவர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்த இந்தியாவின் முதல் மாநிலமாக ஜார்க்கண்ட் உருவெடுத்துள்ளது.
- ❖ போபாலின் மகிளா தானா காவல் நிலையமானது, ISO (சர்வதேச தரநிலைப்படுத்தல் அமைப்பு) அமைப்பின் தரச் சான்றிதழ் பெற்ற நாட்டின் முதல் மகளிர் காவல் நிலையமாக மாறியுள்ளது.
- ❖ சீனாவிலுள்ள ஹாங்சோ நகரில் நடைபெறும் 4வது ஆசிய மாற்றுத் திறனாளிகள் நபர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் 303 தடகள வீரர்கள் உட்பட 446 பேர் கொண்ட அணியானது இந்தியாவின் சார்பாக கலந்துகொள்கிறது.
- ❖ மத்திய அரசானது திறன் இந்தியா திட்டத்தின் தொடர்ச்சியாக 2023-24 ஆம் ஆண்டிற்கான திறன் இந்தியா போட்டியினை அதிகாரபூர்வமாக தொடங்கி வைத்ததோடு, 2022 ஆம் ஆண்டு உலகத்திறன் போட்டியின் வெற்றியாளர்களுக்கு புது டெல்லியில் நடைபெற்ற விழா ஒன்றில் விருது வழங்கி கௌரவித்துள்ளது.
- ❖ 'விமானங்களின் சரியான நேர செயல்திறன் குறித்த மாதாந்திர அறிக்கையின்படி', பெங்களூருவில் உள்ள கெம்பேகௌடா சர்வதேச விமான நிலையமானாது (KIA) "உலகிலேயே மிக சரியான நேரத்தில் இயங்கும் விமான நிலையமாக" கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து முன்னணியில் உள்ளது.
- ❖ தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் சமூக அறிவியலுக்கான உயர்மட்டக் குழு, பாடப்புத்தகங்களில் 'இந்தியா' என்ற பெயரை 'பாரத்' என்று மாற்றவும், பாடத்திட்டத்தில் உள்ள பண்டைய வரலாற்றுக்குப் பதிலாக 'செந்நெறிக் காலம்' என்ற சொல்லினை அறிமுகப்படுத்தவும் பரிந்துரைத்துள்ளது.
- ❖ ஏர் வைஸ் மார்ஷல் சாதனா S நாயர் ஏர் மார்ஷலாக பதவி உயர்வு பெற்றதையடுத்து இந்திய விமானப்படையின் வரலாற்றில் இந்தத் தரநிலையை எட்டிய இரண்டாவது பெண் மருத்துவ அதிகாரி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
    - ○ இந்திய விமானப்படையில் ஏர் மார்ஷல் பதவிக்கு உயர்வு பெற்ற முதல் பெண்மணி என்ற வரலாற்றினை ஏர் மார்ஷல் பத்மா பந்தோபாத்யாய் படைத்தார்.
- ❖ இந்திய மற்றும் மலேசிய நாட்டு இராணுவங்கள் "ஹரிமௌ சக்தி 2023 பயிற்சியை" தொடங்கியுள்ளன.
- ❖ நிகழ்நேரத்தில் காற்றின் தரத்தை அளவிடும் சுவிட்சர்லாந்து நாட்டின் தொழில்நுட்ப நிறுவனமான IQAir நிறுவனத்தினால் 109 இடங்களில் மேற்கொண்ட மதிப்பீட்டில் மிகவும் மாசுபட்ட நகரங்களின் பட்டியலில் மும்பை இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ❖ இந்தியாவின் முதல் நுண் DAP ஆலையானது குஜராத்தின் காந்திநகரில் திறக்கப்பட்டு உள்ளது.
- ❖ ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் நலத்துறை (DoPPW) ஆனது புது டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் 2023 ஆம் ஆண்டு அனுபவ் விருதுகள் விழாவினை நடத்தியது.

- ❖ தேசியப் பாதுகாப்புச் சபை செயலகம் (NSCS) ஆனது 'பாரத் NCX 2023' எனப்படும் 2வது தேசிய இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியினை நடத்தியது.
- ❖ சட்ட அமலாக்க முகவர்கள் முக்கியமானச் செயல்பாடுகளின் போது 5G தொழில் நுட்பத்தைப் பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கான புதுமையான கருவிகளை அடையாளம் காண்பதற்காக "விமர்ஷ்-2023" என்ற தேசிய ஹேக்கத்தான் தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தியத் தரநிலைகள் வாரியத்தின் குறியைக் கொண்டிருக்காத பட்சத்தில் அவற்றின் உற்பத்தி, விற்பனை, இறக்குமதி மற்றும் இருப்பு வைப்பு ஆகியவற்றினைத் தடை செய்வதற்காக தகரக் கொள்கலன் மற்றும் தகரக் குவளை (தரக் கட்டுப்பாடு) ஆணை 2023, மற்றும் தாமிரப் பொருட்கள் (தரக் கட்டுப்பாடு) ஆணை 2023 ஆகியவை அறிவிக்கப் பட்டுள்ளன.
- ❖ பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது (CCEA), பிரதான் மந்திரி க்ரிஷி சிஞ்சாய் யோஜனா - விரைவுபடுத்தப்பட்ட நீர்ப்பாசனப் பயன் வழங்கீட்டுத் திட்டத்தின் (PMKSY-AIBP) கீழ் உத்தரகாண்டின் ஜம்ராணி அணை பல்நோக்குத் திட்டத்தைச் சேர்ப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இந்தியப் போட்டி ஆணையம் ஆனது, சர்வதேசப் போட்டி வலையமைப்பின் வழி காட்டுதல் குழுவில் உறுப்பினராகியுள்ளது.
- ❖ இந்தியன் ஆயில் கழகமானது, இந்தியாவில் முதல் முறையாக தனித்திறன் சார்ந்த "தரநிலைக் குறிப்பு" பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றைத் தயாரித்ததன் மூலம் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது.
- ❖ கடலோர வங்காளதேசத்தில் ஏற்பட்ட ஹமூன் புயல் வலுவிழந்து, தென்கிழக்கு வங்காள தேசம் மற்றும் அதை ஒட்டிய மிசோரம் பகுதி மீது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக நிலை கொண்டுள்ளது.
- ❖ இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள பக்லோவில் உள்ள இராணுவத்தின் சிறப்புப் படைப் பயிற்சிப் பள்ளியானது (SFTS), சிறப்புப் படைகள் மற்றும் பாராசூட் வீரர்களின் பயிற்சி உள்கட்டமைப்பினை மேம்படுத்தச் செய்வதற்காக, இராணுவத்தின் முதல் செங்குத்து செயற்கை காற்று அமைப்பினை (VWT) அமைத்துள்ளது.
- ❖ இந்தியா, சீனா, ரஷ்யா, மலேசியா, ஜப்பான், இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து ஆகிய ஏழு நாடுகளைச் சேர்ந்த பயணிகள் தற்போது நுழைவு இசைவுச் சீட்டு இன்றி இலங்கைக்குப் பயணிக்க முடியும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.
- ❖ சவுதி அரேபிய அரசாங்கமானது, 2023 ஆம் ஆண்டு மத்தியக் கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கா பருவநிலை வாரக் கொண்டாட்டங்களை 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 08 முதல் 12 ஆம் தேதி வரை ரியாத் நகரில் மேற்கொண்டது.
- ❖ ரோஹித் ஷர்மா 2023 ஆம் ஆண்டில் ஒருநாள் இன்னிங்ஸ் போட்டிகளில் 50 சிக்ஸர்களை அடித்து, ஓராண்டில் நடைபெற்ற ஒருநாள் இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டிகளில் 50 சிக்ஸர்களை அடித்த முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெற்று உள்ளார்.
  - ○ தென்னாப்பிரிக்காவின் ஏபி டி வில்லியர்ஸ் (2015 ஆம் ஆண்டில் 58 சிக்ஸர்கள்) ஓராண்டில் நடைபெற்ற ஒருநாள் இன்னிங்ஸ் போட்டிகளில் அதிக சிக்ஸர்களை அடித்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
- ❖ இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனத்தினால் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட உள்ள ஆறு புதிய டார்னியர் டோ-228 ரக விமானங்களில் முதல் விமானத்தினை இந்திய விமானப்படை (IAF) பெற்றுள்ளது.

- இந்திய விமானப் படையானது (IAF) சுகாய்-30 MKI ரக போர் விமானங்களை, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுத அமைப்புகள் மற்றும் விருபாக்ஷா AESA எனப்படும் ரேடார் ஆகியவற்றினைப் பொருத்தி மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.
- அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையானது, குடியரசுக் கட்சியின் மைக் ஜான்சனை அவையின் புதிய சபாநாயகராகத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) தனியார் வங்கிகள் மற்றும் வெளிநாட்டுக்குச் சொந்தமான துணை நிறுவனங்கள் தங்கள் வாரியங்களில் குறைந்தபட்சம் இரண்டு முழு நேர இயக்குநர்களை (WTDs) நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.
- இந்தியா, ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், ஈரான், இந்தியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் ரஷ்ய நகரமான கசானில் நடைபெற்ற ஆப்கானிஸ்தான் குறித்த மாஸ்கோ வடிவ ஆலோசனையின் ஐந்தாவது கூட்டத்தில் பங்கேற்றனர்.
- வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பானது (நேட்டோ), 2024 ஆம் ஆண்டில் "ஸ்டெட்ஃ பாஸ்ட் டிஃபெண்டர்" என்ற கூட்டு படைப்பிரிவு மற்றும் துருப்புகள் பயிற்சிக்குத் தயாராகி வருகிறது.
  - பனிப்போரின் முடிவிற்குப் பிறகு 40,000 படைப்பிரிவினரைக் கொண்டு நடத்தப் படும் மிகப்பெரியப் பயிற்சியாக இது இருக்கும்.
- குஜராத் மாநிலத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள தோர்டோ கிராமத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பின் (UNWTO) மிக மதிப்பு மிக்க "சிறந்தச் சுற்றுலா கிராமம்" என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- சூரிய சக்தித் தகடுகளின் செயல்திறனைக் கண்டறிவதில் மக்களுக்கு உதவுவதற்காக அரசானது சூரிய ஒளி மின்னழுத்தத் தொகுதிகளுக்கு தரநிலைகள் மற்றும் அதற்கு முத்திரையிடும் திட்டத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இராணுவத் தளபதிகளின் மாநாட்டின் போது, ஜம்மு காஷ்மீரில் உள்ள உதம்பூர் இராணுவ நிலையத்திற்கு 'சிறந்தப் பசுமைமிகு இராணுவ நிலையம்' என்று பாராட்டப் பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசாங்கத்தின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பத்திரிகை வெளியீடுகள் பிரிவானது மதிப்புமிக்க 75வது பிராங்பர்ட் புத்தகக் கண்காட்சியில் பங்கேற்றது.
- இந்தியாவின் ஜவுளித் தொழில்துறையானது, உலகின் மிகப்பெரிய ஜவுளி நிகழ்வாகக் கூறப்படும் "பாரத் டெக்ஸ் 2024" என்ற ஜவுளிப்பொருட்களின் கண்காட்சியை நடத்த முடிவு செய்துள்ளது.
- ஹார்வர்டு சட்டக் கல்லூரியின் மிக உயரிய தொழில்முறை விருதான 'உலகளாவிய தலைமைத்துவத்திற்கான விருதானது' இந்தியத் தலைமை நீதிபதியான (CJI) DY சந்திரசூட் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசானது, பண்டைய உத்திசார் நுட்பத்தினைச் சமகால இராணுவ நடைமுறைகளுடன் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்ட ‘உத்பவ் திட்டம்’ என்ற தனித்துவமான முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- வட கொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்குப் பதிலளிக்கும் வகையில், தென் கொரியா, அமெரிக்கா மற்றும் ஜப்பானிய நாட்டு இராணுவங்கள் இணைந்து முதலாவது முப்படை வான்வழி தாக்குதல் பயிற்சியினை மேற்கொண்டுள்ளன.

- சிறையில் உள்ள ஈரான் நாட்டினைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்றவருமான நர்கிஸ் முகமதி அவர்களுக்கு ஹார்மனி அறக்கட்டளையின் 2023 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான அன்னை தெரசா நினைவு விருது வழங்கப்பட்டுள்ளது.
  - ஈரானிய ஆட்சியை எதிர்த்து, மனித உரிமைகளுக்காகப் போராடிய முகமதி அவர்களின் துணிச்சலை அங்கீகரிக்கும் விதமாக இந்த விருதானது. வழங்கப் பட்டுள்ளது.
- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆனது காப்பீட்டுக் கொள்கை சார்ந்த சொற்களை எளிமைப்படுத்துவதற்காக 12 பேர் கொண்ட குழு ஒன்றினை அமைத்துள்ளது.
- ரிலையன்ஸ் ஜியோ நிறுவனமானது, இந்தியா முழுவதும் இணைய வழி கட்டுப்பாட்டு அம்சங்கள் கொண்ட இல்லம் சார்ந்த மற்றும் இணையவழி சிறு வணிகச் சேவைகளை வழங்குவதற்காக வேண்டி கலிபோர்னியாவைச் சேர்ந்த ப்ளூம் நிறுவனத்துடன் ஒரு கூட்டாண்மையை மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் உலகில் அதிக நிதித் தொழில்நுட்பம் சார்ந்த (ஃபின்டெக்) யூனிகார்ன் நிறுவனங்களை (17) கொண்ட நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ள நிலையில் இப்பட்டியலில் அமெரிக்கா (134) மற்றும் ஐக்கியப் பேரரசு (27) ஆகியவை உலகளவில் முதல் இரண்டு இடங்களைத் தக்க வைத்துள்ளன.
- உணவு கொள்முதல் மற்றும் விநியோகத் தளமான ஸொமாட்டோ, அதன் பெண் விநியோக ஊழியர்களுக்காக மகப்பேறு காப்பீட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.
  - இந்த முன்னெடுப்பானது, இந்தத் தொழில்துறையில் மேற்கொள்ளப்படும் இது போன்ற முதல் வகை முன்னெடுப்பாகும்.
- சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் சுந்தர் சிங் குர்ஜார் ஆடவர் ஈட்டி எறிதல் F46 இறுதிப் போட்டியில் 68.60 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து உலக சாதனையை (67.79) முறியடித்து தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- மாபுசா, மார்கோ, பாஞ்சிம், போண்டா மற்றும் வாஸ்கோ ஆகிய ஐந்து கோவா மாநில நகரங்கள் 16 நாட்கள் அளவிலான 37வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை கோவாவில் நடத்த உள்ளன.
- 7வது இந்தியா கைபேசி மாநாடானது (2023) புது டெல்லியில் நடைபெற்றது.
  - இந்த நிகழ்ச்சியின் கருத்துரு, 'உலகளாவிய எண்ணிம புத்தாக்கம்' என்பதாகும்.
- இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆகியவை இணைந்து கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்காக வேண்டி மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் உள்ள கினியா வளைகுடாவில் தங்களது முதலாவது கடற்படைப் பயிற்சியை மேற்கொண்டன.
- அமெரிக்க அதிபர் ஜோ பிடன் அவர்கள், டாக்டர் அசோக் கட்கில் மற்றும் டாக்டர் சுப்ரா சுரேஷ் ஆகிய இரண்டு இந்திய-அமெரிக்க அறிவியலாளர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் தேசியப் பதக்கங்கள் வழங்கி கௌரவித்தார்.
  - கட்கில் தேசியத் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கப் பதக்கத்தினையும், சுரேஷ் தேசிய அறிவியல் பதக்கத்தினையும் வென்றனர்.
- பெங்களூருக்கு அருகில் உள்ள கைபேசி பாகங்கள் ஒருங்கு சேர்ப்பு ஆலையை விற்பனை செய்வதற்கு விஸ்ட்ரான் கார்ப் நிறுவனம் ஒப்புதல் அளித்ததை அடுத்து டாடா குழுமம் விரைவில் இந்தியாவின் முதல் ஐபோன் உற்பத்தியாளராக மாற உள்ளது.

- மலேசியா அரசானது தெற்கு மாகாணமான ஜோகூரைச் சேர்ந்த சுல்தான் இப்ராஹிம் சுல்தான் இஸ்கந்தர் என்பவரை தனது அடுத்த மற்றும் 17வது மன்னராக அறிவித்து உள்ளது.
- ரிலையன்ஸ் ஜியோ நிறுவனமானது, ஜியோஸ்பேஸ்ஃபைபர் எனப்படுகின்ற தனது செயற்கைக் கோள் இணையச் சேவையினை இந்தியாவின் "தொலைதூரப் பகுதியில்" உள்ள நான்கு மாவட்டங்களில் சோதனை செய்துள்ளது.
- 14 மாவட்டங்களிலும் தனித்தன்மைத் தரக்குறியீடு (ஹால்மார்க்கிங்) வழங்கீட்டு மையங்களைக் கொண்ட இந்தியாவின் முதல் மாநிலமாக கேரளா மாறியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு மாநிலப் பல்லுயிர் வாரியம்

- தமிழ்நாடு மாநில அரசானது தமிழ்நாடு மாநிலப் பல்லுயிர் வாரியத்தினை சமீபத்தில் மறுசீரமைத்துள்ளது.
- இதில் தொழில் துறை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகிய மூன்று சிறப்பு அமைப்புகள் இடம் பெற்றுள்ளன.
- வனத்துறை அமைச்சர் இந்தக் குழுவின் தலைவராகப் பணியாற்றுவார்.

## 2024-25 ஆம் ஆண்டில் மாநிலத்தின் உச்ச தேவை

- 2024-25 ஆம் நிதியாண்டில் தமிழகத்தின் வருடாந்திர உச்ச கட்ட ஆற்றல் தேவை என்பது 20,806 மெகாவாட்டாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்த ஆண்டு ஏப்ரல் 20 ஆம் தேதியன்று தமிழக மாநிலத்தின் உச்சகட்ட ஆற்றல் தேவை 19,387 மெகாவாட் என்ற உச்சநிலையை எட்டியது.
- சமீபத்தியத் தரவுகளின் படி, உச்ச கட்ட ஆற்றல் தேவையானது 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் 20,806 மெகாவாட்டாகவும், மே மாதத்தில் 19,785 மெகாவாட்டாகவும், ஜூன் மாதத்தில் 19,800 மெகாவாட்டாகவும், ஜூலை மாதத்தில் 19,005 மெகா வாட்டாகவும், ஆகஸ்ட் மாதத்தில் 20,631 மெகாவாட்டாகவும் இருக்கும் என எதிர் பார்க்கப் படுகிறது.
- இது 2024-25 ஆம் ஆண்டின் பருவமழை மற்றும் குளிர்காலப் பருவங்களில் 16,933 மெகாவாட் முதல் 18,465 மெகாவாட் வரை இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இது 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 20,460 மெகாவாட்டாக அதிகரிக்கக் கூடும்.
- 2024-25 ஆம் ஆண்டில் தென் பிராந்தியத்திற்கான வருடாந்திர உச்ச கட்ட ஆற்றல் தேவையானது 73,114 மெகாவாட்டாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் வருடாந்திர ஆற்றல் தேவையானது 132,871 மில்லியன் அலகாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த ஆண்டு ஏப்ரல் 20 ஆம் தேதியன்று, தமிழக மாநிலத்தில் முன் எப்போதும் இல்லாத

அளவிற்குத் தினசரி நுகர்வு 423.785 மில்லியன் அலகுகள் நுகர்வு பதிவாகியது.

## 15 ஓதுவார்கள் நியமனம்

- அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள இந்துக் கோவில்களுக்கு ஐந்து பெண் ஓதுவார்கள் உட்பட 15 'ஓதுவர்களை' தமிழக அரசு நியமித்துள்ளது.
- ஓதுவார்கள் தமிழ்நாட்டிலுள்ள இந்துக் கோவில்களில் பக்திப் பாடல்களைப் பாடுபவர்களே ஆவர் தவிர அவர்கள் பூசாரிகள் (அர்ச்சகர்கள்) அல்ல.
- பக்திப் பாடல்களைப் பாடும் இவர்கள் கருவறைக்குள் நுழைய மாட்டார்கள்.

## இந்தியாவின் முதல் பசுமை ஆற்றல் தொல்லியல் தளம்


- மகாபலிபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயில் ஆனது இந்தியாவின் முதல் பசுமை ஆற்றல் தொல்லியல் தளமாக மாற உள்ளது.
- 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, ராஜ மல்லன் என்று வெகுவாக அழைக்கப் பட்ட இரண்டாம் நரசிம்ம வர்மனால் கட்டப் பட்ட இந்த யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளம் ஆனது தென்னிந்தியாவின் பழமையான கற்கோயில்களில் ஒன்றாகும்.
- இந்தக் கடற்கரைக் கோயில் தற்போது தூய்மையான மற்றும் நிலையான சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்விளக்குகள் கொண்டு அலங்கரிக்கப்பட உள்ளது.



## முதன்மை விலங்குகள் பராமரிப்பு மையம்

- பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் நிதியினைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் முதன்மை விலங்குகள் பராமரிப்பு மையம் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களில் ஏற்கனவே மூன்று நல மையங்கள் கட்டமைக்கப்பட்டு வருகின்றன.
- இந்தப் புதிய மையங்கள் வனவிலங்குகளுக்கான அவசர அல்லது முதன்மைப் பராமரிப்பு நல மையமாக இருக்கும்.

## தமிழ்நாட்டில் இரப்பர் தோட்டங்கள்




- தமிழகத்தில் உள்ள இரப்பர் தோட்டங்களில் மீண்டும் நடவு செய்வதற்கான அனுமதியினைப் பெறுவதற்குப் பல மாதங்கள் ஆகும் என்பதால் நஷ்டம் ஏற்படுகிறது.
- பெரும்பாலான இரப்பர் தோட்டப் பகுதிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளன.
- தோட்டப் பகுதிகளில் உள்ள மேம்படுத்தப்பட்ட மற்றும் பயிரிடப்பட்டப் பகுதிகள் 1979 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கொண்டு வரப் பட்டன.
- இந்த நிலமானது வனப் பகுதி நிலமாக வரையறுக்கப் பட்டது.
- எனவே, அசையாச் சொத்தை உரிமம் மாற்றவோ அல்லது விற்கவோ மாவட்ட அளவிலான வனக் குழுக்களின் அனுமதி தேவையாகும் என்ற நிலையில். இதற்கான அனுமதியினைப் பெற பல மாதங்கள் ஆகிறது.
- தமிழ்நாட்டில் 26,268 ஹெக்டேர் பரப்பளவில் இரப்பர் பயிரிடப்படுகின்ற நிலையில், வருடாந்திர இரப்பர் உற்பத்தி (கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய்) 24,163 டன்கள் ஆகும்.
- இதில், கிட்டத்தட்ட 105 டன் இரப்பர் ஏற்றுமதி செய்யப்படுகிறது.
- தமிழ்நாட்டில் ரப்பர் பயிரிடப் பட்ட மொத்த நிலப் பரப்பின் ஐந்தில் ஒரு பங்கு பெரிய விவசாயிகளிடம் உள்ளது.
- மீதியிருக்கும் நிலமானது ஒவ்வொரு நபர்களிடமும் 50 ஏக்கர்களுக்கும் குறைவான அளவில் சிறிய விவசாயிகளிடம் உள்ளது.
- ரப்பர் அறுவடையானது ரப்பர் மரம் நடப் பட்டதில் இருந்து ஏழாவது வருடத்தில் ஆரம்பிக்கப் படுவதோடு அதன் 21-30 வருடங்கள் வரை அது தொடர்கிறது.

## சோழர் கால மானம்பாடி கோவில்



- தஞ்சாவூர் மாவட்டம் மானம்பாடியில் உள்ள 1,000 ஆண்டுகள் பழமையான நாகநாத சுவாமி கோயிலின் திருப்பணியை தமிழ்நாடு தொல்லியல் துறை மேற்கொள்ள உள்ளது.
- இது முதலாம் ராஜேந்திர சோழனால் (1012-1044 CE) கட்டப்பட்டது.
- கும்பகோணத்தில் இருந்து சுமார் 15 கி.மீ தொலைவில் அமைந்துள்ள இந்தக் கோயில் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாகும்.
- இங்கு காணப்படும் நேர்த்தியான கல் சிற்பங்கள் மற்றும் முக்கியமான கல்வெட்டுகள் ஆகியவற்றுக்கு வேண்டி இக்கோவில் புகழ் பெற்றது.

## தமிழ்நாட்டில் PE-VC முதலீடுகள்

- 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தமிழ்நாட்டில் உள்ள நிறுவனங்களின் 10 ஒப்பந்தங்களில் தனியார் சமபங்கு முதலீடு மற்றும் துணிகர முதலீடு (PE-VC) நிதிகள் மூலமாக 338 மில்லியன் டாலர் முதலீடு செய்யப்பட்டுள்ளன.
- இது 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது 21.76% சரிவைக் கண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில், தனியார் சமபங்கு முதலீடு மற்றும் துணிகர முதலீடு நிதிகள் 21 ஒப்பந்தங்களில் 432 மில்லியன் டாலர்கள் முதலீடு செய்யப் பட்டன.

Of the 10 companies that received PE-VC investments in Q3 2023, nine are headquartered in the State



The table shows investments for firms based in T.N. from 2021 to Sept. 25, 2023

| Quarter | No. of deals | Amount ($M) |
|---|---|---|
| Q1 2021 | 15 | 537 |
| Q2 2021 | 14 | 344 |
| Q3 2021 | 21 | 404 |
| Q4 2021 | 20 | 755 |
| Q1 2022 | 26 | 1,359 |
| Q2 2022 | 22 | 623 |
| Q3 2022 | 12 | 195 |
| Q4 2022 | 14 | 560 |


The table shows the top investments in Tamil Nadu during Q3 2023

| Company | Sector | Investors | Amount ($M) |
|---|---|---|---|
| Veritas Finance | Non-banking financial company (NBFC) | Multiples PE, Avendus PE, and IFC | 146 |
| Dr. Agarwals | Hospital (eye care) | TPG Growth and Temasek | 77 |
| NDR | | InvestCorp Group | 61 |
| Disprz | Enterprise software (Saas - HR - training) | Lumos Capital, Dallas Venture Capital, Kois Invest, IIFL | 30 |

## இலங்கை அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை

- தமிழக மாநிலம் முழுவதும் உள்ள முகாம்களிலும் அவற்றிற்கு வெளியேயும் வாழும் இலங்கைத் தமிழர்களின் குறுகிய கால மற்றும் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு நீடித்த தீர்வுகளைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட குழுவானது தனது இடைக்கால அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளது.
- இந்த இடைக்கால அறிக்கையானது இந்த மாநிலத்தில் வாழும் இலங்கை மக்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கான வழிகளை ஆராய்ந்து, அது தொடர்பான சில பரிந்துரைகளையும் வழங்கியுள்ளது.
- ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா - லால் பகதூர் சாஸ்திரி ஒப்பந்தம் மற்றும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா - இந்திரா காந்தி ஒப்பந்தம் ஆகியவை அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதனைச் சாதகமாக்குகிறது.

## வாச்சாத்தி சம்பவம் 1992




- 2011 ஆம் ஆண்டில் விசாரணை நீதிமன்றம் வழங்கிய தண்டனை மற்றும் தீர்ப்புகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அனைத்து குற்றவியல் மேல்முறையீட்டு வழக்குகளையும் சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
- 1992 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள வாச்சாத்தி பழங்குடியினக் கிராமத்தில் வசிப்பவர்கள் மீது நடத்தப்பட்ட கொடூர சம்பவங்களுக்காக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.
- 1995 ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் மத்தியப் புலனாய்வுப் பிரிவு இந்த வழக்கினை விசாரித்தது.
- 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் தேதியன்று, விசாரணை நீதிமன்றமானது எஞ்சியிருக்கும் 215 குற்றம் சாட்டப்பட்ட நபர்களைக் குற்றவாளிகள் என்று தீர்ப்பு அளித்தது.

## 2023 ஆம் ஆண்டில் சம்பா சாகுபடி

- ❖ கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் சம்பா பருவத்தில் காவிரி டெல்டா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சம்பா சாகுபடியின் பரப்பளவு சுமார் 1.5 லட்சம் ஏக்கர் குறைந்து உள்ளது.
- ❖ செப்டம்பர் 25 ஆம் தேதி நிலவரப்படி, மொத்த சம்பா சாகுபடி பரப்பளவு சுமார் 1.77 லட்சம் ஏக்கர் ஆகும்.
- ❖ இது கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் (செப்டம்பர் 26, 2022) 3.31 லட்சம் ஏக்கராக இருந்தது.


Owing to the poor availability of Cauvery water, the area under cultivation in the Cauvery delta this Samba season is down by about 1.5 lakh acres compared to the previous year

A compilation of Samba coverage in Cauvery delta (in acres)

| District | 2022-23* (Direct-sown) | 2022-23* (Total)*** | 2023-24** (Direct-sown) | 2023-24** (Total)*** |
|---|---|---|---|---|
| Cuddalore | 9,428 | 27,916 | 28,311 | 33,263 |
| Tiruchi | - | 12 | - | 89 |
| Karur | - | 1,420 | - | - |
| Ariyalur | - | 1,200 | - | 420 |
| Pudukottai | 1,608 | 3,213 | 2,631 | 2,631 |
| Thanjavur | 5,511 | 30,060 | 2,806 | 23,882 |
| Nagapattinam | 79,534 | 88,922 | 49,163 | 49,731 |
| Mayiladuthurai | 3,754 | 9,994 | 5,281 | 5,928 |
| Tiruvarur | 1,08,789 | 1,68,521 | 32,540 | 60,732 |
| **Total** | **2,08,624** | **3,31,258** | **1,20,732** | **1,76,676** |



## அதிகபட்ச மின்னாற்றல் பற்றாக்குறை




- தமிழ்நாடு மாநிலமானது, 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாத காலத்தில் வர உள்ள உச்ச கட்ட மின் தேவைக் கால கட்டத்தில் 114 மில்லியன் அலகு (MU) மின் பற்றாக் குறையை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மேலும், அதே காலக் கட்டத்தில் அதிகபட்சமாக 1,200-1,600 மெகாவாட் ஆற்றல் பற்றாக் குறையை தமிழகம் எதிர்கொள்ளக்கூடும்.
- தமிழகத்தின் ஒரு உச்ச கட்ட மின் தேவையானது, 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் 20,806 மெகாவாட்டாகவும், மே மாதத்தில் 19,785 மெகாவாட்டாகவும், ஜூன் மாதத்தில் 19,800 மெகாவாட்டாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இம்மாநிலத்தின் ஆற்றல் தேவையானது 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் 12,144 மில்லியன் அலகாகவும், மே மாதத்தில் 11,689 மில்லியன் அலகாகவும், ஜூன் மாதத்தில் 12,029 மில்லியன் அலகாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காந்தி ஜெயந்தி தின கிராமசபைக் கூட்டங்கள்

- தமிழக மாநிலம் முழுவதும் உள்ள கிராமப் பஞ்சாயத்துகளில் அக்டோபர் 02 ஆம் தேதியன்று கிராமசபைக் கூட்டங்கள் நடைபெற்றன.
- இந்தக் கூட்டத்தின் கருத்துரு, 'அனைவருக்கும் அனைத்தும்' என்பதாகும்.
- இந்த நிகழ்ச்சிக்கான ஒரு தொடக்க உரையினை முதலமைச்சர் அவர்கள் காணொளி வாயிலாக வழங்கினார்.

## கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு



**Article 15(5), *Constitution of India***

"Nothing in this Article or in Sub-clause (g) of Clause (1) of Article 19 shall prevent the State from making any special provision, by law, for the advancement of any socially and educationally backward classes of citizens or for the Scheduled Castes or the Scheduled Tribes in so far as such special provisions relate to their admission to educational institutions including private educational institutions, whether aided or unaided by the State, other than the minority educational institutions referred to in clause (1) of Article 30."

- சமயம் மற்றும் மொழி சார் சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் பட்டியலிடப்பட்ட சாதியினர், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் இதரப் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்களுக்கான இடஒதுக்கீடு விதியைப் பின்பற்றத் தேவை இல்லை என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- அரசியலமைப்பின் 15(5)வது சட்டப் பிரிவானது, 2005 ஆம் ஆண்டில் 93வது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

- இது சமூக அல்லது கல்வியில் பிற்படுத்தப் பட்ட குடிமக்கள் அல்லது பட்டியலிடப்பட்ட சாதியினர், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் கல்வி நிறுவனங்களில் அவர்களது சேர்க்கை தொடர்பான சிறப்பு விதிமுறைகளை உருவாக்க மாநில அரசுக்கு அதிகாரம் அளித்த அதே நேரத்தில், சிறுபான்மை நிறுவனங்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கிறது.
- மேலும், 2006 ஆம் ஆண்டு சட்டத்தின் 2(d) பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள 'தனியார் கல்வி நிறுவனம்' என்பதன் வரையறையிலிருந்து அரசியலமைப்பின் 30(1)வது சட்டப் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட சிறுபான்மை நிறுவனங்களையும் விலக்குகிறது.

## இந்தியாவில் உள்ள பறவைகளின் நிலை குறித்த (SOIB) அறிக்கை 2023

- தமிழ்நாட்டில் பதிவாகிய சுமார் 110 வகையான பறவை இனங்கள் தற்போது இந்தியா அளவிலான பரவலில் மிகப்பெரியதொரு வீழ்ச்சியை எதிர்கொண்டு வருவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- சேலம் பறவையியல் அறக்கட்டளையானது (SOF) தமிழ்நாடு சார்ந்து மேற்கொள்ளப் பட்ட இந்த அறிக்கை இத்தகவலினை எடுத்துரைத்துள்ளது.
- இந்தியாவில் அடையாளம் காணப்பட்ட சுமார் 1,350 பறவை இனங்களில் 942 இனங்களின் நீண்ட கால மற்றும் தற்போதையப் போக்குகள், பரவல் மற்றும் ஒட்டு மொத்தப் பாதுகாப்பு நிலை ஆகியவற்றை இந்த அறிக்கை மதிப்பிடுகிறது.
- eBird தளத்தில் 30,000க்கும் மேற்பட்ட பறவைக் கண்காணிப்பாளர்களால் வழங்கப்பட்ட 30 மில்லியனுக்கும் அதிகமான பறவைக் கண்காணிப்பு தகவல்களின் அடிப்படையில் இந்த அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது.

## அரிதான மற்றும் அச்சுறுத்தப்பட்ட நிலையில் உள்ள தாவரங்கள் பாதுகாப்புத் திட்டம்

- தமிழ்நாடு, அரிய, அழிந்து வரும் மற்றும் அச்சுறுத்தல் நிலையில் உள்ள தாவரங்களில் சிலவற்றை (சில தமிழகத்தில் மட்டுமே காணப்படும்) காக்கும் பணியைத் தொடங்கி உள்ளது.
- நாட்டிலுள்ள முதன்மையான நிறுவனங்களின் 30க்கும் மேற்பட்ட வகைபிரித்தல் வல்லுநர்கள் தமிழக மாநிலத்தின் தாவரங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் குறித்த ஒரு மதிப்பீட்டினை மேற்கொண்டு 25 தாவரங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளனர்.
- வகைபிரித்தல் வல்லுநர்கள் ஆரம்பத்தில் இந்த நடவடிக்கைக்காக 100 தாவரங்களைப் பட்டியலிட்டனர்.
- சில இனங்கள் 500 அல்லது 1,000 எண்ணிக்கைக்கும் குறைவாக உள்ள வன இனங்களாக விடப்பட்டன.
- 100 தாவர இனங்களைக் கொண்டப் பட்டியலில் மீதமுள்ள தாவரங்களின் மதிப்பீடு மேற்கொள்ளப் படும்.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள மூன்று இனங்கள் - டைசாக்சைலம் மலபாரிகம், கோசினியம் ஃபெனெஸ்ட்ராட்டம் மற்றும் மிரிஸ்டிகா மலபாரிகா அவற்றின் மருத்துவ மதிப்புகளுக்காக அதிகளவில் அழிக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.




## சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு

- சாதி வாரியான மக்கள் தொகைக் கணக்கெடுப்பினை மேற்கொள்ளுமாறு தமிழக அரசிற்கு உத்தரவு பிறப்பிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது.
- இந்த உத்தரவினைப் பிறப்பிக்க கோரிய பொதுநல வழக்கு மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- சாதிவாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்துமாறு மாநில அரசிடம் மனுதாரர் கோரிக்கை விடுத்திருந்தார்.
- பல்வேறு சாதிக் குழுக்களைச் சேர்ந்த மக்கள்தொகையின் சரியான சதவீதத்தைக் கண்டறிய இந்தக் கணக்கெடுப்பினைப் பயன்படுத்தலாம்.
- இதனால் சமூக நீதியை நோக்கமாகக் கொண்ட திட்ட நடவடிக்கைகள் அதனைப் பெற தகுதியான மக்களைச் சரியாக சென்றடையும்.

## உடன்குடி பனங்கருப்பட்டி – புவிசார் குறியீடு

- உடன்குடி 'பனங்கருப்பட்டிக்கு' (பனை வெல்லம்/ குர்) புவிசார் குறியீடு வழங்கப் பட்டு உள்ளது.
- இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பனை வெல்லம் தயாரிக்கும் முறையானது, கூடுதல் நவீன உத்திகள் எதுவும் சேர்க்கப்படாமல் இன்று வரையில் பாரம்பரிய முறைப்படி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூர் தாலுக்காவில் உள்ள உடன்குடியை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பனை சாற்றில் இருந்து தயாரிக்கப்படும் கருப்பட்டிக்கு சில தனித்துவங்கள் உண்டு.
- இப்பகுதியில் காணப்படும் சிவப்பு மணல் திட்டு மண் வகையே இதற்குக் காரணம் ஆகும்.
- பனை வெல்லத் தயாரிப்பில், டிரிபிள் சூப்பர் பாஸ்பேட் மற்றும் பாஸ்போரிக் அமிலம் பல பகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது.
- ஆனால் உடன்குடி பனங்கருப்பட்டியில் இதுபோன்ற ரசாயனக் கலப்படங்கள் எதுவும் பயன்படுத்தப்படுவதில்லை.

## 2023 ஆம் ஆண்டில் காவிரி நதி நீர் பங்கீடு

| Water year | Quantum realised (tmc ft) |
|---|---|
| 1987-88 | 24.823 |
| 2003-04 | 30.632 |
| 2012-12 | 40.149 |
| 2023-24 | 45.1623 |
| 2002-03 | 46.665 |

- 11 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு, இந்த ஆண்டின் தென்மேற்குப் பருவமழை காலத்தின் போதான தமிழக மாநிலத்திற்கான காவிரி நதி நீர்ப் பங்கீட்டிற்கான அளவு 50 ஆயிரம் மில்லியன் கன அடிக்கும் குறைவாக வழங்கப்பட்டுள்ளது.
- கடந்த 50 ஆண்டுகளில் இந்தப் பருவத்தின் போது 50 ஆயிரம் மில்லியன் கன அடிக்குக் குறைவாக நீர் வழங்கப்படுவது இது ஐந்தாவது முறையாகும்.
- இந்த ஆண்டிற்கான நதி நீர்ப் பங்கீடு ஆனது (45.16 ஆயிரம் மில்லியன் கன அடி) 2016-17 ஆம் ஆண்டிற்கான நீர் பங்கீட்டினை விட குறைவாக உள்ளது.
- ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, தமிழகத்திற்கு சுமார் 53 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் வழங்கப்பட்டுள்ளது.
- 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2013 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான நீர் பங்கீட்டு காலக் கட்டத்தின் முதல் நான்கு மாதங்களில், தமிழகத்திற்கு சுமார் 40.15 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் வழங்கப்பட்டது.

## தமிழ்நாடு எரிசக்தி திட்டம் 2023

- இந்த ஆண்டில், காற்றாலை உற்பத்தித் திறனை மேலும் 5,000 மெகாவாட் அளவிற்கு அதிகரிப்பதற்கு தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
- தற்போது, மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள காற்றாலை ஆற்றல் உற்பத்தித் திறன் 10,225 மெகாவாட் ஆகும்.

- திட்டமிடப்பட்ட இந்த 5,000 மெகாவாட் உற்பத்தித் திறனில், 4,400 மெகாவாட் புதிய நிறுவனங்களாலும், 600 மெகாவாட் ஏற்கனவே உள்ள நிறுவனங்களாலும் வழங்கப் படும்.
- தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் காற்றாலை ஆற்றலில் கிட்டத்தட்ட 65% ஆற்றல் அந்தந்த நிறுவனங்களின் நுகர்விற்காகப் பயன்படுத்தப்படுகிறது அல்லது மூன்றாம் தரப்பு தொழில்துறை அல்லது வணிக வாடிக்கையாளர்களுக்கு விற்கப்படுகிறது.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் ஆனது 35% ஆற்றலை மட்டுமே கொள்முதல் செய்கிறது.

## தமிழ்நாட்டில் பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதம் 2023

- 2021-2022 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதமானது (MMR) ஒரு லட்சம் குழந்தைப் பிறப்புகளுக்கு 90 ஆக உயர்ந்திருந்தது.
- கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக, 2022-2023 ஆம் ஆண்டில் இது ஒரு லட்சம் குழந்தைப் பிறப்புகளுக்கு 52 ஆகக் குறைந்துள்ளது.
- 2021-2022 மற்றும் 2022-2023 ஆகிய ஆண்டுகளில் ஏறக்குறைய ஒரே எண்ணிக்கையில் சுமார் 9.20 லட்சம் குழந்தைப் பிறப்புகள் பதிவாகின.
- 2021–2022 ஆம் ஆண்டில் பதிவான 827 பேறுகாலத் தாய்மார்கள் இறப்புகளில் 250 இறப்புகள் கோவிட்-19 காரணமாக ஏற்பட்டவையாகும்.
- 2022-2023 ஆம் ஆண்டில் பதிவான பேறுகாலத் தாய்மார்கள் இறப்புகளின் எண்ணிக்கை 479 ஆகும்.
- மாநிலப் பொது சுகாதார இயக்குநரகம் (DPH) ஆனது, தாய் மற்றும் குழந்தை நலச் சேவைகளை மேம்படுத்துவதற்காக வேண்டி சிங்கப்பூர் சுகாதாரச் சேவைகள் மற்றும் சிங்கப்பூர் சர்வதேச அறக்கட்டளை ஆகியவற்றுடன் இணைந்து தடுப்பு மருத்துவத் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பினை மேற்கொண்டுள்ளது.
- சிங்கப்பூரின் பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதம் ஆனது ஒரு லட்சம் குழந்தைப் பிறப்புகளுக்கு 10 ஆக உள்ளது.

## முதல் நீலகிரி வரையாடு தினம்

- தமிழ்நாடு அரசானது முதலாவது ‘நீலகிரி வரையாடு தினத்தினை’ அக்டோபர் 07 ஆம் தேதியன்று கொண்டாடியது.
- மாநில அரசானது, E.R.C. டேவிதார் அவர்களின் நினைவாக இந்தத் தேதியை நீலகிரி வரையாடு தினமாக தேர்வு செய்துள்ளது.
- இவர் 1960 ஆம் ஆண்டுகளில் தென்னிந்தியாவின் ஒரேயொரு மலைவாழ் குளம்பு விலங்கு பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்து மேற்கொண்ட வனவிலங்கு வளங்காப்பாளர் ஆவார்.
- இவர் 1963 ஆம் ஆண்டில் நீலகிரிப் பகுதிகளில் நீலகிரி வரையாடுகளின் முதல் எண்ணிக்கைக் கணக்கெடுப்பை மேற்கொண்டார் என்பதோடு, மேலும் நீலகிரியில் 38 விலங்குகளைக் கொண்ட ஒரு பெரிய மந்தை உட்பட சுமார் 400 வரையாடுகள் இருப்பதாக அவர் தெரிவித்தார்.
- இவர் 1975 ஆம் ஆண்டில் மேற்குத் தொடர்ச்சி மலைகள் முழுவதும் காணப்படும் நீலகிரி வரையாடுகள் பற்றிய விரிவானக் கணக்கெடுப்பினை மேற்கொண்டு அங்கு சுமார் 2,200 வரையாடுகள் இருப்பதாக மதிப்பிட்டார்.



## பாரதி எழுத்து வடிவம்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தினைச் சேர்ந்த குழுவானது, ஒன்பது இந்திய மொழிகளுக்கான ஒருங்கிணைந்த எழுத்து வடிவினை உருவாக்கி, அதற்கு பாரதி எழுத்து வடிவம் என்று பெயரிட்டுள்ளது.
- பன்மொழி ஒளியிழை எழுத்துணரி (OCR) திட்டத்தைப் பயன்படுத்தி பாரதி எழுத்து வடிவில் உள்ள ஆவணங்களைப் படிக்கும் முறையை இது உருவாக்கியுள்ளது.
- செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கான சைகை மொழியை உருவாக்கப் பயன்படும் விரல்-எழுத்துக் கூட்டு முறையையும் இக்குழு உருவாக்கியுள்ளது.
- இதில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள எழுத்து வடிவங்கள் தேவநகரி, வங்காளம், குர்முகி, குஜராத்தி, ஒரியா, தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் தமிழ் ஆகியானவாகும்.
- இதில் ஆங்கிலம் மற்றும் உருது ஆகிய மொழிகள் இதுவரையில் ஒருங்கிணைக்கப் பட வில்லை.
- ஒளியிழை எழுத்துணரித் திட்டங்களில் முதலில் ஆவணத்தை உரை சார்ந்த மற்றும் உரை சாராத ஆவணங்களாகப் பிரிப்பது (அல்லது வகைப்படுத்துவது) ஆகிய செயல் முறைகள் அடங்கும்.

## உலகின் மிக நீளமான பாம்பு இனம்




- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் வளாகத்தில் சுமார் 7 முதல் 8 அடி நீளமுள்ள இராஜ மலைப்பாம்புக் குட்டி ஒன்று தென்பட்டுள்ளது.
- இராஜ மலைப்பாம்புகள் இதுவரை பதிவு செய்யப்பட்ட உலகின் மிக நீளமான மற்றும் மூன்றாவது கனமான பாம்பு இனமாகும்.
- இந்தியாவில், நிக்கோபார் தீவுகளில் உள்ள காடுகளில் மட்டுமே இவை காணப் படுகின்றன.

## வெகுஜன விரைவுப் போக்குவரத்து அமைப்பு (MRTS)

- சென்னை பெருநகர மேம்பாட்டு ஆணையம் (CMDA) மற்றும் சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து ஆணையம் (CUMTA) ஆகியவை இணைந்து வெகுஜன விரைவுப் போக்குவரத்து அமைப்பு/ சென்னை பறக்கும் தொடருந்து அமைப்பு (MRTS) நிறுவனத்தை கையகப்படுத்த உள்ளன.
- ஆரம்பத்தில், CUMTA மற்றும் CMDA ஆகியவை அதன் செயல்பாடுகளை மேற்பார்வை மேற்கொள்ளும் என்பதோடு, மேலும் அவை இதற்கெனச் சிறப்பு நோக்க அமைப்பு (SPV) ஒன்றை உருவாக்க உள்ளது.
- சுமார் ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அப்போதைய சூழ்நிலையைப் பொறுத்து CMRL இதற்கான பொறுப்பினை ஏற்கக் கூடும்.

## 2023-24 ஆம் நிதியாண்டில் மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள்




- 2023-24 ஆம் நிதியாண்டில் (ஆகஸ்ட் மாதம் வரை) தமிழகத்தின் மொத்த வருவாய் வரவுகள் சிறிதளவு அதிகரித்து 92,967.33 கோடி ரூபாயாக உள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டின் இதே காலக் கட்டத்தில் இது 91,812.08 கோடி ரூபாயாக இருந்தது.
- 2023-24 ஆம் நிதியாண்டிற்கான மாநில நிதிநிலை அறிக்கையில், மொத்த வருவாய் வரவுகள் 2,70,515.23 கோடி ரூபாயாக இருக்கும் என்று கணிக்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத நிலவரப்படி, தமிழகம் தனது இலக்கில் 34.37 சதவீதத்தினை எட்டியுள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டின் இதே காலத்தில் 56,521.83 கோடி ரூபாயாக இருந்த மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) ஆனது 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 5.47% அதிகரித்து 59,616.01 கோடி ரூபாயாக உள்ளது.
- 2023-24 ஆம் நிதியாண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) ஆனது 1,81,182.22 கோடி ரூபாயாக இருக்கும் என்று நிதிநிலை அறிக்கையில் கணிக்கப்பட்டிருந்தது.
- 2023-24 ஆம் நிதியாண்டில் (ஆகஸ்ட் மாதம் வரை) மாநிலத்தின் வருவாய்ச் செலவினம் 1,1,0,582.31 கோடி ரூபாயாக இருந்தது.

- மாநில நிதிநிலை அறிக்கையில் 2023-24 ஆம் நிதியாண்டில் வருவாய்ச் செலவினம் 3,08,055.68 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப் பட்டது.
- 2023-24 ஆம் நிதியாண்டின் ஆகஸ்ட் மாதம் வரை வருவாய்ப் பற்றாக்குறை 17,614.98 கோடி ரூபாயாக இருந்தது.
- மாநில நிதிநிலை அறிக்கையில் வருவாய்ப் பற்றாக்குறை 37,540.45 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப் பட்டது.

## 2023-24 ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதி ஒதுக்கீடுகள்

- நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், 2023-24 ஆம் ஆண்டிற்கான 2,893.15 கோடி மதிப்பிலான தமிழக அரசின் முதல் துணை நிதி ஒதுக்கீடுகளைச் சமர்ப்பித்தார்.
- இதில் சென்னை மாநகராட்சிக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 304 கோடி ரூபாயை அரசு வழங்கியுள்ளது.
- இது சென்னை மற்றும் அதன் புறநகரப் பகுதிகளிலும் கடலூர் மாநகராட்சியிலும் மழைநீர் வடிகால் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும்.
- தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு மற்றும் திருச்சி பால் ஒன்றியம் ஆகியவற்றிற்கான மூலதனப் பங்கீட்டு உதவியாக 175.33 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது.
- இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட 1,87,275 விவசாயிகளுக்கு உள்ளீட்டு கருவிகளுக்கான மானிய நிவாரண உதவி வழங்க 181.40 கோடி ரூபாய் வழங்கப் பட்டு உள்ளது.
- தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் 25 தொகுதிகள் இதில் அடங்கும்.

## இலங்கைக்கு பயணியர் படகு சேவை

- தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மற்றும் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள காங்கேசன் துறை ஆகிய பகுதிகள் இடையே அதிவேக பயணியர் படகு சேவை தொடங்கப் பட்டுள்ளது.
- இது கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் தொடங்கப் பட்டுள்ளது.



- செரியபாணி எனப்படும் இந்தியக் கப்பல் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான அதிவேக வாகனம் (HSC) இதற்குப் பயன்படுத்தப்பட உள்ளது.
- நாகப்பட்டினம் ஆனது வங்காள விரிகுடாவின் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு அதி முக்கியத்துவம் சாராத துறைமுகமாகும்.

## சமாதான் திட்டம் மறுஅறிமுகம்

- பயனுள்ள சமாதான் திட்டத்தினை மீண்டும் அறிமுகப் படுத்தச் செய்வதற்கான மசோதாவினை தமிழ்நாடு சட்டமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தப்படுவதற்கு முன் 2017-18 ஆம் ஆண்டு வரை கொண்டு வரப்பட்ட பல்வேறு சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பாக அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி, அபராதம் மற்றும் வட்டி ஆகியவற்றின் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு என்று மற்றொரு வாய்ப்பை வழங்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன் மதிப்பிடப்பட்ட நிலுவை மதிப்பீடுகள் இந்தத் திட்டத்தின் மூலம் வசூல் செய்யப்படும்.
- சரக்கு மற்றும் சேவைகள் மீது வரி விதிக்கும் முறை, அதாவது ஜிஎஸ்டி வரியானது, 2017 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நிலுவைத் தொகையை விரைவாக வசூலிக்கும் நோக்கில், மாநில அரசு பல்வேறு சட்டங்களை இயற்றியதன் மூலம் 2006, 2008, 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் சமாதான் திட்டங்களை அறிமுகப்படுத்தியது.





## இஸ்ரோவின் இரண்டாவது விண்வெளி நிலையம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) இரண்டாவது விண்வெளி நிலையம் ஆனது தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப் பட்டினத்தில் அமைக்கப்படவுள்ளது.
- இது தனியார் துறையினால் உருவாக்கப்பட்ட சிறிய செயற்கைக்கோள் ஏவு வாகனங்களை விண்ணில் ஏவுவதற்காக (SSLVs) பிரத்தியேகமாக பயன்படுத்தப்படும்.
- இன்னும் இரண்டு வருடங்களில் இந்தத் திட்டம் தொடங்கப்படும்.
- SSLV என்பது 500 கி.மீ. சுற்றளவு கொண்ட கோள்களின் சுற்றுப்பாதையில் தோராயமாக 500 கிலோ எடையுள்ள செயற்கைக் கோள்களை நிலைநிறுத்தும் திறன் கொண்ட மூன்று எரிபொருள் நிலைகள் கொண்ட ஒரு ஏவு வாகனமாகும்.




## மோட்டார் வாகனங்களுக்கான புதிய ஆயுட்கால வரி விகிதம்



COST OF COMMUTE COULD GO UP

CARS

| PRESENT TAX RATES | | REVISED RATES | |
|---|---|---|---|
| Cost of vehicle (₹ lakh) | Life tax (%) | Cost of vehicle (₹ lakh) | Life tax (%) |
| <10 | 10 | <5 | 12% of vehicle cost |
| >10 | 15 | 5-10 | 13 |
| | | 10-20 | 18 |
| | | >20 | 20 |

TWO-WHEELERS

Present tax: 8%

Revised rates: 10% for two-wheelers costing less than ₹1 lakh and 12% for all other motorcycles

- பத்தாண்டுகளுக்குப் பிறகு, புதிய வாகனங்களின் ஆயுட்கால வரி விகிதத்தை உயர்த்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் (விசையுந்துகள்) வரி விதிப்புச் சட்டத்தினை திருத்தியமைக்கும் மசோதாவானது சட்டப் பேரவையில் நிறைவேற்றப் பட்டது.
- ஒரு புதிய இருசக்கர வாகனங்களுக்கான ஆயுட்கால வரி விகிதம் ஆனது, அதன் மொத்த விலை 1 இலட்சம் ரூபாய்க்கு மேல் இருந்தால் 12% ஆகவும், அதன் மொத்த விலை ₹1 லட்சத்துக்கு மிகாமல் இருந்தால் 10% ஆகவும் வரி விதிக்கப்பட்டுள்ளது.

- புதிய மகிழுந்துகள் மற்றும் பிற புதிய மோட்டார் வண்டிகளுக்கான ஆயுட்கால வரி விகிதம் ஆனது, அந்த வாகனத்தின் விலை 20 இலட்சம் ரூபாய்க்கு மேல் இருந்தால் 20% ஆக இருக்கும்.
- 10 இலட்சம் முதல் 20 இலட்சம் ரூபாய் வரையிலான மதிப்பு கொண்ட புதிய மகிழுந்துகள் மற்றும் பிற புதிய மோட்டார் வண்டிகளுக்கான ஆயுட்கால வரி விகிதம் ஆனது 18% ஆக இருக்கும்.
- 5 லட்சம் முதல் 10 லட்சம் ரூபாய் வரையிலான மதிப்பு கொண்ட வாகனங்களுக்கான ஆயுட்கால வரி விகிதம் ஆனது 13% ஆக இருக்கும்.
- 5 லட்சம் ரூபாய்க்கு குறைவான மதிப்பு கொண்ட வாகனங்களுக்கான ஆயுட்கால வரி விகிதம் 12% ஆக இருக்கும்.
- வாகனப் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகளை நிறைவு செய்த மோட்டார் வண்டிகளுக்கு (போக்குவரத்து வாகனங்கள் தவிர) அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு 1,500 ரூபாய் பசுமை வரி செலுத்த வேண்டும் என்று இந்த மசோதாவில் குறிப்பிடப் பட்டு உள்ளது.
- வாகனப் பதிவு செய்து 15 ஆண்டுகள் நிறைவடைந்த இருசக்கர வாகனங்களுக்கு, அதற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு 750 ரூபாய் பசுமை வரி செலுத்த வேண்டும்.

## பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்




- புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தினைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக இணைப்பதற்கான மசோதாவினை தமிழ்நாடு சட்டமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.
- இது 'வேளாண்மை' என்ற சொல்லின் பொருள் வரம்பிற்குள் 'கால்நடை வளர்ப்பு மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு' ஆகியவற்றையும் சேர்த்துள்ளது.
- தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களையும், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள சில தொகுதிகளையும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றுவதற்காக 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப் பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டுச் சட்டத்தினை மாநில அரசு இயற்றியது.

## ஆம்பூர் சமணர் குகை

- எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணர் குகை அமைந்துள்ள அர்மா மலையானது, மாநில அரசினால் விரைவில் வரலாற்றுச் சின்னமாக அறிவிக்கப்பட உள்ளது.
- இது திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆம்பூர் நகருக்கு அருகில் அமைந்த மலையம்பட்டு கிராமத்தில் அமைந்துள்ளது.
- தற்போது அதன் இயற்கையான உருவாக்கம் மற்றும் அதன் சுவர்களில் வரையப்பட்ட ஓவியங்கள் ஆகியவற்றிற்காக அந்தக் குகை மட்டுமே ஒரு வரலாற்றுச் சின்னமாக உள்ளது.
- இந்தக் குகை ஓவியங்கள் ஆனது, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குடைவரைக் குகையான சித்தன்னவாசலில் காணப்படும் ஓவியங்களை, குறிப்பாக அதன் வண்ணங்களைப் பயன்படுத்தும் பாணியை ஒத்திருக்கிறது.
- தற்போது, தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையானது, மதுரையில் அதிகபட்சமாக 16 வரலாற்றுச் சின்னங்களுடன் மாநிலத்தில் மொத்தம் 93 வரலாற்றுச் சின்னங்களைக் கொண்டுள்ளது.



## நீலகிரி வரையாடு வளங்காப்பு திட்டம்

- தமிழகத்தின் மாநில விலங்கினைப் பாதுகாப்பதற்கான நீலகிரி வரையாடு திட்டத்தினை அக்டோபர் 12 ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
- நீலகிரி வரையாடு வளங்காப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான செலவினமானது 25.14 கோடி ரூபாய் ஆகும்.
- இத்திட்டமானது 2022 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டு வரையில் 5 ஆண்டுகளுக்கு அமல்படுத்தப்படும்.
- இந்தத் திட்டத்தில், ரேடியோ அலைவரிசை கழுத்துப் பட்டையையும் (ரேடியோ காலரிங்) மற்றும் இதரப் பொருட்கள் உள்ளிட்ட ரேடியோ அலைவரிசை தொலைவு கணிப்பியல் (ரேடியோ டெலிமெட்ரி) மூலமாக நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கான ஒத்திசைவு கணக்கீடுகள் உட்பட பல் முனை உத்திகளைப் பின்பற்றப்பட உள்ளது.
- நீலகிரி வரையாடுகள், மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே காணப்படும் சிறப்பினமாகும்.
- ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் உள்ள வால்பாறை பகுதியானது நீலகிரி வரையாடுகளுக்கான உகந்த வாழ்விடமாக விளங்குகிறது.

## மாநிலத்தின் மூலதனச் செலவினம்




- ❖ தமிழ்நாடு அரசானது 2023-24 ஆம் நிதியாண்டில் (2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரையிலான) இதுவரையில் 9,955 கோடி ரூபாய் மூலதனச் செலவினத்தினை மேற் கொண்டுள்ளது.
- ❖ இது 2022-23 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் பதிவான செலவினத்தில் இருந்து 7.37% குறைந்துள்ளது.
- ❖ மாநில அரசானது, 2023-24 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் மூலதனச் செலவினங்களுக்காக 44,366 கோடியினை ஒதுக்கியுள்ளது.
- ❖ நிதிநிலை அறிக்கையில் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலக்கட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட தொகையில் 22.44% ஆனது செலவிடப்பட்டுள்ளது.

## கணித்தமிழ் 24





- ❖ தமிழக அரசானது, 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், 'கணித்தமிழ் 24' எனப்படும் மூன்று நாட்கள் அளவிலான மாநாட்டினை சென்னையில் நடத்த உள்ளது.
- ❖ இயல்பான மொழியினை செயல்முறைக்கு உட்படுத்துதல், செயற்கை நுண்ணறிவு, இயந்திரவழிக் கற்றல் செயல்பாட்டு நிரல்கள், இயந்திர வழி மொழிபெயர்ப்பு நிரல்கள்,

உணர்வுப் பகுப்பாய்வு, பெரிய அளவிலான மொழி மாதிரிகள் மற்றும் உரையினைத் தானியங்கு முறையில் அடையாளம் காணுதல் ஆகியவற்றில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த ஆராய்ச்சியில் பல்வேறு சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து இந்த மாநாட்டில் விரிவான அளவில் விவாதிக்கப் பட உள்ளது.

- 1999 ஆம் ஆண்டில் மு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தமிழ் வழி கணினிச் செயல்முறை பற்றிய முதல் மாநாடு ஆனது நடத்தப்பட்டது.
- 25 ஆண்டுகளுக்குப் பிறகு அதே போன்ற இரண்டாவது தமிழ்வழிக் கணினி செயல் முறை மாநாடானது ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

## தேர்தல் நேரப் பறிமுதல் மேலாண்மை அமைப்பு




- தேர்தல் ஆணையத்தின் சமீபத்தியத் தொழில்நுட்ப முன்னெடுப்பானது ஐந்து மாநிலங்களில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல்களில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- பணபலத்தினைப் பயன்படுத்துதல் மற்றும் வாக்குப்பதிவு மீது செல்வாக்கு செலுத்துதல் ஆகியவற்றினை கண்காணிப்பதில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தவதோடு, அத்தகையக் குற்றங்களுக்கு எதிராக மத்திய மற்றும் மாநில அமலாக்க அமைப்புகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் இது அதிகரிக்கும்.
- இந்தத் தொழில்நுட்பம் ஆனது தேர்தல் நேரப் பறிமுதல் மேலாண்மை அமைப்பு (ESMS) எனப் படுகின்றது.
- இது அனைத்து மத்திய மற்றும் மாநில அமலாக்க அமைப்புகளும் இணைந்து செயல் படும் ஒரு தளமாகும்.
- அதிகாரிகள் ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நடமாட்டம் மற்றும் சட்டவிரோதப் பணம், மதுபானம், போதைப்பொருள் போன்றவற்றைக் கைப்பற்றிய விவரங்களை இதில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- இது களத்தில் இருந்து நிகழ்நேரத் தகவல்களைப் பகிரவும் அத்தகைய நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் உளவுப் பகிர்வுகளையும் மேற்கொள்ள வழி வகுக்கும்.

- சமீபத்திய தேர்தலுக்கும் முந்தைய தேர்தலுக்கும் இடையே பதிவான பறிமுதல்களின் அதிகரிப்பு திரிபுராவில் 2,184% ஆகவும், நாகாலாந்தில் 1,150% ஆகவும், மேகாலயாவில் 6,627% ஆகவும், குஜராத்தில் 2,862% ஆகவும், இமாச்சலப் பிரதேசத்தில் 533% ஆகவும் மற்றும் உத்தரகாண்டில் 200% ஆகவும் உள்ளன.

## குழந்தைகளில் ஊட்டச்சத்து குறைபாடு மேலாண்மைக்கான நெ றிமுறை




- இந்தியாவில் உள்ள ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு விரிவானப் பராமரிப்பு வழங்குவதற்காக ஒரு தரப்படுத்தப்பட்ட தேசிய நெறிமுறையை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது பசியுணர்வுச் சோதனை மற்றும் "அரும்பும் தாய்" கருத்தாக்கம் (ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தையின் தாய்க்கு ஆரோக்கியமான குழந்தையின் தாய் வழி காட்டுதல்) போன்ற புதிய முன்னெடுப்புகளை உள்ளடக்கியது.
- இது அங்கன்வாடி அளவில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளை அடையாளம் கண்டு மேலாண்மை செய்வதற்கான விரிவான 10 நிலை வழிகாட்டுதல்களை வழங்குகிறது.
- இது பரிந்துரை, ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான முடிவெடுத்தல் ஆகியவற்றினை உள்ளடக்கியது.
- அசாம் மாநிலத்தில் முதன்முதலாக " அரும்பும் தாய்" கருத்தாக்கம் பயன்படுத்தப் பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வாரமும் அங்கன்வாடி மையத்தில் உள்ள ஆரோக்கியமான ஒரு குழந்தையின் தாய் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள ஒரு குழந்தையின் தாயை வழி நடத்துகிறார்.


## முதல் திலபியா பர்வோவைரஸ் பாதிப்பு



- இந்தியாவில் முதன்முறையாக இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள வாலாஜாவில் உள்ள குளங்களில் திலபியா பர்வோவைரஸ் (TiPV) பாதிப்பு பதிவாகியுள்ளது.
- இது பண்ணையில் வளர்க்கப்படும் திலாப்பியா எனப்படும் நன்னீர் மீன் இனத்தைப் பாதித்து, அவற்றில் பெரிய அளவிலான இறப்பு விகிதத்தை ஏற்படுத்துகிறது.
- இந்த டிஎன்ஏ வைரஸ் மீன் பண்ணையில் 30 முதல் 50% வரையிலும், ஆய்வகத்தில் 100% வரையிலும் இறப்பை ஏற்படுத்தியது.
- "ஒரு ஏழை-மக்களின் மீன்" என்று கருதப்படும் மொசாம்பிக் திலாபியா 1950 ஆம் ஆண்டுகளில் இந்திய நன்னீர்நிலைகளில் விடப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது தமிழில் ஜிலேபி என்றும் அழைக்கப்படுகிறது.
- TiPV பாதிப்பானது, முதன்முதலில் 2019 ஆம் ஆண்டில் சீனாவிலும், 2021 ஆம் ஆண்டில் தாய்லாந்திலும் பதிவாகியுள்ளது.
- TiPV பாதிப்பு பதிவாகியுள்ளதாக அறிவித்துள்ள மூன்றாவது நாடு இந்தியாவாகும்.

## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முன் எச்சரிக்கை அமைப்பு

- இரயில் பாதைகளில் காட்டு யானைகள் இரயில்களில் அடிபடுவதைத் தடுக்க தமிழகத்தின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான முன் எச்சரிக்கை அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழகத்தையும் கேரளாவையும் இணைக்கும் எட்டிமடை- வாளையாறு பகுதியில் அமைக்கப்பட்டு வரும் இந்த அமைப்பின் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.
- இது திண்தோல் கொண்ட இந்த விலங்கினங்களுக்கு கூடுதல் பாதுகாப்பினை வழங்கும்.
- இத்திட்டத்திற்காக இரட்டை ஒற்றைக் கோபுர வரிசையின் – 'A' வரிசையில் ஐந்தும், 'B' வரிசையில் ஏழுமாக மொத்தம் 12 இணைய வழி கண்காணிப்பு கோபுரங்களை நிறுவும் பணி நிறைவடைந்துள்ளது.
- 2008 முதல் 2022 வரையிலான காலக் கட்டத்தில், கோயம்புத்தூர் மற்றும் பாலக்காடு ஆகிய பகுதிகளை இணைக்கும் இரண்டு இரயில் பாதைகளில் நிகழ்ந்த ஆறு இரயில் மோதலில் மொத்தம் 11 யானைகள் இறந்தன.




## முதுவன் பழங்குடியினர்

- ❖ ஆனைமலை மலைப்பகுதியைச் சேர்ந்த முதுவன் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு வனத்துறையுடன் இணைந்து ஒரு தனித்துவமான பணியை மேற்கொண்டு உள்ளனர்.
- ❖ அவர்கள் தங்கள் பாரம்பரிய அறிவு மற்றும் அனுபவம் கொண்டு வனவிலங்குகளுடன் ஒருங்கே வாழ்வதற்காக புகழ் பெற்றவர்கள்.
- ❖ 'அருகி வரும்' மாநில விலங்கைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட நீலகிரி வரையாடு வளங்காப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக அவர்கள் பணியாற்றுவர்.
- ❖ முதுவன் பழங்குடியினர் பாரம்பரிய அறிவு மற்றும் மலைகளைப் பற்றிய புரிதலுக்குப் பெயர் பெற்றவர்கள்.
- ❖ அவர்கள் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றிய தங்கள் அறிவைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும், காட்டுத் தீயைத் தடுப்பதில் நமக்கு உதவுவதன் மூலமும் வளங் காப்பு பணியில் ஏற்கனவே நிறைய பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.



## ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரவரிசை

- மாநிலத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHC) ஆனது தற்போது 20 முக்கிய குறிகாட்டிகளின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப் படவுள்ளன.
- இது அவற்றின் செயல்திறனின் அளவை மதிப்பிடுவதோடு, குறிப்பிட்ட கால இடைவெளியில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்களையும் கண்காணிக்கும்.
- தமிழ்நாட்டில் மொத்தம் 2,127 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன.
- தமிழகத்தின் சுகாதார நிறுவனங்களுக்கு இது போன்ற ரீதியிலான தரவரிசைப் படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரவரிசைப்படுத்துவதன் நோக்கமானது சுகாதார சேவை வசதிகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு ஒரு அகநிலை மதிப்பாய்வுக்குப் பதிலாக ஒரு புறநிலை (உண்மையான) மதிப்பீட்டு வழிமுறையை மேற்கொள்வதாகும்.

## உலக எழுத்துரு தரநிலை

- எழுத்து வடிவங்கள் மற்றும் உணர்வு வெளிப்படுத்திகளைப் (எமோஜிகளுக்கான) பயன்படுத்துவதற்கான எண்ணிம தரநிலைகளை வெளியிடும் ஒருங்குறியக் கூட்டமைப்பில் உள்ள மூன்று அரசு உறுப்பினர்களில் தமிழ்நாடு மாநில அரசும் ஒன்று ஆகும்.
- ஆனால் தமிழக மாநில அரசானது உண்மையில் இத்தரநிலையினைப் பயன்படுத்தச் செய்வதிலிருந்து பெரும்பாலும் பின்தங்கியுள்ளது.
- இத்தரநிலையினைப் பயன்படுத்துவதற்காக வேண்டி இந்தக் கூட்டமைப்பிற்கான உறுப்பினர் காலமான 16 வருட காலப் பகுதியில் 200,000 டாலர் அளவு தவணைத் தொகையினை மாநில அரசு செலவிட்டுள்ளது.
- இக்கூட்டமைப்பில் தமிழ் மெய்நிகர்ப் பல்கலைக்கழகமானது (TVA) தமிழக அரசின் பிரதிநிதி உறுப்பினராக உள்ளது.
- பத்திரிக்கைத்துறை வெளியீடுகள், அரசு வெளியிடும் ஆணைகள் மற்றும் அரசிதழ் சார்ந்த அறிவிப்புகள் ஆகியவற்றில் பொதுவாக ஒருங்குறியத் தரத்துடன் பொருந்தாத தனிப்பயன் சார்ந்த தமிழ் எழுத்துருக்களேப் பயன்படுத்தபடுகின்றன.
- இது அரசாங்க ஆவணங்களுக்கான அணுகல் மற்றும் அந்த ஆவணங்களை இயங் கலையில் (ஆன்லைனில்) கண்டறிவதிலும் பெரும் சிரமத்தினை ஏற்படுத்தும்.
- தமிழ்நாடு அரசானது, ஒருங்குறியக் கூட்டமைப்பில் ஆதரவளிக்கும் உறுப்பினராக செயல்படுகிறது.
- இந்தச் சலுகையானது, ஒருங்குறியத் தொழில்நுட்பக்குழுவினால் முன்வைக்கப்படும் முன்மொழிதல் மீது வாக்களிப்பதற்கு ஒருபாதி பங்கு வாக்கினை அளிப்பதற்கு மாநில அரசிற்கு வழி வகை செய்கிறது, ஆனால் அதில் பல ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு வாக்களிக்கவில்லை.
- தமிழ்நாடு தவிர, தற்போது இந்தக் கூட்டமைப்பின் உறுப்பினர்களில், வங்காளதேசம் மற்றும் ஓமன் அரசாங்கங்கள் மட்டுமே உறுப்பினர் அந்தஸ்திற்கான தொகையினைச் செலுத்துகின்றன.

## லிக்னைட் உற்பத்தி





Table : 1 Power generations

| Lignite Fossils | Reserves (in MT) |
|---|---|
| Tamilnadu and Pondicherry | 36096.54 |
| Rajasthan | 5735.97 |
| Gujarat | 2722.05 |
| Jammu and Kashmir | 27.55 |
| Kerala | 09.65 |
| West Bengal | 02.77 |
| Total | 44594.53 |

- 2022-23 ஆம் ஆண்டில் 22.480 மில்லியன் டன்களை (MT) உற்பத்தி செய்து லிக்னைட் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடத்தில் இருந்தது.
- தற்காலிகப் புள்ளி விவரங்களின்படி, 2021-22 ஆம் ஆண்டில் 47.492 மெட்ரிக் டன்களாக இருந்த ஒட்டு மொத்த லிக்னைட் உற்பத்தி 2022-23 ஆம் ஆண்டில் 5.27% குறைந்து 44.990 மெட்ரிக் டன்னாக இருந்தது.
- லிக்னைட் உற்பத்தியில் தமிழ்நாடு 49.97%, குஜராத் 27.37%, மற்றும் ராஜஸ்தான் 22.67% கொண்டுள்ளன.
- இந்தியாவின் லிக்னைட் கையிருப்பு அளவான 40.9 பில்லியன் டன்னில் சுமார் 82% பங்கினை தமிழ்நாடு கொண்டுள்ளது.
- இந்தியாவில் லிக்னைட் படிவுகள் முதன்மையாக தீபகற்பப் பகுதியின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில், குறிப்பாக தமிழ்நாடு, புதுச்சேரி, குஜராத், ராஜஸ்தான் மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஆகிய பகுதிகளில் காணப்படும் மூன்றாம் நிலை வண்டல்களில் அமைந்துள்ளன.
- ஒடிசா, கேரளா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும் லிக்னைட் சிறிய அளவில் கிடைக்கிறது.

## வழக்கறிஞர்களின் உடுப்பு நெறிமுறை

- வன் துணியாடை (ஜீன்ஸ்), முழங்கால் வரையிலான காற்சட்டை (கேப்ரிஸ்) மற்றும் முழங்கால் வரையிலான இறுக்கமான காற்சட்டை (லெக்கின்ஸ்) போன்றவற்றை நீதிமன்றங்களுக்கு அணிந்து வரக்கூடாது என்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்குரைஞர் (BCTNP) கழகங்கள் அதன் உறுப்பினர்களுக்கு எச்சரித்துள்ளது.

- பொதுவாக நீதிமன்றத்தின் முன் ஆஜராகக் கூடிய வகையிலேயே அனைத்து வழக்கறிஞர்களும் நீதிமன்றங்களுக்கு முறைப்படி வருகை புரிய வேண்டும்.
- பரிந்துரைக்கப்பட்ட ஆடை நெறிமுறைகளை மீறுவது தொழில்முறை சார்ந்த தவறான நடத்தையாக கருதப்பட்டு 1961 ஆம் ஆண்டு வழக்கறிஞர்கள் சட்டத்தின் 35வது பிரிவின் கீழ் தண்டனை வழங்கப்படும்.




## தமிழ்நாடு வரைவு வாக்காளர் பட்டியல் 2023

- தமிழகத்தின் வரைவு வாக்காளர் பட்டியலில், ஆண் வாக்காளர்களை விட (3 கோடி) பெண் வாக்காளர்கள் (3.1 கோடி) எண்ணிக்கை அதிகமாக உள்ளது.
- மொத்தமுள்ள 6.1 கோடி வாக்காளர்களில். 8,016 பேர் மூன்றாம் பாலினத்தவராகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
- கிருஷ்ணகிரி, தருமபுரி, கன்னியாகுமரி, கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் மட்டும் தான் ஆண் வாக்காளர்கள் பெண் வாக்காளர்களை விட அதிகமான எண்ணிக்கையில் உள்ளனர்.
- செங்கல்பட்டு மாவட்டத்தின் சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் அதிக வாக்காளர்கள் (6.52 லட்சம்) உள்ளனர்.
- நாகப்பட்டின மாவட்டத்தின் கீழ்வேளூர் தொகுதியில் மிகக் குறைவான வாக்காளர்கள் (1.69 லட்சம்) உள்ளனர்.
- வாக்காளர் எண்ணிக்கையில் சென்னை (38.68 லட்சம்), திருவள்ளூர் (33.34 லட்சம்), கோவை (30.49 லட்சம்) மாவட்டங்கள் முதலிடத்தில் உள்ளன.
- அரியலூர் (5.07 லட்சம்), நாகப்பட்டினம் (5.41 லட்சம்), பெரம்பலூர் (5.62 லட்சம்), நீலகிரி (5.7 லட்சம்) ஆகியவை பட்டியலில் கடைசி இடங்களில் உள்ளன.
- தமிழக மாநிலத்தில் 120 வயதுக்கு மேற்பட்ட 137 வாக்காளர்கள் உள்ளனர்.
- மேலும் 110 முதல் 119 வயதுக்குட்பட்ட 381 வாக்காளர்கள் உள்ளனர்.

## பிச்வாய் ஓவியம்

- சென்னையில் பிச்வாய் ஓவியங்களைக் காட்சிப்படுத்தும் வகையிலான கலைக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

- சில ஓவியங்கள் 350 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தினைச் சேர்ந்தவை.
- பிச்வாய் கலைஞர்கள் குறிப்பாக தங்கம் மற்றும் வெள்ளி நிறங்களுக்காக கல் நிறமிகளைப் பயன்படுத்துகின்றனர்.
- பிரகாசமான ஆரஞ்சு, சிவப்பு, குரோம் மஞ்சள் மற்றும் கேசரி நிறங்கள் காய்கறி சாயங்களிலிருந்துப் பெறப்படுகின்றன.



## 1,300 ஆண்டுகள் பழமையான பல்லவ ஓவியங்கள்



- விழுப்புரம் மாவட்டம் பனமலையில் உள்ள தாளகிரீஸ்வரர் கோவிலில் 1,300 ஆண்டுகள் பழமையான பல்லவர் கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- சிவபெருமானின் நடனத்தைச் சித்தரிக்கும் இந்த ஓவியச் சட்டகம் கிட்டத்தட்ட மங்கி விட்டது.

- பார்வதி தேவியின் முகமும் சில திட்டுகளும் மட்டுமே தற்போது அதில் எஞ்சியுள்ளன.
- இக்கோயிலானது இராஜசிம்ஹா என்று வெகு பிரபலமாக அறியப்படுகின்ற பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மனால் கட்டமைக்கப்பட்டது.
- இந்த ஓவியங்கள் அஜந்தா மற்றும் சித்தன்னவாசலில் உள்ள ஓவியங்களை வெகுவாக ஒத்திருக்கின்றன.

### புலிகளைப் பேணிக் காத்து வனத்தில் விடுதல் திட்டம்

- ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழகத்தின் முதலாவது புலிகளைக் பேணிக் காத்து வனத்தில் விடுதல் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஒரு குழு மதிப்பீடு செய்தது.
- 2021 ஆம் ஆண்டு செப்டம்பரில் வால்பாறை அருகே உள்ள ஒரு தேயிலை தோட்டத்தில் இருந்து மீட்கப் பட்ட புலிக்கு தற்போது சுமார் 30 மாதங்கள் ஆகிறது.
- வனத்துறையின் ஈடுபாடுமிக்க இரண்டு பணியாளர்களால் இந்தப் புலி பராமரிக்கப் பட்டு ஒளிப்படக் கருவிகள் மூலம் கண்காணிக்கப் படுகிறது.

## தேசியச் செய்திகள்

### நான்காவது பாலின சாம்வாத்




- இது தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா-தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்டம் (DAY-NRLM) மற்றும் பாலினச் சமத்துவ மேம்பாட்டு நிறுவனம் (IWWAGE) ஆகியவற்றின் கூட்டு முன்னெடுப்பாகும்.

- இந்தியாவில் DAY-NRLM திட்டத்தின் பாலினத்தை மையமாகக் கொண்டு மேற் கொள்ளப் படும் முன்னெடுப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இந்த தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது குறிப்பாக மாநிலங்கள் மற்றும் சுய உதவிக் குழு (SHG) உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்துகிறது.

## 2017 ஆம் ஆண்டு HIV சட்டம் குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு


- 2017 ஆம் ஆண்டு மனித நோயெதிர்ப்புக் குறைபாடு வைரஸ் மற்றும் பெறப்பட்ட நோயெதிர்ப்பு குறைபாடு நோய் (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தினைத் திறம்பட அமல்படுத்துவதை உறுதி செய்யுமாறு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- இது HIV சட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.
- HIV சட்டத்தின் 34(2) வது பிரிவில் கூறப்பட்டுள்ளதன் படி, HIV தொற்று பாதித்த நபர்கள் தொடர்பான வழக்குகளை முன்கூட்டியே தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் மற்றும் பகுதியளவு நீதித் துறை சார்ந்த அமைப்புகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.
- HIV தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர்களின் அடையாளத்தினை வெளிவராத படி வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது.




## நிலநடுக்க முன் எச்சரிக்கை அமைப்பு

- ஒரு பகுதியில் ஏற்படும் நிலநடுக்கங்களைப் பற்றி பயனர்களுக்கு முன்கூட்டியே முன்னெச்சரிக்கைகளை வழங்கச் செய்வதற்காக, ஆண்ட்ராய்டு நிலநடுக்க முன் எச்சரிக்கை அமைப்பினை அறிமுகப்படுத்த உள்ளதாக கூகுள் நிறுவனம் அறிவித்து உள்ளது.
- இது முன் எச்சரிக்கை அமைப்புகளை உருவாக்குவதற்காக தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) மற்றும் தேசிய நில அதிர்வு ஆய்வியல் மையம் (NSC) ஆகியவற்றின் ஆலோசனையினைப் பெற்றுள்ளது.


- ❖ ஏற்கனவே ஆண்ட்ராய்டு தொழில்நுட்பத்தில் இயங்கும் வகையில் பல்வேறு இந்திய மொழிகளிலும் இந்த முன் எச்சரிக்கை வசதி கிடைக்கப் பெறும்.
- ❖ ஆண்ட்ராய்டு திறன் பேசிகளின் முடுக்கமானிகள் "ஒரு சிறிய நில அதிர்வு மானியாக" செயல்படும்.
- ❖ கைபேசி மின்னேற்றம் செய்யப்படும் போது நிலநடுக்கத்தின் ஆரம்பத்தினை இதன் மூலம் கண்டறிய முடியும்.




Be Aware Alert
[Weak / Light Shaking]

Take Action Alert
[Moderate / Extreme Shaking]

## இந்திய முதியோர் அறிக்கை 2023




- ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் ஆனது, 2023 ஆம் ஆண்டிற்கான இந்திய முதியோர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 10.5% அல்லது 14.9 கோடி (2022 ஆம் ஆண்டு ஜூலை 01 அன்று) ஆக இருந்த 60 வயதிற்கு மேற்பட்ட நபர்களின் மக்கள் தொகையானது 2050 ஆம் ஆண்டிற்குள் 20.8% அல்லது 34.7 கோடியாக இரட்டிப்பாகும்.
- 2050 ஆம் ஆண்டிற்குள், இந்த மக்கள் தொகையானது 20.8% ஆக இரட்டிப்படைந்து 347 மில்லியனாக இருக்கும்.
- இந்த நூற்றாண்டின் இறுதியில், முதியோர்கள் எண்ணிக்கையானது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 36% ஆக இருக்கும்.
- 2050 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பர்.
- உதாரணமாக கேரளா மற்றும் மேற்கு வங்காளத்தில் குழந்தைகள் மற்றும் இளைஞர் மக்கள் சிறந்த வாய்ப்புகளுக்காக வேண்டி புலம் பெயர்வதால் அங்கு தனியாக வாழும் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
- தற்போது, 35 வயதிற்குட்பட்ட 65% இந்தியர்களுடன், உலகிலேயே அதிக வளர் இளம் பருவத்தினர் மற்றும் இளையோர்கள் வசிக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று ஆகும்.
- 18.7% முதியவர்களுக்கு வருமானம் இல்லை.
- இந்த விகிதம் ஆனது 17 மாநிலங்களில் தேசிய விகிதத்தினை விட அதிகமாக உள்ள நிலையில் இது உத்தரகாண்ட் மாநிலத்தில் 19.3% விகிதமும், லட்சத்தீவில் 42.4% விகிதமும் உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் இமாச்சலப் பிரதேசம் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் முதியோர்களின் பங்கு தேசியச் சராசரியை விட அதிகமாகப் பதிவாகியுள்ளன.
- இந்த இடைவெளியானது, 2036 ஆம் ஆண்டளவில் மிகவும் அதிகரிக்கும் என எதிர் பார்க்கப் படுகிறது.
- பீகார் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், 2021 மற்றும் 2036 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர் பார்க்கப் படுகிறது.


## பழங்குடியினரின் நில உரிமை கோரல்கள் பற்றிய புள்ளி விவரங்கள்

- பழங்குடியினர் விவகார அமைச்சகத்தினால் தொகுக்கப்பட்ட சமீபத்தியப் புள்ளி விவரங்கள் ஆனது, 45,54,603 நில உரிமை கோரிக்கைகளில் 18,01,561, அதாவது சுமார் 40% கோரிக்கைகள் நிராகரிக்கப் பட்டுள்ளன.
- 23 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் பதினொன்றில் நிராகரிப்பு விகிதம் ஆனது தேசிய சராசரியை விட அதிகமாக உள்ளது.
- இதில் உத்தரகாண்ட் (97.23%), கர்நாடகா (84.9%), உத்தரப் பிரதேசம் (79.75%), ஜம்மு காஷ்மீர் (78.21%), மேற்கு வங்காளம் (67.98%), பீகார் (52.54%), மத்தியப் பிரதேசம் (51.43%), ராஜஸ்தான் (52.94%), தெலுங்கானா (45.62%), சத்தீஸ்கர் (42.99%) மற்றும் தமிழ்நாடு (39.64%) ஆகியவை அடங்கும்.

- 2006 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகள் அங்கீகாரம்) சட்டம் ஆனது, ஒரு இடத்தில் வசிக்கும் பழங்குடியினருக்கு முறையான பட்டாக்கள் அளிப்பதன் மூலம் அவர்களின் நிலத்தின் மீதான உரிமையினை வழங்குகிறது.




## 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் மின் தேவை




- செப்டம்பர் மாதத்தில் இந்தியாவின் மின் தேவை ஆண்டிற்கு ஆண்டு 10 முதல் 12 சதவீதம் உயர்ந்து, கடந்த ஐந்தாண்டுகளில் அதிகபட்ச ஒரு அளவில் 140-142 பில்லியன் அலகுகளாக (BUs) உள்ளன.

- இருப்பினும், மின் தேவையானது இதற்கு முந்தைய மாதத்தை விட சுமார் ஏழு சதவீதம் குறைவாக உள்ளது.
- ஒட்டு மொத்த மின் உற்பத்தி செப்டம்பர் மாதத்தில் 9 முதல் 10 சதவீதம் உயர்ந்து 150-152 BU ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 159 BU ஆக உயர்ந்தது.

## சங்கல்ப் சப்தா

- இந்தத் திட்டமானது, இந்தியாவின் 329 மாவட்டங்களில் உள்ள 500 உயர் இலட்சிய மிக்கத் தொகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.
- குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக தொகுதி அளவிலான நிர்வாகத்தினை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 500 உயர் இலட்சியமிக்கத் தொகுதிகள் அனைத்திலும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.
- ‘சங்கல்ப் சப்தா’ திட்டத்தில் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 03 முதல் அக்டோபர் 09, 2023 வரை ஒவ்வொரு நாளும் ஒரு கருத்துரு அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.
- இதில் முதல் ஆறு நாட்களுக்கான கருத்துருக்கள், சம்பூர்ண ஸ்வஸ்த்யா', 'சுபோஷித் பரிவார்', 'ஸ்வச்தா', 'கிருஷி', 'ஷிக்ஷா', மற்றும் 'சம்ரிதி திவாஸ்' ஆகியவை ஆகும்.




## CRIIIO 4 Good

- இது பெண்கள் மற்றும் சிறுவர்களிடையே பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய இயங்கலை வழி வாழ்க்கை திறன் கற்றல் தொகுதி ஆகும்.
- இது சர்வதேச கிரிக்கெட் வாரியம் (ICC), யுனிசெஃப் அமைப்பு மற்றும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (BCCI) ஆகியவற்றின் சிறந்த ஒத்துழைப்பின் மூலம் தொடங்கப் பட்டது.

- இந்தத் தொகுதிகள் கிரிக்கெட் விளையாட்டின் பிரபலத்தைப் பயன்படுத்தி மிகவும் அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்களை நன்கு வெளிப்படுத்தவும், பெண்கள் மற்றும் சிறுவர்களிடையே பாலினச் சமத்துவத்தை வேடிக்கைமிக்க முறையிலும் ஊடாடும் முறையிலும் மேம்படுத்தவும் மிகவும் ஈடுபாடுமிக்க வகையில் வடிவமைக்கப் பட்டு உள்ளது.
- ஒர் இணைய தளத்தின் மூலம் இத்திட்டத்தினை இலவசமாக அணுக முடியும்.
- இது ஆங்கிலம், இந்தி மற்றும் குஜராத்தி ஆகிய மூன்று மொழிகளில் கிடைக்கப் பெறுகிறது.

## 1994 ஆம் ஆண்டு கம்பிவட தொலைக்காட்சி வலையமைப்பு விதிகளில் முக்கிய திருத்தங்கள்



Ministry of Information & Broadcasting

Ministry of I&B introduces key amendments to Cable Television Network Rules, 1994

MSO Registration to be renewed for a period of Ten years; Infrastructure Sharing for Enhanced Internet Access

Timely Renewal Window to Ensure Service Continuity for MSOs

Posted On: 28 SEP 2023 11:28AM by PIB Delhi

The Ministry of INformation and Broadcasting has yesterday issued a notification amending the Cable Television Network Rules, 1994, thereby introducing a procedure for the renewal of Multi-System Operator (MSO) Registrations. In addition, an enabling provision has been inserted in the Rules for the sharing of infrastructure by the Cable Operators with Broadband Service providers to promote internet penetration to the last mile.

The salient features of the amended Rules for MSO Registration are :-

a. MSOs shall apply for the registration or renewal of registration online at the Broadcast Seva Portal of MIB.
b. MSO registrations shall be granted or renewed for a period of ten years;
c. The processing fee of Rs. One lakh is kept for the renewal of registration also;
d. The application for renewal of registration shall be within a window of seven to two months before the expiry of the registration.

The renewal procedure is in line with the Government's commitment to ease of doing business as it will provide certainty to cable operators to continue their services without interruption and therefore make the sector attractive for foreign investment.

The Ministry has further said that MSOs whose registration is expiring within 7 months are required to apply online through the BroadcastSeva Portal. In case any assistance is required, the helpline number available on the portal may be contacted, or an email may be sent to sodas-moiab[at]gov[dot]in .

Earlier, only fresh MSO registrations were granted under the Cable Television Networks Rules, 1994. The Rules did not specify the period of validity for MSO registrations, nor did they recognize the mandatory filing of online applications.

The inclusion of a provision related to the sharing of infrastructure by Cable Operators with broadband service providers will provide the twin benefit of enhanced internet penetration and efficient utilization of resources. It will also reduce the need for additional infrastructure for broadband services.


******

- மத்திய தகவல் மற்றும் ஒளிப்பரப்பு (I&B) அமைச்சகமானது, 1994 ஆம் ஆண்டு கம்பிவட தொலைக்காட்சி வலையமைப்பு விதிகளைத் திருத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- இது அகலப்பட்டைச் சேவை வழங்குநர்களுடன் இந்த உள்கட்டமைப்பினைப் பகிர்ந்து கொள்வதற்கு கம்பிவட சேவை வழங்குனர் அமைப்புகளுக்கு உதவுகிறது.
- இது பல் முனை சேவை வழங்கீட்டு நிறுவனங்களின் பதிவுகளைப் புதுப்பிப்பதற்கான ஒரு நடைமுறையை அறிமுகப்படுத்துகிறது.

- ❖ இதில் கம்பிவட சேவை வழங்குனர்கள், தகவல் மற்றும் ஒளிப்பரப்பு அமைச்சகத்தின் ஒளிபரப்பு சேவை இணையதளத்தின் மூலமாக இயங்கலையில் பதிவு செய்ய அல்லது பதிவினைப் புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- ❖ பதிவிற்கான செல்லுபடிக் காலம் என்பது 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும்.
- ❖ ஏழு மாதங்களுக்குள் காலாவதியாக உள்ள பதிவுகளைப் புதுப்பிப்பதற்கு சேவை வழங்குனர்கள் இயங்கலை வழியாக விண்ணப்பிக்க இயலும்.

## வெளிநாட்டு நிதியுதவி (ஒழுங்குமுறை) திருத்த விதிகள், 2023

- ❖ மத்திய உள்துறை அமைச்சகமானது, வெளிநாட்டு நிதியுதவி ஒழுங்குமுறைச் சட்டத்தின் (FCRA) பல விதிகளைத் திருத்தியமைத்து அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டு உள்ளது.
- ❖ FCRA உரிமம் கொண்ட பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வெளிநாட்டு நிதியளிப்புகளின் மூலம் உருவாக்கப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துகளின் விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- ❖ முன்னதாக உறவினர்கள் FCRA சட்டத்தின் கீழ் பெரிய தொகைகளை அனுப்புவதற்கு தளர்வு அளிக்கப் பட்டிருந்ததோடு நிறுவனங்கள் 'பதிவு' அல்லது 'முன் அனுமதி' பிரிவின் கீழ் பெறப்பட்ட நிதிகளுக்கு வங்கிக் கணக்குகளைத் திறப்பது குறித்து அரசுக்குத் தெரிவிப்பதற்கு வழங்கப் பட்ட காலக்கெடுவினை நீட்டித்தது.
- ❖ புதிய விதிகளானது எந்தவொரு குற்றச்சாட்டினையும் எதிர்கொள்ளாமல் வெளிநாட்டு நிதியளிப்புகளை யார் பெறலாம் என்பதில் குறிப்பிடத்தக்க பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வர உள்ளன.




- ❖ வெளிநாடுகளில் உள்ள உறவினர்களிடம் இருந்து நன்கொடை பெறுவதற்கு இதுவரை தடை செய்யப்பட்டிருந்த அரசியல் கட்சிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தேர்தல் வேட்பாளர்கள், நீதிபதிகள், அரசு ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் அத்தகைய நிதியினைப் பெற்றால் இனி அவர்கள் மீது வழக்கு தொடரப் படாது.
- ❖ ஆனால் அவர்கள் இந்தப் பங்களிப்புகளைப் பற்றி அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதற்கு 90 நாட்கள் வரை அவகாசம் அளிக்கப்படும்.

## தேசிய மருத்துவ ஆணையத்தின் புதிய வழிகாட்டுதல்கள்

- 2023-24 ஆம் கல்வியாண்டிற்குப் பிறகு, 50, 100 மற்றும் 150 என்ற வருடாந்திர உட்சேர்க்கை இடங்களின் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே புதிய மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கான அனுமதி வழங்கப்படும்.
- ஒரு மாநிலம்/ ஒன்றியப் பிரதேசத்தில் உள்ள 10 லட்சம் மக்களுக்கு 100 இளநிலை மருத்துவப் படிப்பு (MBBS) இடங்கள் என்ற விகிதத்தை அந்த மருத்துவக் கல்லூரி பின்பற்ற வேண்டும்.
- தேசிய மருத்துவ ஆணையமானது இந்த வழிகாட்டுதல்களை (NMC) இந்திய அரசிதழில் வெளியிட்டுள்ளது.
- பொறியியல் கல்லூரிகளுக்கு இந்த எண்ணிக்கை 60, 120, 180 இடங்கள் ஆகும்.
- இடங்களை அதிகரிக்க விரும்பும் கல்லூரிகள் 2024-25 ஆம் ஆண்டிலிருந்து மொத்தம் 150 MBBS மாணவர் எண்ணிக்கையினைத் தாண்டக் கூடாது.
- 70 இளங்கலை மருத்துவக் கல்லூரிகளில் 10,000க்கும் மேற்பட்ட இடங்கள் இருப்பதால், எட்டு கோடி மக்கள் தொகையைக் கொண்ட தமிழ்நாட்டில் மேலும் அதிக இடங்களைச் சேர்க்க முடியாது என்று புதிய வழிகாட்டுதல்கள் கூறுகின்றன.
- இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகபட்ச MBBS இடங்கள் உள்ளன.
- மாநிலம் முழுவதும் 37 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் 35 தனியார் மருத்துவக் கல்லூரிகள் உட்பட மொத்தம் 72 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன.
- இந்திய மருத்துவச் சபையின் தரவுகளின் படி, இந்தியாவின் எட்டு மருத்துவர்களில் ஒருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்.
- தமிழக மாநிலத்தில் 253 பேருக்கு ஒரு மருத்துவர் உள்ளார்.
- இந்த விகிதம் ஆனது ஸ்காண்டிநேவிய நாடுகளுக்கு இணையாகவும், உலக சுகாதார அமைப்பினால் வகுக்கப்பட்ட விதிமுறைகளை விட அதிகமாகவும் உள்ளது.

## தேசிய மஞ்சள் வாரியம்

- தெலங்கானாவில் தேசிய மஞ்சள் வாரியம் அமைக்கப்படும் என பிரதமர் அறிவித்து உள்ளார்.
- இது தேவையான உள்கட்டமைப்பு, மதிப்பு கூட்டல், ஆராய்ச்சி மையம் மற்றும் தொழில் முறை ரீதியான ஏற்றுமதியில் உதவிகளை வழங்கும்.
- தெலுங்கானா மாநில விவசாயிகள் குறிப்பாக மஞ்சளை அதிக அளவில் உற்பத்தி செய்கின்றனர்.
- நிஜாமாபாத், நிர்மல் மற்றும் ஜக்தியால் மாவட்டங்கள் மஞ்சள் சாகுபடிக்குப் புகழ் பெற்றவை.
- இங்கு உற்பத்தி செய்யப்படும் குச்சி மஞ்சள் மற்றும் குண்டு மஞ்சள் வகைகள் உள்நாட்டு மற்றும் வணிகத் தேவைகளுக்கு மட்டுமின்றி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.





## 'ஷ்ரம்தான் நிகழ்வு'

- இந்தியா அளவிலான 'ஸ்வச்சதா ஹி சேவா' பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக ஒரு மணி நேர அளவிலான "ஷ்ரம்தான்" நிகழ்ச்சி நடைபெற்றது.
- 'ஏக் தரீக் ஏக் கண்டா ஏக் சாத்' என்ற நிகழ்ச்சி நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டது.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் அமைச்சகம் ஆனது, "குப்பைகள் இல்லாத இந்தியா" என்ற கருத்துருவில் 'ஷ்ரம்தான்' நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

## 106வது சட்டத் திருத்தம்

- இந்தியக் குடியரசுத் தலைவர், 106வது சட்டத் திருத்த மசோதாவிற்கு ஒப்புதல் அளித்து உள்ளார்.
- இந்தத் திருத்தம் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா என்று அறியப்படுகிறது.
- இது மக்களவை மற்றும் மாநிலச் சட்டசபைகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு வழங்க முயல்கிறது.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடி (ST) பெண்களுக்கான ஒதுக்கீட்டிற்குள் ஒதுக்கீடுகள் உள்ளது.
- இது மக்களவையில் அரசியலமைப்பு (128வது) திருத்த மசோதாவாக அறிமுகப்படுத்தப்பட்டாலும், இனி அது அரசியலமைப்பு (106வது திருத்தம்) சட்டம் என அழைக்கப்படும்.
- இந்தச் சட்டமானது, அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் அதைத் தொடர்ந்து தொகுதி சீரமைப்பு நடவடிக்கைக்குப் பிறகு செயல்படுத்தப்படும்.




## ஸ்வச் பாரத் திட்டம் பற்றிய உலக வங்கியின் அறிக்கை

- ஸ்வச் பாரத் திட்டம் – கிராமின் (SBM-G) திட்டத்தின் முன்னேற்றம் குறித்த உலக வங்கியின் துறை சார்ந்த அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இத்திட்டம் தொடங்கப்பட்ட 2014-15 ஆம் ஆண்டிலிருந்து கிராமப்புற இந்தியாவில் கழிப்பறை அணுகலைக் கொண்டு வருவதற்கான இத்திட்டத்தினால் கிடைத்த பலன்கள் ஒருபுறம் இருக்க, 2018-19 ஆம் ஆண்டு முதல் கிராமப்புற இந்தியாவில் வழக்கமான கழிப்பறை பயன்பாடு குறைந்து வருவதற்கான தெளிவான போக்குப் பதிவாகியுள்ளது.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடி சமூகப் பொருளாதாரக் குழுக்களின் மத்தியில் கழிப்பறை பயன்பாடு மிகப்பெரிய அளவில் குறைந்துள்ளது.
- இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல், கிராமப்புற இந்தியாவில் சொந்தமாக அல்லது பகிரப்பட்ட மேம்படுத்தப்பட்ட கழிப்பறைகளை அணுகுவதில் கணிசமான அதிகரிப்புக்கு வழிவகுத்தது.
- 2012 ஆம் ஆண்டில் 38% ஆக இருந்த கழிவறைப் பயன்பாடு 2019-20 ஆம் ஆண்டில் 90% ஆக பதிவானது.
- இந்தக் காலப்பகுதியின் கடைசி இரண்டு ஆண்டுகளில் பதிவாகிய மிக அதிகபட்ச உயர்வு இதுவாகும்.
- 2015-2019 ஆம் ஆண்டில் அமல்படுத்தப் பட்ட முதல் கட்டத்தில், பெரிய அளவிலான மேம்பாடுகளால் மேற்கொள்ளப்பட்டன.

- அதைத் தொடர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளில் அத்திட்டத்தின் அமலாக்கத்தில் சில தேக்கம் மற்றும் சரிவுகள் பதிவாகியுள்ளன.
- 2015-16 மற்றும் 2019-21 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கழிப்பறை பயன்பாடு 7 சதவீதத்திலிருந்து 43% ஆக உயர்ந்துள்ளதாகப் பதிவாகி உள்ளது.
- கிராமப்புற மக்களில் 20% ஏழ்மையான மக்கள் மத்தியிலான கழிப்பறைப் பயன்பாட்டில் பெரிய உயர்வு பதிவானது
- 20% பணக்காரர்களைத் தவிர அனைத்துப் பிரிவினரிலும் இதே போன்ற பெரிய அதிகரிப்புகள் பதிவாகியுள்ளன.
- 2018 ஆம் ஆண்டு முதல் கழிப்பறைகள் பயன்பாட்டில் தொடர்ந்து சரிவைச் சந்தித்து வரும் மாநிலங்கள் உத்தரப் பிரதேசம், குஜராத், சத்தீஸ்கர், தெலுங்கானா, கர்நாடகா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியனவாகும்.
- ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, ராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்காளம் போன்ற ஏழு மாநிலங்களில் பதிவான கழிப்பறைப் பயன்பாட்டில் 2018 ஆம் ஆண்டு முதல் சீரற்ற சரிவு பதிவாகி வருகிறது.
- ஒடிசா, பஞ்சாப், கேரளா, பீகார், உத்தரகாண்ட், ஹரியானா மற்றும் அசாம் ஆகிய மற்ற ஏழு மாநிலங்கள் கழிப்பறை உபயோகத்தில் தொடர்ந்து நிலையான செயல்திறன் கொண்டவையாக திகழ்கின்றன.





## மக்களவை உறுப்பினர் தகுதி நீக்கம்

- தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த லட்சத்தீவு தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் முகமது பைசல் மக்களவையில் இருந்து தகுதி நீக்கம் செய்யப் பட்டு உள்ளார்.

- அவர் மீதும் மற்றும் மேலும் மூவர் மீதும் கொலை முயற்சி குற்றம் சாட்டப்பட்டு, மூவருக்கும் 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
- கொலை முயற்சி வழக்கில் அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும் என்ற அவரது மனுவைத் தற்போது கேரள உயர் நீதிமன்றம் நிராகரித்து உள்ளது.
- 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8(3)வது பிரிவின் கீழ், ஒரு குற்றத்திற்காக குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு சட்டமியற்றும் அவை உறுப்பினர், அந்தக் குற்றம் தண்டிக்கப்பட்ட நாளிலிருந்து அப்பதவியினை வகிப்பதற்குத் தகுதியற்றவர் ஆவார்.
- மேலும், அந்தத் தண்டனை உத்தரவை நிறுத்தி வைக்க முடியாவிட்டால், மேலும் ஆறு ஆண்டுகள் அப்பதவியினை வகிக்க தடை விதிக்கப்படும்.

## பண மசோதா பயன்பாடு குறித்த எதிர் மனுக்கள்

- மத்திய அரசானது சில முக்கியச் சட்டங்களை இயற்றுவதற்கு பண மசோதாவினை ஒரு வழியாகப் பயன்படுத்துவதை எதிர்த்து தொடரப்பட்ட மனுக்களை விசாரிக்க ஏழு நீதிபதிகள் கொண்ட ஒரு அமர்வானது உச்ச நீதிமன்றத்தில் விரைவில் அமைக்கப்பட உள்ளது.
- 7 நீதிபதிகள் கொண்ட அமர்வு ஆனது, அடிப்படையில் ஒரு சட்டமானது செல்லுபடி ஆகும் வகையில் பண மசோதாவாக வகைப்படுத்தப்பட்டதா அல்லது மாநிலங்கள் அவையின் மதிப்பீட்டினைத் தவிர்ப்பதற்காக மட்டுமே பண மசோதாவாக வகைப் படுத்தப் பட்டதா என்பது பற்றி ஆய்வு செய்யும்.
- அரசியலமைப்பின் 110வது சட்டப் பிரிவு ஆனது பண மசோதா குறித்த விதி முறைகளைக் கொண்டுள்ளது.
- மக்களவையின் சபாநாயகரின் கருத்துப்படி பண மசோதா என்பது, வரிவிதிப்பு அல்லது பொது நிதி - இந்தியாவின் ஒருங்கிணைந்த நிதி அல்லது இந்தியாவின் எதிர்பாரா (அவசர செலவின) செலவு நிதி ஒதுக்கீடு குறித்த விதிமுறைகளைக் கையாளும் ஒரு மசோதா ஆகும்.
- ஒரு பண மசோதாவை மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும் என்பதோடு மேலும் அது ஒரு மசோதா "பண மசோதாவா அல்லது இல்லையா" என்று மக்களவை சபாநாயகரே வகைப்படுத்துகிறார்.
- ஒரு மசோதா பண மசோதாவா இல்லையா என்ற கேள்வி எழுந்தால், மக்களவை சபாநாயகரின் முடிவே இறுதியானது.
- மத்திய அரசானது, 2016 ஆம் ஆண்டு ஆதார் சட்டத்தை நிறைவேற்றிய போது பண மசோதா விவகாரம் குறித்த கேள்விகள் எழுந்தன.
- பணமோசடி தடுப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சில திருத்தங்களும் பண மசோதாக்களாக அறிமுகப்படுத்தப்பட்டன.




## சாகர் பராக்கிரமா கட்டம்-IX

- பல்வேறு திட்டங்களின் மூலம் மீனவர்கள் மற்றும் இன்ன பிற பங்குதாரர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதனையும், அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கடலோரச் சமூகங்கள், குறிப்பாக மீனவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காண்பது மற்றும் அரசின் திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள் மூலம் அவர்களின் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துது ஆகியவற்றை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் ஒன்பதாம் கட்டமானது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள கடலோர மாவட்டங்களுக்கான முன்னெடுப்புகளை உள்ளடக்கும்.
- புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, காரைக்கால் மற்றும் புதுச்சேரி ஆகிய பகுதிகள் இந்தக் கட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளன.
- 'சாகர் பராக்கிரமா' திட்டத்தின் முதல் எட்டு கட்டங்கள் எட்டு கடலோர மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் அமைந்த 4,115 கி.மீ. அளவிலான பகுதிகளில் செயல் படுத்தப் பட்டன.

## ஆளில்லா விமானங்கள் (திருத்தம்) விதிகள், 2023

- இந்தியப் பொது விமானப் போக்குவரத்து அமைச்சகமானது 2023 ஆம் ஆண்டு ஆளில்லா விமானங்கள் (திருத்தம்) விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

- 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை உலகளாவிய ஆளில்லா விமான உற்பத்தி மையமாக நிறுவும் நோக்குடன் நாடு முழுவதும் ஆளில்லா விமானச் செயல்பாடுகளை தாராளமயமாக்குதல், ஊக்குவித்தல் மற்றும் நெறிப்படுத்துதல் ஆகியவற்றை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தொலைதூரத்தில் இருந்து இயக்குவதற்கான சான்றிதழைப் பெறுவதற்கு முன்பு இருந்த கடுமையான நிபந்தனைகளைத் தளர்த்துவது இந்தத் திருத்தங்களின் மூலம் கொண்டு வரப்பட்ட மிக முக்கியமான மாற்றங்களில் ஒன்றாகும்.
- முன்னதாக, இந்த முக்கியமான ஆவணத்திற்கு விண்ணப்பிக்க கடவுச் சீட்டு கட்டாயமாக இருந்தது.
- இது ஏராளமான ஆளில்லா விமான இயக்குனர்களுக்கு, குறிப்பாக கிராமப்புறங்கள் மற்றும் வேளாண் துறையில் உள்ளவர்களுக்கு தடையாக இருந்தது.
- ஒருவர் தற்போது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாளச் சான்று மற்றும் வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை அல்லது ஓட்டுநர் உரிமம் போன்ற முகவரிச் சான்றிதழைப் பயன்படுத்தி இனி இந்தச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்க செய்யலாம்.
- டிஜிட்டல் ஸ்கை என்ற இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்ட செல்லுபடியாகும் தொலை தூரத்தில் இருந்து இயக்குவதற்கான இயக்குநர் சான்றிதழை வைத்திருக்கும் நபர்கள் மட்டுமே இந்தியாவில் ஆளில்லா விமானங்களை இயக்க அங்கீகரிக்கப் படுவார்கள்.
- இருப்பினும், வணிக ரீதி சாராத ஆளில்லா விமானப் பயன்பாட்டிற்கு, 2 கிலோ வரை எடையுள்ள ஆளில்லா விமானங்களுக்கு இந்தச் சான்றிதழ் தேவையில்லை.





## சிந்து சமவெளியில் மாபெரும் இடுகாடு

- இந்தியாவில் சிந்து சமவெளியைச் சேர்ந்த ஒரு மாபெரும் இடுகாடு இருந்ததை அறிவியலாளர்கள் வெளிக் கொணர்ந்துள்ளனர்.
- சிந்து சமூகத்தினைச் சேர்ந்த வகையில் குறைந்தது 500 கல்லறைகள் இங்கு இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தற்போது மதிப்பிட்டுள்ளனர்.
- மேலும் இந்தக் கல்லறைகளில் 100க்கும் மேற்பட்ட வளையல்கள் மற்றும் ஓடுகளால் செய்யப்பட்ட 27 மணிகள் போன்ற கலைப் பொருட்கள் காணப்படுவதையும் அவர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தக் கல்லறைகள் வெவ்வேறு திசைகளைக் காட்டும் மணற்கற்களால் ஆன நடு கற்கள் உள்ளிட்ட தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளன.

- இதில் சில நீள்வட்ட வடிவிலும் மற்றவை செவ்வக வடிவிலும் உள்ளன.
- குழந்தைகள் புதைக்கப்பட்ட சிறிய கல்லறைகளும் இங்கு உள்ளன.



## UMMEED வழிகாட்டுதல்கள்





- மாணவர்கள் மத்தியில் தற்கொலையைத் தடுப்பதற்காக பள்ளிகளுக்கான வரைவு வழிகாட்டுதல்களை மத்திய கல்வி அமைச்சகம் (MoE) ஆனது வெளியிட்டுள்ளது.
- நல்வாழ்வு சேவைக் குழுக்களை அமைத்தல், ஆசிரியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் நெறிமுறை வகுப்புகள் மற்றும் மோசமான சூழ்நிலைகளில் உள்ள மாணவர்களுக்காக உடனடி நடவடிக்கை ஆகியவற்றிற்கான 'செயல் திட்டம்' இதில் அடங்கும்.
- இந்த வழிகாட்டுதல் ஆனது UMMEED (புரிந்து கொள்ளுதல், ஊக்குவித்தல், நிர்வகித்தல், அனுதாபம், அதிகாரமளிப்பு, மேம்பாடு) எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.
- இந்த வழிகாட்டுதல்கள் "உணர்திறன், புரிதல் மற்றும் சுய தீங்கு நடவடிக்கைகள் புகாரளிக்கப்பட்டால் பள்ளி நிர்வாகங்கள் அவர்களுக்கான ஆதரவை வழங்குதல் போன்றவற்றிற்கான வழிகாட்டுதல்களாக" செயல்படுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளன.
- பள்ளி முதல்வர் தலைமையில், ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு நெருக்கடியான சூழ்நிலைகளைக் கையாள்வதில் கவனம் செலுத்தும் வகையிலான ஒரு பள்ளி நல்வாழ்வு சேவைக் குழு (SWT) உருவாக்கப்படும்.
- மோசமான சூழ்நிலைகளில் உள்ள மாணவர் யாரேனும் பங்குதாரரால் அடையாளம் காணப்பட்டால், அதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந்தக் குழுவிற்கு அவர் புகாரளிக்க வேண்டும்.

## சக்ரவத் பயிற்சி 2023



- 'சக்ரவத்' எனப்படும் ஒரு வருடாந்திரக் கூட்டு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண (HADR) பயிற்சியானது (AJHE-23) கோவாவில் நடைபெற்றது.
- 2015 ஆம் ஆண்டில் முதன் முதலில் மேற்கொள்ளப்பட்டது முதல், சக்ரவத் எனப்படும் இந்த வருடாந்திரக் கூட்டு HADR பயிற்சியானது, மூன்று படைகளின் பங்கேற்பை உள்ளடக்கிய பல் அமைப்புப் பயிற்சியாக மாறியது.
- இந்தப் பயிற்சியானது 2016 ஆம் ஆண்டு முதல் இந்தியத் தரைப்படை, இந்திய கடற் படை மற்றும் இந்திய விமானப்படை ஆகியவற்றால் சுழற்சி முறையில் நடத்தப்பட்டு வருகிறது.
- 2023 ஆம் ஆண்டு பயிற்சியில், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள எட்டு நாடுகள் பங்கேற்றன.

## குறைந்த வேலைவாய்ப்பின்மை விகிதம் 2023





- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் (MoSPI) ஆனது காலாண்டு தொழிலாளர் வளக் கணக்கெடுப்பின் (PLFS) காலாண்டு அறிக்கையினை வெளியிட்டு ள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூன் மாத கால கட்டத்தில் 7.6 சதவீதமாக இருந்த நகர்ப் புறங்களில் உள்ள 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய நபர்களின் வேலை வாய்ப்பின்மை விகிதம் ஆனது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூன் மாத காலக் கட்டத்தில் 6.6% ஆக குறைந்துள்ளது.

- ஆண்களில், இந்தக் காலக் கட்டத்தில் 7.1 சதவீதமாக இருந்த வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 5.9% ஆகக் குறைந்துள்ளது.
- பெண்களில், இந்த காலக் கட்டத்தில் இது 9.5 சதவீதமாக இருந்த வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 9.1% ஆக குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையிலான முழு ஆண்டில், ஒரு வருடத்திற்கு முன்பு 3.2% ஆக இருந்த கிராமப்புறங்களில் உள்ள வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 2.4% ஆகக் குறைந்துள்ளது.
- நகர்ப்புறங்களில், அதே காலகட்டத்தில் 6.3% ஆக இருந்த வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 5.4% ஆகக் குறைந்துள்ளது.
- இந்தியாவின் மொத்த வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 3.2% ஆகக் குறைந்துள்ள நிலையில் இது குறைந்தபட்சம் 2017-18 ஆண்டிற்குப் பிறகு பதிவான மிகக் குறைவான விகிதமாகும்.
- இமாச்சலப் பிரதேசம் (13.8 சதவீதம்), ராஜஸ்தான் (11.7 சதவீதம்), சத்தீஸ்கர் (11.2 சதவீதம்), ஜம்மு காஷ்மீர் (10.9 சதவீதம்) மற்றும் கேரளா (10 சதவீதம்) ஆகிய மாநிலங்களின் நகர்ப்புறங்களில் தேசிய சராசரி வேலைவாய்ப்பின்மை விகிதத்தை விட அதிகமாக வேலைவாய்ப்பின்மை விகிதம் பதிவான மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் ஆகும்.
- தேசிய சராசரி வேலைவாய்ப்பின்மை விகிதத்தை விட குறைவான வேலை வாய்ப்பின்மை விகிதம் பதிவான மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் டெல்லி (2.7 சதவீதம்), குஜராத் (2.8 சதவீதம்), மேற்கு வங்காளம் (4.4 சதவீதம்), பீகார் (6.1 சதவீதம்), மகாராஷ்டிரா மற்றும் ஹரியானா (இரண்டும் 6.5 சதவீதம்) ஆகியனவாகும்.


## ஷ்ரேஷ்டா திட்டம்

- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது, 'முக்கிய இலக்குப் பகுதிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கான உண்டு உறைவிடக் கல்விக்கான திட்டம்' (SHRESHTA) என்ற தனது புதிய திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், பட்டியலிடப்பட்ட சாதிப் பிரிவினைச் சேர்ந்த மாணவர்களுக்கு வெவ்வேறு முறைகளில் உயர்தரப் பள்ளிக் கல்வி வழங்கப்படும்.
- கல்வித் துறையில் பட்டியலிடப்பட்ட சாதியினர் அதிகம் உள்ள பகுதிகளில் அரசு தனது மேம்பாட்டு முன்னெடுப்புகளை விரிவுபடுத்தவும் இது உதவும்.
- உயர்தரக் கல்வியை வழங்கும் அரசு சாரா நிறுவனங்களால் (தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்) நடத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில் இந்தத் திட்டம் செயல் படுத்தப் படும்.
- இந்த முறையின் கீழ், திறமையான மாணவர்கள் நடுவண் இடைநிலைக் கல்வி வாரியம் மற்றும் மாநில வாரியங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் சேர்க்கைப் பெற வாய்ப்பு பெறுவார்கள்.
- இந்த மாணவர்கள் தேசிய தேர்வு முகமையால் (NTA) நடத்தப்படும் SHRESHTA திட்டத்திற்கான தேசிய நுழைவுத் தேர்வின் (NETS) மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.




## முக்கிய கனிமங்களுக்கான உரிமத் தொகை விகிதங்கள்

- லித்தியம், நியோபியம் மற்றும் அருமண் தனிமங்கள் (REEs) ஆகியவற்றிற்கான உரிமத் தொகை விகிதங்களை மத்திய அரசு அங்கீகரித்துள்ளது.
- இது லித்தியம் மற்றும் நியோபியம் ஆகியவற்றிற்கு தலா 3% ஆகவும், அதே சமயம் அருமண் தனிமங்களுக்கு (REEs) 1% ஆகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இதற்காக, 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் இரண்டாவது பட்டியலில் திருத்தம் செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தச் சட்டத் திருத்தத்திற்கு முன், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் இரண்டாவது பட்டியலானது, குறிப்பாக உரிமத் தொகை நிணயிக்கப்படாத அனைத்து கனிமங்களுக்கும் அதன் சராசரி விற்பனை விலையில் 12% உரிம த்தொகை விகிதத்தை வழங்குவதைக் கட்டாயமாக்கியது.



## அஜய் நடவடிக்கை




- தற்போது இஸ்ரேலில் நடைபெற்று வரும் போர் சூழ்நிலைகளில் சிக்கித் தவிக்கும் இந்தியக் குடிமக்களை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்புவதற்கான முதல் சிறப்பு விமானம் புது டெல்லியை வந்தடைந்தது.
- இந்த விமானமானது, 'அஜய் நடவடிக்கையின்' கீழ் இஸ்ரேலில் இருந்து 212 இந்தியப் பயணிகளை ஏற்றி வந்தது.
- குறிப்பாக மாணவர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் வர்த்தகர்கள் உட்பட சுமார் 18,000 இந்தியர்கள் இஸ்ரேலில் உள்ளனர்.

## இந்தியாவில் தகவல் ஆணையங்களின் செயல்திறன்

### Case backlog

The time taken to dispose a complaint filed was computed using the average monthly disposal rate and the pendency

| Information Commission | Estimated time for disposal |
|---|---|
| West Bengal | 24 years and 1 month |
| Chhattisgarh | 4 years and 4 months |
| Maharashtra | 4 years |
| Arunachal Pradesh | 2 years and 11 months |
| Odisha | 2 years and 7 months |
| Madhya Pradesh | 1 year and 11 months |
| Karnataka | 1 year and 11 months |
| Telangana | 1 year and 7 months |
| Kerala | 1 year |
| Himachal Pradesh | 1 year |

- இந்தியாவில் தகவல் ஆணையங்களின் செயல்திறன் குறித்த அறிக்கை, 2022-23 ஆனது சமீபத்தில் வெளியிடப்பட்டது.

- நாடு முழுவதும் உள்ள 27 மாநிலத் தகவல் ஆணையங்களில் மொத்தம் 3,21,537 மேல் முறையீடுகள் மற்றும் புகார்கள் நிலுவையில் உள்ளன.
- அதிகபட்சமாக மகாராஷ்டிராவிலும் (1,15,524), அதைத் தொடர்ந்து கர்நாடகாவிலும் (41,047) மேல்முறையீடுகள் நிலுவையில் உள்ளன.
- தமிழ்நாடு அரசு இது குறித்தத் தகவல்களை அளிக்க மறுத்து விட்டது.
- ஜார்க்கண்ட், தெலுங்கானா, மிசோரம் மற்றும் திரிபுரா ஆகிய நான்கு மாநிலங்களின் தகவல் ஆணையங்களில் நடப்பு அதிகாரிகள் பதவி விலகிய பின் புதிய தகவல் ஆணையர்கள் நியமிக்கப் படாததால் அவை செயல்படாமல் உள்ளன.
- ஆறு மாநிலத் தகவல் ஆணையங்கள் தற்போது தலைமையின்றி செயல்படுகின்றன.
- மேற்கு வங்காள மாநிலத் தகவல் ஆணையம் (SIC) ஆனது ஒரு விவகாரத்தினைத் தீர்ப்பதற்கு 24 ஆண்டுகள் மற்றும் ஒரு மாத அளவிலான அவகாசத்தினை எடுத்துக் கொள்கின்றது.
- சத்தீஸ்கர் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில், மேல்முறையீடு அல்லது புகாரைத் தீர்ப்பதற்கு மாநில தகவல் ஆணையங்கள் எடுத்துக் கொள்வதாக மதிப்பிடப்பட்ட நேரம் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாகும்.
- ஒடிசா மற்றும் அருணாச்சலப் பிரதேச மாநிலங்களின் தகவல் ஆணையங்கள் இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் எடுத்துக் கொள்கின்றன.
- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதியானது இந்தியாவில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 18 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கிறது.

## பீமா வாஹக் பற்றிய வழிகாட்டுதல்கள்



Boosting insurance access

IRDAI's draft norms for the Bima Vahak scheme are aimed at improving last-mile connectivity to raise rural insurance access

- The Bima Vahak scheme is a core component of the IRDAI's 'Insurance for all by 2047' goal
- Under the scheme, Bima Vahaks will gain the trust of locals for the distribution of insurance products
- Insurers will have to implement a board-approved policy in hiring and training Bima Vahaks

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது (IRDAI) பீமா வாஹக் குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இது பெண்களை மையமாகக் கொண்ட, காப்பீட்டுச் சேவைகளில் ஊரகப் பகுதிகளுக்கான சேவைகளையும் உள்ளடக்குவதை மேம்படுத்துவதற்கான ஒரு மிக முக்கிய மற்றும் பிரத்தியேகத் திட்டமாகும்.

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் 'பீமா வாஹக் பிரதிநிதிகளை' நியமிக்கத் திட்டமிட்டுள்ளது.
- ஒழுங்குமுறை ஆணையத்தினால் கொண்டு வரப்பட்ட பீமா விஸ்டார் திட்டம் அல்லது மலிவான, எளிதில் அணுகக்கூடிய மற்றும் விரிவான காப்பீட்டு திட்டங்களை இலக்காக நிர்ணயிக்கப்பட்டப் பிரிவினருக்கு கொண்டு சேர்ப்பதில் பீமா வஹாக்கள் முக்கியப் பங்கினை வகிப்பர் என எதிர்பார்க்கப் படுகிறது.
- பீமா வஹாக்களுக்கு (தனிநபர் மற்றும் பெரு நிறுவனங்கள் உட்பட) கையடக்க மின்னணு தொடர்புச் சாதனங்களானது வழங்கப்படும்.
- காப்பீட்டு நிறுவனங்களின் மின்னணு தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தச் சாதனங்களின் மூலம், பீமா விஸ்டார் திட்டம் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களால் குறிப்பிடப்பட்ட பிற சேவைகள் ஆகியவற்றினை மக்களிடம் கொண்டு சேர்க்கும் சேவையினை வழங்க இயலும்.

## இந்திய இராணுவப் பிரிவுகளின் பாரம்பரிய விழா

- இந்திய ஆயுதப் படைகளின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வகையிலான இரண்டு நாட்கள் அளவிலான திருவிழாவானது டெல்லியில் நடைபெற உள்ளது.
- இந்திய இராணுவப் பிரிவுகளின் பாரம்பரிய விழாவினை இந்திய ஒருங்கிணைவு சேவை நிறுவனமானது (USI) நடத்தவிருக்கிறது.
- மானெக்சா மையத்தில் அமைந்த ஒரு செய்தி வெளியீட்டு நிறுவனத்துடன் இணைந்து இத்தகைய முதல் வகையான திருவிழாவானது ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

## இந்தியா- சுவிட்சர்லாந்து இடையிலான 75 ஆண்டுகால நட்புறவு




- இந்தியா மற்றும் சுவிட்சர்லாந்து இடையிலான 75 ஆண்டுகால நட்புறவு மற்றும் ஒத்துழைப்பினை கொண்டாடும் வகையில் உத்தரகாண்டிலுள்ள குமாவோன் கிராமத்தில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

- 6,000 அடி உயரத்தில் அமைந்துள்ள சடோலி கிராமத்திலுள்ள ஒரு தங்கும் விடுதியில் கடந்த வாரம் 'சுவிட்சர்லாந்து இமாலய வண்மை' என்ற மூன்று நாட்கள் அளவிலான நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்தியாவிற்கும் சுவிட்சர்லாந்திற்கும் இடையிலான நல்லுறவானது, 1948 ஆம் ஆண்டில் புது டெல்லியில் கையெழுத்தான நட்புறவு ஒப்பந்தத்திலிருந்து தொடங்கியது.
- இரு நாடுகளுக்கும் இடையே கணிசமான அளவில் அந்நிய நேரடி முதலீடுகள் (FDI) மேற்கொள்ளப்படுவதைத் தொடர்ந்து ஐரோப்பாவில் உள்ள இந்தியாவின் முக்கிய நட்பு நாடுகளில் ஒன்றாக சுவிட்சர்லாந்து உருவெடுத்துள்ளது.
- இந்தியாவில் மேற்கொள்ளப்படும் அந்நிய நேரடி முதலீட்டில் முன்னணியில் உள்ள 5 ஐரோப்பிய நாடுகளில், சுவிட்சர்லாந்தின் பங்கு 9.8 பில்லியன் டாலர்கள் ஆகும்.
- இந்தியாவில் 323க்கும் மேற்பட்ட சுவிட்சர்லாந்து நாட்டு நிறுவனங்கள் அமைந்து உள்ளன.

## தேசியப் பருவநிலை சேவைக் கட்டமைப்பு




- பருவநிலை சார்ந்த சேவைகள் மற்றும் தகவல்களை வழங்குவதற்கான தனது முதல் தேசிய அளவிலானக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு இந்திய அரசு முடிவு செய்து உள்ளது.
- இது இந்திய வானிலை ஆய்வுத் துறையினால் (IMD) முன்வைக்கப்பட்டது.
- தேசியப் பருவநிலை சேவைக் கட்டமைப்பானது (NFCS) பருவநிலை சார்ந்தத் தகவல் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு ஒரு தடையற்றச் செயல்பாட்டுத் தளத்தினைக் கொண்டு வருவதற்கும், வேளாண்மை, ஆற்றல், பேரிடர் மேலாண்மை, சுகாதாரம் மற்றும் நீர் வளம் ஆகிய முக்கியத் துறைகளில் ஏற்படும் பருவநிலை சார்ந்த இடர்களைக் கணித்து அவற்றிற்கான தணிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளவும் உதவுகிறது.
- இந்தக் கட்டமைப்பானது ஆரம்பக் கட்டத்தில், பருவநிலை சார்ந்தச் சேவைகள் தேவைப் படும் பல்வேறு முகமைகளுக்கிடையில் காணப்படும் இடைவெளிகளைக் குறைப்பதற்கான பணிகளை மேற்கொள்ளும்.
- 2009 ஆம் ஆண்டில் பருவநிலை சார்ந்த சேவைகளுக்கான கட்டமைப்பு அறிவிக்கப் பட்டது முதல், சுவிட்சர்லாந்து, சீனா, ஜெர்மனி மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவை தேசியப் பருவநிலை சேவைக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளன.

## IGMS 2.0 பொது குறைதீர்ப்பு இணைய தளம்




- இந்திய அரசானது திறன்மிகு குறைதீர்ப்பு கண்காணிப்பு அமைப்பு (IGMS) 2.0 என்ற பொது குறைதீர்ப்பு இணைய தளம் மற்றும் கிளை கட்டமைப்பு கொண்ட வடிவிலான தானியங்கு பகுப்பாய்வு முகப்பு ஆகியவற்றினைத் தொடங்கியுள்ளது.
- இம்முகப்புப் பக்கமானது, தாக்கல் செய்யப்பட்டு தீர்க்கப்பட்ட குறைகள், மாநிலம் மற்றும் மாவட்ட வாரியாகவும் அமைச்சகம் வாரியாகவும் தாக்கல் செய்யப்பட்ட குறைகள் குறித்தத் தரவுகள் ஆகியவை குறித்த உடனடிப் பகுப்பாய்வினை மேற் கொண்டு அட்டவணை வடிவிலான தரவுகளை வழங்குகிறது.
- இது அதிகாரிகளுக்கு அந்தக் குறைகளின் மூல காரணத்தை கண்டறியவும் உதவச் செய்கிறது.
- இது கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தினால் செயல்படுத்தப் பட்டுள்ளது.

## மருத்துவம் மற்றும் மருந்து உற்பத்தி துறைக்கான திட்டங்கள்




- வேதிப் பொருட்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சகமானது, மருத்துவம் மற்றும் மருந்து உற்பத்தித் துறைகளில் புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டினை அதிகரிப்பதற்கான முயற்சிகளைத் தொடங்கியுள்ளது.
- இந்த முயற்சிகளானது,
    - இந்தியாவின் மருந்து உற்பத்தி துறை-மருத்துவத் தொழில்நுட்பத்துறையில் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்கத்திற்கான தேசிய கொள்கை மற்றும்
    - மருந்து உற்பத்தி துறை-மருத்துவத் தொழில்நுட்பத்துறையில் (PRIP) ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தினை மேம்படுத்துவதற்கான திட்டம் ஆகியவையாகும்.

❖ இந்திய மருந்து உற்பத்தித் துறையானது தற்போதையச் சந்தை மதிப்பில் சுமார் 50 பில்லியன் டாலர் மதிப்புடன் அளவின் அடிப்படையில் உலகின் 3வது முன்னணி மருந்து உற்பத்தித் துறையாக உள்ளது.

## மேரா யுவ பாரத் (எனது பாரதம்)




❖ இளையோர் மேம்பாட்டிற்காக புதிய அரசாங்கத் தளத்தினை அமைக்க உள்ளதாக மத்திய அமைச்சரவை அறிவித்துள்ளது.

❖ இதற்கு 'மேரா யுவ பாரத்' அல்லது எனது பாரதம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

❖ இந்த தளமானது இளையோர்களைச் சமூகத்தில் ஒரு முதன்மைச் சமூக கண்டு பிடிப்பாளர்களாகவும், தலைவர்களாகவும் உருவாக்குவதற்கு இளையோர்களிடையே தலைமைத்துவத் திறன்களை வளர்ப்பதை ஒரு இலக்காகக் கொண்டு வடிவமைக்கப் பட்டிருக்கிறது.

❖ 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளையோர்கள் இத்தளத்தின் மூலம் பயனடைய முடியும்.

## ஒரு மில்லியன் கல்வி சான்றிதழ்

❖ வருமானம் ஈட்டலுக்கான வழிக்காட்டுதல் முன்னெடுப்பு (P2E) எனப்படும் உலகளாவிய கல்வி முதல் வருமானம் ஈட்டல் வரையிலான தீர்வு முறை திட்டமானது, இந்தியாவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான இளையோர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் சான்றிதழ்களை வழங்கியுள்ளது.

❖ இது யுனிசெஃப் அமைப்பினால் தொடங்கப்பட்ட இயங்கலை வழிப் பயிற்சி திட்டம் ஆகும்.


❖ வேலை மற்றும் வாழ்க்கை தொடர்பான திறன்களைப் பெற அவர்களுக்கு உதவுவதற்கான ஒரு முக்கியப் படிநிலையை இது குறிக்கிறது.

❖ இந்தியாவில் P2E கல்வித் திட்டங்கள் மூலம் பயனடைந்த இளம் நபர்களில் 62 சதவீதம் பேர் வளர் இளம்பெண்கள் மற்றும் இளம் வயது பெண்கள் ஆவர்.

- P2E முன்னெடுப்பானது எண்ணிம ஆக்கத் திறன், நிதியியல் கல்வியறிவு, வேலை வாய்ப்பிற்கான திறன்கள் மற்றும் பிற தேவைக்கேற்ற, வேலைவாய்ப்புப் பெற தேவையான திறன்களுக்கான சான்றிதழ் கல்விப் படிப்புகளுக்கு இலவச அணுகலை வழங்குகிறது.




## தேசிய அளவிடல் வலையமைப்பு




- மத்திய அரசானது, அதிநவீன தேசிய அளவிடல் வலையமைப்பினை அறிமுகப் படுத்தி உள்ளது.
- தேசிய அளவிலான "தொடர் இயக்க குறிப்புத் தரவு நிலைய" (CORS) வலையமைப்பு என்பது இந்தியக் அளவிடல் அமைப்பினால் இயக்கப்படும்.
- இந்தியா தற்போது சென்டிமீட்டர் அளவிலான இடமறிதல் சேவைகளை நிகழ்நேரத்தில் வழங்கும் திறன் கொண்ட உலகத் தரம் வாய்ந்த துல்லியமான இடம் சார்ந்த சேவை வழங்கீட்டு அமைப்பினைக் கொண்டுள்ளது.
- இது (ஏறத்தாழ) + / - 3 சென்டி மீட்டர் அளவிலான துல்லியத் தன்மையுடன் நிகழ் நேர இடம் சார்ந்த வரைபடமிடல் சேவைகளை வழங்கும் திறன் கொண்டது.
- இந்தியக் அளவிடல் அமைப்பு ஆனது இந்தியா முழுவதும் 1,000க்கும் மேற்பட்ட தொடர் இயக்க குறிப்புத் தரவு நிலையங்களை அமைத்துள்ளது.

## உள்ளாட்சி ஜனநாயகம் பற்றிய அறிக்கை

- உலக வங்கியானது, "உள்ளாட்சி ஜனநாயகத்தின் கூடுதல் மதிப்பு: இந்தியாவில் மேற் கொள்ளப் பட்ட இயல்பான ஆய்விலிருந்து பெறப்பட்ட ஆதாரம்" என்ற கொள்கை சார் ஆய்வறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தனித்துவமான இயல்பு ஆய்வினைப் பயன்படுத்தி உள்ளாட்சி ஜனநாயகத்தின் தாக்கங்களை இந்த ஆய்வு பகுப்பாய்வு செய்கிறது.
- உள்ளாட்சி ஜனநாயகம் என்பது குடிமக்களின் விருப்பத் தேர்வுகளுக்கேற்ப அவர்களுக்கு மிகவும் அருகில் அமைந்த அரசு அமைப்புகள் மூலம் சேவை வழங்குவதைக் குறிக்கிறது.
- ஆனால் இதன் மூலம் பெறப்படும் ஆதாயங்கள் பெரும்பாலும் ஆண்கள், உயர் சாதியினர் மற்றும் பிற மேன்மை இன சமூகக் குழுக்களுக்கே அதிகமாகக் கிடைக்கப் பெறுகிறது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் குடிமக்களின் தேவைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கான பொறுப்புடையவர்கள் மற்றும் உள்ளாட்சி அதிகாரிகளை அதிக முயற்சியை மேற்கொள்ள வலியுறுத்துவதற்கான பொறுப்புடையவர்கள் ஆவர்.
- நியமிக்கப்பட்ட அரசு அதிகாரிகள் தங்களது சிறப்புத் திறன்களுடன் ஒன்றிணைந்த நிர்வாக அம்சங்களில் சிறப்பாகச் செயல்படுகின்றனர்.
- உள்ளாட்சி ஜனநாயகம் ஆனது சில களங்களில் நிர்வாகத்தை மேம்படுத்துகிறது.
- ஆனால் இது பொருளாதார விளைவுகளிலோ அல்லது COVID-19 மேலாண்மையின் செயல்திறனிலோ எந்தவொரு ஒட்டுமொத்தத் தாக்கத்தையும் கொண்டிருக்கவில்லை.

## சாகர் மைத்ரி

- இரண்டு மாத கால சாகர் மைத்ரி (SM)-4 திட்டத்தின் கீழ் INS சாகர்த்வானி கப்பலானது புறப்பட்டுள்ளது.
- இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் கடற்படை இயற்பியல் மற்றும் கடல்சார் ஆய்வகத்திற்கு (NPOL) சொந்தமான கடல்சார் ஆராய்ச்சிக் கப்பல் ஆகும்.
- இது சமூக-பொருளாதார அம்சங்களில் நெருக்கமான ஒத்துழைப்பை வளர்ப்பதையும், இந்தியப் பெருங்கடலின் விளிம்பு பகுதியில் அமைந்த (IOR) நாடுகளில் அறிவியல் ஆய்வுகளை, குறிப்பாக கடல் ஆராய்ச்சித் துறையின் ஆய்வுகளை மேம்படுத்தச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பின் கீழ், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது MAITRI எனப்படும் முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- MAITRI என்பது 'கடல் சார்ந்த மற்றும் அது தொடர்பான பல் துறைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி முன்னெடுப்பு' என்பதன் பெயர் சுருக்கமாகும்.
- 'கடல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு' என்ற களத்தில் இந்தியப் பெருங்கடலின் விளிம்பு பகுதியில் அமைந்த (IOR) நாடுகளுடன் நீண்ட கால ஒத்துழைப்பை ஏற்படுத்துவதில் இந்த முன்னெடுப்பு கவனம் செலுத்துகிறது.




## தேசியப் பசுமை வரவுத் திட்டம்




- ❖ ஒரு தனிநபரோ அல்லது நிறுவனமோ பசுமை வரவினைப் பெற்று அதை ஒரு பிரத்தியேகப் பரிமாற்றத் தளத்தில் வர்த்தகம் செய்யக்கூடிய ஒரு சிறப்புத் திட்டத்தை அரசானது அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது சுற்றுச்சூழலின் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு குறிப்பிட்ட ஒரு செயல்பாட்டிற்கு வழங்கப்படும் ஊக்கத்தொகையினைக் குறிக்கிறது.
- ❖ இந்த திட்டம் ஆனது 8 வகையான செயல்பாடுகளை உள்ளடக்கும்.
- ❖ இந்த முன்னெடுப்பானது தொழில்துறைகள், நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களை அவற்றின் தற்போதைய அல்லது பிற உறுதிப்பாடுகளை நிறைவேற்ற ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் திட்டம் ஆனது 2023 ஆம் ஆண்டு கார்பன் வரவு வர்த்தகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கார்பன் வரவிலிருந்து தனிப்பட்டது.
- இது 2001 ஆம் ஆண்டு எரிசக்தி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.


## 6வது NeSDA – முற்போக்கு மாதாந்திர அறிக்கை




- தேசிய மின்னாளுகை சேவை வழங்கீட்டு மதிப்பீடு (NeSDA) - மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கான முற்போக்கு மாதாந்திர அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- இது மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் முழுவதுமான மின்னாளுகை சேவை வழங்கலின் நிலை பற்றிய விரிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது.
- மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் 14,736 மின்னாளுகை சேவைகள் வழங்கப் படுகின்றன.
- ஜூலை மாத அறிக்கையிலிருந்து இதில் 6.2% (869) சேவை வழங்கீடுகள் அதிகரித்து உள்ளன.
- ஜம்மு மற்றும் காஷ்மீர், கேரளா மற்றும் ஒடிசா ஆகியவை முழு அளவிலான சேவைகளை, அவற்றின் அடையாளம் காணப்பட்ட ஒருங்கிணைந்த ஒற்றைச் சேவை வழங்கீட்டுத் தளங்கள் மூலம் வழங்குகின்றன.
- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கீழ் 1,368 மின்னாளுகை சேவைகள் பதிவாகியுள்ளன.
- ஹரியானா இந்தத் துறையில் அதிகபட்ச மின்னாளுகை சேவைகளை வழங்குகிறது (149).
- அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (96) மற்றும் ஜார்க்கண்ட் (89) ஆகியவை உள்ளன.


- ❖ குழந்தைத் தொழிலாளர் மீட்பு சார்ந்த வழக்கு மேலாண்மையை எளிதாக்கும் வகையிலான வலைதளம் அடிப்படையிலான குழந்தைத் தொழிலாளர் கண்காணிப்பு அமைப்பினை (CLTS) பீகார் அரசு தொடங்கியுள்ளது.
- ❖ குஜராத் அரசானது, வேலை தேடுபவர்கள் மற்றும் வேலை வழங்குநர்களை வெளிப்படையான மற்றும் பயனர்களுக்கு ஏற்ற முறையில் ஒரு தானியக்க பொருத்த அமைப்பு மூலம் இணைக்க வழிவகுக்கும் 'அனுபந்தம்' என்ற அமைப்பினை உருவாக்கி உள்ளது.
- ❖ உத்தரகாண்ட் அரசானது, அம்மாநிலத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளையோர்களுக்கு ரோஜ்கர் பிரயாக் இணைய தளம் மூலம் வேலை வாய்ப்புத் தகவல்களை வழங்குகிறது.

## கிழக்கத்திய பிரத்தியேக சரக்குப் போக்குவரத்து வழித்தடச் செயலாக்கம்




- ❖ 51,000 கோடி ரூபாய் மதிப்பில் கட்டமைக்கப்பட்ட 1337 கிலோமீட்டர் நீளத்திலான கிழக்கத்திய பிரத்தியேக சரக்குப் போக்குவரத்து வழித்தடத்தின் (EDFC) முழு வழித் தடமும் சமீபத்தில் செயல்பாட்டுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது.
- ❖ கிழக்கத்திய பிரத்தியேக சரக்குப் போக்குவரத்து வழித்தடத்தின் (EDFC) நியூ சஹ்னேவால் (பஞ்சாப்) - நியூ குர்ஜா (உத்தரப் பிரதேசம்) வரையிலான பிரிவில் 401 -கிலோ மீட்டர் நீளமுள்ள சரக்கு இரயிலின் முதல் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.
- ❖ மேற்கத்திய பிரத்தியேக சரக்குப் போக்குவரத்து வழித்தடமானது (WDFC) 1046 கிலோ மீட்டர் நீளம் கொண்டது.
- ❖ இது குர்ஜா எனும் பகுதியினை மகாராஷ்டிராவில் உள்ள ஜவஹர்லால் நேரு என்ற துறைமுகத்துடன் இணைக்கிறது.

## கருவில் இருக்கும் குழந்தையின் உரிமைகள்





- ❖ உச்ச நீதிமன்றமானது சமீபத்தில், திருமணமான பெண்ணின் 26 வாரக் கர்ப்பத்தைக் கலைக்க அனுமதிக்க மறுத்ததன் மூலம் கருவில் இருக்கும் குழந்தையின் உரிமையை காத்துள்ளது.
- ❖ 2021 ஆம் ஆண்டின் கருவின் மருத்துவம் சார்ந்த கலைப்பு (திருத்தம்) சட்டத்தின் கீழ், கருக்கலைப்பு செய்வதற்கான கால வரம்பான 24 வாரங்களை அந்தப் பெண் கடந்து விட்டார்.
- ❖ மருத்துவ நிபுணர்களின் கூற்றுப்படி, ஒரு பெண்ணின் கர்ப்பமானது அவரது உயிருக்கும் ஆரோக்கியத்திற்கும் கணிசமான, உடல் ரீதியான மற்றும் உடனடி ஆபத்தை ஏற்படுத்தினால் மட்டுமே கருக்கலைப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப் படும் என்று இச்சட்டத்தின் 5வது பிரிவு கூறுகிறது.
- ❖ இச்சட்டத்தின்படி, 20 வார காலக் கர்ப்பமானது ஒரு மருத்துவரின் ஆலோசனையின் பேரில் கர்ப்பத்தை கலைப்பதற்கான கால வரம்பாக உள்ளது.
- ❖ ஒருவரின் 20 முதல் 24 வார கால அளவிலான கர்ப்பத்தினைக் கலைப்பதற்கான உரிமையானது, சில சூழ்நிலைகளின் கீழ் மட்டும் 2 பதிவு செய்யப்பட்ட மருத்துவ பயிற்சியாளர்களால் நிர்ணயிக்கப்படுகிறது.
- ❖ 24 வாரங்களைக் கடந்த ஒரு கருவினை அதன் கருவின் முறையற்ற வளர்ச்சி காரணமாக கலைப்பது குறித்த ஒரு கருத்தினை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட மையங்களில் ஒரு மருத்துவக் குழுவை உருவாக்குவது கட்டாயமாகும்.

## முதலாவது IndiaAI அறிக்கை

- ❖ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஆனது முதலாவது IndiaAI அறிக்கையினை சமர்ப்பித்துள்ளது.

- 2035 ஆம் ஆண்டிற்குள் இந்தியப் பொருளாதாரத்தில் 967 பில்லியன் அமெரிக்க டாலர்களையும், 2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 450-500 பில்லியன் டாலர்களையும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இது நாட்டின் 5 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற மொத்த உள்நாட்டு உற்பத்தி இலக்கில் 10% பங்கினை கொண்டிருக்கும்.
- தற்போதுள்ள செயற்கை நுண்ணறிவானது சுற்றுச்சூழல் அமைப்பில் உள்ள பல்வேறு இடைவெளிகளைக் குறைப்பதற்காக என்று துல்லியமான மற்றும் ஒருங்கிணைந்த உத்தியை உறுதி செய்யும் திட்டம் சார்ந்த அணுகுமுறையை IndiaAI கொண்டுள்ளது.

## பொலிவுரு நகரங்கள் திட்டம், இந்தியா : நிலையான மேம்பாட்டு இலக்குகளை உள்ளூர்மயமாக்குதல்





- இந்த அறிக்கையானது, மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை-வாழ்விட அமைப்பு ஆகியவற்றால் இணைந்து தயாரிக்கப் பட்டுள்ளது.
- உலகளாவிய நிலைத்தன்மை நோக்கங்களுக்காக என்று தேசிய பணித் திட்டங்களை உருவாக்குவதற்கான முதல் விரிவான முன்னெடுப்பு இதுவாகும்.
- பொலிவுரு நகரங்கள் திட்டத்தின் (SCM) கீழான 70%க்கும் அதிகமான திட்டங்கள் ஆனது நகரங்கள், சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம், தூய்மையான ஆற்றல் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றின் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டு இலக்குகளுடன் (SDGs) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
- பொலிவுரு நகரங்கள் திட்டமானது சுமார் 8,000 திட்டங்களை உள்ளடக்கியது.
- பொலிவுரு நகர திட்டங்கள் ஆனது 17 நிலையான மேம்பாட்டு இலக்குகளில் 15 இலக்குகளுக்கு ஏதேனும் ஒரு வகையில் பங்களித்துள்ளன.
- நிலையான மேம்பாட்டு இலக்குகளில் சுமார் 44% ஆனது 11வது - நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புகளை உள்ளார்ந்த, பாதுகாப்பான, நெகிழ்திறன் மிக்க மற்றும் நிலையானதாக மாற்றுதல் - நிலையான மேம்பாட்டு இலக்குடன் இணங்கியுள்ளன.

- பொலிவுரு நகரங்கள் திட்டங்களில் சுமார் 3.3% திட்டங்கள் 6வது நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கு (தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம்) பங்களித்துள்ளது.
- 8.6% திட்டங்கள் 7வது நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கும் (மலிவு விலையிலான மற்றும் தூய்மையான ஆற்றல்) மற்றும் 6.4% திட்டங்கள் 8வது நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கும் (முறையான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி) பங்களித்து உள்ளன.

## மருந்தியல் குறிப்பேடு கலந்துரையாடல் குழு

- இந்திய மருந்தியல் குறிப்பேடு ஆணையம் (IPC) ஆனது மருந்தியல் குறிப்பேடு கலந்துரையாடல் குழுவில் (PDG) இணைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடங்கப்பட்ட தொடக்கக் கட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உலகின் ஒரே மருந்தியல் குறிப்பேடு அமைப்பு இந்திய மருந்தியல் குறிப்பேடு ஆணையம் ஆகும்.
- மருந்தியல் குறிப்பேடு குழுவானது (PDG) ஆனது 1989 ஆம் ஆண்டில் ஐரோப்பிய, ஜப்பானிய மற்றும் அமெரிக்க மருந்தியல் குறிப்பேடு நிறுவனங்களால் நிறுவப் பட்டது.
- உற்பத்தியாளர்கள் மீதான சுமையை குறைப்பதற்கும் நிலையான தரத்தை உறுதி செய்வதற்கும் உலகளாவிய மருந்தியல் குறிப்பேட்டுத் தரநிலைகளை இணக்கம் ஆக்குவதை PDG நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2001 ஆம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது ஒரு பார்வையாளர் அமைப்பாக இதில் இணைந்தது.

## 2022-23 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் தோட்டக்கலை உற்பத்தி





- 2022 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2023 ஆம் ஆண்டு ஜூன் வரையிலான மதிப்பீட்டின் படி இந்த பயிர்ச் சாகுபடி ஆண்டில் உணவு தானியம் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியில் சாதனை உச்சத்தை எட்டியுள்ளது என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்த மதிப்பீட்டின்படி, 2022-23 ஆம் ஆண்டில் நாட்டின் உணவு தானிய உற்பத்தியின் இறுதி மதிப்பீடுகளின் அளவானது 329.68 மில்லியன் டன்னாக உள்ளது.

- இது முந்தைய ஆண்டைவிட சுமார் 4% அல்லது 14.1 மில்லியன் டன் அதிகம் என்று அதிகாரப் பூர்வ அறிக்கை தெரிவித்துள்ளது.
- 2012-13 ஆம் ஆண்டில் 257.1 மில்லியன் டன்களாக இருந்த உணவு தானிய உற்பத்தியானது கடந்த பத்தாண்டுகளில் தொடர்ச்சியாக உயர்ந்து 2021-22 ஆம் ஆண்டில் 315.6 மில்லியன் டன்களாக உள்ளன.
- முந்தைய ஐந்தாண்டுகளின் உணவு தானிய உற்பத்தியின் சராசரியை விட 30.8 மில்லியன் டன்கள் அதிகமாக 2022-23 ஆம் ஆண்டின் உணவு தானிய உற்பத்தி உள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் அரிசியின் மொத்த உற்பத்தியானது உச்ச அளவாக 135.75 மில்லியன் டன்களாக மதிப்பிடப் பட்டுள்ளதோடு இது முந்தைய ஆண்டின் உற்பத்தியை விட 6.28 மில்லியன் டன்கள் அதிகமாகவும் உள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் கோதுமை உற்பத்தியானது 110.55 மில்லியன் டன்களாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- இது முந்தைய ஆண்டின் கோதுமை உற்பத்தியை விட 2.8 மில்லியன் டன்கள் அதிகம் ஆகும்.
- 2022-23 ஆம் ஆண்டிற்கான மொத்த பருப்பு உற்பத்தியானது, 26 மில்லியன் டன்களாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- கடந்த ஐந்தாண்டுகளின் சராசரி அளவுகளுடன் ஒப்பிடும்போது இது 1.4 மில்லியன் டன்கள் அதிகமாகும்.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்: 2023 ஆம் ஆண்டிற்கான ASICS அறிக்கை

Figure 7: Top five areas of amendments to municipal legislaions





- இந்தியாவின் நகர அமைப்புகளின் வருடாந்திர கணக்கெடுப்பு (ASICS) என்பது இந்திய நகரங்களில் மேற்கொள்ளப்படும் நகரங்களின் நிர்வாகத்தரம் பற்றிய ஒரு விரிவான மதிப்பீடாகும்.
- இது ஐந்து ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு வெளியிடப்பட்டுள்ளது (கடைசியாக 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது).
- கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டது போல நகரங்களை வரிசைப் படுத்தச் செய்வதற்குப் பதிலாக இம்முறை மாநிலத்தை ஒரு தொகுதியாக கொண்டு மையப் படுத்தப் பட்டு இவ்வறிக்கை வெளியிடப்பட்டது.

- நகராட்சியின் செலவினங்களில் சுமார் 20% மட்டுமே சொத்து வரியால் ஈடு செய்யப் படுகிற நிலையில், இது வருவாயை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு செயல்திறன் நடவடிக்கைகளின் அவசியத்தைப் பரிந்துரைக்கிறது.
- பொதுத் தளத்தில் அணுகக்கூடிய வகையில் நகர்ப்புறச் சட்டங்களானது 51% மாநிலங்கள் /ஒன்றியப் பிரதேசங்களில் காணப்படவில்லை.
- அதன் செயல்பாடுகளில் நீண்டகாலத் தேவைகளுக்காக செயல்படுத்தும் முதன்மைத் திட்டங்களானது 39% அளவிற்கு இந்தியாவின் தலைநகர நகரங்களில் காணப்பட வில்லை.
- கிழக்கு மாநிலங்களிலும் அதைத் தொடர்ந்து தெற்கு மாநிலங்களிலும் சிறந்த நகர்ப்புற சட்டங்களானது காணப்படுகின்றது.


## 2024-25 ஆம் ஆண்டின் ராபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை

- மத்திய அரசானது, 2024-25 ஆம் ஆண்டின் சந்தைப்படுத்துதல் பருவத்திற்கு கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையினை (MSP) குவிண்டாலுக்கு ₹150 உயர்த்தி ₹2,275 ஆக அறிவித்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டிற்குப் பிறகு இதுவே அதிகபட்சமாக உயர்த்தப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலையாகும்.
- தற்போது, 2023-24 ஆம் ஆண்டு சந்தைப்படுத்தல் பருவத்திற்கான (ஏப்ரல்-மார்ச்) கோதுமையின் MSP ஆனது ஒரு குவிண்டாலுக்கு ₹2,125 ஆக உள்ளது.
- பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழுவின் (CCEA) கூட்டத்தில் இது தொடர்பான முடிவானது எடுக்கப் பட்டது.
- முக்கிய ராபி (குளிர்கால) பருவப் பயிரான கோதுமையானது அக்டோபரில் பயிரிடத் தொடங்கப்பட்டு, ஏப்ரல் மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது.
- MSP என்பது விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தால் உறுதி செய்யப் படும் குறைந்த பட்ச ஆதரவு விலை விகிதமாகும்.
- மேலும் இந்த விகிதத்திற்குக் குறைவாக தானியங்களானது அரசாங்கத்தின் கீழ் இயங்கும் கொள்முதல் முகமைகளால் வாங்கப் படுவதில்லை.



## 2023 ஆம் ஆண்டிற்கான ATMS தரநிலைகள் மற்றும் விவரக்குறிப்புகள்

- இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது மேம்படுத்தப்பட்ட மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட மேம்படுத்தப் பட்டப் போக்குவரத்து மேலாண்மை அமைப்பின் (ATMS) 2023 ஆம் ஆண்டிற்கான தரநிலைகள் மற்றும் விவரக்குறிப்புகளைச் செயல்படுத்த அதன் புதுப்பிக்கப்பட்ட கொள்கைகளை வெளியிட்டுள்ளது.
- இந்த முயற்சியானது தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவு வழித்தடங்களில் சாலைப் பாதுகாப்பையும் எண்ம அமலாக்கத்தையும் மேம்படுத்தும் வகையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட சமீபத்திய முறைகளைப் பயன்படுத்துகிறது.
- போக்குவரத்து விதிகளின் எண்ம அமலாக்கத்தை கொண்டு வருவதற்காக, தற்போது உள்ள போக்குவரத்து விதிகள் தொடர்பான VIDS ஒளிபடக்கருவிகளானது காணொளி நிகழ்வு கண்டறிதல் மற்றும் அமலாக்க அமைப்பு (VIDES) ஆகியவை மூலம் மாற்றப் படும்.
- வாகனத்தின் வேகத்தினைக் கண்டறியும் அமைப்பானது (VSDS) இப்போது காணொளிகளின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதோடு, இது தானியங்கி இலக்கத் தகடு அங்கீகாரத்தின் மூலம்  ஒளிபடக்கருவிகளின் பயன்பாட்டினை மேம்படுத்தச் செய்கிறது.
- கண்டறியப்பட்ட நிகழ்வுகளைப் பொறுத்து, அந்தப் பாதைகளில் ரோந்து செல்லும் வாகனங்கள் அல்லது உதவு வகை வாகனங்கள் ஆகியவற்றை காணொளிகளின் மூலம் எச்சரித்தல், மின் செலுத்துச் சீட்டுகளை உருவாக்குதல், அருகிலுள்ள செய்தி பலகைகளுக்கு நிலைகளை உணர்த்தி எச்சரிக்கைகளை வழங்குதல் அல்லது அருகிலுள்ளப் பயணிகளுக்கு 'ராஜ்மார்க்யாத்ரா' கைபேசி செயலி மூலம் அறிவிப்புகளை அனுப்புதல் போன்ற தகவல்களை இது வழங்குகிறது.




## தன்பாலின திருமணம் தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- இந்தியாவில் தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்தை சட்டப் பூர்வமாக்க முடியாது என்று உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசமைப்பு அமர்வு ஒரு மனதாக தீர்ப்பளித்துள்ளது.
- இப்பிரச்சனை தொடர்பாக முடிவெடுக்கும் உரிமையானது நாடாளுமன்றத்திற்கே உள்ளதென உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.
- மேலும் 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின் (SMA) சட்ட விதிகளை ரத்து செய்யவோ அல்லது அதன் வார்த்தைகளை வித்தியாசமாகப் பொருள் கொள்ளவோ இயலாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- SMA சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாலின-நடுநிலைமை விளக்கத்தினை அறிவதே தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் ஒரு முக்கிய மையமாக இருந்தது.
- இது சாதியிடை மற்றும் மதங்களுக்கு இடையேயான திருமணங்களை எளிதாக்கவும் ஊக்குவிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு மதச்சார்பற்றச் சட்டமாகும்.
- தன்பாலினத் திருமணங்களையும் இந்தச் சட்டத்தில் சேர்ப்பதற்காக SMA சட்டத்தின் விரிவான விளக்கத்தை மனுதாரர்கள் கோரியுள்ளனர்.
- தற்போது ஐந்து நீதிபதிகளும், திருமணம் செய்து கொள்வது இந்தியாவில் அடிப்படை உரிமை அல்ல என்று கூறியுள்ளனர்.

## உலக கடல்சார் இந்தியா உச்சி மாநாடு

- சமீபத்தில், மூன்றாவது உலக கடல்சார் இந்தியா உச்சி மாநாடானது மும்பையில் நடைபெற்றது.
- கடல்சார் நீலப் பொருளாதாரத்திற்கான செயல்திட்டமும் இந்நிகழ்ச்சியில் வெளியிடப் பட்டது.
- துறைமுக வசதிகளை மேம்படுத்துதல், நிலையான நடைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை உருவாக்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட உத்திசார் முன்னெடுப்புகளை இந்த செயல்திட்டம் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- முதலாவது கடல்சார் இந்தியா உச்சிமாநாடு ஆனது 2016 ஆம் ஆண்டில் மும்பையிலும், இரண்டாவது கடல்சார் உச்சி மாநாடு 2021 ஆம் ஆண்டில் காணொலிக் காட்சி வாயிலாகவும் நடைபெற்றது.





## தற்காலிக நிலக்கரி புள்ளி விவரங்கள் 2022-23

- நிலக்கரித் துறை அமைச்சகமானது "2022-23 ஆம் ஆண்டிற்கான தற்காலிக நிலக்கரி புள்ளிவிவரங்கள்" என்ற தலைப்பிலான புள்ளி விவர அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- இந்திய நாடானது 2022-23 ஆம் ஆண்டில் நேபாளம், வங்காளதேசம் மற்றும் பூடான் உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கு 1.163 மில்லியன் டன் நிலக்கரியை ஏற்றுமதி செய்து உள்ளது.

- மற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களுடன் ஒப்பிடுகையில் நிலக்கரியின் நம்பகத் தன்மை காரணமாக இந்தியாவின் ஆற்றல் நுகர்வில் பாதியளவு நிலக்கரி சார்ந்ததாக உள்ளதோடு, அது மின்னாற்றல் உற்பத்திக்கான முதன்மை எரிபொருள் மூலமாகவும் உள்ளது.




## ஒரே நாடு, ஒரே மாணவர் அடையாள அட்டை




- மத்தியக் கல்வி அமைச்சகமானது, இந்தியா முழுவதும் உள்ள பள்ளி மாணவர்களுக்கு ஒரே நாடு, ஒரே மாணவர் அடையாள அட்டை' என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தும் பணியினைத் தொடங்கியுள்ளது.
- இது மாணவர்களின் வாழ்நாள் முழுவதுமான முக்கியச் சாதனைகள் மற்றும் கல்விப் பயணங்களைப் பதிவு செய்யும் ஒரு வாழ்நாள் அடையாள அட்டையாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

- இந்தப் புதிய முன்னெடுப்பிற்குத் தானியங்கி நிரந்தர கல்விக் கணக்குப் பதிவு (APAAR) என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது கல்வி சார் சூழலமைவுப் பதிவேடு அல்லது 'EduLocker' என்றும் அறியப்படுகிறது.
- APAAR என்பது வாழ்நாள் முழுவதும் பயன்படும் அடையாள எண்ணாக இருப்பதால், மாணவர்கள் தங்கள் கல்விப் பயணங்கள் மற்றும் சாதனைகளைக் கண்காணிப்பதை எளிதாக்கும் வகையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.
- மாணவர்கள் அவர்களுடைய தேர்வு முடிவுகள், கற்றல் முடிவுகள் மற்றும் ஒலிம்பியாட்களில் பங்கெடுத்ததற்கான தரவரிசை அல்லது சிறப்புத் திறன்களைப் பெறுதல் போன்ற இணைப் பாடத்திட்டச் சாதனைகளை எண்ணிம முறையில் பதிவு செய்து சேமிக்க முடியும்.

## அப்னா சந்திரயான் (உங்கள் சந்திரயான்)

- மத்தியக் கல்வித் துறை அமைச்சகமானது, சந்திரயான் தொடர்பான சிறப்பு பாடத் திட்டங்களையும், 'அப்னா சந்திரயான்' என்ற கல்வி இணையதளத்தையும் அறிமுகம் செய்துள்ளது.
- இது சந்திரயான்-3 திட்டம் சார்ந்து உருவாக்கப்பட்ட, வினாடி வினா மற்றும் புதிர்கள் போன்ற செயல்பாடு சார்ந்த வசதிகளை கொண்டுள்ளது.
- இதில் 70 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்ற அனைவருக்கும் எண்ணிமச் சான்றிதழ்களும், முதல் 1000 வெற்றியாளர்களுக்கு வயதுக்கு ஏற்றப் புத்தகங்களும் வழங்கப் படும்.




## இந்தியாவின் வெப்ப அலை மிகுந்த இடங்கள்

- பருவநிலை மாற்ற ஆராய்ச்சிக்கான மகாமனா மையத்தின் ஒரு ஆய்வில் இடைக்கால அளவில் (2041-2060) இந்தியாவில் ஏற்படும் வெப்ப அலை குறித்தப் பண்புகளின் எதிர் கால மாற்றங்களை ஆய்வு செய்தது.
- இது, RCP 4.5 மற்றும் RCP 8.5 உமிழ்வுகளின் கீழ் முறையே நீண்ட கால (2081-2099) மற்றும் எதிர்கால மாற்றங்களை ஆய்வு செய்கிறது.
- தென்-மத்தியப் பிராந்தியத்தில் மிகப்பெரிய அளவிலான அதிகரிப்புடன் எதிர்கால வெப்ப அலை மிகைப் பகுதிகளாக வடமேற்கு, மத்திய மற்றும் தென்-மத்திய இந்தியா ஆகிய பகுதிகள் உருவாக்கியுள்ளன.

- மனித நடவடிக்கைகளின் விளைவாக எதிர்காலத்தில் வளிமண்டலத்தில் உள்ள பசுமை இல்ல வாயுக்களின் செறிவுகள் எவ்வாறு மாறும் என்பதைப் பற்றிய எதிர்கால போக்குகளைக் கண்டறிவதற்காக சார்பு செறிவுப் பாதைகள் (RCP) பயன்படுத்தப் படுகின்றன.
- RCP 4.5 சூழ்நிலையில், நூற்றாண்டின் நடுப்பகுதியில் உமிழ்வுகள் உச்சத்தை அடைந்து நூற்றாண்டின் இறுதியில் குறையும்.
- RCP 8.5 என்பது நூற்றாண்டு முழுவதும் உமிழ்வுகள் அதிகரிக்கும் மிகவும் அதிகபட்ச அடிப்படை சூழ்நிலையாகும்.




## நாட்டின் வேலைவாய்ப்புக் குறித்த கண்ணோட்ட அறிக்கை

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தின் தேசியப் புள்ளியியல் அலுவலகம் (NSO) ஆனது 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மற்றும் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையான காலகட்டத்திற்கான நாட்டின் வேலைவாய்ப்புக் கண்ணோட்டத்தை வெளியிட்டுள்ளது.

- இந்தியாவின் முறைசார் துறை வேலைவாய்ப்பு ஆனது 2021 ஆம் ஆண்டின் அக்டோபர் - டிசம்பர் மாத காலாண்டில் 0.4 மில்லியன் உயர்ந்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை மொத்தம் 36,53,544 புதிய சந்தாதாரர்கள் மத்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் பெரு நிறுவனங்களால் அமல்படுத்தப்பட்ட தேசிய ஓய்வூதியத் திட்டங்களில் சேர்ந்து பங்களித்துள்ளனர்.
- ஒன்பது துறைகளில் வேலை வாய்ப்பு பெற்ற மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 31.4 மில்லியன் ஆகும்.

## PM SVANidhi திட்டம்

- மத்திய அரசானது, 2020 ஆம் ஆண்டில் தெருவோர வியாபாரிகளுக்காக PM SVANidhi என்ற சிறு கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- இது 'உள்ளடக்கியத் தொழில்முனைவினை' ஊக்குவிக்க உதவியதோடு, அது ஒரு பாலினச் சமன்படுத்தல் நடவடிக்கை என நிரூபிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்ற சுமார் 75% பயனாளிகள் பொதுப் பிரிவு சாராத இதரப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- மொத்தப் பயனாளிகளில் இதரப் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் 44%, பட்டியலிடப்பட்ட சாதியினர்/பழங்குடியினர் 22% ஆவர்.
- மொத்தப் பயனாளிகளில் 43% பெண்கள் ஆவர்.



## INS இம்பால்



- திட்டமிடப்பட்டதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னதாகவே INS இம்பால் கப்பலானது இந்தியக் கடற்படைக்கு வழங்கப்பட்டது.
- இது 15B திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட, ரேடாருக்குப் புலப்படாதத் தொழில்நுட்பம் கொண்ட வழிகாட்டப் பட்ட ஏவுகணை அழிப்பான் ஏவும் ரக கப்பல்களில் மூன்றாவது கப்பல் இதுவாகும்.
- பெண் அதிகாரிகள் மற்றும் மாலுமிகளுக்கான தங்குமிடத்துடன் கூடிய முதல் கடற் படைப் போர்க்கப்பல் இம்பால் ஆகும்.
- INS விசாகப்பட்டினம் மற்றும் INS மோர்முகோவா போன்ற போர்க்கப்பல்கள் ஏற்கனவே படையில் இணைக்கப்பட்டுள்ள நிலையில் நான்காவது போர்க்கப்பலான சூரத் கப்பல் கட்டுமான நிலையில் உள்ளது.

## POSH சட்டத்தின் கீழ் மாவட்ட அதிகாரிகள்

- சமீபத்தில், பணியிடத்தில் நிகழும் பாலியல் துன்புறுத்தலிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல் (POSH) சட்டத்தின் கீழ் மாவட்ட அதிகாரிகளை நியமிப்பதற்கு அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேச அரசுகளின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்திற்கு இந்திய உச்ச நீதிமன்றம் (SC) ஆனது உத்தரவிட்டுள்ளது.
- POSH என்பது 2013 ஆம் ஆண்டு பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்கள் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு காணுதல்) சட்டத்தினைக் குறிக்கிறது.
- இது பணியிடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் துன்புறுத்தல் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சட்டமானது ஒவ்வொரு மாவட்டத்திலும் இச்சட்டத்தை செயல்படுத்துவதில் முக்கியமானப் பங்கினையும் வகிக்கும் ஒரு அதிகாரியை நியமிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது.
- இந்த மாவட்ட அதிகாரிகள் 10க்கும் குறைவான தொழிலாளர்களைக் கொண்ட சிறு நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களிடமிருந்து புகார்களைப் பெற்று அதற்கு தீர்வு காண்பதற்காக உள்ளூர்ப் புகார்க் குழுக்களை (LCCs) அமைப்பர்.
- இந்தச் சட்டத்தின் கீழ் கிராமப்புற, பழங்குடியின மற்றும் நகர்ப்புறங்களில் தலைமை அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பும் ஒரு மாவட்ட அதிகாரியின் பொறுப்புகளில் ஒன்றாகும்.




## குறைக்கடத்தி துறை பற்றிய ISRC அறிக்கை

- சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்தியக் குறைக்கடத்தி அறிக்கை மற்றும் செயல் திட்டங்கள் (ISRC) அறிக்கையானது குறைக்கடத்தி துறையில் இந்தியாவின் பெரும் முன்னிலையினை உறுதியளிக்கிறது.
- ISRC அறிக்கையானது 6.7 பில்லியன் டாலர் முதலீட்டின் மூலம் இந்தியாவின் குறைக் கடத்தி உற்பத்தித் தொழில் துறையினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய குறைக்கடத்தி வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் 20% சந்தைப் பங்களிப்பை அடைவதற்கான செயல்திட்டத்தினை இவ்வறிக்கையானது குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- குறைக்கடத்தி தொழில் துறையானது, தொழில்நுட்ப முன்னேற்றத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குவதால், திறன்பேசிகள் முதல் இராணுவக் கட்டமைப்புகள் வரை அனைத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.
- குறைக் கடத்திகளின் நிகர இறக்குமதியாளராக இந்தியா திகழ்ந்து வருகிறது.
- இந்திய நாடானது அதன் சில்லுகளுக்கான தேவைகளுக்காக தைவான், தென் கொரியா மற்றும் சீனா போன்ற நாடுகளைப் பெரிதும் சார்ந்துள்ளது.


## கழிவுநீர் அகற்றும்போது ஏற்படும் உயிரிழப்பு மற்றும் உடல் குறைபாடுகள் தொடர்பான இழப்பீடு

- மனிதர்களால் மேற்கொள்ளப்படும் கழிவுநீர் அகற்றுதல் நடைமுறையினை படிப் படியாக முழுவதும் ஒழிப்பதை உறுதி செய்வதற்காக வேண்டி உரிய நடவடிக்கைகளை எடுக்கவும், கொள்கைகளை வகுக்கவும், வழிமுறைகளை வழங்கவும் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.
- மேலும், கழிவுநீர் குழாய்களைச் சுத்தம் செய்யும் போது இறந்தவர்களின் உறவினர்களுக்கு மத்திய, மாநில அரசுகளானது 30 லட்சம் ரூபாயினை இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

- இதற்கு முன்னதாக 1993 ஆம் ஆண்டில் இருந்து 10 லட்சம் ரூபாயானது இழப்பீடு தொகையாக வழங்கப்பட்டது.
- கழிவுநீர் சுத்திகரிக்கும் போது ஏதேனும் ஒரு வகை உடல் ஊனத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கப் படும் குறைந்தபட்ச இழப்பீடானது 10 இலட்சம் ரூபாய்க்கு குறைவாக இருத்தல் கூடாது.
- அவ்வாறு ஏற்படும் குறைபாடானது, நிரந்தர இயலாமை மற்றும் பொருளாதார ரீதியாக ஆதரவற்றவர்களாக ஒருவரை மாற்றினால், அதற்காக வழங்கப்படும் குறைந்தபட்ச இழப்பீட்டுத் தொகையானது 20 இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக இருத்தல் கூடாது.

| S.No | Name of States/UTs | Total no. of sewer/septic tank deaths | Compensation paid | Cases closed due to not having legal heirs |
|---|---|---|---|---|
| 1 | Gujarat | 153 | 106 | 30 |
| 2 | U.P. | 116 | 69 | 0 |
| 3 | Delhi | 103 | 83 | 0 |
| 4 | Tamil Nadu | 226 | 212 | 0 |
| 5 | Karnataka | 86 | 86 | 0 |
| 6 | Pondicherry | 9 | 8 | 0 |
| 7 | Chandigarh | 3 | 3 | 0 |

## மேல்முறையீட்டுத் தீர்ப்பாய விதிகள் 2023




- நிதி அமைச்சகமானது 2023 ஆம் ஆண்டு சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் (தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நியமனம் மற்றும் நிபந்தனைகள்) விதிகளை வெளியிட்டுள்ளது.
- இது தீர்ப்பாயத்தின் முக்கியப் பணியாளர்களின் தேர்வு, பதவிக் காலம் மற்றும் பலன்களுக்கான ஒரு கட்டமைப்பினை வழங்குகிறது.
- இந்த விதிகள் சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு மற்றும் மாநில அமர்வுகளின் தலைவர், நீதித்துறை உறுப்பினர், தொழில்நுட்ப உறுப்பினர் (மத்திய) மற்றும் தொழில்நுட்ப உறுப்பினர் (மாநிலம்) ஆகியோருக்குப் பொருந்தும்.

- இந்தத் தீர்ப்பாயங்களின் தலைவர் பதவிக்கான அதிகபட்ச வயது வரம்பு 70 ஆகவும், அதே நேரத்தில் உறுப்பினர்களுக்கான வயது வரம்பு 67 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- நிதி அமைச்சகம் ஆனது முன்னதாக சரக்கு மற்றும் சேவை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் 31 அமர்வுகளை நிறுவ உள்ளதாக அறிவித்தது.

## வாடகைத் தாய் (ஒழுங்குமுறை) விதிகள், 2023

- ஒரு சட்டத்தின் நடவடிக்கைக்குத் தடை விதித்து, அரிய மருத்துவ நோயால் பாதிக்கப்பட்ட பெண்ணின் தாய்மைக்கான உரிமையை உச்ச நீதிமன்றம் பாதுகாத்து உள்ளது.
- சிக்கலான உடல்நிலை காரணமாக, மனுதாரப் பெண்ணினால் தனது உடலில் கரு முட்டைகள் /அண்ட செல்களை உற்பத்தி செய்ய முடியவில்லை.
- அவர் மேயர் ரோகிடான்ஸ்கி குஸ்டர் ஹவுசர் (எம்ஆர்கேஎச்) நோய்க்குறி எனப்படும் அரிய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.
- ஆனால், இந்த ஆண்டு மார்ச் 14 ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட ஒரு அரசாங்க அறிவிப்பில், ஒரு சட்டத்தினைத் திருத்தியமைத்து தானம் செய்யப்படும் பாலணுக்களைப் (கேமிட்) பயன்படுத்துவதைத் தடை செய்வதாக அறிவிக்கப்பட்டது.
- "திருமணமான தம்பதிகள்" வாடகைத் தாய் மூலம் குழந்தை பெறுவதற்கு தங்கள் சொந்த பாலணுக்களைப் பயன்படுத்த வேண்டும் என்று இந்த திருத்தத்தில் கூறப் பட்டது.
- பெண்களின் தாய்மைக்கான உரிமையை மீறும் இந்த சட்டத் திருத்தத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு திருத்தமானது, 2021 ஆம் ஆண்டு வாடகைத் தாய்ச் சட்டத்தின் 2(r) மற்றும் 4 ஆகிய சட்டப் பிரிவுகளுக்கு முரணானது.
- இந்தச் சட்டப் பிரிவுகள், ஒரு மோசமான மருத்துவப் பிரச்சினையின் போது, பெற்றோர் ஆவதற்காக ஓர் இணையர் வாடகைத் தாய் முறையைத் தேர்வு செய்யலாம் என்பதை அங்கீகரித்துள்ளது.
- கர்ப்பக் கால வாடகைத் தாய் செயல்முறையினைத் தொடர அனுமதிக்கின்ற 14(a) எனும் சட்டப் பிரிவின் படி, அந்த முறை மூலமாகப் பிறக்கும் குழந்தை கணவனுடன் மரபணு ரீதியாக தொடர்புடையதாக கருதப்படும் என்று உச்ச நீதிமன்றம் விளக்கியது.



# சர்வதேசச் செய்திகள்

## ஷீலாண்டியாவின் புதுப்பிக்கப்பட்ட வரைபடம்

- புவியியலாளர்கள் மற்றும் நில அதிர்வு வல்லுநர்கள் அடங்கிய சர்வதேசக் குழுவானது ஷீலாண்டியாவின் புதுப்பிக்கப்பட்ட வரைபடத்தினை உருவாக்கியுள்ளது.
- இது பசிபிக் பெருங்கடலுக்கு அடியில் இருக்கும் 'உலகின் எட்டாவது கண்டமாக' கருதப் படுகிறது.
- 1.89 மில்லியன் சதுர மைல்கள் (4.9 மில்லியன் சதுர கி.மீ.) கொண்ட ஒரு பரந்த கண்டமான ஷீலாண்டியா, மடகாஸ்கரை விட ஆறு மடங்கு பெரியதாகும்.
- ஒரு சிறு கண்டமாக வகைப்படுத்தப்பட்டால், ஷீலாண்டியா உலகின் மிகப்பெரிய சிறு கண்டமாக இருக்கும்.
- ஷீலாண்டியாவின் 94% பகுதி கடலுக்கு அடியில் இருப்பதாக நம்பப் படுகிறது.
- மீதமுள்ள 6% நியூசிலாந்து மற்றும் சுற்றியுள்ள தீவுகளாகும்.
- உலகின் மிகப்பெரியத் தீபகற்பமான அரேபியத் தீபகற்பம் (3,237,500 சதுர கிலோ மீட்டர் அல்லது 1,250,000 சதுர மைல்) மற்றும் இந்தியத் துணைக் கண்டம் (4,300,000 சதுர கிலோ மீட்டர் அல்லது 1,700,000 சதுர மைல்) ஆகியவற்றை விட ஷீலாண்டியா என்பது கணிசமான அளவில் பெரியது ஆகும்.




## ஐக்கிய நாடுகள் சபையின் நாகோர்னோ-காராபாக் திட்டம்

- அஜர்பைஜானில் உள்ள நாகோர்னோ- காராபாக் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் குழு வந்தடைந்துள்ளது.
- அஜர்பைஜான், பிரிந்த பகுதியினை மீண்டும் கைப்பற்றியதைத் தொடர்ந்து கிட்டத் தட்ட ஒட்டுமொத்த ஆர்மேனிய இன மக்களும் அந்நாட்டிலிருந்துப் புலம் பெயர்ந்தனர்.
- சுமார் 30 ஆண்டுகளில் முதல் முறையாக ஒரு சர்வதேச அமைப்பு இப்பகுதிக்கு அதன் அணுகலைப் பெற்றுள்ளது.
- முப்பது ஆண்டுகளாக இந்தப் பகுதியை தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஆர்மேனிய பிரிவினைவாதிகள், ஆயுதங்களை ஒப்படைத்து, தங்கள் அரசாங்கத்தைக் கலைத்து, அஜர்பைஜானுடன் மீண்டும் இணைவதற்கு ஒப்புக் கொண்டனர்.

- ❖ இந்த பிரிவினைவாத ஆர்மேனியர்கள் சர்வதேச அளவில் அஜர்பைஜான் பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள காராபாக்கின் ஒரு பகுதியை தங்கள் மூதாதையர் தாயகமாக உரிமை கோருகின்றனர்.
- ❖ 2.8 மில்லியன் மக்கள் வாழும் ஆர்மேனியா, அகதிகளின் திடீர் வருகையால் பெரும் சவாலை எதிர்கொள்கிறது.




## ஹூஷ் அதிவேக இரயில்



- ❖ இந்தோனேசியா "ஹூஷ்" எனப்படும் தென்கிழக்கு ஆசியாவின் முதலாவது அதிவேக இரயிலை அறிமுகம் செய்ய உள்ளது.
- ❖ இது சீனாவின் மண்டல மற்றும் சாலை உள்கட்டமைப்பு முன்னெடுப்பின் குறிப்பிடத் தக்க அங்கமாகும்.
- ❖ இது ஜகார்த்தா மற்றும் பாண்டுங் இடையேயான பயண நேரத்தை மூன்று மணி நேரத்திலிருந்து 40 நிமிடங்களாக குறைக்கும்.
- ❖ மணிக்கு 350 கி.மீ. (217 மைல்) வேகத்தில் இயங்கும் ஹூஷ் இரயில்கள் தென்கிழக்கு ஆசியாவின் அதிவேக இரயிலாக இருக்கும் என கூறப்படுகிறது.

## அர்மேனியா – சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்

- ❖ சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இணைவதற்கு ஆதரவாக அர்மேனிய நாடாளுமன்றம் வாக்களித்துள்ளது.

- அடிப்படையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஸ்தாபன உடன்படிக்கையான ரோம் சட்டத்தினை அங்கீகரிப்பதற்கு என அர்மேனிய நாட்டின் சட்டமியற்றுபவர்கள் வாக்களித்தனர்.
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினை உருவாக்கச் செய்த ரோம் சட்டத்தில் கையெழுத்திட்டு ஒப்புதல் அளித்த நாடுகள் புதினைக் கைது செய்ய அதிகாரம் கொண்டுள்ளன.
- புதின் அவர்களின் மண்ணில் கால் வைத்தால், உக்ரைனில் இருந்து குழந்தைகளை நாடு கடத்தியது தொடர்பான போர்க் குற்றங்களுக்காக வேண்டி அவர் மீது குற்றம் சாட்டப்படும்.
- அர்மேனியா பின்னர் புதின் நாட்டிற்குள் நுழைந்தால் கைது செய்யப்பட மாட்டார் என்று ரஷ்யாவிற்கு உறுதியளிக்க முயன்றது.
- 2020 ஆம் ஆண்டில், அர்மேனியாவிற்கும் அஜர்பைஜானுக்கும் இடையில் ஆறு வார காலப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த ஒரு ஒப்பந்தத்தினை மாஸ்கோ கொண்டு வந்தது.




## அல்-அக்ஸா ஃபிளட் நடவடிக்கை

- ஹமாஸ் தீவிரவாதிகள் காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது 5,000 ஏவுகணைகளை ஏவினர்.
- அவர்கள் இதனை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான "அல்-அக்ஸா ஃபிளட் நடவடிக்கை" என்று அறிவித்தனர்.
- தரைவழி, கடல்வழி மற்றும் வான்வழியாக ஹமாஸ் மேற்கொண்ட அதிர்ச்சியூட்டும் தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேலும் "போர் நிலையை" அறிவித்துள்ளது.
- 2007 ஆம் ஆண்டு முதல் காஸா மீது இஸ்ரேல் கடுமையான தடையினை அமல்படுத்தி உள்ளது.
- ஹமாஸ் என்பது இஸ்ரேல் நாட்டினை எதிர்த்து, 2007 ஆம் ஆண்டில் அப்பகுதியைக் கைப்பற்றிய இஸ்லாமிய தீவிரவாதக் குழுவாகும்.
- 1967 ஆம் ஆண்டு அரேபிய-இஸ்ரேல் மோதல்களைத் தொடர்ந்து மேற்குக் கரைப் பகுதியானது இஸ்ரேலிய நாட்டு ராணுவத்தின் கீழ் உள்ளது.




## AIBD அமைப்பின் தலைமை

- ❖ ஆசிய-பசிபிக் ஒளிப்பரப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் (AIBD) பொது மாநாட்டின் (GC) தலைமைப் பொறுப்பிற்கு தொடர்ந்து மூன்றாவது முறையாக வேண்டி இந்தியா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- ❖ AIBD அமைப்பின் வரலாற்றில் இவ்வாறு ஒரு நாடு தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்படுவது இது முதல் முறையாகும்.
- ❖ AIBD அமைப்பானது யுனெஸ்கோ அமைப்பின் கீழ் 1977 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ❖ இந்த அமைப்பில் தற்போது 44 நாடுகளைச் சேர்ந்த 92 உறுப்பினர் அமைப்புகளைக் கொண்டுள்ளது.
- ❖ ஆசியா, பசிபிக், ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அரபு நாடுகள் மற்றும் வட அமெரிக்காவில் உள்ள 28 நாடுகள் மற்றும் பிராந்தியங்களைச் சேர்ந்த 48 ஒளிபரப்பு ஆணையங்கள் மற்றும் ஒளிபரப்பு நிறுவனங்கள் மற்றும் 44 துணை நிறுவனங்களை உள்ளடக்கிய 26 அரசாங்க உறுப்பினர்கள் (நாடுகள்/அமைப்புகள்) இதில் அடங்கும்.
- ❖ AIBD அமைப்பின் ஸ்தாபன உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்று ஆகும்.
- ❖ இந்தியாவின் பொதுச் சேவை ஒளிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதி, இந்த அமைப்பிற்கான இந்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் ஒரு பிரதிநிதி அமைப்பாகும்.

## அமெரிக்க சபாநாயகர் கெவின் மெக்கார்த்தி

- ❖ சபாநாயகர் கெவின் மெக்கார்த்தியினை (கலிபோர்னியா மாகாணத்தின் பிரதிநிதி) அவரது பதவியில் இருந்து நீக்குவதற்கு ஆதரவாக பிரதிநிதிகள் சபையில் வாக்களிப்பு நடத்தப்பட்டது.
- ❖ அமெரிக்க வரலாற்றில் சபாநாயகர் ஒருவர் பதவியில் இருந்து வெளியேற்றப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ❖ உக்ரைன் நாட்டிற்கான உதவி குறித்து அதிபர் பிடனுடன் இணைந்து "இரகசிய ஒப்பந்தம்" செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப் பட்டது.



## இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கத்தின் தலைமை

- கொழும்பு நகரில் நடைபெற்ற இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கத்தின் (IORA) அமைச்சர்கள் சந்திப்பில் இந்தியா, வங்காளதேசம், மொரிஷியஸ், ஈரான், மலேசியா மற்றும் தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளின் பல வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்றனர்.
- கொழும்பு நகரில் நடைபெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில் 16 அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.
- இலங்கையின் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கத்தின் உச்ச நிலை முடிவெடுக்கும் அமைப்பான இந்த சபைக்குத் தலைமை தாங்கினார்.
- தற்போதைய தலைமையான வங்காளதேசத்தின் வெளியுறவு அமைச்சருக்குப் பிறகு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கை அந்தப் பொறுப்பினை ஏற்றுள்ளது.
- இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதிகளில் உள்ள நாடுகளின் அரசுகளுக்கு இடையேயான அமைப்பாக 1997 ஆம் ஆண்டில் இந்தியப் பெருங்கடலின் விளிம்புப் பகுதி நாடுகள் சங்கம் நிறுவப் பட்டது.
- இது ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா, தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஓசியானியா ஆகிய நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கையானது, 23 உறுப்பினர் நாடுகள் மற்றும் 11 பேச்சுவார்த்தை பங்குதாரர் நாடுகள் ஆக விரிவடைந்துள்ளது.

## ஆபத்திலுள்ள உலகப் பாரம்பரியத் தளங்கள்

- யுனெஸ்கோ அமைப்பானது கியுவ் மற்றும் எல்விவ் ஆகிய உக்ரேனிய நகரங்களில் அமைந்துள்ள உலகப் பாரம்பரியத் தளங்களை "ஆபத்திலுள்ள" உலகப் பாரம்பரியத் தளங்கள் என்ற பட்டியலில் சேர்த்துள்ளது.
- இது 1,157 தளங்களைக் கொண்ட யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியப் பட்டியலில் இருந்து இந்தத் தளங்களை விலக்குவதற்கான முதல் படிநிலையாகும்.
- இது புதிய அவசரகால நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கான கூடுதல் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளுக்கான வாய்ப்பினை உருவாக்குகிறது.

- தற்போதைய கியுவ் நகரில் உள்ள செயிண்ட் சோபியா கதீட்ரல் என்பது 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, அந்நகரத்தின் மிகவும் பிரபலமான அடையாளச் சின்னங்களில் ஒன்றாகும்.
- போலந்து எல்லைப் பகுதிக்கு அருகில் உள்ள மேற்கு உக்ரேனிய நகரமான எல்விவ், இடைக்காலத்தின் பிற்பகுதியில் நிறுவப்பட்டது.
- இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க மையமானது 1998 ஆம் ஆண்டில் உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

## எண்ணிம சேவை வரிகள் தொடர்பான பலதரப்பு ஒப்பந்தம்

TARGET DEADLINES

| Pillar One | Pillar Two |
| --- | --- |
| **Early 2022** – Text of a Multilateral Convention (MLC) and Explanatory Statement to implement Amount A of Pillar One | **November 2021** – Model rules to define scope and mechanics for the GloBE rules |
| **Early 2022** – Model rules for domestic legislation necessary for the implementation of Pillar One | **November 2021** – Model treaty provision to give effect to the subject to tax rule |
| **Mid 2022** – High-level signing ceremony for the Multilateral Convention | **Mid 2022** – Multilateral Instrument (MLI) for implementation of the STTR in relevant bilateral treaties |
| **End 2022** –Finalisation of work on Amount B for Pillar One | **End 2022** – Implementation framework to facilitate co-ordinated implementation of the GloBE rules |
| **2023 – Implementation of the Two-Pillar Solution** | |

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (OECD) சமீபத்தில் ஒரு பலதரப்பு ஒப்பந்தம் குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது உலக நாடுகளிடமிருந்து போதுமான ஆதரவைப் பெற்றால், தேசிய எண்ணிமச் சேவை வரிகளுக்கான பல்வேறு குறைபாடுகளை நிவிர்த்தி செய்யும் திறனைக் கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் குறித்த அறிவிப்பானது பன்னாட்டுப் பெரு நிறுவனங்களின் நாடுகளுக்கு இடையேயான வரிவிதிப்பைச் சீரமைக்க செய்வதற்கான தற்போதைய முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக கருதப்படுகிறது.
- இது 2021 ஆம் ஆண்டில் சுமார் 140 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச வரி விதிப்பு விதிகளின் இரண்டு அம்ச மறுசீரமைப்பு நடவடிக்கையின் முதல் அம்சமாக உள்ளது.

## கப்பல்களின் கடன் ஈடு விற்பனை தொடர்பான பெய்ஜிங் உடன்படிக்கை

- சீனா, சவுதி அரேபியா, சிங்கப்பூர் மற்றும் சுவிட்சர்லாந்து உள்ளிட்ட 15 நாடுகள், ஐக்கிய நாடுகள் சபையின் கப்பல்களின் கடன் ஈடு விற்பனை தொடர்பான சர்வதேச தாக்கங்கள் பற்றிய உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

- இது கப்பல்களின் கடன் ஈடு விற்பனையின் சர்வதேச தாக்கங்களுக்கான ஒரு சீரான அமைப்பினை உருவாக்கச் செய்வதன் மூலம் சர்வதேச அளவில் சட்ட உறுதி மற்றும் முன்கணிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போது கப்பல்களின் கடன் ஈடு விற்பனை தொடர்பான பெய்ஜிங் உடன்படிக்கை என்று அறியப்படும் இந்த உடன்படிக்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச வர்த்தகச் சட்ட ஆணையத்தினால் (UNCITRAL) உருவாக்கப்பட்டது.
- இது உறுதியளிக்கப்பட்ட புதிய உரிமையாளர்கள் மற்றும் கப்பல்களை வாங்கச் செய்வதற்கு நிதியுதவி வழங்குபவர்களின் பிரச்சினையை நிவர்த்தி செய்கிறது.
- உதாரணமாக, இது கடனுக்கான உத்திரவாதம் ஆக ஒரு கப்பலுக்கு உரிமை கோரும் முந்தைய கடனாளிகளுடனான ஒப்பந்தங்களை கையாள்கின்றது.
- சர்வதேசக் கடல்சார் அமைப்பானது (IMO) இந்த அறிவிப்புகள் மற்றும் கப்பல்களின் கடன் ஈடு விற்பனைச் சான்றிதழ்களுக்கான களஞ்சியமாக செயல்படுகிறது.

## ஐரோப்பாவின் முதல் தனியார் துறை ஏவுகலம்

- ஸ்பெயின் நாட்டில் அமைந்த PLD ஸ்பேஸ் நிறுவனம் ஆனது மியுரா-1 என்ற ஏவுகலத்தினை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.
- இது ஐரோப்பாவில் முழுவதுமாக தனியார் துறையினால் விண்ணில் ஏவப்பட்ட முதல் ஏவுகலமாகும்.
- மியுரா-1 என்பது தென்மேற்கு ஸ்பெயினில் உள்ள ஒரு தளத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்ட மீண்டும் புவிக்குத் திருப்பக்கூடிய ஏவுகலமாகும்.
- மியுரா-1 ஏவுகலத்தின் முதல் ஏவலின் முதன்மை நோக்கம் ஆனது ஒரு துணை சுற்றுப் பாதை இயக்கச் சோதனையினை மேற்கொள்வதாகும்.




## நிலையான நிதி: ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல்

- ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் (ESCAP) புதிய அறிக்கையானது, கொள்கை வகுப்பாளர்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் தனியார் நிதியளிப்பு நிறுவனங்களுக்கான 10 நடவடிக்கை கொள்கைகளை முன்வைத்துள்ளது.

- பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு உடன்படிக்கையில் ஈடுபட்டுள்ள 51 ஆசிய-பசிபிக் நாடுகளில் 17 நாடுகள் மட்டுமே தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை பூர்த்தி செய்வதற்கான நிதித் தேவைகளை மதிப்பீடு செய்து அறிக்கை அளித்துள்ளன.
- ஏழு நாடுகள் மட்டுமே ஏற்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் இடையேயான நிதி தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளன.
- மிதமான பருவநிலை-மாற்றச் சூழ்நிலையில், பேரழிவு தொடர்பான மற்றும் பிற இயற்கை அபாயங்களால் இப்பகுதியில் ஏற்படும் சராசரிப் பொருளாதார இழப்புகள் 1.1 டிரில்லியன் டாலர் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- அதற்கும் மேற்பட்ட மோசமான சூழ்நிலையில் 1.4 டிரில்லியன் அமெரிக்க டாலர் இழப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## ஹைதி பாதுகாப்பு திட்டம்

- ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையானது ஹைதி நாட்டிற்கான வெளிநாட்டுப் பாதுகாப்புத் திட்டத்தினை அங்கீகரித்துள்ளது.
- இந்தக் கரீபியப் பகுதி நாடானது, அதன் தலைநகரான போர்ட்-ஓ-பிரின்ஸ் பகுதியின் பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றிய வன்முறைக் கும்பல்களை எதிர்த்துப் போராடுவதற்கு உதவி நாடியது.
- ஹைத்தியின் பல கரீபிய அண்டை நாடுகளான ஆன்டிகுவா மற்றும் பார்புடா, பஹாமாஸ் மற்றும் ஜமைக்கா ஆகியவையும் இந்தத் திட்டத்திற்கு ஆதரவை வழங்கி உள்ளன.




## புடினின் கிர்கிஸ்தான் பயணம்

- மத்திய ஆசிய நாட்டிற்கான பயணத்தில் கிர்கிஸ்தானுடனான இராணுவ உறவுகளை வலுப்படுத்துவதற்கு விளாடிமிர் புடின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.
- மார்ச் மாதத்தில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் அவருக்குக் கைது ஆணை பிறப்பித்த பிறகு அவர் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

- உக்ரேனிய நாட்டின் குழந்தைகளை நாடு கடத்திய விவகாரத்தில் நீதிமன்றத்தினால் அதிபர் புடினுக்குப் பிடியாணை வெளியிடப்பட்டுள்ளது.
- கிர்கிஸ்தான் இடம் பெறாத சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உறுப்பினர் நாடுகள் தங்கள் நாடுகளின் எல்லைக்குள் அவர் நுழைந்தால் அவரை கைது செய்ய வேண்டும் என்று அந்த நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- கிர்கிஸ்தான் நாடானது, கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பின் ஒரு பகுதியாகும்.
- இது ரஷ்யா தலைமையிலான முன்னாள் சோவியத் நாடுகளின் வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் பாணியிலான ஒரு இராணுவக் கூட்டணியாகும்.

## உலகின் முதல் பசுமைப் பத்திரம்




- "பசுமை" பத்திரங்களை வழங்கும் நிறுவனங்களுக்கான புதிய தரநிலைகளை ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரித்துள்ளது.
- உலகிலேயே இத்தகைய தரநிலைகள் அங்கீகரிக்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.
- இது முதலீட்டாளர்களுக்கு நிலையான நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், பசுமைக் கண்துடைப்பு அல்லது பருவநிலைக்கு ஏற்றவை என்ற தவறான உரிமைக் கோரல்களைத் தவிர்ப்பதற்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐரோப்பா உலகிலேயே அதிகளவில் பசுமைப் பத்திரங்களை வழங்கும் நாடு ஆகும்.
- இது 2021 ஆம் ஆண்டில் உலகளாவிய வழங்கப்பட்டப் பத்திரங்களின் அளவில் பாதிக்கும் மேலானதாகும்.

## UNHRC அமைப்பின் புதிய உறுப்பினர்கள்

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, மனித உரிமைகள் சபையில் பணியாற்றச் செய்வதற்கு 15 புதிய நாடுகளைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இதில் பெரு மற்றும் ரஷ்யா ஆகியவை இடம் பெறவில்லை.

- சீனா, கோட் டி ஐவரி, கியூபா, பிரான்சு மற்றும் மலாவி ஆகிய நாடுகள் இரண்டாவது முறையாக இச்சபைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- 47 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை 2006 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது.
- அதன் உறுப்பினர் இடங்களானது உலக நாடுகளின் பிராந்திய குழுக்களிடையே கீழ்க் கண்டவாறு பகிரப் பட்டுள்ளது - ஆப்பிரிக்கா (13); ஆசியா-பசிபிக் (13); கிழக்கு ஐரோப்பா (6); லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் (8); மற்றும் மேற்கு ஐரோப்பா மற்றும் பிற (7).

## யானைக்கால் நோய் ஒழிப்பு





- லாவோ மக்கள் ஜனநாயக குடியரசு நாடானது யானைக்கால் நோயினை (LF) முற்றிலும் ஒழித்துள்ளது.
- இது பாதிக்கப்பட்ட சமூகங்களை முடக்கி, அவர்கள் மீது குறிப்பிடத்தக்க சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு நோயாகும்.
- கண்ணிமையரிப்பு நோயினை (ட்ரக்கோமா) ஒழித்ததை தொடர்ந்து, கடந்த ஆறு ஆண்டுகளில் இந்த நாட்டில் ஒழிக்கப்பட்ட இரண்டாவது புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய் (NTD) இதுவாகும்.
- 2023 ஆம் ஆண்டில் யானைக்கால் நோயினை (LF) ஒழித்த வங்காளதேசத்திற்குப் அடுத்த படியாக, தற்போது இந்த நோயினை ஒழித்த இரண்டாவது நாடாக லாவோ குடியரசு உள்ளது.
- பத்தொன்பது நாடுகள் யானைக்கால் நோயினை (LF) ஒழித்துள்ளன.

## 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அமேசான் காட்டுத்தீ

- 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் அமேசான் காடுகளில் ஏற்பட்ட காட்டுத் தீயின் அளவானது 10 சதவீதம் அதிகமாகும்.
- 2007 ஆம் ஆண்டில் அமேசானில் உருவான காட்டுத் தீயினை விட 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏற்பட்ட காட்டுத் தீயானது மிக உயர்ந்த அளவிலான உச்சக் கட்டத்தை அடைந்தது.
- 2022 ஆம் ஆண்டில் 39 சதவீதமாக இருந்த காடழிப்பு தொடர்பான தீ விபத்துகள், 2023 ஆம் ஆண்டு ஜனவரி-ஜூன் காலக் கட்டத்தில் 19 சதவீத தீ விபத்துகள் ஆக குறைந்து உள்ளன.
- இந்த ஆண்டு எல்நினோவால் ஏற்பட்ட வெப்பம் மற்றும் வறண்டக் காலநிலைகளும் இந்த நிகழ்வானது ஏற்பட காரணமாக உள்ளன.

- 2023 ஆம் ஆண்டில் காடழிப்பு விகிதமானது குறைந்து வருவதோடு, 2022 ஆம் ஆண்டின் ஜனவரி மற்றும் ஜூலை ஆகியவற்றுக்கு இடையே நிகழந்ததை விட 42 சதவீதம் குறைவாகவே உள்ளது.




## ஆப்பிரிக்க கடன் மதிப்பீட்டு நிறுவனம்




- அடுத்த ஆண்டில் ஆப்பிரிக்க நாடுகளுக்கென பிரத்தியேகமாக புதிய ஆப்பிரிக்க கடன் மதிப்பீட்டு அமைப்பைத் தொடங்க ஆப்பிரிக்க ஒன்றியமானது திட்டமிட்டு உள்ளது.
- ஆப்பிரிக்க நாடுகளுக்கு வழங்கப்பட்ட நியாயமற்ற கடன் மதிப்பீடுகளும் அது பற்றிய திருப்தியின்மையுமே இதனை அமைப்பதற்குக் காரணமாகும்.

- ஆப்பிரிக்க கடன் பத்திரங்களை வாங்குவதற்காக அல்லது நாடுகளுக்குத் தனியார் கடன்களை வழங்குவது பற்றி முடிவெடுக்கும் போது முதலீட்டாளர்களுக்கு கூடுதல் சூழலையும் தகவலையும் வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆப்பிரிக்க நாடுகளுடன் தொடர்புடைய கடன் அபாயங்கள் குறித்த அதன் சொந்த மதிப்பீடுகளை இந்நிறுவனம் உருவாக்கும்.

## சீனாவின் அணு ஆயுதக் குவிப்பு

- சீனாவின் இராணுவ சக்தி பற்றிய பென்டகன் அறிக்கையானது, பெய்ஜிங் தனது அணு ஆயுதங்களை உருவாக்கி வரும் வேகமானது முந்தைய கணிப்புகளை விட விரைவாக உள்ளது என்று கூறுகிறது.
- சீனா வழக்கமான ஆயுதங்களைப் பயன்படுத்தி புதிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை அமைப்பை உருவாக்கக் கூடும்.
- கடந்த ஆண்டின் அறிக்கையானது பெய்ஜிங் தனது அணுசக்தியை விரைவாக நவீன மயமாக்கி வருவதாகவும், 2035 ஆம் ஆண்டிற்குள் தன்னிடம் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கையைக் கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகரித்து 1,500 ஆக உயர்த்தும் என்றும் எச்சரித்தது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 1,000க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்களைக் களமிறக்கும் வேகத்தில் பெய்ஜிங் செயல்பட்டு வருவதாக 2023 ஆம் ஆண்டு அறிக்கை கண்டறிந்து உள்ளது.
- அமெரிக்காவில் செயல்பாட்டு நிலையில் 3,750 அணு ஆயுதங்கள் உள்ளன.
- 2023 ஆம் ஆண்டிற்கான சீனாவின் இராணுவச் செலவினம் 7.2% உயர்ந்து 1.58 டிரில்லியன் யுவான் அல்லது 216 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.





## ஐநா பான் உச்சி மாநாடு 2023

- ஜெர்மனியின் பான் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் (UN) உச்சி மாநாடு ஆனது இரசாயனங்கள் மற்றும் கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் அபாயங்களைக் குறைப்பதற்கான ஒரு புதிய உலகளாவிய கட்டமைப்பை ஏற்றுள்ளது.

- ❖ ஐந்தாவது சர்வதேச இரசாயன மேலாண்மை மாநாட்டில் மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயனங்களைப் படிப்படியாக அகற்றுவதற்கு உலக நாடுகள் உறுதி பூண்டு உள்ளன.
- ❖ இரசாயனங்கள் மீதான உலகளாவிய கட்டமைப்பு ஆனது, இரசாயனங்களின் ஆயுள் சுழற்சி முழுவத்திற்குமான உறுதியான இலக்குகள் மற்றும் வழிகாட்டுதல்களை அமைக்கிறது.
- ❖ இந்த கட்டமைப்பானது ரசாயனங்கள் மற்றும் கழிவுகளின் மீது மிகவும் பொறுப்பான மேலாண்மையினை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள 28 இலக்குகளை அடிப்படையாகக் கொண்டது.
- ❖ 2030 ஆம் ஆண்டிற்குள் இரசாயன மாசுபாட்டைக் குறைப்பதற்கும் பாதுகாப்பான மாற்று வழிகளை ஊக்குவிப்பதற்குமான கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வகுக்க உள்ளதாக உலக நாடுகளின் அரசாங்கங்கள் உறுதிபூண்டுள்ளன.
- ❖ தொழிற்சாலைகளும், மாசு மற்றும் அதன் பாதகமான தாக்கங்களைக் குறைக்கச் செய்வதற்காக இரசாயனங்களை மேலாண்மை செய்வதற்கு உறுதியளித்தன.
- ❖ 2035 ஆம் ஆண்டிற்குள் தீங்கு விளைவிக்கும் வகையிலான வேளாண் பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டினை படிப்படியாக ஒழிப்பதே இந்தக் கட்டமைப்பின் நோக்கமாகும்.

## வேளாண்மை மற்றும் உணவுப் பாதுகாப்பில் பேரிடர்களின் தாக்கம்





- ❖ ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது (FAO) வேளாண்மை மற்றும் உணவுப் பாதுகாப்பில் பேரிடர்களின் தாக்கம் தொடர்பான அதன் முதல் வகையான அறிக்கையை வெளியிட்டது.
- ❖ இதில் வருடாந்திர உலகளாவிய விவசாயம் தொடர்பான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உலக நாடுகளானது ஆண்டுக்கு ஐந்து சதவீதத்தை அதாவது கிட்டத்தட்ட $120 பில்லியனுக்கும் மேலாக இழந்துள்ளது என குறிப்பிடப் பட்டுள்ளது.
- ❖ ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம், வறட்சி, பூச்சிகள் தாக்குதல், புயல், நோய் மற்றும் போர் போன்ற பேரழிவுகளால் 1991 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் உணவு உற்பத்திகளில் $123 பில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளது.
- ❖ இதனைக் கொண்டு வருடத்திற்கு அரை பில்லியன் மக்களுக்குப் போதுமான அளவில் உணவளிக்கலாம்.
- ❖ கடந்த மூன்று தசாப்தங்களாக $3.8 டிரில்லியன் பயிர் மற்றும் கால்நடை இழப்புகளுக்கு இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகள் வழி வகுத்துள்ளன.

- கடந்த மூன்று தசாப்தங்களில் சராசரி வருடாந்திர தானிய இழப்புகளானது 69 மில்லியன் டன்களாக இருந்துள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டு பிரான்சில் விளைந்த மொத்த தானிய உற்பத்திக்கு சமமாக உள்ளது.
- பழம் மற்றும் காய்கறி போன்றவற்றின் உற்பத்தியானது சுமார் 40 மில்லியன் டன்களையும், இறைச்சி, பால் மற்றும் முட்டைகளின் உற்பத்தியானது சுமார் 16 மில்லியன் டன்களையும் உலக நாடுகளானது இழந்துள்ளது.
- விவசாயத் துறையில் நிகழ்ந்தப் பேரிடர்களால் ஏற்பட்ட விளைவால் சுமார் 23 சதவீதம் இழப்புகளானது நீடித்துள்ளது.

## ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு மற்றும் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைப் பயிற்சி

- 2023 ஆம் ஆண்டு ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு (ADMM) மற்றும் தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான நிபுணர் பணிக்குழுவின் (EWG) களப் பயிற்சி நடவடிக்கை (FTX) ரஷ்யாவில் நடைபெற்றது.
- இது மியான்மருடன் இணைந்து, நிபுணர் பணிக்குழுவின் இணைத் தலைவராக ரஷ்யாவினால் நடத்தப்படும் ஒரு பன்னாட்டு கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.
- 2017 ஆம் ஆண்டு முதல், தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு (ASEAN) மற்றும் பிளஸ் (கூடுதல்) நாடுகளுக்கு இடையே பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பை அனுமதிப்பதற்காக ADMM பிளஸ் சந்திப்பு ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

## 'பெரிய, வலுவான, சிறந்த' பல்தரப்பு மேம்பாட்டு வங்கிகளுக்கான செயல் திட்டம்





- முன்னாள் அமெரிக்க கருவூலச் செயலர் லாரன்ஸ் சம்மர்ஸ் மற்றும் 15வது நிதி ஆணையத்தின் தலைவரான N.K.சிங் ஆகியோர் தலைமையிலான தற்சார்பு நிபுணர் குழுவானது அதன் அறிக்கையின் இரண்டாவது தொகுதியினைச் சமர்ப்பித்துள்ளது.
- இந்த அறிக்கைக்கு ‘மும்மைச் செயல்பாட்டு நிரல்: சிறந்த, வலுவான மற்றும் பெரிய பல்தரப்பு மேம்பாட்டு வங்கிகளுக்கான செயல் திட்டம்’ என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

- ஜூலை மாதம் G20 அமைப்பு நாடுகளின் அமைச்சர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் முதல் தொகுதியானது, 2030 ஆம் ஆண்டிற்குள் பல்தரப்பு மேம்பாட்டு வங்கிகளின் வருடாந்திரக் கடன் வழங்கீட்டு அளவை 390 பில்லியன் டாலராக உயர்த்துவதற்கு பரிந்துரைத்தது.
- இந்தப் பரிந்துரைகள் பல்தரப்பு மேம்பாட்டு வங்கிகளின் திறன்களை மேம்படுத்தச் செய்வதையும், உலக மேம்பாட்டு முன்னுரிமைகளை மிகவும் திறம் மிக்க முறையில் கொண்டு செல்வதற்காக வேண்டி அவற்றின் செயல்பாட்டை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- பல்தரப்பு மேம்பாட்டு வங்கிகள் (MDBs) என்பது பல வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளை உள்ளடக்கிய அமைப்பாகும்.


## அண்டார்டிக் பகுதியில் முதலாவது பறவைக் காய்ச்சல் பாதிப்பு

- அண்டார்டிக் பகுதியில் முதன்முறையாக பறவைக் காய்ச்சல் பாதிப்பு இருப்பதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது தொலைதூரப் பகுதிகளில் காணப்படும் பெங்குவின் மற்றும் நீர் நாய்களின் எண்ணிக்கையின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் என்ற கவலையை எழுப்புகிறது.
- HPIA வைரஸ் நோய் அல்லது பறவைக் காய்ச்சல், குறிப்பாக H5 மற்றும் H7 திரிபுகள், பெரும்பாலும் பறவைகளை பாதிக்கிறது.
- இந்த திரிபுகள் தொற்று மிக்க நோய்க் கிருமிகள் மற்றும் வளர்ப்புக் கோழிகளில் இவற்றின் பாதிப்பு பதிவாகியுள்ளன.
- அவை காட்டுப் பறவைகளில் பாதிப்பினை ஏற்படுத்தினால் அதிக எண்ணிக்கையில் பறவைகள் உயிரிழப்பு ஏற்படும்.
- HPAI H5N1 வைரசின் தற்போதையப் பாதிப்பு ஆனது முதன்முதலில் 2022 ஆம் ஆண்டில் பதிவானது.
- 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில், HPAI H5N1 என்ற வைரஸ் தென் அமெரிக்காவில் வேகமாகப் பரவியது.



# பொருளாதாரச் செய்திகள்

## முக்கியத் துறைகளின் உற்பத்தி வளர்ச்சி




- இந்தியாவின் எட்டு முக்கிய உள்கட்டமைப்புத் துறைகளின் உற்பத்தியானது ஆகஸ்ட் மாதத்தில் 12.1% அதிகரித்தது.
- இந்த எட்டு முக்கியத் துறைகளிலும் தொடர்ந்து இரண்டாவது மாதமாக உற்பத்தி வளர்ச்சி பதிவாகியுள்ளது.
- 14 மாத கால சீரற்றப் போக்குகளுக்குப் பிறகு இந்தத் துறைகளில் உற்பத்தி உயர்வுப் பதிவானதையடுத்து தொழில்துறை உற்பத்திக் குறியீட்டில் (IIP) இவற்றின் பங்கு சுமார் 40% ஆக உள்ளது.
- ஆகஸ்ட் மாதத்தில், சிமெண்ட் உற்பத்தியானது 18.9% வளர்ச்சியடைந்த நிலையில் இது 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குப் பிறகு பதிவான மிகப்பெரிய வளர்ச்சியாகும்.
- ஆகஸ்ட் மாதத்தில் 1.8% வளர்ச்சியுடன், ஒரு வருடத்தில் மிகவும் குறைந்த வளர்ச்சி விகிதத்தினைப் பதிவு செய்த ஒரே துறை உர உற்பத்தித் துறை மட்டுமே ஆகும்.


## 50 ஆண்டு வரம்பு நிறைவு கொண்ட பத்திரம்

- இந்திய அரசாங்கம் ஆனது கடன் பத்திர வெளியீடுகள் மூலம் 6.55 டிரில்லியன் ரூபாய் (78.72 பில்லியன் டாலர்) கடன் பெறுவதற்கான தனது திட்டங்களைத் தக்க வைத்துக் கொண்டது.
- இதற்காக 50 ஆண்டு வரம்பு நிறைவு கொண்ட புதிய பத்திரத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- நடப்பு நிதியாண்டில் மொத்தச் சந்தைக் கடன் 15.43 டிரில்லியன் ரூபாயாக இருக்கும் என்று இந்திய அரசு கணித்துள்ளது.
- இது 3, 5, 7, 10, 14, 30 மற்றும் 40 ஆண்டுகள் வரம்பு நிறைவு கொண்ட பத்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

- இந்திய அரசானது, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 50 ஆண்டு பத்திரத்தின் மூலம் 300 பில்லியன் ரூபாய் நிதி திரட்ட திட்டமிட்டுள்ளது.




## ஏஞ்சல் வரி விதிகளில் மாற்றம்




- பட்டியலிடப்படாத புத்தொழில் நிறுவனங்கள் முதலீட்டாளர்களுக்கு வழங்கிய பங்குகளை மதிப்பிடுவதற்கான வழிமுறையை உள்ளடக்கிய புதிய ஏஞ்சல் வரி (புத்தொழில் நிறுவனங்களின் மிகை மதிப்பு மீதான வரி) விதிகளை வருமான வரித் துறை அறிவித்துள்ளது.
- கட்டாயமாக மாற்றக் கூடிய முன்னுரிமைப் பங்குகளை (CCPS) குறிக்கும் கூடுதல் துணைப் பிரிவை இந்த அறிவிப்பு அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒரு பட்டியலிடப்படாத நிறுவனம் ஆனது அதன் நியாயமான சந்தை மதிப்பை (FMV) விட அதிக விலையில் முதலீட்டாளருக்கு பங்குகளை வழங்கும்போது ஏஞ்சல் வரி (30.6 சதவீதம்) விதிக்கப்படுகிறது.
- முன்னதாக, இது ஒரு உள்நாட்டு முதலீட்டாளரால் செய்யப்படும் முதலீடுகளுக்கு மட்டுமே விதிக்கப் பட்டது.
- ஆனால் 2023-24 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடுகள் மீதும் ஏஞ்சல் வரியை விதிப்பதற்கு விரிவுபடுத்த முன்மொழியப் பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நாசாவின் OSIRIS-Rex விண்கலம்

- சமீபத்தில், நாசாவின் OSIRIS-REx விண்கலம் ஆனது ஒரு பெட்டகத்தினைப் பூமியின் மேற்பரப்பில் விடுவித்து, அமெரிக்காவின் உட்டா எனுமிடத்தில் தரையிறக்கியது.
- 101955 பென்னு என்ற குறுங்கோளின் மேற்பரப்பில் இருந்து OSIRIS-REx விண்கலம் சேகரித்த சுமார் 250 கிராம் பாறைகள் மற்றும் தூசிகள் இதில் கொண்டு வரப் பட்டு உள்ளது.
- OSIRIS-REx விண்கலமானது 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 1,650 அடி அகலம் (500 மீட்டர்) கொண்ட பென்னு குறுங்கோளை நோக்கி ஏவப்பட்டது.
- பென்னு என்பது சூரியனைச் சுற்றி வரும் ஒரு குறுங்கோள் (436 நாட்கள் சுழற்சி காலம் கொண்ட) ஆகும்.
- பென்னு குறுங்கோள் 2178 மற்றும் 2290 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பூமி மீது மோதும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் கலனில் இயங்கும் பேருந்து



- பசுமை ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் பேருந்தினை இந்தியன் ஆயில் நிறுவனம் டெல்லியில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- பசுமை ஹைட்ரஜன் ஒரு நிலையான மாற்று எரிபொருள் ஆகும் என்பதோடு, மேலும் இது காற்றினை மாசுபடுத்தும் வாயுக்களை வெளியிடுவதில்லை.
- ஹைட்ரஜனின் எரிப்பு செயல்முறையின் போது நீராவி மட்டுமே துணைப் பொருளாக வெளிப் படுகிறது எனவே இதிலிருந்து மாசுபடுத்தும் வாயுக்கள் வெளியேறாது.
- 30 கிலோ கொள்ளளவு கொண்ட நான்கு எரிவாயு உருளைகள் இதில் பொருத்தப் பட்டு உள்ள இந்தப் பேருந்துகளை 350 கி.மீ. தூரம் வரை இயக்க முடியும்.
- இந்த நான்கு எரிவாயு உருளைகள் மீள்நிரம்ப 10 முதல் 12 நிமிடங்கள் மட்டுமே ஆகும்.

## சந்திரயான்-3 விண்கல சமிக்ஞை நிறுத்தம்


- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (இஸ்ரோ) சந்திரயான்-3 ஆய்வுக் கலத்தின் விக்ரம் தரையிறங்கு கலம் மற்றும் பிரக்யான் உலாவிக் கலம் ஆகியவற்றில் இருந்து எந்த சமிக்ஞையும் கிடைக்கவில்லை.

- இந்த ஆய்வுத் திட்டத்தின் அனைத்து சாதனங்களும் சூரிய சக்தியில் இயங்குகின்ற நிலையில் மேலும் ஒரு நிலவு நாள் அல்லது புவி நாளில் சுமார் 14 நாட்களுக்கு நீடிக்கும் வகையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.
- இந்த ஆய்வுத் திட்டத்தின் மின்னணுச் சாதனங்கள் நிலவில் உள்ள கடுமையான இரவு நேர சூழ்நிலைகளைத் தாங்கும் வகையில் வடிவமைக்கப் படவில்லை.
- தரையிறங்குக் கலம் மற்றும் உலாவிக் கலம் நிலை கொண்டிருக்கும் நிலவின் தென் துருவத்திற்கு அருகில் வெப்பநிலை மைனஸ் 200 டிகிரி செல்சியஸுக்கும் கீழே குறைவாக உள்ளது.
- சமீபத்தில் நிலவில் மோதி இறங்கிய ரஷ்ய லூனா-25 ஆய்வுக் கலத்தில் ஒரு புளூட்டோனியம் ரேடியோ ஐசோடோப்பு கொண்ட சாதனம் இருந்ததோடு, இது ஒரு வகையான அணு சக்தி மின்கலமாக செயல்படக் கூடியது.
- இதன் செயல்பாடுகள் தொடர்ந்து நிகழும் வகையிலான ஒரு வெப்பநிலையில் அதன் கருவிகளை வைத்திருக்கக் கூடிய வெப்ப நிலையினை உருவாக்க இது உதவும்.
- விக்ரம் தரையிறங்குக் கலம் மற்றும் பிரக்யான் உலாவிக் கலம் போன்றவற்றில் அத்தகையச் சாதன ஏற்பாடுகள் ஏதும் இல்லை.




## ஆதித்யா L1 - STEPS

- சுப்ரா வெப்ப & ஆற்றல் துகள் நிறமாலைமானி (STEPS) கருவியானது அதிவெப்ப மற்றும் ஆற்றல்மிக்க அயனிகள் மற்றும் எலக்ட்ரான்களை அளவிடத் தொடங்கி உள்ளது.
- அவை பூமியிலிருந்து 50,000 கி.மீ. தொலைவில் அமைந்த அதிவெப்ப மற்றும் ஆற்றல் மிக்க அயனிகள் மற்றும் எலக்ட்ரான்களை அளவிடுகின்றன.
- இந்தத் தொலைவானது பூமியின் ஆரத்தினை விட எட்டு மடங்குக்கும் அதிகமாகும்.
- இந்தத் தரவுகளானது பூமியைச் சுற்றியுள்ள துகள்களின் பல நடவடிக்கைகளை ஆய்வு செய்ய அறிவியலாளர்களுக்கு உதவுகிறது.
- இஸ்ரோ நிறுவனமானது செப்டம்பர் 02 ஆம் தேதியன்று PSLV-C57 ஏவுகலம் மூலமாக ஆதித்யா- L1 விண்கலத்தினை விண்ணில் ஏவியது.





## சிட்ரான்

- போபாலில் உள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகத்தின் (IISER) ஆராய்ச்சியாளர்கள் ciTRAN (சிட்ரான்) எனப்படும் ஒரு வட்ட வடிவ ஆர்.என்.ஏ.வினை அடையாளம் கண்டுள்ளனர்.
- HIV-1 நகலெடுப்பில் வட்ட வடிவ ஆர்என்ஏ (circRNA) வெளிப்பாட்டின் செயல்பாட்டு விளைவுகள் இருப்பது பெரும்பாலும் அறியப்படாமல் உள்ளது.
- மரபணு வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்துவதில் வட்ட வடிவ ஆர்என்ஏ முக்கியப் பங்கு வகிப்பதோடு மேலும் இது பல்வேறு உயிரியல் செயல்முறைகளுக்கு அவசியம் ஆகும்.
- இது வைரஸின் படியெடுத்தல் செயல்முறையை ciTRAN எவ்வாறு மாற்றியமைக்கிறது என்பதை விவரிப்பதோடு இது HIV-1 தொற்றிற்கு எதிரான புதிய மருந்துகள் மற்றும் சிகிச்சைகளுக்கு வழி வகுக்கும்.




## ஆதித்யா L1 – புவி ஈர்ப்பிலிருந்து வெளியேற்றம்

- லக்ராஞ்சியன் 1 (L1) புள்ளியை நோக்கிப் பயணிக்கும் ஆதித்யா- L1 விண்கலம் புவி ஈர்ப்பின் தாக்கத்திலிருந்து விடுபட்டது.
- ஆதித்யா- L1 என்பது சூரியனை ஆய்வு செய்வதற்காக செலுத்தப்பட்ட இந்தியாவின் முதல் விண்வெளி சார் ஆய்வகம் ஆகும்.
- இந்த விண்கலம் பூமியிலிருந்து 9.2 லட்சம் கிலோமீட்டர் தொலைவுக்கு அப்பாலான தொலைவு வரை பயணித்துள்ளது.
- அது தற்போது சூரியன் மற்றும் புவி ஆகியவற்றுக்கு இடையிலான முதலாவது லக்ராஞ்சியன் புள்ளி (L1) நோக்கிய அதன் பாதையில் பயணிக்கிறது.
- L1 புள்ளி பூமியிலிருந்து சுமார் 1.5 மில்லியன் கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.
- L1 புள்ளி அமைந்துள்ள தொலைவு, பூமிக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட தொலைவில் தோராயமாக 1% தொலைவு ஆகும்.





## பார்க்கர் சூரிய ஆய்வு கலத்தின் புதிய வேகப் பதிவு




- நாசாவின் பார்க்கர் சூரிய ஆய்வுக் கலமானது, சூரிய குடும்பத்தின் வழியாக மணிக்கு 635,266 கிலோமீட்டர்கள் (394,736 மைல்கள்) என்ற வியக்கத்தக்க வேகத்தில் பயணித்து உள்ளது.

- இந்த வியத்தகு அளவிலான வேகமானது சூரியனைச் சுற்றிய அதன் 17வது சுற்றுப் பாதையின் போது எட்டப்பட்டது.
- இது சூரியனின் மின்னேற்றம் செய்யப்பட்ட துகள் காற்று மற்றும் காந்தப்புலங்கள் பற்றிய முக்கியமான தரவுகளைச் சேகரிக்கிறது.
- முக்கியமாக, இந்த வேகமானது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எட்டப்பட்ட அதன் முந்தைய சாதனை வேகமான மணிக்கு 586,863.4 கிலோமீட்டர்கள் (364,660 மைல்கள்) என்ற வேகத்தினை விஞ்சியுள்ளது.
- இது, சூரியனின் அனல் நிறைந்த பிளாஸ்மா மேற்பரப்பில் இருந்து, 7.26 மில்லியன் கிலோ மீட்டர் தூரம் வரை நெருங்கிச் சென்றது.


## 'நெருப்பு வளையம்' - சூரிய கிரகணம்




- புவியின் மேற்கு அரைக்கோளத்தில் ஒரு அரிய "நெருப்பு வளைய" சூரியக் கிரகண நிகழ்வு பதிவானது.
- நிலவானது மிகவும் தொலைவில் இருப்பதால், அது சூரியனை முழுவதுமாக மறைக்க இயலாததால் "நெருப்பு வளையம்" போன்ற அமைப்பினை இந்த கிரகணம் உருவாக்குகிறது.
- நிலவானது பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் செல்லும் பயணத்தில், அது நமது கிரகத்தில் இருந்து அதன் சேய்மைப் புள்ளியில் அல்லது அதற்கு அருகில் இருக்கும் நேரத்தில் ஒரு வளைய சூரிய கிரகணம் ஏற்படுகிறது.
- இது முழு சூரிய கிரகணத்தைப் போலல்லாமல், சூரியனின் முகத்தை முழுமையாக மறைக்காது.
- மாறாக, சந்திரனின் இருண்ட பகுதியைச் சுற்றி சூரியனின் வெளிப்புற விளிம்பினைக் காட்டும் வகையிலான ஒரு வளையம் போன்ற தோற்றத்தினை உருவாக்குகிறது.
- முழு கிரகணம் ஆனது அமெரிக்காவில் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்டது.
- அடுத்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் நிகழ உள்ள முழு கிரகணத்திற்குப் பிறகு, 2044 ஆம் ஆண்டு வரை மற்றொரு கிரகணம் நிகழாது.
- அடுத்த வளைய கிரகணம் 2046 ஆம் ஆண்டில் நிகழும்.


## வியாழன் கோளின் யூரோபா துணைக்கோளில் CO2 வாயு

- வியாழன் கோளின் யூரோபா துணைக்கோளின் பனிசூழ் பகுதிக்கு அடியில் உள்ள பெருங்கடலில் கார்பன் டை ஆக்சைடு வாயு இருப்பதாக ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியின் தரவுகள் மூலம் கண்டறியப்பட்டது.
- தாரா ரெஜியோ எனப்படும் 1,800 கிலோமீட்டர் (1,120 மைல்) பரப்பில் அதிக $CO_2$ இருந்தது.
- யூரோபா துணைக்கோளின் பனிசூழ் பகுதிக்கு கீழே பல கிலோமீட்டர்கள் ஆழத்திலான உப்பு நீர் சூழ்ந்த ஒரு பெரிய கடல் இருப்பதாக அறிவியலாளர்கள் நம்புகின்றனர்.
- ஆனால் அது கீழே உள்ள கடலில் இருந்து எழுந்ததா என்பது ஒரு கேள்வியாகவே உள்ளது.




## NexCAR 19

- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் காப்புநிலை புத்தொழில் நிறுவனமான ImmunoACT, புற்றுநோய் சிகிச்சைக்காக NexCAR 19 என்ற CAR-T செல் சிகிச்சை மருந்தை உருவாக்கியுள்ளது.
- CAR-T செல் சிகிச்சை என்பது புற்றுநோய் செல்களை எதிர்த்துப் போராடும் வகையில் நோயாளியின் T செல்களை மரபணு ரீதியாக மாற்றியமைக்கும் செயல் முறையை உள்ளடக்கிய புற்றுநோய் சிகிச்சையின் ஒரு புதுமையான வடிவமாகும்.
- NexCAR 19 நிணநீர்க் குழியப் புற்றுநோய் மற்றும் இரத்தப் புற்றுநோய் போன்ற இரத்த புற்றுநோய் வகைகளின் சிகிச்சைக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.



## புதிய பரிணாம விதி


**SCIENTISTS SAY CHARLES DARWIN'S EVOLUTIONARY LAW GOES BEYOND LIVING BEINGS**

A new paper by scientists says that evolutionary laws are not only for the living beings, but also influence atoms, minerals and planets.

- ❖ தாதுக்கள் முதல் நட்சத்திரங்கள் வரையிலான உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களின் பரிணாம வளர்ச்சியை விளக்கும் புதிய பரிணாம விதியை அறிவியலாளர்கள் முன்மொழிந்துள்ளனர்.
- ❖ உயிர்களின் தோற்றமானது ஒற்றை உயிரணு கொண்ட இனத்தில் தொடங்கி பல உயிரணு கொண்ட உயிரினங்களாக பரிணமித்தது என்பதால், பூமியின் தாதுக்கள், எடுத்துக்காட்டாக, மிகவும் பல்கலப்பு தொகுதியானதாக மாறி பன்முகத்தன்மையை உருவாக்குகின்றன.
- ❖ இது உயிரியல் பரிணாமத்திற்கு உந்துதல் அளித்தது.
- ❖ பல்லுயிர்ப் பெருக்கம் ஆனது தாதுப் பன்முகத்தன்மைக்கும் தாதுக்களின் பன்முகத் தன்மை பல்லுயிர்ப் பெருக்கத்திற்கும் வழிவகுத்தது.
- ❖ உயிரியல் அமைப்புகள் மற்றும் தாது ஆகிய இரண்டு அமைப்புகளும் இன்று நாம் அறிந்த உயிரினங்களை உருவாக்குவதற்காக ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டன.
- ❖ அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளின் புதிய கட்டமைப்பு அல்லது புதிய அமைப்பு நன்றாக செயல்பட்டு, அதன் செயல்பாடுகள் மேம்படும் போது பரிணாமம் ஏற்படுகிறது.
- ❖ டார்வின் அவர்கள் இந்தச் செயல்பாட்டினை தப்பிப்பிழைத்தல் என்ற கோட்பாடாக வரையறுத்தார்.
- ❖ ஆனால் புதிய ஆய்வு ஆனது இயற்கையில் நிகழும் குறைந்தது மூன்று வகையான செயல்பாடுகளை எடுத்துக்காட்டுகிறது.
- ❖ முதல் செயல்பாடு நிலைப்புத்தன்மை, அதாவது அணுக்கள் அல்லது மூலக்கூறுகளின் நிலையான அமைப்புகளால் உருவாக்கப்பட்ட அமைப்புகள் தொடர்ந்து உயிர்வாழும்.
- ❖ இரண்டாவதாக ஆற்றல் வழங்கலுடன் கூடிய இயக்கவியல் அமைப்புகளை உள்ளடக்கியது.
- ❖ மூன்றாவது செயல்பாடு "புதுமை" - புதிய நடத்தைகள் அல்லது குணாதிசயங்களை உருவாக்கக்கூடிய புதிய கட்டமைப்புகள் அல்லது அமைப்புகளை கொணருவதற்கான அமைப்புகளின் போக்கு ஆகியனவாகும்.


## தாவர அடிப்படையிலான பாலிபினால்கள்

- கசுகொட்டை மற்றும் ஒக் போன்ற மரங்களின் கிளைகளில் காணப்படும் டானிக் அமிலம் போன்ற இயற்கையாக நிகழும் தாவர அடிப்படையிலான பாலிபினால்கள், ஃபெரோப்டோசிஸ்-AD அச்சை திறம்பட மாற்றியமைக்க முடியும் என்பதைக் கண்டுபிடிப்பதன் மூலம் அல்சைமர் நோய்க்கு (AD) எதிரான போராட்டத்தில் விஞ்ஞானிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை கண்டுள்ளனர்.
- அல்சைமர் நோயை (AD) எதிர்த்துப் போராடுவதற்கும், இந்த நோயை ஏற்படுத்தும் நரம்பியல் கோளாறின் மீதான சமூகத்தின் சுமையைக் குறைப்பதற்கும் இது பாதுகாப்பான மற்றும் செலவு குறைந்த உத்தியாக இருக்கும்.
- அல்சைமர் என்பது நினைவாற்றல் சீர்குலைவு, அன்றாட வாழ்க்கையில் அறிவாற்றல் வீழ்ச்சி மற்றும் நடத்தை மாற்றங்கள் குறைந்து வருவதால் பரவலாக ஏற்படும் மேம்பட்ட நிலை நரம்பியல் கோளாறு ஆகும்.





## K2-18 b கோளில் மீத்தேன் மற்றும் Co2

- K2-18 b கோளில் மீத்தேன் மற்றும் கார்பன் டை ஆக்சைடு போன்ற கார்பனைக் கொண்ட மூலக்கூறுகள் இருப்பதை ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியின் தரவுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தக் கிரகமானது பூமியை விட 2.6 மடங்கு அதிக ஆரத்தைக் கொண்டதாகவும் 8.6 மடங்கு நிறை கொண்டதாகவும் உள்ளது.
- ஹைட்ரஜன் நிறைந்த வளிமண்டலத்தைக் கொண்டுள்ள அதன் மேற்பரப்பானது கடல் நீரால் மூடப்பட்டு இருக்கலாம்.
- K2-18 b கோளானது உயிர்கள் வாழத் தகுந்த (கோல்டிலாக்) மண்டலத்தில் உள்ள குளிர் மிக்க குள்ள நட்சத்திரமான K2-18 என்பதினைச் சுற்றி வருகிறது.
- லியோ விண்மீன் தொகுப்பில் உள்ள கிரகமானது பூமியிலிருந்து சுமார் 120 ஒளி ஆண்டுகள் தொலைவில் காணப்படுகிறது.





## ககன்யான் TV-D1 திட்டம்





- இஸ்ரோ நிறுவனமானது ககன்யானின் முதல் செலுத்தல் மற்றும் வீரர்கள் அமரும் பகுதி பிரிப்பு சோதனையை (TV-D1) வெற்றிகரமாக நிறைவு செய்தது.
- TV-D1 செலுத்தல் சோதனையானது விண்வெளி வீரர்களின் வெளியேற்ற வசதி அமைப்பின் செயல்திறனை செயல்விளக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது.
- விண்வெளி வீரர்களின் வெளியேற்ற வசதி அமைப்பு விண்வெளி வீரர்களுக்கானப் பெட்டகத்தினை வாகனத்திலிருந்து பிரித்துச் சென்று, கடல் மேல் பரப்பில் இறக்கும் செயல்முறை உட்பட அடுத்தடுத்தச் செயல்பாடுகளை மேற் கொண்டது.

## மின்காந்தப் பீரங்கி துப்பாக்கி




- ஜப்பான் நாடானது, நடுத்தர அளவிலான குழல் விட்டம் கொண்ட உலகின் முதல் கடல்சார் மின்காந்தப் பீரங்கி துப்பாக்கியை கடல்பரப்பு தளத்திலிருந்தபடி வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- பீரங்கி துப்பாக்கி (ரெயில்கன்) என்பது மாக் 7 அல்லது ஒலியை விட ஏழு மடங்கு வேகத்தில் எறிகணைகளை எறியக் கூடிய ஒரு மின்காந்த ஆயுதமாகும்.
- இதன் மூலம் கப்பல்கள், ஏவுகணைகள் மற்றும் விமானங்கள் போன்ற இலக்குகளைத் தாக்க முடியும்.

## RISUG மருத்துவ பரிசோதனைகள்



- மக்கள்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்த உலகளவில் முதல் ஊசி மூலமாக மேற் கொள்ளப் படும் நீண்ட கால ஆண் கருத்தடைக்கான மருத்துவப் பரிசோதனைகளை இந்தியா வெற்றிகரமாக முடித்துள்ளது.
- ICMR அமைப்பால் வழங்கப்பட்ட வழிகாட்டுதலின் கீழ் (RISUG) 60 மி.கி புதுமையான மீளக் கூடிய விந்தணு செயல்பாடு தடுப்பு பரிசோதனைகளானது நடத்தப்பட்டது.
- ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் வழங்கப்படும் மற்ற அனைத்துக் கருத்தடை மருந்துகளுடன் ஒப்பிடும் போது RISUG மிக உயர்ந்த செயல்திறனைக் கொண்டுள்ளது.

## கடலுக்கடியில் உள்ள "மர்மத் துகள்களை" கண்டறியும் கருவி


- சீன நாடானது, மேற்கு பசிபிக் பெருங்கடலில் மிகப்பெரிய தொலைநோக்கியைக் கட்டமைத்து வருகிறது.
- நியூட்ரினோக்கள் எனப்படும் "பேய் துகள்களை" கண்டறிவதே இதன் முக்கியப் பணியாக இருக்கும்.
- இந்தத் தொலைநோக்கியானது இவ்வகையான அளவில் மிகப்பெரிய தொலை நோக்கியாக இருக்கும்.
- நியூட்ரினோக்கள் ஒரு வகை எலக்ட்ரான் ஆகும் என்றாலும், நியூட்ரான்களைப் போல, அவைகளுக்கு மின்னூட்டம் இல்லை.
- பேய்த் துகள்கள் மற்ற துகள்களுடன் அரிதாகவே தொடர்பு கொள்கின்றன.
- சில நேரங்களில் அவை நீர் மூலக்கூறுகளுடன் தொடர்பு கொள்வதானால் சீனா தனது பேய் மூலக்கூறு கண்டறிதல் தொலைநோக்கியை கடலுக்கடியில் உருவாக்கி வருகிறது.
- தற்போது, மிகப்பெரிய நியூட்ரினோ கண்டறிதல் தொலைநோக்கியானது, அண்டார்டிக்காவில் உள்ள ஆழமான பகுதியில் அமைந்துள்ள மேடிசன்-விஸ்கான்சன் பல்கலைக்கழகத்தின் "ஐஸ்கியூப்" தொலைநோக்கி ஆகும்.



## வியாழன் கோளில் ஜெட் காற்று

- வியாழன் கோளின் தாழ்மட்டப் படையடுக்கு மண்டலத்தில் அதிவேக காற்றுப் புனல் (ஜெட் காற்று) கண்டறியப்பட்டுள்ளது.
- இது மேகங்களுக்கு மேலே சுமார் 25 மைல் (40 கிலோமீட்டர்) தொலைவில் வியாழனின் பூமத்திய ரேகைக்கு மேல் அமைந்துள்ள ஒரு வளிமண்டல அடுக்கு ஆகும்.

- இந்தக் கண்டுபிடிப்பிற்கு என்று ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியின் தரவு பயன்படுத்தப் பட்டது.
- 3,000 மைல்கள் (4,800 கிலோமீட்டர்) அகலம் கொண்ட இந்த ஜெட் காற்று, மணிக்கு 320 மைல் (515 கிமீ) வேகத்தில் நகரும்.
- இது பூமியில் ஐந்தாம் வகை சூறாவளியின் நிலையான காற்றின் வீதத்தை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.




## "கலிக்ஸ்கோகா" தடுப்பு மருந்து

- பிரேசிலில் உள்ள அறிவியலாளர்கள் கொகைன் மற்றும் கொகைன் கலவை (கிராக்) போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாதலுக்கான கோகைன் சிகிச்சைக்கான புதிய சிகிச்சை மருந்திணை உருவாக்கியுள்ளனர்.
- "போதைப் பொருள்" பயனீட்டாளர்களின் அதீத நடவடிக்கையினைக் குறைப்பதன் மூலம், இந்த மருந்து ஒரு புதுமையான முறையில் செயல்படும்.
- நோயெதிர்ப்பு எதிர்வினை தூண்டுதல் ஆனது நோயாளியின் உடலை இரத்த ஓட்டத்தில் கோகைன் மூலக்கூறுகளை இரத்த ஓட்டத்தில் பிணைக்கச் செய்யும் ஆன்டி பாடிகளை உற்பத்தி செய்ய தூண்டும்.
- ஒருமுறை இந்த தடுப்பு மருந்து உட்செலுத்தப்பட்டால், போதைப் பொருள் பழக்கத்தின் சுழற்சியிலிருந்து மீள மக்களுக்குப் பெருமளவில் உதவும்.

## சந்திரயான் - எஜெக்டா ஹாலோ

- சந்திரயான்-3 தரையிறங்குக் கலமானது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கியது.
- இந்தக் கலம் தரையிறங்கும் போது சந்திரனின் மேற்பரப்பில் உள்ள பொருட்களின் கண்கவர் வகையிலான 'எஜெக்டா ஹாலோ' என்ற படலத்தினை உருவாக்கியது.

- தரையிறங்கும் நிகழ்வின் போது சுமார் 2.06 டன்கள் அளவிலான சந்திர தூசி மற்றும் மண் துகள்கள் (எபிரெகோலித்) வெளியேற்றப்பட்டன.
- கலம் தரையிறங்கிய இடத்தைச் சுற்றி 108.4 சதுர மீட்டர் பரப்பளவில் இந்தப் பொருட்கள் இடம் பெயர்ந்தன.
- எபிரெகோலித் என்பது சந்திரப் பாறைகள் மற்றும் மண், அல்லது ரெகோலித் அல்லது நிலவின் தூசிகள் ஆகும்.




## இன்சைட் தரையிறங்கு கலம்




- செவ்வாய்க் கிரகத்தின் திரவ இரும்பு கருவமானது முழுமையாக உருகிய சிலிக்கேட் அடுக்குகளால் சூழப்பட்டுள்ளது.
- இன்சைட் செவ்வாய்க் கோள் தரையிறங்கு கலமானது, செவ்வாய் கிரகத்தின் உள் பகுதியில் ஊடுருவிச் செல்லும் நில அதிர்வு அலைகளை பதிவு செய்வதற்கான உட்பகுதி கட்டமைப்பின் நில அதிர்வு சோதனைக் கருவி (SEIS) என்ற கருவியைப் பயன்படுத்தியது.

- பூமியைப் போலல்லாமல் செவ்வாய்க் கோளின் கருவத்தினைச் சுற்றி உருகிய அடுக்கு உள்ளது.
- செவ்வாய்க் கிரகத்தின் திரவ இரும்பு-நிக்கல் கருவமானது சுமார் 150 கிலோமீட்டர் தடிமன் கொண்ட உருகிய சிலிக்கேட் பாறையால் சூழப்பட்டுள்ளது என்று இந்தப் புதிய ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.
- இந்த மேல் அடுக்கு ஆனது முன்னதாக கருவத்தின் மேற்பரப்பு என்று தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டது.
- 2,080 மைல் விட்டம் கொண்ட கருவத்தின் அளவானது, முன்பு நினைத்ததை விட 30% அளவு சிறியதாக இருக்கக்கூடும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கோயம்புத்தூர் குறிச்சி ஏரி

- கோயம்புத்தூரில் உள்ள ஒரு நகர்ப்புற குளத்தில் கிரேட்டர் சாண்ட் ப்ளோவர் – பெரிய மணல் கொத்திப் பறவை (சாராடிரியஸ் லெஸ்சேநவுல்டி) தென்பட்டுள்ளது.
- இது பொதுவாக கடற்கரைகளில் வசிக்க விரும்பும் நீண்ட தூரம் பயணிக்கும் வலசைப் போகும் பறவையாகும்.
- மத்திய ஆசியாவில் ஏப்ரல் முதல் மே மாதம் வரையிலும், துருக்கியில் மார்ச் மாத இறுதி முதல் மே மாத இறுதி வரையிலும், அர்மேனியாவில் ஜூன் மாத இறுதி வரையிலும் தனது இனப்பெருக்கக் காலத்தினைக் கழிக்கும்.
- இனப்பெருக்கத்திற்குப் பிறகு குளிர்காலங்களில் இந்திய மற்றும் ஆஸ்திரேலியப் பெருங் கடல்களின் கரையோரங்களில் வசிக்கும்.
- சமீபத்தில், ஆர்க்டிக் பகுதியில் இனப்பெருக்கம் செய்யும் கரையோரப் பறவையான செங்கழுத்து உள்ளான் பறவை (ஃபாலரோப் லோபட்டஸ்) குறிச்சி ஏரியில் தென்பட்டது.



## ஆர்மகெடோன் ரெட்டெயில்

- கேரளாவின் தென்மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு புதிய ஊசித் தட்டான் இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- புனேவில் உள்ள MIT-உலக அமைதிப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பூச்சி இனத்திற்கு 'ஆர்மகெடான் ரெட்டெய்ல்' அல்லது புரோட்டோஸ்டிக்டா ஆர்மகெடோனியா என்று பெயரிட்டுள்ளனர்.
- பரவலான வாழ்விட இழப்பு மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாக இந்தப் பூச்சிகளின் எண்ணிக்கையில் ஏற்படும் உலகளாவிய வீழ்ச்சி குறித்த கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.
- 'சூழலியல் ஆர்மகெடோன்' என்ற சொல்லானது, உலகெங்கிலும் உள்ள பல்வேறு பூச்சி இனங்களின் எண்ணிக்கையின் அழிவுகரமான வீழ்ச்சியை விவரிக்கப் பயன்படுத்தப் படுகிறது.
- இந்தப் பூச்சிகள் மகரந்தச் சேர்க்கை, சுழற்சி முறை ஊட்டச்சத்து மற்றும் பிற விலங்குகளுக்கு உணவை வழங்குதல் ஆகியவற்றின் காரணமாக பூச்சிகளின் பேரழிவு என்றும் அழைக்கப்படும் இந்த நிகழ்வானது முழு அளவிலான சுற்றுச்சூழல் அமைப்புகளையும் பாதிக்கிறது.



## டரான்டுலா

- ஹாப்லோகிலாஸ்டாஸ் நீல்கிரியன்ஸ் எனப்படும் அரிதான பெரிய துளையிடும் நீலகிரி சிலந்தி இனமானது சட்டவிரோதமான வனவிலங்கு வர்த்தகம் மற்றும் பருவ நிலை மாற்றத்தினால் அச்சுறுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்படும்.
- இது மேற்குத் தொடர்ச்சி மலையின் நீலகிரி மலைகளில் மட்டுமே காணப்படுகிறது.
- டரான்டுலா குழுவைச் சேர்ந்த நச்சு கொண்ட இனமான மற்றும் மிகவும் அரிதாகவே தென்படுகின்ற இந்த இனம் குறித்து இதுவரை ஆய்வு செய்யப் பட வில்லை.
- சிலந்தி மக்களைக் கடித்ததற்கான பதிவுகள் அரிதாக இருந்தாலும் அது விஷம் கொண்டது என்று நம்பப்படுகிறது.




## உலகின் இருவாழ்விகளின் நிலை குறித்த அறிக்கை 2023



- 41% இனங்கள் அழியும் அபாயத்தில் உள்ளதால், உலகின் இருவாழ்விகள் பெரும் ஆபத்தில் உள்ளன.
- இது 26.5% பாலூட்டிகள், 21.4% ஊர்வன மற்றும் 12.9% பறவை இனங்களின் அழிவு அபாயத்துடன் ஒப்பிடப்படுகிறது.
- இது 2004 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கடந்த மதிப்பீட்டில் பதிவாகியிருந்த 39 சதவீதத்தில் இருந்து அதிகமாகும்.
- தவளைகள், சலமாண்டர்கள், நியூட்கள் மற்றும் பிற இருவாழ்விகள் உலகளவில் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளான விலங்கினங்களாகக் கருதப்படுகின்றன.
- இவை அவற்றின் தனித்துவமான உயிரியல் மற்றும் ஊடுருவக் கூடிய தோல் காரணமாக சுற்றுச்சூழல் மாற்றங்களுக்கு அதிக உணர்திறன் கொண்டதாக உள்ளன.
- இந்த மதிப்பீடு ஆனது உலகம் முழுவதிலும் உள்ள 8,000க்கும் மேற்பட்ட இருவாழ்விகள் இனங்களின் அழிவு குறித்த அபாயத்தினை எடுத்துரைத்துள்ளது.
- இந்த மதிப்பீட்டில் 2,286 இனங்கள் முதல் முறையாக மதிப்பீடு செய்யப்பட்டன.
- ஒவ்வோர் ஐந்து இனங்களில் ஒரு இருவாழ்வி இனமானது, அழிந்து போகும் அபாயத்தில் இருப்பதாக தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன.
- 2004 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், ஒரு சில முக்கியமான அச்சுறுத்தல் நிலைகள் 300க்கும் மேற்பட்ட இருவாழ்வி இனங்களை அழிவு நிலையினை நோக்கித் தள்ளியுள்ளன.

- இவற்றில் 39% இனங்களின் அழிவிற்குப் பருவநிலை மாற்றம் ஒரு மிகப்பெரும் முதன்மை அச்சுறுத்தலாக இருந்தது.
- ஒவ்வோர் ஐந்து இனங்களில் மூன்று சாலமண்டர் இனங்கள் முதன்மையாக வாழ்விட அழிவின் விளைவாக அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன.
- வட அமெரிக்கா உலகிலேயே சலமாண்டர்களின் அதிகப் பல்லுயிர்ப்பெருக்கம் கொண்ட தாயகமாக உள்ளது.
- 2004 ஆம் ஆண்டு முதல் நான்கு இருவாழ்வி இனங்கள் அழிந்து விட்டதாக ஆவணப் படுத்தப் பட்டுள்ளது.
- மேலும் 27 மிக அருகிய இனங்கள் தற்போது அழிந்து விட்டதாகக் கருதப் படுகின்றன.
- அழிந்து விட்டதாகக் கருதப்படும் மிக அருகிய இருவாழ்வி இனங்களின் எண்ணிக்கையினை இது 160க்கும் மேற்பட்டதாக உயர்த்தியுள்ளது.
- 1980 ஆம் ஆண்டிலிருந்து செந்நிறப் பட்டியலில் 120 இனங்களின் பாதுகாப்பு நிலை மேம்பாட்டுள்ளதையும் இந்த மதிப்பீடு கண்டறிந்துள்ளது.

## பவளப்பாறைகளுக்கான திருப்புமுனை திட்டம்




- சர்வதேச பவளப்பாறை முன்னெடுப்பு (ICRI) அமைப்பானது, பவளப்பாறைகளுக்கான உலகளாவிய நிதியம் (GFCR) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மாற்ற உயர் மட்டப் பருவநிலை சாம்பியன்ஸ் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து பவளப் பாறைகளுக்கான திருப்புமுனை திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ICRI என்பது உலகின் 75 சதவீதத்திற்கும் அதிகமான பவளப்பாறைகளை கொண்டுள்ள 45 நாடுகளை உள்ளடக்கிய ஒரு வலையமைப்பாகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளவில் அரை பில்லியனுக்கும் அதிகமான மக்களின் வாழ்வாதாரத்தினை ஆதரிப்பதற்காக வேண்டி, குறைந்தது 125,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலான ஆழமற்ற நீர்நிலைகளில் உள்ள வெப்பமண்டல பவளப்பாறைகளைப் பாதுகாப்பதற்காக குறைந்தபட்சம் 12 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடுகளை மேற்கொள்வதனை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பின்வரும் நான்கு நடவடிக்கைகளில் கவனம் செலுத்த உள்ளது:
    - இழப்பிற்கு இட்டுச் செல்லும் காரணிகளைத் தடுத்தல்,
    - பயனுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் பவளப்பாறைகளின் பரப்பளவை இரட்டிப்பாக்குதல்,

- மறுசீரமைப்பு முயற்சிகளைத் துரிதப்படுத்துதல்,
- 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தபட்சம் 12 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடுகளைப் பெறுதல்.

## இந்தியாவில் இரு வாழ்வி இனங்களின் நிலை

- ஆய்வில் மதிப்பிடப்பட்ட இந்தியாவின் 426 இரு வாழ்வி இனங்களில் 136 இனங்கள் அச்சுறுத்தல் நிலைக்குத் தள்ளப்பட்டு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- கேரளாவில் உள்ள 178 இனங்களில் 84 இனங்களும், அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள 128 இனங்களில் 54 இனங்களும் அழிந்து வருகின்றன.
- கர்நாடகா மாநிலத்தில் உள்ள 100 இனங்களில் 30 இனங்களும் அச்சுறுத்தல் நிலைக்கு தள்ளப் பட்டு உள்ளன.
- இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகள் என்பது அழிந்து வரும் உயிரினங்கள் அதிக எண்ணிக்கையில் பதிவாகி வரும் பிராந்தியங்களில் ஒன்றாகும்.



## பருவநிலை மாற்றம் குறித்த டக்கார் பிரகடனம் 2023

- உலகின் மிகக் குறைவான வளர்ச்சியடைந்த 46 நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் (LDC) பருவநிலை மாற்றம் குறித்த கூட்டு டக்கார் பிரகடனத்தினை (2023) வெளியிட்டு உள்ளனர்.
- பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு உடன்படிக்கையின் 28வது பங்குதாரர்கள் மாநாட்டிற்கான (COP28) அந்நாடுகளின் எதிர்பார்ப்பு மற்றும் முன்னுரிமைகளை இது குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- டக்கார் பிரகடனம் அவசர உலகளாவிய உமிழ்வு குறைப்பு, புதிய இழப்பு மற்றும் சேத நிதி மற்றும் உலக பருவநிலை நடவடிக்கைகளில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு உயர் இலட்சிய உலகளாவிய பங்கான பருவநிலை நிதியின் வரம்பு உயர்வினை செயல்படுத்துவதற்கான அழைப்பினை விடுத்தது.
- 28வது பங்குதாரர்கள் மாநாடானது 2023 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி முதல் டிசம்பர் 12 ஆம் தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாயில் நடைபெற உள்ளது.

- உலக மக்கள்தொகையில் 14 சதவீதத்திற்கும் அதிகமான பங்கினைக் கொண்டுள்ள குறைவான வளர்ச்சியடைந்த நாடுகள், புதைபடிவ எரிபொருள்கள் மற்றும் தொழில் துறை செயல்முறைகளில் இருந்து வெளியேற்றப்படும் உமிழ்வுகளில் 1 சதவிகிதப் பங்கினை மட்டுமே கொண்டுள்ளது.

## படிஸ் லிமாகுமி

- அறிவியலாளர்கள் நாகாலாந்தின் மிலாக் நதியில் சமீபத்தில் ஒரு புதிய மீன் இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- படிஸ் லிமாகுமி எனப்படும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மீன் இனத்திற்கு நாகாலாந்தின் ஃபஸல் அலி கல்லூரியின் விலங்கியல் துறைத் தலைவர் லிமாகும் என்பவரது நினைவாக பெயரிடப்பட்டது.
- இந்தியா, வங்காளதேசம், நேபாளம், பாகிஸ்தான், தாய்லாந்து மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளில் உள்ள வடிகால்கள் மற்றும் தேங்கி நிற்கும் நீர்நிலைகளில் இந்த உண்ணக் கூடிய மீன் இனங்கள் காணப்படுகின்றன.
- படிஸ் குடும்பத்தைச் சேர்ந்த மீன்கள் அதன் நிறத்தை மாற்றும் தன்மைக்காக பச்சோந்தி மீன் என்றும் அழைக்கப்படுகின்றன.
- இது அவை மன அழுத்தத்தில் இருக்கும் போது சுற்றுப்புறத்துடன் ஒன்றி வாழ உதவுகிறது.



## 2030 ஆம் ஆண்டிற்கான வனப் பாதுகாப்பு நடவடிக்கைக்கான கூட்டு அழைப்பு

- ஒன்றிணைந்த வனக் கூட்டாண்மை (CPF) அமைப்பானது, 2030 ஆம் ஆண்டை நோக்கிய வனப் பாதுகாப்பு நடவடிக்கைக்கான கூட்டு அழைப்பினை விடுத்துள்ளது.
- CPF என்பது ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) தலைமையின் கீழுள்ள 16 உலக அமைப்புகளின் கூட்டாண்மை ஆகும்.
- ஐக்கிய நாடுகள் சபையினால் கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDG) அடைவதற்கான முயற்சியில், வனப்பாதுகாப்பு தொடர்பான தீர்வுகளை செயல்படுத்துவதற்கான அதிகரித்த நடவடிக்கை மற்றும் அரசியல் உறுதிப்பாட்டின் அவசியத்தை முன்னிலைப்படுத்துவதை இவை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- 2030 ஆம் ஆண்டிற்கான வனப் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கையானது நான்கு முக்கியப் பகுதிகளைக் கொண்டுள்ளது.

- நடைமுறைப் படுத்தல் மற்றும் செயல்பாடு;
- தரவு, அறிவியல் மற்றும் புத்தாக்கம்;
- வனப் பாதுகாப்புக்கான நிதி; மற்றும்
- தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

❖ 1990 ஆம் ஆண்டு முதல் காடுகளை அழிக்கும் நடவடிக்கைகளால் உலகம் முழுவதும் 420 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவிலான வனப்பகுதிகள் அழிக்கப் பட்டுள்ளன.

❖ 2010-2015 ஆம் ஆண்டு காலக் கட்டத்தில் ஆண்டிற்கு 12 மில்லியன் ஹெக்டேர் என்ற பரப்பளவாக இருந்த இவ்விகிதம் ஆனது 2015-2020 ஆம் காலக் கட்டத்திற்குப் பிறகு ஆண்டிற்கு 10 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவாக குறைந்துள்ளது.




## ஆசியக் காட்டு நாய்-புலி சகவாழ்வு

❖ அண்மைக்கால ஆய்வுகள் ஆனது, செந்நாய்களின் தினசரி செயல்பாடுகளானது சிறுத்தைகளின் இரைகளுக்கான அதிகளவு இடையீடுகளுடனும், படைச் சிறுத்தைகளின் இரைகளுக்கான குறைவான இடையீடுகளுடனும் இருப்பதாக வெளிப் படுத்தியது.

❖ அசாம் மாநிலத்தின் மனாஸ் தேசியப் பூங்காவில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

❖ இரைகள் கிடைப்பதற்கான வாய்ப்புகளில் இடையீடுகள் அல்லது வாழ்விடப் பொருத்தம் ஆகியவற்றிற்கான இடையீடுகள் ஆனது செந்நாய்களுக்கும் புலிகளுக்கும் இடையேயான, இருவகையான மாமிச உண்ணிகளுக்கு இடையே சக வாழ்வு அல்லது கூட்டுறவு நடத்தைகளை ஏற்படுத்தும் வகையிலான ஒரு நேர்மறையான தொடர்பை ஏற்படுத்தக் கூடும் என்பதை இந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது.

❖ ஒரே மாதிரியான அல்லது ஒன்றுடன் ஒன்று இடையிடும் வகையிலான புவியியல் பகுதிகளில் உள்ள விலங்குகள், தாவர இனங்கள் மற்றும் பிற இனங்கள் இணையுயிரி வாழ்விடம் என குறிப்பிடப் படுகிறது.

❖ செந்நாய் அல்லது ஆசியக் காட்டு நாய் (குவோன் அல்பினஸ்) என்பது வெப்பமண்டல இந்தியக் காடுகளில் மட்டுமே உள்ள அழிந்து வரும் வனவாழ் நாய் இனமாகும்.

❖ இந்த இனமானது அழிந்து போகும் அபாயத்தில் இருப்பதாகக் கருதப்படுகிறது.

❖ உலகில் உள்ள இளம் வயது செந்நாய்களின் எண்ணிக்கையானது 949 மற்றும் 2,215க்கு இடைப்பட்ட எண்ணிக்கையில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ அவை இந்தியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் உள்ளூர் பகுதிகளில் பரவிக் காணப் படுகின்றன.



## மேற்குத் தொடர்ச்சி மலைகளின் 'டேன்ஸிங் ஃப்ராக்' தவளை இனங்கள்


- சமீபத்தில், இந்திய வனவிலங்கு அறக்கட்டளையானது இரண்டாவது உலக இரு வாழ்விகள் மதிப்பீட்டில்ன் மீது ஒரு ஆய்வினை மேற்கொண்டது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே காணப்படும் 'டேன்ஸிங் ஃப்ராக்' எனப்படும் நடனத் தவளைகள் இந்தியாவில் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் இருவாழ்விகள் இனமாகும்.
- மதிப்பிடப்பட்ட மைக்கிரிஸாலஸ் பேரினத்தினைச் சேர்ந்த 24 வகையான தவளைகளில் இரண்டு இனங்கள் மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள இனங்களாகவும், 15 அருகி வரும் இனங்களாகவும் உள்ளதாக இந்த மதிப்பீட்டில் கண்டறியப் பட்டது.
- 92% இனங்கள் அச்சுறுத்தல் நிலையில் உள்ளதையடுத்து, உலகில் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் ஐந்தாவது இனம் இதுவாகும்.



## தட்டான் பூச்சி திருவிழா, 2023


- தட்டான் பூச்சி (தும்பி) திருவிழா என்பது கடந்த ஐந்து ஆண்டுகளாக இயங்கி வருகின்ற குடிமக்கள் அறிவியல் இயக்கமாகும்.
- தமிழ்நாடு, கேரளா, தெலுங்கானா, மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம் மற்றும் அசாம் போன்ற 11 மாநிலங்களில் 6 வது தும்பி திருவிழாவின் நடைபெற்று வருகிறது.
- இந்த திருவிழா தட்டான் பூச்சி மற்றும் ஊசித் தட்டான் ஆகியவை குறித்த புரிதலை தெளிவு படுத்துதலோடு, நமது சுற்றுச்சூழலை வளமாக வைத்திருப்பதில் அவற்றின் பங்கினைக் கொண்டாடுகிறது.

## இமயமலையில் பறவைகளின் வலசைப் போதல் பாங்குகள்




- ❖ இமயமலையில் உள்ள பெரும்பாலான பறவைகள் குளிர்காலத்தில் கீழ்நோக்கி அமைந்த பகுதிகளுக்கு நகர்கின்ற அதே சமயம் தாழ்வான உயரத்தில் உள்ள பறவை உயிரினங்களின் ஒரு சிறிய குழு அதிக உயரத்தில் உள்ள பகுதிகளை நோக்கி நகர்கிறது.
- ❖ கிழக்கு மற்றும் மேற்கு இமயமலையில் உள்ள 65 சதவீத இனங்கள் ஆனது, அதிக பருவநிலை அல்லது உச்ச கட்ட பருவ காலத்தில் தென்பட்ட மற்ற பறவை இனங்களுடன் ஒப்பிடும் போது, அவற்றின் இனங்களுக்குள்ளே பருவகால உயரம் சார்ந்த இட மாற்றங்கள் பதிவாகியுள்ளன.
- ❖ சுமார் 10 சதவிகித இனங்கள் உயரமான பகுதிகளை நோக்கி நகர்கின்ற நிலையில், அவற்றில் 35 சதவிகித இனங்கள் உயரம் சார்ந்த எந்தவித இட மாற்றத்தையும் மேற் கொள்வதில்லை.
- ❖ மேற்கு இமயமலையில் உள்ள 221 இனங்களில், 57 சதவீத இனங்கள் தாழ்வான பகுதிகளை நோக்கி நகர்வதாகவும், ஐந்து சதவீத இனங்கள் உயரமான பகுதிகளை நோக்கி நகர்வதாகவும் பதிவாகியுள்ளது.
- ❖ ஏறத்தாழ 38 சதவீத இனங்கள் உயரம் சார்ந்த எந்தவித இட மாற்றத்தையும் மேற் கொள்வதில்லை.

## அண்டார்டிக் கடல் பனிப் பரவல் இழப்பு





- ❖ அண்டார்டிக் கடல் பனிப்பரவல் ஆனது, அதன் வருடாந்திர அதிகபட்ச அளவான 16.96 மில்லியன் சதுர கிலோமீட்டர்களை (6.55 மில்லியன் சதுர மைல்) எட்டியுள்ளது.

- 1979 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பதிவான கடல் பனிப் பரவலில் மிகக் குறைந்த அளவு கடல் பனிப் பரவல் இதுவே ஆகும்.
- 1986 ஆம் ஆண்டில் பதிவான முந்தைய குறைந்த அளவை விட குறைவாக இந்த ஆண்டு 1.03 மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் (398,000 சதுர மைல்கள்) உள்ளது.
- இது 1981 முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான சராசரி அண்டார்டிக் அதிகபட்ச பனிப் பரவலை விட 1.75 மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் (676,000 சதுர மைல்கள்) குறைவாக உள்ளது.
- உருகிய கடல் பனியின் அளவு 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட முந்தைய குறைவான அளவை - எகிப்தை விட பெரிய பகுதி - விட சுமார் 386,000 சதுர மைல்கள் குறைவாக இருந்தது.

## கால்நடைகள் மூலமான மீத்தேன் வெளியேற்றம்

- உலகளாவிய மானுடவியல் சார்ந்த மீத்தேன் உமிழ்வுகளில் சுமார் 32 சதவிகிதம் ஆனது, அசை போடும் கால்நடைகளின் உள் நொதித்தலின் போது மற்றும் உர மேலாண்மை அமைப்புகளில் ஏற்படுகின்ற நுண்ணுயிர்ச் செயல்முறைகளால் ஏற்படுகிறது.
- மேலும் 8 சதவீதம் நெற்பயிர்களில் இருந்து வெளியாகிறது.
- ஒரு குறுகிய காலப் பசுமை இல்ல வாயுவான (GHG) மீத்தேன் என்பது பத்தாண்டு கால வளிமண்டல ஆயுட் காலத்தினைக் கொண்டுள்ளது.
- மற்றொரு பசுமை இல்ல வாயுவான கார்பன் டை ஆக்சைடு, நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பருவநிலையைப் பாதிக்கிறது.
- ஆனால், மீத்தேன் வாயுவின் வளிமண்டலத்தில் வெப்பத்தைத் தக்க வைக்கும் திறனானது கார்பன் டை ஆக்சைடை விட 25 மடங்கு அதிகமாகும்.




## திப் மற்றும் நிம்ர்

- அரேபிய ஓநாய் (கேனிஸ் லூபஸ் அரேப்ஸ்) மற்றும் அரேபியச் சிறுத்தை (பாந்தெரா பார்டஸ் நிம்ர்) ஆகியவை அரேபிய தீபகற்பம் முழுவதும் காணப்படுகின்றன.
- திப் மற்றும் நிம்ர் என்பது அந்தப் பகுதி மக்களின் கலாச்சாரம் மற்றும் நாட்டுப்புறக் கதைகளில் இடம்பெற்றுள்ள இரண்டு விலங்குகளுக்கான அரேபியச் சொற்கள் ஆகும்.
- திப் உலகின் மிகச் சிறிய ஓநாய் மற்றும் நிம்ர் உலகின் மிகச் சிறிய சிறுத்தையாகும்.

- இரண்டும் அவை காணப்படும் பகுதியின் வடக்குப் பகுதியில் மிகவும் அருகிய நிலையில் உள்ள இனங்களாக உள்ளன.



## GRAP நிலை II

**1 Stage I:**
Stage I mandates the suspension of work at private construction and demolition projects with a plot size equal to or exceeding 500 square metres that are not registered on the state government's portal for remote monitoring of dust mitigation measures. Authorities are also tasked with enforcing a complete ban on the use of coal and firewood in 'tandoors' at hotels, restaurants and open eateries, along with taking punitive action against polluting industrial units and thermal power plants within 300 kilometres of Delhi.

**2 Stage II:**
Stage II measures involve increasing parking fees to discourage private transport and enhancing CNG or electric bus and metro services by introducing additional fleets and increasing service frequency. It also includes the use of public transport and minimize the use of personal vehicles.

**3 Stage III:**
In Stage III, BS-III petrol and BS-IV diesel four-wheelers are prohibited from operating in Delhi, Gurugram, Faridabad, Ghaziabad, and Gautam Buddh Nagar. Stage III involves a complete halt on construction and demolition work, except for essential government projects, besides mining and stone crushing.

**4 Stage IV:**
Stage IV includes banning all types of construction and demolition work. State governments are authorised to decide on online classes for school students and work-from-home arrangements for government and private offices during such situations.

- அக்டோபர் 23 ஆம் தேதியன்று 306 என்ற காற்றுத் தரக் குறியீட்டுடன் (AQI) டெல்லியில் காற்றின் தரமானது, 'மிகவும் மோசமான' நிலையை அடைந்துள்ளது.
- இரண்டாம் நிலை அல்லது தரப்படுத்தப்பட்ட எதிர் நடவடிக்கை செயல் திட்டத்தின் (GRAP) மிகவும் மோசமான நிலையானது டெல்லியின் தேசிய தலைநகர் பகுதி முழுவதும் உடனடியாக அமலுக்கு வந்தது.
- GRAP திட்டத்தின் முதல் நிலை ஆனது டெல்லியின் தேசிய தலைநகர் பகுதி முழுவதும் அக்டோபர் 06 ஆம் தேதியன்று அமலாக்கப்பட்டது.
- தரப்படுத்தப்பட்ட எதிர் நடவடிக்கை செயல் திட்டம் (GRAP) என்பது பொதுவாக குளிர் காலத்தில் டெல்லியின் தேசிய தலைநகர் பகுதி முழுவதும் செயல்படுத்தப் படுகின்ற காற்று மாசுபாடு எதிர்ப்பு நடவடிக்கைகளின் தொகுப்பாகும்.
- தரப்படுத்தப்பட்ட எதிர் நடவடிக்கை என்ற செயல்திட்டத்தின் கீழ், அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துகிறது.

- ❖ காலாவதியான வாகனங்களை இயக்குவதற்கான பல கடுமையானக் கட்டுப்பாடுகள் மற்றும் காற்றுத் தரக் குறியீடு 200 என்பதினைத் தாண்டி மாசு வெளியிடும் தங்கும் விடுதிகள், உணவகங்களில் நிலக்கரி மற்றும் விறகுகளைப் பயன்படுத்துவதற்கான தடைகள் ஆகியவையும் இதில் அடங்கும்.
- ❖ தரப்படுத்தப்பட்ட எதிர் நடவடிக்கை செயல் திட்டத்தின் நான்கு வெவ்வேறு நிலைகள்.
  - ○ 'மோசமான' காற்றுத் தரக் குறியீடு (201-300) பதிவாகும் போது நிலை 1 செயல் படுத்தப் படுகிறது;
  - ○ 'மிக மோசமான' காற்றுத் தரக் குறியீடு (301-400) பதிவாகும் போது நிலை 2;
  - ○ 'கடுமையான' கா1ற்றுத் தரக் குறியீடு (401-450) பதிவாகும் போது நிலை 3; மற்றும்
  - ○ 450க்கு மேல் 'மிகக் கடுமையான' காற்றுத் தரக் குறியீடு பதிவாகும் போது நிலை 4 செயல்படுத்தப்படுகிறது.

## இந்தியாவில் நிலவளம் குன்றல் பற்றிய UNCCD அமைப்பின் அறிக்கை




- ❖ 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரை, இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 30.51 மில்லியன் ஹெக்டேர் நிலத்தின் வளம் குன்றியுள்ளது.
- ❖ அதாவது 2019 ஆம் ஆண்டு நிலவரப்படி நாட்டின் நிலப்பரப்பில் சுமார் 9.45 சதவீதம் தரமிழந்துள்ளது.
- ❖ இது 2015 ஆம் ஆண்டில் 4.42 சதவீதமாக இருந்தது.
- ❖ இந்தியாவின் மொத்த வளம் குன்றிய நிலமானது சுமார் 43 மில்லியன் கால்பந்து மைதானங்களின் அளவிற்குச் சமம் ஆகும்.
- ❖ 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை நாட்டின் 854.4 மில்லியன் மக்கள் வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- ❖ 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரை, உலக நாடுகள் ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது 100 மில்லியன் ஹெக்டேர் அளவிலான வளமான மற்றும் உற்பத்தித் திறன் மிக்க நிலத்தை இழந்துள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## காண்டாமிருகங்களின் நிலை குறித்த அறிக்கை, 2023

- சர்வதேச காண்டாமிருக அறக்கட்டளையானது (IRF) காண்டாமிருகங்களின் நிலை, 2023 என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ஐந்து வகை காண்டாமிருக இனங்களையும் அச்சுறுத்தி வருகின்ற வேட்டையாடுதல் நடவடிக்கைகள் ஆனது, முன்னர் அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் படாத பல பகுதிகளில் அதிகரித்துள்ளது.
- தொடர்ச்சியான வேட்டையாடுதல் நடவடிக்கை இருந்த போதிலும் கருப்பு நிற காண்டாமிருகங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
- ஆப்பிரிக்காவில், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் வறட்சியானது எண்ணற்ற தீங்கு விளைவிக்கும் வகையிலான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.
- ஆசியாவில் பதிவான வியத்தகு அளவிலான மழைப்பொழிவு மற்றும் நீண்ட கால பருவமழைக் காலங்கள் காண்டாமிருகங்களின் நேரடி மரணத்தை ஏற்படுத்துகிறது.
- இந்தியாவில் 3,262 காண்டாமிருகங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் நேபாளத்தில் உள்ள பெரிய ஒற்றைக் கொம்பு காண்டா மிருகங்களின் எண்ணிக்கையானது வலுவான பாதுகாப்பின் காரணமாக தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.
- மீதமுள்ள 76 ஜாவா காண்டாமிருகங்களில் 12 காண்டாமிருகங்களின் நிலை மற்றும் இருப்பிடம் குறித்த தகவல் தெரியவில்லை.
- சுமத்ரா காண்டாமிருகங்களைக் கண்டறிவது மிகவும் கடினமாக உள்ளதால், காடுகளில் அவற்றின் எண்ணிக்கை குறித்த ஒரு நிச்சயமற்றத் தன்மையை இது அதிகரிக்கிறது.



## THE இதழின் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2024

| Institutions | Rank 2024 | Rank 2023 |
|---|---|---|
| Indian Institute of Science | 201–250 | 251–300 |
| Anna University | 501–600 | 801–1000 |
| Jamia Millia Islamia | 501–600 | 501–600 |
| Mahatma Gandhi University | 501–600 | 401–500 |
| Shoolini University of Biotechnology and Management Sciences | 501–600 | 351–400 |
| Alagappa University | 601–800 | 401–500 |
| Aligarh Muslim University | 601–800 | 801–1000 |
| Banaras Hindu University | 601–800 | 601–800 |
| Bharathiar University | 601–800 | 801–1000 |
| Indian Institute of Technology Guwahati | 601–800 | 1001–1200 |
| Indian Institute of Technology (Indian School of Mines) Dhanbad | 601–800 | 1001–1200 |
| Indian Institute of Technology Patna | 601–800 | 801–1000 |
| International Institute of Information Technology, Hyderabad | 601–800 | 501–600 |
| Jamia Hamdard University | 601–800 | 601–800 |
| Jawaharlal Nehru University | 601–800 | 601–800 |
| KIIT University | 601–800 | 601–800 |
| Malaviya National Institute of Technology | 601–800 | NR |
| Manipal Academy of Higher Education | 601–800 | 801–1000 |
| National Institute of Technology Rourkela | 601–800 | 1001–1200 |
| National Institute of Technology Silchar | 601–800 | 601–800 |

- 2024 ஆம் ஆண்டு THE இதழின் தரவரிசையின் படி, ஐக்கியப் பேரரசின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ஆனது உலகின் முன்னணிப் பல்கலைக் கழகமாகும்.
- ஸ்டான்போர்டு பல்கலைக்கழகமானது இரண்டாவது இடத்தையும், மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.
- 2024 ஆம் ஆண்டு THE இதழின் தரவரிசையின் முதல் 10 இடங்களில் இடம் பெற்ற ஏழு பல்கலைக்கழகங்கள் அமெரிக்காவைச் சேர்ந்தவை என்ற நிலையில், மற்ற மூன்றும் ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்தவையாகும்.
- பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது மீண்டும் இந்தியாவின் சிறந்த நிறுவனமாகப் பெயர் பெற்றுள்ளது.
- இந்தியாவின் தரவரிசையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்து 91 இந்தியப் பல்கலைக் கழகங்கள் இந்த ஆண்டின் தரவரிசையில் இடம் பெற்றுள்ளன.
- கடந்த ஆண்டு இந்தியாவின் 75 நிறுவனங்கள் மட்டுமே இந்தத் தரவரிசையில் இடம் பெற்றன.


## உலகப் புத்தாக்கக் குறியீடு 2023

- சமீபத்திய 2023 ஆம் ஆண்டு உலகப் புத்தாக்கக் குறியீட்டில் இந்தியா தனது 40வது இடத்தைத் தக்க வைத்துள்ளது.
- இது உலக அறிவுசார் சொத்து அமைப்பினால் (WIPO) வெளியிடப் படுகிறது.
- 132 உலக நாடுகளின் புத்தாக்கச் சூழல் அமைப்பின் செயல்திறன் மற்றும் உலக நாடுகளின் சமீபத்தியப் புத்தாக்கப் போக்குகளை இந்தக் குறியீடு மதிப்பிடுகிறது.
- 2015 ஆம் ஆண்டில், 81வது இடத்தில் இருந்த இந்தியா, கடந்த எட்டு ஆண்டுகளாக தனது நிலையில் முன்னேறி வருகிறது.

- சுவிட்சர்லாந்து 13வது ஆண்டாக இந்தக் குறியீட்டில் முதலிடத்தில் உள்ளது.
- தற்போது சுவீடன் இரண்டாவது இடத்திலும், அமெரிக்கா மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- அதைத் தொடர்ந்து ஐக்கியப் பேரரசு (4வது) மற்றும் சிங்கப்பூர் (5வது) உள்ளன.





## உலகத் திறமைகள் தரவரிசை 2023




- சர்வதேச மேலாண்மை மேம்பாட்டு நிறுவனம் (IMD) ஆனது 2023 ஆம் ஆண்டு உலகத் திறமை தரவரிசையினை வெளியிட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையில் சுவிட்சர்லாந்து நாடு முதலிடத்திலும், லக்ஸம்பர்க் இரண்டாவது இடத்திலும் உள்ளன.
- அதைத் தொடர்ந்து ஐஸ்லாந்து, பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தத் தரவரிசையில் உள்ள 64 நாடுகளில், இந்தியா நான்கு இடங்கள் சரிந்து 56வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியா 52வது இடத்தில் இருந்தது.
- அமெரிக்கா 15வது இடத்திலும், சீனா 41வது இடத்திலும், ஐக்கியப் பேரரசு 35வது இடத்திலும் உள்ளன.
- பிரேசில் (63வது) மற்றும் மங்கோலியா (64வது) கடைசி இரண்டு இடங்களைப் பெற்று உள்ளன.

## கடல் போக்குவரத்து மதிப்பாய்வு 2023

- "கடல் போக்குவரத்தின் மதிப்பாய்வு 2023" என்பது ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாட்டு அமைப்பினால் (UNCTAD) சமீபத்தில் வெளியிடப் பட்ட முதன்மை அறிக்கையாகும்.
- கடல்சார் வர்த்தகம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 2.4 சதவீதமும் மற்றும் 2024 மற்றும் 2028 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 2 சதவீதத்திற்கு அதிகமாகவும் உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- உலகளாவிய மொத்த உமிழ்வில் 3% பங்கினைக் கொண்ட இந்தத் தொழில்துறையின் பசுமை இல்ல வாயு வெளியேற்றம், கடந்தப் பத்தாண்டுகளில் 20% அதிகரித்துள்ளது.
- எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனில், இந்த உமிழ்வுகள் 2050 ஆம் ஆண்டில், 2008 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 130% அளவை எட்டும்.
- 2023 ஆம் ஆண்டில் கடல்சார் போக்குவரத்துத் துறை 2.4% வளர்ச்சியடையும் என்று அறிக்கை கணித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் கொள்கலன் வழியான வர்த்தகம் 1.2% வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு மேலும் இத்துறையின் வளர்ச்சி 2024 மற்றும் 2028 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 3% ஆக இருக்கும்.
- முழு கார்பன் நீக்க இலக்கினை அடைவதற்கு 2050 ஆம் ஆண்டிற்குள் 8 பில்லியன் டாலர் முதல் 28 பில்லியன் டாலர் வரையிலான வருடாந்திர முதலீடுகள் தேவைப்படும்.
- முழுவதும் கார்பன் நடுநிலைத் தன்மை கொண்ட எரிபொருளுக்குத் தேவையான உள்கட்டமைப்புகளை நிறுவ சுமார் 28 பில்லியன் டாலர் முதல் 90 பில்லியன் டாலர் வரையிலான வருடாந்திர முதலீடுகள் தேவைப்படலாம்.





## மதிப்புமிக்க முன்னணி இந்திய நிறுவனங்கள் அறிக்கை 2023

- கண்ட்டார் பிராண்ட்ஸ் என்ற அமைப்பானது, 10வது மதிப்புமிக்க 75 முன்னணி இந்திய நிறுவனங்கள் அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

- இதில் டாடா ஆலோசனை சேவை வழங்கீட்டு நிறுவனம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மிகவும் மதிப்புமிக்க இந்திய நிறுவனமாக திகழ்கிறது.
- HDFC வங்கி இரண்டாவது மதிப்பு மிக்க நிறுவனமாகவும் தொடர்ந்து இன்ஃபோசிஸ் (3வது இடத்திலும்), ஏர்டெல் (4வது இடத்திலும்) மற்றும் பாரத் ஸ்டேட் வங்கி (5வது இடத்திலும்) ஆகியவை முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.
- மொத்த நிறுவன மதிப்பின் அடிப்படையில் வகைபடுத்தப்பட்ட மிகப்பெரிய பிரிவு நிதிச் சேவைகள் ஆகும்.
- எண்ணிமப் பண வழங்கீட்டுச் சேவை செயலியான PhonePe (21வது இடம்) முன்னணி இடத்தினைப் பெற்ற புதிய நிறுவனமாகும்.




## உலக நீரிழிவு நோய் மருந்து தொழில்துறை குறித்த கண்ணோட்ட அறிக்கை 2023





- நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் ஏறத்தாழ 40 சதவீதம் பேருக்குத் தங்களுக்கு இந்த நோய்ப் பாதிப்பு இருப்பது குறித்து அறியாதுள்ளதால் அவர்கள் அந்த நோய் இருப்பது குறித்து பரிசோதனை செய்யாமல் உள்ளனர்.


- கண்டறியப்படாத நோய்ப் பாதிப்புகளில் பெரும்பாலானவை சில பகுதிகளில் அதிகம் பதிவாகியுள்ள நிலையில் ஆப்பிரிக்கா 60 சதவிகித அளவிலானப் பாதிப்புகளுடன் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து 57 சதவீதத்துடன் தென்கிழக்கு ஆசியாவும், 56 சதவீதத்துடன் மேற்கு பசிபிக் பகுதியும் இடம் பெற்றுள்ளன.
- 2021 ஆம் ஆண்டில், உலகளவில் கிட்டத்தட்ட 7 மில்லியன் உயிரிழப்புகள் நீரிழிவு நோயால் ஏற்பட்டதாகக் கூறப்பட்ட நிலையில், உலகளவில் சுமார் 970 பில்லியன் அமெரிக்க டாலர்கள் இதன் சிகிச்சைக்காக செலவிடப்பட்டுள்ளன.
- நீரிழிவு நோய் ஆராய்ச்சி மற்றும் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் 70க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அல்லது உலகளவில் 55 சதவீதம் நிறுவனங்கள் அமெரிக்காவில் அமைந்துள்ளன.

## சர்வதேச எரிசக்தி முகமையின் முக்கிய கனிமங்கள் சந்தை மதிப்பாய்வு 2023

- சர்வதேச எரிசக்தி முகமையின் முதலாவது முக்கியக் கனிமங்கள் மற்றும் தூய்மையான ஆற்றல் உச்சி மாநாடு ஆனது பிரான்சின் பாரீஸ் நகரில் நடைபெற்றது.
- சர்வதேச எரிசக்தி முகமையின் 2023 ஆம் ஆண்டு முக்கியக் கனிமங்கள் சந்தை மதிப்பாய்வு அறிக்கையானது இந்த ஆண்டின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டது.
- முக்கியமான கனிமங்களுக்கான சந்தை மதிப்பானது, முந்தைய ஐந்து ஆண்டுகளில் இரண்டு மடங்கு அதிகரித்து 2022 ஆம் ஆண்டில் 320 பில்லியன் டாலர்களை எட்டி உள்ளது.
- முக்கியக் கனிமங்களில் தாமிரம், லித்தியம், நிக்கல் மற்றும் கோபால்ட் ஆகியவை அடங்கும்.
- இவை வேகமாக வளர்ந்து வரும் தூய்மையான ஆற்றல் தொழில்நுட்பங்களில் இன்றியமையாத கூறுகளாக உள்ளன.
- 2017 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், எரிசக்தித் துறையில் லித்தியத்திற்கான தேவை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.
- கோபால்ட் கனிமத்திற்கான தேவை 70 சதவீதமும் நிக்கல் கனிமத்திற்கான தேவை 40 சதவீதமும் அதிகரித்துள்ளது.



## உலகப் பட்டினி நிலைக் குறியீடு (GHI) 2023




- 2023 ஆம் ஆண்டின் உலகப் பட்டினி நிலைக் குறியீட்டில் (GHI) மதிப்பிடப்பட்ட மொத்தம் 125 நாடுகள் அடங்கிய பட்டியலில் இந்தியா 111 வது இடத்தில் உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 121 நாடுகளில் இந்தியா 107வது இடத்தைப் பெற்று இருந்தது.
- உலகப் பட்டினி நிலைக் குறியீட்டில் ஆப்கானிஸ்தான், ஹைத்தி மற்றும் 12 துணை-சஹாரா பகுதி நாடுகள் ஆகியவை மட்டுமே இந்தியாவை விட மோசமான செயல் திறன் கொண்டதாக உள்ளன.
- 0 என்பதை சிறந்த செயல் திறனுக்கான மதிப்பெண் ஆகவும் (பட்டினி நிலை இல்லை) மற்றும் 100 என்பதை மோசமான செயல் திறனுக்கான மதிப்பெண் ஆகவும் கொண்ட உலகப் பட்டினி நிலைக் குறியீட்டின் 100-மதிப்பெண் அளவீட்டில் இந்தியாவின் தர வரிசையானது 28.7 என்ற மதிப்பெண் நிலையில் அமைந்துள்ளது.
- உலகத்திற்கான 2023 ஆம் ஆண்டு உலகப் பட்டினி நிலைக் குறியீட்டு மதிப்பெண் 18.3 ஆகும் என்ற நிலையில் இது மிதமான செயல்திறன் ஆகக் கருதப்படுகிறது.
- இருப்பினும், இது உலகின் 2015 ஆம் ஆண்டு உலகப் பட்டினி நிலைக் குறியீட்டு மதிப்பெண்ணான 19.1 என்பதை விட ஒரு மதிப்பெண் குறைவாக உள்ளது.
- 2000 ஆம் ஆண்டில் 38.4 ஆக இருந்த இந்தியாவின் மதிப்பெண் ஆனது 2008 ஆம் ஆண்டில் 35.5 ஆகவும் 2015 ஆம் ஆண்டில் 29.2 ஆகவும் மேம்பட்டதையடுத்து, 2000 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தக் குறியீட்டில் இந்தியா குறிப்பிடத் தக்க முன்னேற்றங்களை அடைந்தது.
- கடந்த எட்டு ஆண்டுகளில், உலகப் பட்டினி நிலைக் குறியீட்டில் இந்தியா 0.5 புள்ளிகள் மட்டுமே முன்னேறியுள்ளது.
- தெற்காசியா மற்றும் சஹாராவின் தெற்கே அமைந்த ஆப்பிரிக்க நாடுகள் ஆகியவை அதிகப் பட்டினி நிலையைக் (கடுமையான பட்டினி நிலை) கொண்டவையாகும்.
- மேற்கு ஆசியா மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா ஆகியவை மூன்றாவது அதிகப் பட்டினி நிலையைக் கொண்ட ("மிதமான அளவிலான" பட்டினி நிலை) பகுதிகளாகும்.
- இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடு விகிதம் 16.6 சதவீதமாகவும், ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் 3.1 சதவீதமாகவும் உள்ளது.

- 15 மற்றும் 24 வயதிற்குட்பட்ட பெண்களில் இரத்த சோகை பாதிப்பு 58.1 சதவீதமாக உள்ளது.
- கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு பாதிப்பினைக் கொண்டுள்ளதால் 18.7 சதவீதத்துடன் உலகிலேயே அதிக குழந்தை நலிவுறுதல் விகிதம் கொண்ட நாடாக இந்தியா உள்ளது.
- இந்தியாவின் அண்டை நாடுகளான பாகிஸ்தான் (102வது), வங்காளதேசம் (81வது), நேபாளம் (69வது), இலங்கை (60வது) ஆகியவை இந்தக் குறியீட்டில் அதை விட அதிக சிறப்பானச் செயல்திறன் கொண்டதாக உள்ளன.

## உலக உள்கட்டமைப்பு நெகிழ்திறன் பற்றிய அறிக்கை




- "உலக உள்கட்டமைப்பு நெகிழ்திறன்: நெகிழ்திறன் ஈவினைக் கைப்பற்றுதல்" என்ற இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் அறிக்கையினை பேரிடர்களை தாங்கும் உள்கட்டமைப்புக் கூட்டணி (CDRI) வெளியிட்டுள்ளது.
- பருவநிலை மாற்றமானது உள்கட்டமைப்புத் துறைகள் மற்றும் கட்டிடங்களின் மதிப்பில் 732 முதல் 845 பில்லியன் டாலர் வரையிலான மதிப்பிடப்பட்ட உலகளாவியச் சராசரி வருடாந்திர இழப்புகளுக்கு (AAL) வழிவகுக்கிறது.
- அதாவது 2021-2022 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 14 சதவீத மதிப்பானது ஆபத்தில் உள்ளது.
- இந்த அவசரச் செலவினத்தில் பாதி அளவானது குறைவான மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளால் (LMIC) மேற்கொள்ளப்படுகிறது.
- முக்கிய உள்கட்டமைப்புத் துறைகளில் பேரிடர்கள் மற்றும் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் உலகளாவிய சராசரி வருடாந்திர இழப்பு 301 முதல் 330 பில்லியன் டாலர் வரை உள்ளது.
- உலகளாவிய உள்கட்டமைப்பின் சொத்து மதிப்பில் ஏறக்குறைய 67 சதவீதத்தினை அதிக வருமானம் கொண்ட நாடுகள் கொண்டுள்ளன.
- அதிக மற்றும் குறைவான-நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் முறையே 24.8 சதவீதம் மற்றும் 7.0 சதவீதத்தினைக் கொண்டுள்ளன.
- குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் 0.6 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.

- பருவநிலை மாற்றமானது அதிக வருமானம் உள்ள நாடுகளின் சராசரி வருடாந்திர இழப்பினை 11 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இது நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் 12-22 சதவீதமும், குறைவான வருமானம் கொண்ட நாடுகளில் 33 சதவீதமும் அதிகரிக்கலாம் என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

## 2023 ஆம் ஆண்டு உலக வர்த்தக அறிக்கை: மறு உலகமயமாக்கல்





- உலக வர்த்தக அமைப்பினால் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான உலக வர்த்தக அறிக்கையானது, மிகவும் பாதுகாப்பான, உள்ளார்ந்த மற்றும் நிலையான உலகினை உருவாக்குவதில் சர்வதேச வர்த்தகத்தின் பங்கினை குறித்து ஆராய்கிறது.
- இந்த அறிக்கையானது "மறு-உலகமயமாக்கலுக்கு" பரிந்துரைப்பதோடு, பல்வேறு நாடுகள், மக்கள் மற்றும் சிக்கல்களுடனான வர்த்தக ஒருங்கிணைப்பையும் விரிவு படுத்துகிறது.
- அணுமான அடிப்படையிலான புவிசார் அரசியல் கூட்டணிகளிலுள்ள வர்த்தகப் போட்டிகளானது அவற்றுக்கிடையே உள்ளதை விட மிக வேகமாக வளர்ந்து வருகின்றன.
- இது வர்த்தக நடவடிக்கையினை போட்டி நாடுகளிலிருந்து நட்பு நாடுகளை (Friend-shoring) நோக்கி நகர்த்தப் படுவதைக் குறிக்கிறது.
- மறு-உலகமயமாக்கல் என்பது உலகமயமாக்கலை மேலும் உள்ளார்ந்ததாகவும், பாதுகாப்பானதாகவும், நிலையானதாகவும் மாற்றுவதில் கவனம் செலுத்தும் நோக்கில் சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பினை விரிவு படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் வழி வகுக்கும் கருத்தாக்கமாகும்.
- இது நாடுகளுக்கு இடையேயான அதிக ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒருங்கிணைப்பின் மூலம் புவிசார் அரசியல் குழப்பங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் பருவநிலை மாற்றம் போன்ற சமகாலத்திய உலகளாவியச் சவால்களை எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

## இணைய சுதந்திரம் குறித்த அறிக்கை 2023

- '2023 ஆம் ஆண்டு இணைய சுதந்திரம் குறித்த அறிக்கை: செயற்கை நுண்ணறிவின் அடக்குமுறை சக்தி என்ற தலைப்பிலான அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.


- உலகளாவிய இணைய சுதந்திரம் ஆனது தொடர்ந்து 13வது ஆண்டாக குறைந்துள்ளது.
- 29 நாடுகளில் இயங்கலையில் மனித உரிமைகளுக்கான சூழல் மோசமடைந்துள்ளது.
- 20 நாடுகளில் மட்டுமே இணைய சுதந்திரத்திற்கு உகந்த சூழல் பதிவாகியுள்ளது.
- மேலும், 41 நாடுகளில், தனிநபர்கள் இயங்கலையில் தாங்கள் வெளியிடும் அறிக்கைகளால் தாக்கப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர்.
- ஐஸ்லாந்து இணைய சுதந்திரத்திற்கான சிறந்த சூழலைக் கொண்டுள்ளது.
- சீனா, தொடர்ந்து ஒன்பதாவது ஆண்டாக, இணைய சுதந்திரத்திற்கான உலகின் மோசமான சூழல் கொண்ட நாடாக தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- மியான்மர் இயங்கலை சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடு விதிக்கும் உலகின் இரண்டாவது அடக்குமுறை மிகுந்த நாடாகும்.
- இந்தியாவில் மிதமான அளவிலான எண்ணிம சுதந்திரம் உள்ளது.
- இந்திய அரசானது, கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கின்ற மற்றும் ஆளும் கட்சியை விமர்சிக்கும் விமர்சனங்களை குறைக்கின்ற வகையில் அதன் சட்ட கட்டமைப்பில் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தணிக்கையை இணைத்துள்ளது.
- விரிவடைந்து வரும் தணிக்கை முறையால் இந்திய ஜனநாயகத்திற்குப் பாதகமான விளைவுகள் ஏற்படும் என இந்த அறிக்கை எச்சரிக்கிறது.




## பாலினச் சமத்துவமின்மை மற்றும் மகளிர் புற்றுநோய்


- தி லான்செட் உலக சுகாதாரம் என்ற அமைப்பானது, “மகளிர், அதிகாரம் மற்றும் புற்றுநோய்” என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில், 70 வயதிற்குட்பட்ட சுமார் 5.3 மில்லியன் வளர் இளம் நபர்கள் புற்றுநோயால் இறந்துள்ள நிலையில் இந்த உயிரிழப்புகளில் 2.3 மில்லியன் பேர் பெண்கள் ஆவர்.
- இந்த முன் கூட்டிய (அகால) மரணங்கள் ஆனது 182.8 மில்லியன் வருட வாழ்கால இழப்பின் (YLLs) அளவு உயர காரணமாயின.

- இது அனைத்து வயது பிரிவிலும் புற்றுநோயினால் ஏற்பட்ட மொத்த வருட வாழ்கால இழப்புகளில் 68.8% ஆகும்.
- பெண்களுடன் ஒப்பிடும்போது ஆண்களில் தடுக்கக்கூடிய முன்கூட்டிய வருட வாழ் கால இழப்புகளில் அதிக விகிதம் பதிவாகியுள்ளது (ஆண்களில் 70.3% மற்றும் பெண்களில் 65.2%).
- எனினும், சிகிச்சை அளிக்கக் கூடிய வகையிலான முன்கூட்டிய வாழ்கால இழப்புகளின் விகிதம் ஆனது ஆண்களை விட பெண்களுக்கு அதிகமாக இருந்தது (பெண்களில் 34.8% மற்றும் ஆண்களில் 29.7%).
- 2020 ஆம் ஆண்டில், புகையிலை, ஆல்கஹால், உடல் பருமன் மற்றும் நோய்த் தொற்றுகள் ஆகிய புற்றுநோய் உண்டாக்கக்கூடிய நான்கு முக்கியக் காரணிகளின் பாதிப்பினால் அனைத்து வயதுப் பிரிவைச் சேர்ந்த சுமார் 1.3 மில்லியன் பெண்கள் உயிரிழந்துள்ளனர்.
- இந்தியாவில் பெண்களிடையே ஏற்படும் புற்றுநோய் சார்ந்த இறப்புகளில் கிட்டத்தட்ட 63% உயிரிழப்பானது, ஆபத்து காரணிகளைக் குறைத்தல், நோய் குறித்த ஆய்வு அல்லது ஆரம்பகால நோயறிதல் மூலம் தடுக்கப்பட்டிருக்கலாம்.
- தகுந்த மற்றும் சரியான நேரத்தில் சிகிச்சை அளித்தால் 37% இறப்புகளைத் தடுத்து இருக்கலாம்.
- இந்தியாவில் பெண்களில் அதிகம் ஏற்படும் மூன்று புற்றுநோய்கள் - மார்பக, கர்ப்பப் பை வாய் மற்றும் கருப்பைப் புற்றுநோய்.
- ஒவ்வொரு எட்டு நிமிடங்களுக்கும் ஒரு பெண் கர்ப்பப் பை வாய்ப் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர்.
- புற்றுநோய் சிகிச்சையில் காணப்படும் பாலினச் சமத்துவமின்மை காரணமாக, ஒரு பெண்ணின் உடல்நலப் பிரச்சினைகள் நிராகரிக்கப்பட்டன அல்லது புறக்கணிக்கப் பட்டன.
- பாலினச் சார்பு மற்றும் பாகுபாடு காரணமாக பெண்கள் அதிகாரப் பதவியில் இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளது மற்றும் அவர்களின் உடல் நலத்தைத் தீர்மானிப்பதில் அவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
- பெண்களால் செலுத்தப்படாத புற்றுநோய் சிகிச்சைக்கான கட்டண மதிப்பு ஆனது இந்தியாவின் தேசிய சுகாதார செலவினத்தில் சுமார் 3.66 ஆகும்.




## இடைக்கால எரிவாயு அறிக்கை 2023

- ❖ இது சர்வதேச எரிசக்தி முகமையினால் (IEA) வெளியிடப்படுகிறது.
- ❖ இந்தியாவின் இயற்கை எரிவாயு தேவையானது 2023 ஆம் ஆண்டில் 04 சதவீதம் உயர உள்ளது.
- ❖ இது 2026 ஆம் ஆண்டு வரை சராசரி வருடாந்திர விகிதத்தில் 8 சதவீதத்திற்கும் அதிகமாக உயரும்.
- ❖ 2022 ஆம் ஆண்டில் பதிவான 6 சதவிகிதம் சரிவைத் தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இந்தியாவின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு இறக்குமதி 8 சதவிகிதம் அதிகரித்துள்ளது.




## மாற்றுத் திறனாளிகள் மற்றும் பேரிடர்கள் பற்றிய உலகளாவிய கணக்கெடுப்பு 2023

- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகம் ஆனது (UNDRR) 2013 ஆம் ஆண்டு கணக்கெடுப்பைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு உலகளாவியக் கணக்கெடுப்பினை நடத்தியது.
- ❖ உலக மக்கள் தொகையில் 16 விழுக்காட்டினர் ஏதோவொரு வகையான உடல் திறன் இழப்பு கொண்டவராகவும் மற்றும் பிற மக்களை விட இரண்டு அல்லது நான்கு மடங்கு அதிகமாக பேரழிவுகளால் பாதிக்கப்படுகிறார்கள்.
- ❖ இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களில் 84 சதவீதம் பேர் அவசரக் கால வெளியேறும் வழிகள், தங்குமிடங்கள் அல்லது அவசரகாலப் பொருட்கள் பொதி வைத்திருக்க வேண்டும் என்பது பற்றி அறியாமல் உள்ளனர்.
- ❖ இந்தக் கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களில் 11 சதவீதம் பேர் மட்டுமே தங்கள் உள்ளூர் பகுதியில் உள்ள பேரிடர் மேலாண்மை திட்டம் பற்றி அறிந்துள்ளனர்.
- ❖ 2030 ஆம் ஆண்டிற்குள் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 560 பேரழிவுகளை உலக நாடுகள் எதிர்கொள்ளும் என்று இந்தக் கணக்கெடுப்பு கணித்துள்ளது.




## நகர்ப்புறப் போக்குவரத்து பற்றிய அறிக்கை




- 'விரைவான, மெதுவான மற்றும் நெரிசல் மிக்க: செல்வ வளம் மிக்க மற்றும் ஏழ்மை நாடுகளில் நகர்ப்புறப் போக்குவரத்து' என்ற தலைப்பிலான அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- நகரங்களில் இயங்கும் மோட்டார் வாகனங்களின் சராசரி பயண வேகத்தை இது மதிப்பிட்டது.
- ஃப்லிண்ட் நகரத்தில் (அமெரிக்கா) நாள் முழுவதும் அதிகபட்ச சராசரி வேகம் பதிவாகி உள்ளது.
- வங்காளதேச தலைநகரான டாக்கா, குறைவான சராசரி பயண வேகத்தைக் கொண்ட நகராக உள்ளது.
- பொகோட்டா (கொலம்பியா) நெரிசல் மிக்க நகரமாகக் கண்டறியப் பட்டுள்ளது.
- மெதுவான நெரிசலற்ற பயண வேகம் கொண்ட பத்து நகரங்களில் ஒன்பது நகரங்கள் வங்காளதேசம், இந்தியா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் அமைந்துள்ளன என்பதை அறிக்கை எடுத்துரைக்கிறது.

- வேகக் குறியீட்டின் அடிப்படையில் உலகின் 20 மெதுவான பயண வேகம் கொண்ட நகரங்களின் பட்டியலில் மகாராஷ்டிராவைச் சேர்ந்த பிவாண்டி 5வது இடத்தைப் பெற்றுள்ளது.
- கொல்கத்தா 6வது இடத்தையும், பீகாரில் உள்ள அர்ரா 7வது இடத்தினையும் பெற்று உள்ளன.
- போக்குவரத்து நெரிசல் அளவீடுகளில், பெங்களூரு 8வது இடத்திலும், மும்பை 13வது இடத்திலும், டெல்லி 20வது இடத்திலும் உள்ளன.

## உலகளாவிய ஓய்வூதியக் குறியீடு 2023

| System | Overall Grade | Total | Adequacy | Sustainability | Integrity |
|---|---|---|---|---|---|
| Netherlands | A | 85.0 | 85.6 | 82.4 | 87.7 |
| Iceland | A | 83.5 | 85.5 | 83.8 | 80.0 |
| Denmark | A | 81.3 | 82.5 | 82.5 | 77.8 |
| Israel | A | 80.8 | 77.0 | 82.7 | 84.4 |
| Australia | B+ | 77.3 | 70.7 | 78.4 | 86.1 |
| Finland | B+ | 76.6 | 77.4 | 65.6 | 90.9 |
| Singapore | B+ | 76.3 | 79.8 | 71.6 | 77.0 |
| Norway | B | 74.4 | 79.4 | 59.1 | 87.8 |
| Sweden | B | 74.0 | 72.1 | 75.6 | 75.0 |
| UK | B | 73.0 | 77.3 | 62.7 | 80.6 |
| Switzerland | B | 72.0 | 69.6 | 70.6 | 77.9 |
| Canada | B | 70.2 | 71.1 | 64.5 | 76.7 |

- மீண்டும் ஒருமுறை நெதர்லாந்தின் ஓய்வூதிய வருமான முறையானது உலகளாவிய ஓய்வூதியக் குறியீட்டில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- இத்தரவரிசையில் ஐஸ்லாந்து மற்றும் டென்மார்க் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளன.
- அர்ஜென்டினாவின் தரவரிசையானது மிகக்குறைந்த குறியீட்டு மதிப்பைக் கொண்டி இருக்கிறது.
- இந்தியாவின் தரவரிசையானது 2022 ஆம் ஆண்டில் 44.5 இல் இருந்து 45.9 ஆக ஒட்டு மொத்தக் குறியீட்டு மதிப்பைக் கொண்டிருந்ததோடு, 47 நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் 45வது இடத்தைப் பிடித்திருக்கிறது.
- போதுமான அளவு, நிலைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் துணைக் குறியீடுகளின் அளவிடப்பட்ட சராசரிகளிலிருந்து இக்குறியீட்டு மதிப்புகள் பெறப் படுகிறது.


## மலிவு விலை தண்ணீரின் அதிக விலை

- மலிவு விலை தண்ணீரின் அதிக விலை (The High Cost of Cheap Water) என்ற தலைப்பிலான அறிக்கை, இயற்கைக்கான உலகளாவிய நிதியத்தினால் (WWF) வெளியிடப் பட்டுள்ளது.
- உலக நீர் நெருக்கடியானது பொருளாதார மதிப்பில் 58 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள உணவுப் பாதுகாப்பு மற்றும் நிலைத் தன்மையை அச்சுறுத்துகிறது.

- 1970 ஆம் ஆண்டு முதல் உலகமானது அதன் எஞ்சியுள்ள ஈரநிலங்களில் மூன்றில் ஒரு பகுதியை இழந்துள்ளது.
- நன்னீர் வாழ் வனவிலங்குகளின் எண்ணிக்கையானது சராசரியாக 83 சதவீதம் அளவு குறைந்துள்ளது.
- 58 டிரில்லியன் டாலர் மதிப்பானது, நீர் மற்றும் நன்னீர் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பொருளாதார மதிப்பின் முதல் வருடாந்திர மதிப்பீடு ஆகும்.
- இது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60 சதவீதத்திற்கு சமம் ஆகும்.
- தற்போது உலகளவில் 70% நன்னீர் பயன்பாடானது வேளாண்மையில் மேற்கொள்ளப் படுகிறது.




## EFW அமைப்பின் வருடாந்திர அறிக்கை 2023




- கல்வி சார் நிதிக் கண்காணிப்பு (EFW) அமைப்பின் 2023 ஆம் ஆண்டு அறிக்கையானது, 2021 ஆம் ஆண்டு வரையிலான கடந்த பத்து ஆண்டுகளில் கல்விச் செலவினங்களின் போக்குகள் மற்றும் முறைகள் பற்றிய முக்கியப் பகுப்பாய்வுத் தகவல்களை வெளிக் கொணர்கிறது.
- இது பள்ளி வயது மக்கள்தொகையில் ஏற்படும் மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்து, தேர்ந்தெடுக்கப் பட்ட நாடுகளுக்கு அடுத்து வரவிருக்கும் பத்து ஆண்டுகளுக்கு அதன் நிதி சார் தாக்கங்களைக் கணிக்கிறது.

- ❖ பெருந்தொற்றின் தொடக்கத்தில், மொத்த உலகளாவிய கல்விச் செலவினம் தேக்கம் அடைந்தது, ஆனால் அது 2021 ஆம் ஆண்டில் மீண்டும் அதிகரித்தது.
- ❖ அனைத்து நாட்டின் வருமானக் குழுக்களிலும் அரசாங்க நிதி வளங்கள் தான் முக்கிய கல்வி நிதி ஆதாரமாக உள்ளது.
- ❖ வீட்டுச் செலவினமானது பெரும்பாலும் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியில் அதிகம் மேற்கொள்ளப் படுகிறது.

## "மாறும் பருவநிலையில் புலம்பெயர்ந்த குழந்தைகள்" பற்றிய அறிக்கை





- ❖ யுனிசெஃப் அமைப்பானது, 'மாறும் பருவநிலையில் புலம்பெயர்ந்த குழந்தைகள்' என்ற தலைப்பிலான அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ மோசமான வானிலை காரணமாக உலகம் முழுவதும் கடந்த ஆறு ஆண்டுகளில் தினமும் கிட்டத்தட்ட 20,000 குழந்தைகள் புலம்பெயர்ந்துள்ளனர்.
- ❖ மொத்தமாக 3.1 மில்லியன் குழந்தைகளின் உள்நாட்டுப் புலம்பெயர்வுகள் கடந்த ஆறு வருட காலப்பகுதியில் ஏற்பட்ட வானிலை தொடர்பான பேரழிவுகளுடன் தொடர்பு உடையது.
- ❖ சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவற்றில் தீவிர வானிலை காரணமாக அதிக எண்ணிக்கையிலான குழந்தை புலம்பெயர்வுகள் பதிவாகியுள்ள நாடுகளாகும்.
- ❖ மேலும், டொமினிகா மற்றும் வனுவாட்டு போன்ற சிறிய மற்றும் தனித்தமைந்த தீவு நாடுகளில் வசிக்கும் குழந்தைகள் புயலால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே நேரத்தில் சோமாலியா மற்றும் தெற்கு சூடானில் உள்ள குழந்தைகள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- ❖ புலம்பெயர்ந்த 4.3 கோடி குழந்தைகளில் 4 கோடி அல்லது தோராயமாக 95 சதவீதம் பேர் 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட வெள்ளம் மற்றும் புயல்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ❖ இது தவிர, 13 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் வறட்சியால் பாதிக்கப் பட்டு உள்ளனர்.
- ❖ காட்டுத் தீ காரணமாக 8.1 லட்சம் குழந்தைகள் புலம்பெயர்ந்துள்ளனர்.

## திருப்புமுனை செயல்பாட்டு நிரல் அறிக்கை 2023

- 2023 ஆம் ஆண்டு திருப்புமுனை செயல்பாட்டு நிரல் அறிக்கை என்பது சர்வதேச எரிசக்தி முகமை (IEA), சர்வதேசப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை (IRENA) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மாற்ற உயர்மட்ட சாம்பியன் ஆகியவற்றிற்கு இடையிலான ஒத்துழைப்பின் மூலம் தயாரிக்கப்படும் வருடாந்திர அறிக்கையாகும்.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான உலகளாவிய மின் உற்பத்தியில் கிட்டத்தட்ட பாதியளவு என்பது புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்காகும்.
- ஆனால் 1.5°C இலக்கைப் பேணுவதற்கு 2030 ஆம் ஆண்டிற்குள் இந்த வேகம் மூன்று மடங்காக இருக்க வேண்டும் என்று இந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.
- மின் துறையானது சுமார் 13 ஜிகா டன் $CO_2$ உமிழ்வுக்கு சமமான அல்லது மொத்த உமிழ்வுகளில் 23% பங்கினைக் கொண்டுள்ளது.
- இது 2010 ஆம் ஆண்டு முதல் சுமார் 10% உயர்ந்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் இது 50 சதவீதத்திற்கும் மேலான அளவு வரையில் குறைய வேண்டும்.
- 2010 ஆம் ஆண்டு முதல் மின்சாரத்தின் சராசரி சமப்படுத்தப்பட்ட செலவு ஆனது சூரிய மின்னழுத்தக் கலனுக்கு 86% ஆகவும், காற்றாலைக்கு 60% ஆகவும் குறைந்துள்ளது.
- இன்று 4 டெரா வாட்ஸ்க்கும் (TW) குறைவாக உள்ள புதுப்பிக்கத்தக்க உற்பத்தித் திறன் தேவையானது 2030 ஆம் ஆண்டிற்குள் 11 TW ஆக இருக்கும்.
- வேளாண் சார்ந்த உமிழ்வுகள் 2022 ஆம் ஆண்டில் 7.3 $GtCO_2$ ஆக தொடர்ந்து அதிகரித்து வருகிறது.
- நிகரச் சுழிய உமிழ்வு என்ற இலக்கினை நோக்கியப் பாதையில் செல்ல அவை 5.7 $GtCO_2$ ஆக குறைய வேண்டும்.

## அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் மனநலம்

- உலக சுகாதார அமைப்பானது 'அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் மனநலம்: ஆபத்து மற்றும் பாதுகாப்பு காரணிகள் மற்றும் நல சேவைகளுக்கான அணுகல்' என்ற தலைப்பிலான அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 258 மில்லியன் அளவிற்கு சர்வதேசப் புலம்பெயர்ந்தோர் பதிவாகி உள்ளனர்.
- 2021 ஆம் ஆண்டின் இறுதியில், வலுக்கட்டாயமாக புலம்பெயர்ந்தவர்களின் மொத்த எண்ணிக்கையானது 89.3 மில்லியனாக இருந்த நிலையில் அவர்களில் 53.2 மில்லியன் பேர் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள், 27.1 மில்லியன் பேர் அகதிகள் மற்றும் 4.6 மில்லியன் நபர்கள் புகலிடம் கோருபவர்கள் ஆவர்.
- மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஐந்தில் ஒருவர் (22.1 சதவீதம்) மனச் சோர்வு, பதட்டம், பேரதிர்ச்சிக்குப் பிறகான மன உளைச்சல் (PTSD), இரு முனையக் கோளாறு அல்லது மனச்சிதைவு போன்ற பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்.
- வளர் இளம் (15-17 வயது) வயதுக் குழுவினருடன் ஒப்பிடும்போது, இளம் வயது (6-14 வயது) அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்த குழந்தைகளிடையே நடத்தை சார்ந்த கோளாறுகள் மிகவும் பொதுவான ஒரு பாதிப்பாக உள்ளது.




## மெர்சி கார்ப்ஸ் அமைப்பின் அறிக்கை




- ❖ இந்த அறிக்கையானது லெபனான், சிரியா, ஏமன், ஜோர்டான், ஈராக் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனியப் பகுதிகள் (மேற்குக் கரை மற்றும் காசா) அத்துடன் வட ஆப்பிரிக்க நாடுகளான துனிசியா மற்றும் எகிப்து ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகிறது.
- ❖ மத்தியக் கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவின் பல நாடுகள் கடுமையான உணவு நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன.

- ❖ இது முதன்மையாக அந்நாட்டு மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்க இயலாமை மற்றும் கருங்கடல் பகுதியில் நிலவும் மோதல்கள் மற்றும் வர்த்தக இடையூறுகள் ஆகியவற்றின் பாதகமான விளைவுகளுக்கு உட்படுதல் ஆகியவற்றினால் ஏற்படுகின்றது.
- ❖ மனிதாபிமானம் சார்ந்த நிதியின் அளவு குறைந்து வருவதால் இந்த நிலைமை மேலும் மோசமடைகிறது.
- ❖ உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு தானிய ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- ❖ உள்நாட்டு விநியோகத்தைப் பாதுகாப்பதற்காக இந்திய நாடும் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அரிசி ஏற்றுமதியைத் தடை செய்ததாக இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.
- ❖ இந்த அதிர்ச்சிகளின் ஒருங்கிணைந்த தாக்கம் ஆனது மத்தியக் கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவின் (MENA) பல பகுதியில் முன்னெப்போதும் இல்லாத அளவிலான உணவு சார் பணவீக்கத்தைத் தூண்டக் கூடும்.




## உலக ஆற்றல் கண்ணோட்ட அறிக்கை 2023

- ❖ சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA) தனது 2023 ஆம் ஆண்டு உலக ஆற்றல் கண்ணோட்ட அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ உலகளாவிய நிலக்கரி நுகர்வு ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் 13.5% குறையும் என்று கணிக்கப் பட்டுள்ளது, ஆனால் இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் நுகர்வு ஆகிய இரண்டும் உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- ❖ கணிக்கப்பட்ட கொள்கை சார் சூழ்நிலையின் கீழ் 2030 ஆம் ஆண்டில் உலகளாவிய எரிசக்தி தேவை 7% வளர்ச்சியடையும் என்றாலும், இந்த எரிசக்தித் தேவையானது புதுப்பிக்கத்தக்க மற்றும் அணுசக்தி வளங்களை நோக்கி மாறும்.
- ❖ இருப்பினும், எரிசக்தி விநியோகத்தில் 70%க்கும் அதிகமான பங்கினைப் புதைபடிவ எரிபொருள்கள் கொண்டிருக்கும் என்ற நிலையில் 2022 ஆம் ஆண்டில் தோராயமாக 82% ஆக இருந்த அளவில் இருந்து இது குறைந்துள்ளது.

- ❖ மின்சார ஆற்றல் ஆனது எதிர்காலத்தின் "எரிபொருளாக" உருவெடுத்துள்ள நிலையில் 2020 ஆம் ஆண்டில் 20% ஆக இருந்த அதன் இறுதி நுகர்வு 2030 ஆம் ஆண்டில் 28% ஆக உயர உள்ளது.




**Figure 1.33** ▷ Differences in global total energy demand by fuel and sector in the *WEO-2023-STEPS* compared to the *WEO-2022-STEPS*, 2030

# மாநிலச் செய்திகள்


## ஒடிசாவின் முதல் பெண் சபாநாயகர்

- ❖ பிஜு ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த பிரமிளா மாலிக் ஒடிசா மாநில சட்டசபையின் முதல் பெண் சபாநாயகராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- ❖ அவர் போட்டியின்றி அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ❖ ஒடிசாவின் ஜாஜ்பூர் மாவட்டத்தில் உள்ள பிஞ்சர்பூர் சட்டமன்றத் தொகுதியில் இவர் ஆறு முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.
- ❖ இதற்கு முன் அவர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சராகப் பதவி வகித்தார்.



## AFSPA சட்ட நீட்டிப்பு

- மணிப்பூர் மாநில அரசாங்கமானது மாநிலம் முழுவதும் ஆயுதப்படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தினை (AFSPA) மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.
- ஆனால் இம்பால் பள்ளத்தாக்கில் அமைந்த ஏழு மாவட்டங்களில் உள்ள 19 காவல் நிலையங்களின் அதிகார வரம்பிற்கு இதில் விதிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது.
- பழங்குடியினச் சமூகங்கள் அதிகம் வாழும் அனைத்து மலை மாவட்டங்களிலும் இந்த சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட "பதட்டமான பகுதி" என்ற நிலை தொடரும்.
- மாநில அரசானது தற்போது "ஒரு மாவட்டம், ஒரு படை" திட்டத்தின் கீழ், சிறப்பான நடவடிக்கைகளுக்காக வேண்டி பாதுகாப்புப் படைகளை நிலை நிறுத்துவது குறித்து பரிசீலித்து வருகிறது.
- 1972 ஆம் ஆண்டில் மாநில அந்தஸ்தைப் பெற்ற முன்னாள் ஒன்றியப் பிரதேசமான மணிப்பூரில் 1981 ஆம் ஆண்டு முதல் AFSPA அமலில் இருந்து வருகிறது.
- AFSPA சட்டமானது, முந்தைய மணிப்பூர் ஒன்றியப் பிரதேசத்தில் நாகா மக்கள் அதிகம் காணப் படும் பகுதிகளிலும் 1958 ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளது.




## பெங்களூரில் "ஸ்பாஞ்ச் சிட்டி" கட்டமைப்பு

- இந்த மாதிரியில், மேற்கூரைத் தோட்டங்கள், தண்ணீரை கீழே ஊடுருவிச் செய்யும் வகையிலான சாலைகள், குளங்கள், வடிகால் குளங்கள், ஈரநிலங்கள் மற்றும் நிலத்தடியில் நீரை ஊடுருவ வழிவகுக்கும் வகையில் கட்டமைக்கப்பட்ட பொது இடங்கள் போன்றவற்றில் மழைநீர் பல வழிகளில் உட்செலுத்தப்படுகிறது.
- பெங்களூருவின் குடிமை வசதித் தளங்கள் போன்ற பெரிய காலியிடங்களில் பல்வேறு குளங்கள் கட்டமைக்கப் பட்டன.
- ஒவ்வொரு குளமும் 8 மீட்டர் ஆழத்தில் இரண்டு அடுக்குகளைக் கொண்டுள்ளது.
- வெள்ள நீர் இந்தக் குளங்களுக்குள் பாய்ச்சப்பட்டு தேவைப் படும் போது பின்னர் வெளியேற்றப் படும்.
- ஸ்பாஞ்ச் சிட்டி (உறிஞ்சு நகரம்) மாதிரியை ஏற்றுக் கொண்ட இந்திய நகரங்களில் சென்னை முதலிடம் பெற்றுள்ளது.



## திரிபுராவில் இணைய வழி அமைச்சரவை முறை




- திரிபுரா அரசானது அகர்தலாவில் இணைய வழி அமைச்சரவை முறையினை அறிமுகம் செய்துள்ளது.
- இது எண்ணிம உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் அரசாங்கச் சேவைகள் மற்றும் தகவல்களின் எண்ணிமமயமாக்கலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- திரிபுரா, இந்தியாவில் இத்தகைய அமைப்பினை அறிமுகம் செய்யும் நான்காவது மாநிலமாகவும், இரண்டாவது வடகிழக்கு மாநிலமாகவும் மாறியுள்ளது.
- ஏற்கனவே உத்தரகாண்ட், உத்தரப்பிரதேசம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இணைய வழி அமைச்சரவை முறையை அறிமுகப் படுத்தியுள்ளன.
- எதிர்காலத்தில் இம்மாநிலத்தில் நடைபெறும் அனைத்து அமைச்சரவை கூட்டங்களும் காகிதமில்லாத வகையில் இணைய வழியில் மேற்கொள்ளப்படும்.
- இது இம்மாதிரியிலான செயல்பாட்டில் கார்பன் பாதிப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேட்டைக் குறைக்கும்.

## குழாய்வழி உரமாக்கல் முறை

- அசாம் அரசானது, தற்போது நடைபெற்று வரும் ஸ்வச்சதா ஹி சேவா பிரச்சாரத்தின் போது அதன் கிராமப்புற சமூகங்களிடையே குழாய் வழி உரத் தயாரிப்பு முறையினை பெருமளவில் ஊக்குவித்து வருகிறது.
- 8 முதல் 10 அங்குல விட்டம் மற்றும் 1.25 மீட்டர் நீளம் கொண்ட PVC குழாய்களைப் பயன்படுத்திக் கரிமக் கழிவுகளை உரமாக மாற்றும் முறை குழாய் வழி உரமாக்கல் தொழில்நுட்பம் ஆகும்.
- குழாய்கள் 25-30 செ.மீ. ஆழத்திற்கு தரையின் உள்ளே செங்குத்தாக வைக்கப்படும்.
- மிஞ்சிய உணவு, பழங்கள் மற்றும் காய்கறித் தோல்கள், பூக்கள், சாணம், வேளாண் கழிவுகள் உள்ளிட்ட மக்கும் குப்பைகளை மட்டுமே இந்தக் குழாய்களில் உரமாக்க முடியும்.
- புழுக்களின் வளர்ச்சி துரிதமாக்குவதற்காக இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை மிகச் சிறிதளவு பசுவின் சாணம் மற்றும் காய்ந்த இலைகளைத் தண்ணீரில் கலந்து உள்ளே ஊற்றப்படுகிறது.
- மழைநீர் குழாய்களுக்குள் செல்லாதவாறு இது எப்போதும் மூடப்பட்டிருக்க வேண்டும்.
- 2 மாதங்களுக்குப் பிறகு குழாயைத் தூக்கி உரத்தினை வெளியெடுக்கலாம்.

## அசாமில் AFSPA சட்டம்





- ஆயுதப்படைகள் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் அல்லது AFSPA சட்டம் அசாமின் நான்கு மாவட்டங்களில் மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- அசாமில் உள்ள திப்ருகர், டின்சுகியா, சிவசாகர் மற்றும் சராய்தியோ ஆகிய நான்கு மாவட்டங்களில் மட்டுமே AFSPA அமலில் இருக்கும்.
- ஜோர்ஹாட், கோலாகாட், கர்பி அங்லாங் மற்றும் டிமா ஹசாவோ ஆகிய இடங்களில் அக்டோபர் 01 முதல் AFSPA சட்டம் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

- AFSPA சட்டமானது, பாதுகாப்புப் படை வீரர்கள் எந்தவிதமான முன் அனுமதியும் இன்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் யாரையும் கைது செய்யவும் வேண்டி அதிகாரம் அளிக்கிறது.
- படை வீரர்கள் யாரையாவது சுட்டுக் கொன்றால் அதற்காக கைது செய்யப் படுவதில் இருந்தும், வழக்குத் தொடுப்பதிலிருந்தும் விலக்கு அளிக்கிறது.

## பீகாரின் சாதிவாரி கணக்கெடுப்பு

- பீகார் மாநில அரசினால் மேற்கொள்ளப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பின் முடிவுகள் சமீபத்தில் வெளியிடப்பட்டன.
- சுதந்திரத்திற்குப் பின் ஒரு மாநிலம் சாதிக் கணக்கெடுப்பினை மேற்கொண்ட முதல் மாநிலம் இதுவே ஆகும்.
- பீகார் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 13.07 கோடிக்குச் சற்று அதிகமாக இருப்பதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- அந்த மாநிலத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (36 சதவீதம்) மிகப்பெரிய சமூகப் பிரிவாக உள்ளனர்.
- இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 27.13 சதவீதமாக உள்ளதையடுத்து அப்பிரிவினர் இரண்டாம் இடத்தில் உள்ளனர்.
- மக்கள்தொகை அடிப்படையில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 14.27 சதவீதமாக உள்ளனர்.
- பட்டியலிடப்பட்ட சாதியினர் 19.65 சதவீதம் ஆக உள்ளனர்.
- சுமார் 22 லட்சம் (1.68 சதவீதம்) மக்கள் பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள்.
- "உயர் சாதியினர்" என்பதைக் குறிக்கும் "இட ஒதுக்கீடு பெறாத" வகையினர் மொத்த மக்கள் தொகையில் 15.52 சதவீதம் ஆக உள்ளனர்.




- மொத்த மக்கள் தொகையில் 81.99 சதவீதப் பங்குடன் இந்துக்கள் பெரும்பான்மை சமூகமாக உள்ள நிலையில். அதைத் தொடர்ந்து முஸ்லிம்கள் 17.70% ஆக உள்ளனர்.
- இந்த முடிவுகள் தற்போது நடைமுறையில் உள்ள வேலைவாய்ப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான இடஒதுக்கீடு மீதான 50% உச்சவரம்புக்கு சவால் விடுக்கும் வகையில் உள்ளன.

## நிறுவப்பட்ட காற்றாலை ஆற்றல் திறன்

- நிறுவப்பட்ட காற்றாலை மின் உற்பத்தித் திறனில் தமிழகத்தை விஞ்சி குஜராத் முதலிடம் பிடித்துள்ளது.
- தமிழகத்தை விட சில 100 மெகாவாட்கள் அதிகம் உற்பத்தி செய்து குஜராத் முன்னிலையில் உள்ளது.
- மூன்று முதல் நான்கு மாதங்கள் வரை 24 மணி நேரமும் காற்றாலை மின்சாரம் கிடைக்கப் பெறுவதால், மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது, தமிழ்நாடு தனிச் சிறப்பு பெற்றுள்ளது.
- சமீபத்திய காற்றாலை ஆற்றல் பெறப்படும் பருவத்தில், 40% மின் தேவையானது காற்றாலை மூலம் பூர்த்தி செய்யப்பட்டது.
- தமிழகமும் விரைவில் பழைமை நிலையினை அடைந்து வரும் காற்றாலைகளை மாற்றும் கொள்கையை அறிமுகம் செய்ய உள்ளது.





## பாஷ்மினா கைவினைப் பொருள் - புவிசார் குறியீடு

- ஜம்மு மற்றும் காஷ்மீரின் கதுவா மாவட்டத்தைச் சேர்ந்த 100 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியக் கைவினைப் பொருளான பசோலி பாஷ்மினா புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஜம்மு பிரிவின் ரஜோரி மாவட்டத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற பசோலி ஓவியம் மற்றும் சிக்ரி மரம் ஆகியவை புவிசார் குறியீடு பெற்றன.
- பசோலி பாஷ்மினா, அதீத மென்மை, நுணுக்கம் மற்றும் இலகுவான எடை ஆகியவற்றிற்கு பெயர் பெற்ற கையால் நெய்யப்படும் தயாரிப்பு ஆகும். இது வெப்பக் காப்பு பண்புகள் மற்றும் நீடித்து உழைக்கும் திறனைக் கொண்டுள்ளது.

- பாஷ்மினா தயாரிப்புகளில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான சால்வைகள், காது உறைகள் (மஃப்லர்கள்), போர்வைகள் மற்றும் கூடை ஆகியவை அடங்கும்.



## தெற்கு லோனாக் ஏரி




- சிக்கிம் மாநிலத்தின் வடமேற்கில் 17,000 அடி உயரத்தில் அமைந்துள்ள ஒரு பனிப் பாறை ஏரியான லோனாக் ஏரி இடைவிடாத மழை காரணமாக உடைந்து, தாழ்வானப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கினை ஏற்படுத்தியது.
- கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் இப்பகுதியில் ஏற்பட்ட மோசமானப் பேரழிவுகளில் இதுவும் ஒன்றாகும்.
- இது தீஸ்தா ஆற்றின் நீர்மட்டத்தை உயர்த்தி மாங்கன், காங்டாக், பாக்யோங் மற்றும் நாம்ச்சி உள்ளிட்ட நான்கு மாவட்டங்களை வெள்ளத்தில் மூழ்கடித்தது.
- தெற்கு லோனாக் ஏரியைப் போன்ற பனிப்பாறை ஏரிகள், உருகும் பனிப்பாறைக்கு முற்பகுதியில், மேலே அல்லது கீழே அமைந்திருக்கும் பெரிய நீர்நிலைகளாகும்.
- பனிப்பாறை ஏரிகள் பெரும்பாலும் நிலையற்ற பனிக்கட்டி அல்லது தளர்வான பாறை மற்றும் சிதைவுகளால் ஆன வண்டல் மூலம் தடுத்து கட்டுப்படுத்தப் படுவதால், அவற்றில் நீர் பெருகும் போது அவை மிகவும் ஆபத்தானதாக மாறுகின்றன.


- அவற்றைச் சுற்றியுள்ள எல்லை தடுப்புகள் உடைந்தால், பெரிய அளவிலான நீர் மலைகளினூடே பாய்ந்து தாழ்வான பகுதிகளில் வெள்ளத்தை ஏற்படுத்தும்.
- இது பனிப்பாறை ஏரி உடைப்பினால் ஏற்படும் வெள்ளம் அல்லது GLOF என்று அழைக்கப் படுகிறது.
- பூகம்பங்கள், தீவிர கன மழை மற்றும் பனிச்சரிவுகள் உள்ளிட்ட பல காரணங்களால் GLOF ஏற்படக் கூடும்.

## ராஜஸ்தானின் பள்ளத்தாக்குப் பகுதி ராணி (வேலி குயின்) பாரம்பரிய இரயில் சேவை



- ஜோத்பூரில் இருந்து இயக்கப்படும் ராஜஸ்தானின் முதல் பாரம்பரிய இரயில் சேவை சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இது வேலி குயின் பாரம்பரிய இரயில் என்று அழைக்கப்படுகிறது.
- இது பாலி மாவட்டத்தில் உள்ள மார்வார் இரயில் சந்திப்பு மற்றும் காம்ப்ளிகாட் ஆகிய பகுதிகள் இடையே இயக்கப்படும்.
- இந்தப் புதிய இரயில் சேவையானது பயணிகளுக்கு தனித்துவமான அனுபவத்தையும், ராஜஸ்தானின் இரயில்வே கட்டமைப்பின் வளமானப் பாரம்பரியம் மற்றும் முக்கிய வரலாற்றினை பற்றிய ஒரு கண்ணோட்டத்தினை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பானது பின்வரும் நான்கு இரயில் பாதைகளை உலக பாரம்பரிய தளங்களாக அறிவித்துள்ளது-
    - டார்ஜிலிங் இமாலய இரயில்வே (1999),
    - நீலகிரி மலை இரயில் (2005),
    - கல்கா சிம்லா இரயில்வே (2008) மற்றும்
    - சத்ரபதி சிவாஜி இரயில் முனையம், மும்பை (2004).
- மாதேரன் லைட் இரயில்வே மற்றும் காங்க்ரா பள்ளத்தாக்கு இரயில்வே ஆகியவை அடுத்து வரவுள்ள பட்டியலில் உள்ள மற்ற இரண்டு இரயில் சேவைகள் ஆகும்.

## PUSA-44 நெல் ரகத்திற்குத் தடை




- பஞ்சாப் மாநில அரசானது, அடுத்த ஆண்டு முதல் PUSA-44 நெல் ரகத்தை பயிரிட தடை விதிக்க உள்ளது.
- PUSA-44 என்ற நெல் ரகமானது, 1993 ஆம் ஆண்டில் டெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையினால் (ICAR) உருவாக்கப்பட்டது.
- 2010 ஆம் ஆண்டுகளின் இறுதியில் பஞ்சாப் முழுவதும் உள்ள விவசாயிகளிடையே பெருமளவில் இது பிரபலமானது.
- நெல் சாகுபடி செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பில் சுமார் 70 முதல் 80% பரப்பளவில் இந்த நெல் ரகம் பயிரிடப்பட்டது.
- இருப்பினும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதால், வேளாண் துறையானது இந்த நெல் ரகத்தினைப் பயிரிட வேண்டாம் என்று தடை விதிக்கத் தொடங்கியது.
- PUSA-44 நெல் ரகமானது ஒரு ஏக்கருக்குக் கிட்டத்தட்ட 85 முதல் 100 மான் (34 முதல் 40 குவிண்டால்கள்) வரை மகசூல் தருவதாகவும், மற்ற நெல் ரகங்களின் சராசரி மகசூல் ஏக்கருக்கு 28 முதல் 30 குவிண்டால்கள் மட்டுமே தருவதாகவும் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.
- ஒரு நீண்ட கால பயிர் ரகமான PUSA-44 என்ற இந்த நெல் முதிர்ச்சி அடைய சுமார் 160 நாட்கள் ஆகும்.
- இது மற்ற ரகங்களின் முதிர்வு நாட்களை விட சுமார் 35 முதல் 40 நாட்கள் அதிகம் ஆகும்.
- இதற்கு 5 முதல் 6 வரையிலான கூடுதல் பாசன சுழற்சி தேவைப்படுகிறது.
- குறுகிய கால நெல் ரகங்களை விட இந்த நெல் ரகம் தோராயமாக 2% அதிக பயிர்த் தாளடிகளை உருவாக்குகிறது.
- எனவே, பஞ்சாபில் பயிர்த் தாளடி எரிப்புப் பிரச்சனையில் இது அதிகப் பங்கினை கொண்டுள்ளது.

## கடமா பாலடைக் கட்டிக்குப் புவிசார் குறியீடு




- அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று உள்ளூர்த் தயாரிப்புகளுக்கு மதிப்பு மிக்க புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- அவை கடமா பாலடைக்கட்டி (சுர்பி), காம்தி அரிசி மற்றும் டாங்சா ஜவுளி ரகம் ஆகியவையாகும்.
- அருணாச்சலி கடமாவின் பாலில் இருந்து சுர்பி தயாரிக்கப்படுகிறது.
- இது அம்மாநிலத்தின் மேற்கு கமெங் மற்றும் தவாங் மாவட்டங்களில் காணப்படும் ஒரு தனித்துவமான இனமாகும்.
- இது ப்ரோக்பாஸ் எனப்படும் பழங்குடி யாக் கால்நடை மேய்ப்பாளர்களால் வளர்க்கப் படுகிறது.
- அவர்கள் கோடைக்காலத்தில் தங்கள் கடமாக்களுடன் சேர்ந்து உயர்வான இடங்களுக்கும் (10,000 அடி மற்றும் அதற்கு மேற்பட்ட உயரத்தில்) இடம் பெயர்ந்து, குளிர்காலத்தில் நடுத்தர உயரமான மலைப் பகுதிகளுக்கும் சென்று வசிக்கின்றனர்.
- கோடை காலத்தில் கடமா இனங்கள் குறைந்த உயரத்தில் அமைந்த நிலப்பரப்பில் உயிர் வாழ முடியாது.
- எனவே அவற்றை 13,000 அடிக்கு அப்பால் அமைந்த பகுதிகளுக்கு இடம் பெயர்த்த வேண்டும்.
- நம்சாய் பிராந்தியத்தின் காவ் தை எனப்படும் மெல்லத் தக்க வகையிலான ஒரு வகை ஒட்டும் அரிசி ரகம் ஆகும்.
- இது பாரம்பரிய காம்ப்தி பழங்குடி விவசாயிகளால் பயிரிடப்படுகிறது.
- சாங்லாங் மாவட்டத்தின் டாங்சா பழங்குடியினரின் ஜவுளிப் பொருட்கள் அவற்றின் கண்கவர் வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களுக்குப் புகழ் பெற்றவை.

## மத்தியப் பழங்குடியினர் பல்கலைக்கழகம் – தெலுங்கானா


- தெலங்கானாவின் முலுகு மாவட்டத்தில் சம்மக்கா சரக்கா மத்திய பழங்குடியினர் பல்கலைக் கழகத்தினை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- தெலுங்கானாவில் உள்ள மத்திய பழங்குடியினர் பல்கலைக்கழகத்திற்கு பழங்குடியின தெய்வங்களான சம்மக்கா மற்றும் சரக்கா ஆகியோரின் நினைவாக பெயரிடப் படுகிறது.

- சம்மக்கா சரக்கா ஜாதரா உலகின் மிகவும் பிரபலமானப் பழங்குடி திருவிழாக்களில் ஒன்றாகும்.
- ஆந்திரா, மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ஒடிசா, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஜார்க்கண்ட் உள்ளிட்ட பல்வேறு பழங்குடியினர் மற்றும் பழங்குடியினர் சாராத சமூகங்களைச் சேர்ந்த சுமார் 1.5 கோடி பக்தர்கள் இந்த விழாவில் பங்கேற்கின்றனர்.
- இது பெரும்பாலும் பழங்குடியினரின் கும்பமேளா என்று குறிப்பிடப் படுகிறது.




## உத்தரப் பிரதேச மாநில நீர்வாழ் விலங்கு

- உத்தரப் பிரதேச மாநில அரசானது, கங்கை நதி வாழ் ஓங்கில்களை (டால்பின்) அதன் மாநில நீர்வாழ் விலங்காக அறிவித்துள்ளது.
- இந்த ஓங்கில்கள் கங்கை, யமுனா, சம்பல், காக்ரா, ராப்தி மற்றும் கெருவா போன்ற ஆறுகளில் காணப்படுகின்றன.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள கங்கை நதி ஓங்கில்களின் எண்ணிக்கை சுமார் 2000 என மதிப்பிடப் பட்டுள்ளது.




## பல்வேறு புதிய புவிசார் குறியீடுகள்



- ❖ கோவா முந்திரியானது (கெர்னல்) புவிசார் குறியீட்டினை (GI) பெற்றுள்ளது.
- ❖ ஜம்மு காஷ்மீரின் பசோலி பாஷ்மினா மற்றும் உதாம்பூர் களரி ஆகியவற்றிற்கும் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ ஒரு பிரபலமான டோக்ரா வகை உணவான களரி என்பது உதாம்பூர் மாவட்டத்தில் உள்ள ராம்நகரை தன் பிறப்பிடமாக கொண்டு அறியப்படுகிறது.
- ❖ பாலில் இருந்து தயாரிக்கப்படும் இது டோக்ரா இன மக்களால் அதிகம் விரும்பப்படும் தெருவோரச் சிற்றுண்டி வகையாகும்.
- ❖ ஒடிசாவின் கேந்திரபாராவின் புகழ்பெற்ற இரசபாலி இனிப்பு வகைக்கும் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இதன் தோற்றமானது கேந்திரபாராவில் உள்ள 262 ஆண்டுகள் பழமையான ஸ்ரீ பலதேவ்ஜேவ் கோயிலுடன் தொடர்புடையது.

## கேரளாவில் சுற்றுலா வாகனப் பூங்கா

- கேரளச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகமானது (KTDC) காசர்கோட்டிலுள்ள பேக்கல் கோட்டையில் சுற்றுலா வாகனப் பூங்கா மற்றும் முகாமிடல் பாணியிலான தங்குமிட வசதியினை உருவாக்கியுள்ளது.
- பேக்கல் கோட்டையிலுள்ள இந்த சுற்றுலா வாகனப் பூங்காவானது, மாநிலத்தின் பொதுத் துறையின் கீழ் இயங்கும் இத்தகைய முதல் பூங்காவாக இருக்கும்.
- வடக்குக் கேரளாவிலுள்ள இந்தக் கடலோரக் கிராமம் மற்றும் 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அதன் அற்புதமான கோட்டை ஆகியவை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முக்கியப் பகுதிகளில் ஒன்றாகும்.



## மிகப்பெரிய நீரேற்ற நீர்த்தேக்க மின்னாற்றல் உருவாக்கத் திட்டம்

- மத்தியப் பிரதேச மாநில அரசானது, இந்தியாவின் மிகப்பெரிய நீரேற்ற நீர்த் தேக்கத்தினைச் சமீபத்தில் திறந்து வைத்துள்ளது.
- இந்தத் திட்டமானது இந்தியாவின் மிகப்பெரிய ஆற்றல் சேமிப்பு நிறுவனமான கிரீன்கோ குழுமத்தினால் உருவாக்கப்பட்டது.
- இது நீமுச் மாவட்டத்தில் உள்ள கெம்லா தொகுதியில் அமைந்துள்ளது.
- இது 1440 மெகாவாட் (மெகாவாட்) திறன் ஆற்றலை 7.5 மணி நேரத்திற்குச் சேமித்து வைக்கும் திறனைக் கொண்டுள்ளது.
- தற்போது இது 6 மணி நேரத்திற்கு 1920 மெகாவாட் திறனைச் சேமிக்கும் வகையில் மேம்படுத்தப் பட்டு, தினசரி கிட்டத்தட்ட மணிக்கு 11 ஜிகா வாட் (GWh) திறனைச் சேமிக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.




## கேரளாவின் முதல் முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட கட்டிடம்



- முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்பத்தில் கட்டமைக்கப்பட்ட அமேஸ்-28 எனப்படும் கேரளாவின் முதல் கட்டிடம் ஆனது திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- ஒரு செயல்விளக்கத் திட்டமாக வடிவமைக்கப்பட்ட அமேஸ்-28 கட்டிடமானது, வெறும் 28 நாட்களில் கட்டி முடிக்கப்பட்ட மாதிரியாகும்.
- முப்பரிமாண அச்சிடல் என்பது அடிப்படையில், 3 செயலாக்கங்களை உள்ளடக்கியது.
- அவற்றுள் முதலில் தரவு செயலாக்கம், இரண்டாவது பொருள் செயலாக்கம் மற்றும் 3வது எந்திரவியல் அச்சிடல் ஆகியனவாகும்.

## பைகா பழங்குடியினர் குழு - வாழ்விட உரிமைகள்




- பைகா என்ற எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினர் குழு (PVTG) சத்தீஸ்கர் மாநிலத்தில் வாழ்விட உரிமைகளைப் பெற்ற இரண்டாவது குழுவினர் ஆக மாறி உள்ளனர்.

- 6,483 மக்கள் (2,085 குடும்பங்கள்) கொண்ட மொத்தம் 19 பைகா கிராமங்களுக்கு வாழ்விட உரிமை வழங்கப்பட்டுள்ளது.
- வாழ்விட உரிமைகளுக்கான அங்கீகாரமானது, ஒரு சமூகத்திற்கு அவர்களின் வழக்கமான வாழ்விடங்கள், சமூக-கலாச்சார நடைமுறைகள், பொருளாதார மற்றும் வாழ்வாதார வழிமுறைகள், பல்லுயிர் பெருக்கம் மற்றும் சூழலியல் பற்றிய அறிவுசார் அனுபவம், இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கான பாரம்பரிய அனுபவம், அத்துடன் அவர்களின் இயற்கை மற்றும் கலாச்சார பாரம்பரியங்களைப் பாதுகாத்தல் மற்றும் வளங்காத்தல் ஆகியவை தொடர்பான உரிமைகளை வழங்குகிறது.
- வாழ்விட உரிமைகளானது பாரம்பரிய வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் அறிவைப் பாதுகாத்து மேம்படுத்துகின்றன.
- 2006 ஆம் ஆண்டு வன உரிமைகள் சட்டத்தின் 3(1) (e) என்ற பிரிவின் கீழ் PVTG குழுக்களுக்கு வாழ்விட உரிமைகள் வழங்கப்படுகின்றன.
- முன்னதாக கமர் பழங்குடியினர் குழுவிற்கு அம்மாநிலத்தில் வாழ்விட உரிமைகள் வழங்கப் பட்டது.

## மஞ்சிரேவுலா வன இடைக் கற்கால பாறைக் கலை


- ஐதராபாத்தில் உள்ள மஞ்சிரேவுலா வன மலையேற்றப் பூங்காவில் உள்ள ஒரு பாறைக் குகையில் இடைக் கற்காலத்தை (மீசோலிதிக் காலம்) சேர்ந்த ஓவியங்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- இடைக் கற்கால சகாப்தம் ஆனது கி.மு. 10,000 முதல் 4,000 வரையாகும்.
- இதனால் இந்த ஓவியங்கள் 6,000 முதல் 12,000 ஆண்டுகள் பழமையானவை என்று அறிய முடிகிறது.
- இந்த ஓவியங்களில் சிவப்பு நிறத்தில் வரையப்பட்ட மூன்று ஆமைகள், ஒரு மீன் மற்றும் ஒரு வடிவியல் உருவம் ஆகியவை காணப்படுகின்றன.
- இந்த ஓவியங்கள் கண்டெடுக்கப்பட்ட பாறைக் குகையானது, இது இடைக் கற்கால மனிதர்களால் வசிப்பிடமாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதைக் குறிக்கிறது.



## இந்தியாவின் முதல் ஈரநில நகரம்

- இராஜஸ்தான் மாநில அரசானது, உதய்பூர் நகரை நாட்டின் முதல் ஈரநில நகரமாக மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.
- உலகளவில் சில நகரங்கள் மட்டுமே இந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.
- இந்த நகரம் ஆனது, பிச்சோலா, ஃபதே சாகர், ரங் சாகர், ஸ்வரூப் சாகர் மற்றும் தூத் தாலை ஆகிய ஐந்து பெரிய ஏரிகளால் சூழப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் தேசிய ஏரிகள் வளங்காப்புத் திட்டத்தின் (NLCP) புனரமைப்புத் திட்டத்தில் உதய்பூர் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளது.
- தற்போது, உலகம் முழுவதும் உள்ள 17 நாடுகளில் 42 ஈரநில நகரங்கள் உள்ளன.
- சீனா அதிக பட்சமாக அத்தகைய 13 ஈர நில நகரங்களைக் கொண்டுள்ளது.

## சரகர்ஹி நினைவிடம் - ஃபெரோஸ்பூர்




- பஞ்சாப் மாநில முதல்வர் அவர்கள் பெரோஸ்பூர் அமைக்கப்படவுள்ள சரகர்ஹி நினைவிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- சரகர்ஹி போர் ஆனது சுமார் 126 ஆண்டுகளுக்கு முன்பு 1897 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- சுமார் 10 ஆயிரம் ஆப்கானி பழங்குடியினருக்கு எதிரான போரில் பிரிட்டிஷ்-இந்திய இராணுவத்தின் 36வது சீக்கியப் படைப்பிரிவைச் சேர்ந்த 21 துணிச்சல் மிக்க வீரர்கள் வீரமரணம் அடைந்தனர்.
- 36வது சீக்கிய படைப்பிரிவு தற்போது இந்திய இராணுவத்தின் 4வது சீக்கிய படைப் பிரிவு என அழைக்கப்படுகிறது.

## இந்தியாவின் முதல் பிராந்திய இரயில் சேவை

- RapidX எனப்படும் இந்தியாவின் முதல் பிராந்திய இரயில் சேவையானது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- டெல்லி-காசியாபாத்-மீரட் பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பின் (RRTS) முன்னுரிமைப் பிரிவின் செயல்பாடுகள் துஹாய் மற்றும் சாஹிபாபாத் இடையே (17-கிலோ மீட்டர் தொலைவு) தொடங்கப்பட்டது.
- இதற்கு நமோ பாரத் எனப் பெயரிடப் பட்டது.
- டெல்லி-மீரட் வழித்தடத்தின் மொத்த நீளம் ஆனது 82 கிலோமீட்டர் ஆகும் என்ற நிலையில் இந்த இரயில் சேவை மூலம் இதனை ஒரு மணி நேரத்தில் கடந்துவிட முடியும்.
- RapidX இரயில் மெட்ரோ இரயில்களைப் போலவே இருக்கும், ஆனால் NCRTC பகிர்ந்துள்ள ஆவணத்தின்படி, RRTS மெட்ரோ இரயிலில் இருந்து முற்றிலும் வேறுபட்டது.
- RRTS இரயில்கள் மணிக்கு 180 கிலோமீட்டர் வேகத்தில் இயங்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ள நிலையில் இது இந்தியாவின் விரைவான நகர்ப்புறப் போக்குவரத்து அமைப்பாக கருதப்படுகிறது.




## காசர்கோடு மாவட்டம் – கேரளா

- காசர்கோடு மாவட்டமானது தனது மாவட்ட நிர்வாகத்திற்கான சொந்த மரம், பூ, பறவை மற்றும் இனங்களை அதிகாரப்பூர்வமாக நியமித்த இந்தியாவின் முதல் மாவட்டமாக மாறியுள்ளது.
- இந்த முடிவானது இப்பகுதியின் வளமான பல்லுயிர்ப்பெருக்கம் மற்றும் இயற்கை பாரம்பரியத்திற்கு ஒரு சான்றாக அமைகிறது.
- இந்த மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ மரம் 'கஞ்சிரம்' (ஸ்டரிக்நாஸ் நக்ஸ்-வோமிகா லின்) ஆகும்.
- இப்பகுதியை பூர்வீகமாகக் கொண்ட வெண்வயிற்று கடல் பருந்து இனம் மாவட்டப் பறவையாகும்.
- காசர்கோடு மாவட்ட நிர்வாகமானது, உள்நாட்டில் 'பீமனமா' என்று அழைக்கப்படும் கேண்டரின் ராட்சத மென் ஓடு கொண்ட ஆமையினை மாவட்ட இனமாகத் தேர்வு செய்துள்ளது.
- மாவட்ட மலராக 'பெரிய பொலதலி' அல்லது கிரினம் மலபாரிகா தேர்வு செய்யப் பட்டு உள்ளது.



## லடாக்கில் உள்ள பவளப்பாறை படிமங்கள்

- கிழக்கு லடாக் இமயமலையில் உள்ள பர்ட்சே என்ற இடத்தில் கடல் மட்டத்திலிருந்து 18,000 அடி உயரத்தில் பவளப்பாறை படிமங்கள் காணப்படுவதைப் புவியியலாளர் கண்டறிந்துள்ளனர்.
- இங்கு கண்டறியப்பட்ட புதைபடிவங்கள் பவளப் பாறை குழுமங்களின் பல்வேறு கட்டமைப்புகளை உள்ளடக்கியது என்பதோடு இது பர்ட்சே பகுதியின் ஆரம்பகால கடல் வாழ் உலகினை உள்ளடக்கிய நிலவியல் பற்றிய ஒரு கண்ணோட்டத்தினை அளிக்கிறது.
- இந்த கண்டுபிடிப்புகள் ஆனது இந்தப் பகுதியில் ஒரு காலத்தில் இருந்ததாகக் கூறப்பட்ட பல்லுயிர் பெருக்கத்தைக் குறிக்கிறது.
- பவளப் பாறைகள் என்பது, கால்சியம் கார்பனேட் கட்டமைப்பினால் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட பவளப்பாறைகளின் குழுமங்களை உள்ளடக்கிய நீரடிச் சூழல் அமைப்பு ஆகும்.



## மகாராஜ் கஞ்ச்



- ஸ்ரீநகர் பொலிவுறு நகர லிமிடெட் மற்றும் கலை மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கான இந்தியத் தேசிய அறக்கட்டளையின் (INTACH) காஷ்மீர் அத்தியாயம் என்ற அமைப்பு காஷ்மீரி கட்டிடக் கலையின் வட்டாரக் கூறுகளைப் பாதுகாப்பதற்காக கை கோர்த்துள்ளன.
- மஹாராஜ் கஞ்ச் சந்தைப் பகுதியானது வட்டார அம்சம் மற்றும் காலனித்துவ கட்டிடக் கலையின் செழுமையான கலவையைக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது 1846 முதல் 1947 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த டோக்ரா இந்து மன்னர்களின் ஆட்சியின் போது காஷ்மீரில் அறிமுகப்படுத்தப்பட்ட அரிய கட்டிடக் கலை கூறுகள் குறித்த தகவல்களை வெளிப்படுத்துகிறது.
- மகாராஜ் கஞ்ச் சந்தையானது ஸ்ரீநகரின் பழைய நகரமான ஷெஹர்-இ-காஸின் மையத்தில் அமைந்துள்ளது.
- காஷ்மீரில் ஆரம்பத்தில் வணிகம் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக என்று மகாராஜா ரன்பீர் சிங் அவர்களால் நிறுவப்பட்டது.
- 1947 ஆம் ஆண்டிற்கு முந்தைய சகாப்தத்தில், இது பிராந்திய எல்லைகளைத் தாண்டி, அமிர்தசரஸ், லாகூர், கராச்சி, ராவல்பிண்டி மற்றும் மத்திய ஆசியாவின் சில பகுதிகளிலிருந்தும் வணிகர்களை ஈர்த்தது.

## வான்வெளி உற்றுநோக்கல் நிகழ்ச்சி 2023



- இந்திய வானியற்பியல் நிறுவனம் (IIA) ஆனது கிழக்கு லடாக்கில் உள்ள ஹான்லே இரவு வான் சரணாலயம் என்ற இடத்தில் முதன்முறையாக அதிகாரப்பூர்வ வான்வெளி உற்றுநோக்கல் நிகழ்ச்சியை நடத்தியது.
- வானியலாளர்கள் தங்கள் தொலைநோக்கிகள் மற்றும் ஒளிப்படக் கருவிகளுடன் ஹான்லேவுக்கு பயணம் செய்து, ஒளி மாசுபாடற்ற இரவு வானத்தைப் படம் பிடித்தனர்.
- ஹான்லே அதன் அழகிய இருண்ட வானம் மற்றும் வறண்ட வானிலைக்காக பிரபலமாக அறியப்படுகிறது.
- இது வானியல் ஆராய்ச்சி மற்றும் வானியல் புகைப்படக்கலைக்கு சிறந்த இடமாக அமைகிறது.
- ஹன்லே இரவு வான் சரணாலயம் (HDSR), தோராயமாக 1,073 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது.
- மனிதனால் உருவாக்கப்படும் ஒளி மாசுபாட்டை கட்டுப்படுத்துவதற்காகவும், அந்தப் பகுதியின் இருண்ட வானத்தின் வளத்தினைக் காப்பதற்காகவும் சமீபத்தில் லடாக் ஒன்றியப் பிரதேசத்தினால் இது அறிவிக்கப்பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## M.S. சுவாமிநாதன்

- M.S. சுவாமிநாதன் என்று அழைக்கப்படும் மான்கொம்பு சாம்பசிவன் சுவாமிநாதன் அவர்கள் சமீபத்தில் காலமானார்.
- அவர் புகழ்பெற்ற வேளாண் அறிவியலாளர் மற்றும் நாட்டின் 'பசுமைப் புரட்சியின்' முக்கிய சிற்பி ஆவார்.
- 1954 ஆம் ஆண்டில், டாக்டர் சுவாமிநாதன் அவர்கள் கட்டாக்கில் அமைந்துள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமாக பின்னர் மாற்றப்பட்ட மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (CRRI) சேர்ந்தார்.
- 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகப் பொறுப்பேற்ற அவர் 1972 ஆம் ஆண்டு வரை அப்பதவியினை வகித்தார்.
- அவர் வேளாண் அமைச்சகத்தின் முதன்மைச் செயலாளராகவும் (1979-80), திட்ட ஆணையத்தின் தற்காலிகத் துணைத் தலைவராகவும், பின்னர் அதன் உறுப்பினராகவும் (அறிவியல் மற்றும் வேளாண்மை) (1980-82) மற்றும் பிலிப்பைன்சில் உள்ள சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை இயக்குநராகவும் (1982-88) பணியாற்றினார்.
- 2004 ஆம் ஆண்டில், அதிகரித்து வரும் விவசாயிகள் தற்கொலைகளுக்கு காரணமான விவசாயிகளின் பல்வேறு துயரங்களைக் கண்டறிவதற்காக என்று அமைக்கப்பட்ட தேசிய விவசாயிகள் ஆணையத்தின் தலைவராக சுவாமிநாதன் நியமிக்கப்பட்டார்.
- 1987 ஆம் ஆண்டில் அவருக்கு முதலாவது உலக உணவுப் பரிசு வழங்கப்பட்டது.


- சுவாமிநாதன் அவர்களுக்கு பத்மஸ்ரீ, பத்ம பூஷன் மற்றும் பத்ம விபூஷன் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- அவர் H K ஃபிரோடியா விருது, லால் பகதூர் சாஸ்திரி தேசிய விருது மற்றும் இந்திரா காந்தி பரிசு ஆகியவற்றையும் பெற்றவர் ஆவார்.
- ரமோன் மகசேசே விருது (1971) மற்றும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் உலக அறிவியல் விருது (1986) உள்ளிட்ட பல சர்வதேச விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.

## சாஸ்த்ரா இராமானுஜன் பரிசு 2023

- அமெரிக்காவின் பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் உதவிப் பேராசிரியரான ருயிசியாங் ஜாங் அவர்களுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான சாஸ்திரா இராமானுஜன் பரிசு வழங்கப்படவுள்ளது.
- இராமானுஜன் அவர்களின் 32 வருட வாழ்க்கையில் அவர் செய்த பல சாதனைகளை குறிக்கும் வகையில் இந்தப் பரிசுக்கான வயது வரம்பு 32 ஆக நிர்ணயிக்கப் பட்டு உள்ளது.
- இந்த விருதானது கும்பகோணத்தில் உள்ள சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தினால் வழங்கப் படுகிறது.



## நோபல் பரிசு - மருத்துவம் அல்லது உடலியல் பிரிவு 2023




- 2023 ஆம் ஆண்டிற்கான உடலியல் அல்லது மருத்துவத்துக்கான நோபல் பரிசு கட்டலின் கரிகோ மற்றும் ட்ரூ வெய்ஸ்மேன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கோவிட்-19 தொற்றிற்கு எதிராக mRNA தடுப்பு மருந்துகளை உருவாக்குவதற்கான அவர்களின் ஆராய்ச்சிக்காக இது வழங்கப்பட்டுள்ளது.

- அவர்களின் கண்டுபிடிப்புகள் ஆனது, "கோவிட்-19 தொற்றிற்கு எதிரான திறன் மிக்க mRNA தடுப்பு மருந்துகளை உருவாக்க உதவிய நியூக்ளியோசைட் தள மாற்றங்கள் தொடர்பானதாகும்".
- mRNA தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட முதல் தடுப்பு மருந்துகளானது கோவிட்-19 தொற்றிற்கு எதிராக ஃபைசர்/பயோஎன்டெக் மற்றும் மாடர்னா ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்டவையாகும்.
- mRNA என்பது மரபணு தகவல்களைக் கொண்டு செல்லும் நியூக்ளிக் அமிலத்தின் ஒரு வடிவமான தூது RNAவினைக் குறிக்கிறது.
- மற்ற தடுப்பு மருந்துகளைப் போலவே, mRNA தடுப்பு மருந்துகளும் நோயெதிர்ப்பு மண்டலத்தைத் தூண்டி, உயிருள்ள வைரஸிலிருந்து உருவாகும் தொற்றுநோயை எதிர் கொள்ள உதவும் ஆன்டிபாடிகளை உருவாக்க முயற்சிக்கிறது.
- mRNA தடுப்பு மருந்துகள் வைரஸ் புரதத்துடன் தொடர்புடைய மரபணுப் பொருளின் ஒரு பகுதியை மட்டுமே அந்தப் பகுதியில் வெளியிடுகின்றன.
- எனவே, mRNA தடுப்பு மருந்துகள் தனிநபர்களை வைரஸ் பாதிப்பிலிருந்து காக்கும்.

## டாடா இலக்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது

- தமிழ் எழுத்தாளர் அம்பை, டாடா இலக்கிய நேரலை நிகழ்ச்சியில் வாழ்நாள் சாதனையாளர் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இந்த விருது இந்தியாவில் எழுத்து மற்றும் இலக்கியத்தில் வழங்கப்படும் நீண்ட கால மற்றும் சிறந்தப் பங்களிப்பை அங்கீகரித்து மரியாதை செலுத்துகிறது.
- முன்னதாக இந்த விருதினைப் பெற்றவர்களில் அனிதா தேசாய், மார்க் டல்லி, அமிதவ் கோஷ், ரஸ்கின் பாண்ட் மற்றும் கிரிஷ் கர்னாட் ஆகியோர் அடங்குவர்.
- இவர் 2021 ஆம் ஆண்டில் சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக சாகித்ய அகாடமி விருதை வென்றார்.
- சிறகுகள் முறியும் என்ற இவரது முதல் சிறுகதைத் தொகுப்பு 1976 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது.




## உலகளாவிய இந்தியர் விருது

- கனடா இந்தியா அறக்கட்டளையின் மதிப்புமிக்க உலகளாவிய இந்தியர் விருது சுதா மூர்த்திக்கு வழங்கப்பட்டுள்ளது.

- இதன் மூலம் இந்த விருதினைப் பெற்ற முதல் பெண்மணி என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- இந்த விருது ஒவ்வோர் ஆண்டும் ஒருவர் தேர்ந்தெடுத்த துறையில் ஒரு முக்கிய சாதனையினைப் பதித்த ஒரு புகழ் பெற்ற இந்தியருக்கு வழங்கப்படுகிறது.
- இவரது கணவர் நாராயண மூர்த்தியும் 2014 ஆம் ஆண்டில் இந்த விருதைப் பெற்று உள்ளார்.

## இயற்பியலுக்கான நோபல் பரிசு 2023



- 2023 ஆம் ஆண்டிற்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு பியர் அகோஸ்டினி, பேரன்க் கிராஸ், அன்னே எல்'ஹுய்லியர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- பருப்பொருளின் மின் இயக்கவியல் ஆய்வுக்காக ஒளியின் அட்டோசெகண்ட் அளவிலான அதிர்வுகளை உருவாக்கும் சோதனை முறைகளுக்காக இது வழங்கப் பட்டுள்ளது.
- இவர்களின் ஆராய்ச்சியானது, அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளுக்குள் உள்ள எலக்ட்ரான்களைப் பற்றி ஆய்வு செய்வதற்கான புதிய கருவிகளை மனிதகுலத்திற்கு வழங்கியுள்ளது.
- எலக்ட்ரான்கள் நகரும் செயல்முறை அல்லது ஆற்றலை மாற்றும் விரைவான செயல்முறைகளை அளவிடப் பயன்படும் ஒளியின் மிகக் குறுகிய துடிப்புகளை (அதிர்வுகளை) உருவாக்குவதற்கான வழிமுறையை அவர்கள் நிரூபித்துக் காட்டி உள்ளனர்.
- இவர்களின் சோதனைகள், மிக குறுகிய காலக்கட்டத்தில், அதாவது அட்டோ செகண்டுகளில் - ஒரு வினாடியின் ($10^{-18}$) குயின்டில்லியந்த், பத்தில் ஒரு பங்கு நேரத்தில் நடக்கும் நுண்ணிய நிகழ்வுகளைக் கண்காணிப்பதற்கு உதவுகிறது.
- பேரண்டம் தோன்றியதில் இருந்து எத்தனை வினாடிகள் இருந்ததோ, அதே அளவு நேரம் ஒரு நொடியில் இருக்கும் அளவிற்கு ஒரு அட்டோசெகண்ட் மிகவும் குறுகியதாக இருக்கும்.
- ஒளியின் இந்த குறுகிய துடிப்புகள் (அதிர்வுகள்) என்பவை அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளுக்குள் நிகழும் இயக்கங்கள் குறித்தப் படங்களை வழங்குவதற்குப் பயன்படுகிறது.

## வேதியியலுக்கான நோபல் பரிசு 2023



- 2023 ஆம் ஆண்டிற்கான வேதியியலுக்கான நோபல் பரிசு மௌங்கி G. பாவெண்டி, லூயிஸ் E. புரூஸ் மற்றும் அலெக்ஸி I. எகிமோவ் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- குவாண்டம் புள்ளிகளைக் கண்டுபிடித்து தொகுத்த இவர்களின் தொகுப்புக்காக என்று அவர்களுக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- 1980 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில், வண்ணப்பூச்சு பூசப்பட்ட கண்ணாடியில் அளவு சார்ந்த குவாண்டம் விளைவுகளை உருவாக்குவதில் டாக்டர் எகிமோவ் வெற்றி பெற்றார்.
- 1983 ஆம் ஆண்டில், டாக்டர் புரூஸ் மற்றும் அவரது சகாக்கள் ஒரு படி மேலே சென்று, கண்ணாடிக்குப் பதிலாக, திரவக் கரைசலில் அது போன்ற படிகங்களைத் உருவாக்கினர்.
- இறுதியாக, 1993 ஆம் ஆண்டில், டாக்டர் பாவேண்டி மற்றும் அவரது சக பணியாளர்கள் இந்த தனித்துவமான அதாவது, குவாண்டம் புள்ளிகள் - நன்கு வரையறுக்கப்பட்ட அளவுகள் மற்றும் உயர் ஒளியியல் தரத்துடன் கூடிய படிகங்களை உருவாக்குவதற்காக ஒரு நுட்பத்தை உருவாக்கினர்.
- இந்த நுண் துகள்கள் மின்னணுவியல், மேம்பட்ட அறுவை சிகிச்சை மற்றும் குவாண்டம் கணினி முறை போன்ற துறைகளில் பரந்த அளவிலான பயன்பாடுகளைக் கொண்டுள்ளன.
- குவாண்டம் புள்ளிகள் சில நானோமீட்டர்கள் அகலம் கொண்ட துகள்கள் ஆகும்.
- அவற்றின் சிறிய அளவு காரணமாக அவை தனித்துவமான ஒளியியல் பண்புகளை கொண்டுள்ளன.
- அவற்றின் அமைப்பு மற்றும் அணுக் கட்டமைப்பு பெரிய அளவிலான பொருட்களைப் போலவே இருக்கும், ஆனால் பெரிய அளவிலான பொருட்களின் பண்புகள் அவற்றின் அளவைப் பொறுத்தது அல்ல.
- குவாண்டம் புள்ளிகள் சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றும் கலன்களில் ஆற்றல் உட்கிரகிப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக வேண்டி ஒளிமின்னழுத்த கலன்களிலும் பயன்படுத்தப்படுகின்றன.

## அமைதிக்கான நோபல் பரிசு 2023


- 2023 ஆம் ஆண்டிற்கான அமைதிக்கான நோபல் பரிசு ஈரானிய ஆர்வலர் நர்கஸ் முகமதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

- இது ஈரானில் நிலவிய பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைக்கு எதிரான அவரது போராட்டம் மற்றும் மனித உரிமைகள் மற்றும் அனைவருக்குமானச் சுதந்திரத்தைப் பெறுவதற்கான அவரது போராட்டத்திற்காக வழங்கப்படுகிறது.
- திருமதி முகமதி தற்போது ஈரானில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.
- அரசினால் விதிக்கப்படும் மரணத் தண்டனைகள் அதிகளவில் பதிவாகும் நாட்டில் மரணத் தண்டனைக்கு எதிராக அவர் போராடி வருகிறார்.
- மொத்தமாக அந்த நாட்டு அரசு அவரை 13 முறை கைது செய்துள்ளது, ஐந்து முறை குற்றவாளி என்று தீர்ப்பளித்துள்ளதோடு மொத்தம் 31 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 154 கசையடிகளையும் வழங்கியுள்ளது.
- சிறையில் அடைக்கப்பட்ட சமூக ஆர்வலர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உதவியதற்காக அவர் 2011 ஆம் ஆண்டில் முதன்முறையாக கைது செய்யப்பட்டார்.
- இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, பிணையில் வெளிவந்த பிறகு, திருமதி முகமதி மரணத் தண்டனையை விதிப்பதற்கு எதிரான பிரச்சாரத்தில் தன்னை ஈடுப்படுத்திக் கொண்டார்.
- இது 2015 ஆம் ஆண்டில் அவரை மீண்டும் கைது செய்ய வழிவகுத்தது.




## இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2023

- இலக்கியத்திற்கான நோபல் பரிசு நார்வே நாட்டினைச் சேர்ந்த எழுத்தாளர் ஜான் ஃபாஸூக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஃபாஸ்ஸூக்கு நோபல் பரிசு " voice to the unsayable" என்ற அவரது புதுமையான நாடக மற்றும் உரைநடை நூலுக்காக வழங்கப்பட்டுள்ளது.
- புகழ்மிக்க நார்வே நாடக எழுத்தாளருக்கு அடுத்தப்படியாக இவர் 'புதிய ஹென்ரிக் இப்சன்' என்று குறிப்பிடப்படுகிறார்.
- அவரது எழுத்து நடைக்காக அவர் பெரும்பாலும் "ஃபாஸ் மினிமலிசம்" (எளிமை) என்று குறிப்பிடப்படுகிறார்.
- அவரது எழுத்துப் பாணியானது எளிமையான, குறுகிய மற்றும் உள்ளார்ந்த உரையாடல், வரைபடங்கள் ஆகியவற்றினைக் கொண்டு வகைப்படுத்தப்படுகிறது.
- ஃபாஸ் அவர்களின் குறிப்பிடத்தக்கப் படைப்புகளில், "A New Name: Septology VI-VII," "I Am the Wind," "Melancholy," "Boathouse," மற்றும் "The Dead Dogs" ஆகியவை அடங்கும்.





## பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு – 2023

- 2023 ஆம் ஆண்டிற்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு ஆனது ஹார்வர்டு பல்கலைக்கழக பேராசிரியை கிளாடியா கோல்டினுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- "பெண்களின் தொழிலாளர் சந்தை முடிவுகள் மற்றும் ஊதிய இடைவெளிகள் பற்றிய நமது புரிதலை மேம்படுத்தியதற்காக" இந்த விருது வழங்கப்படுகிறது.
- கடந்த 200 ஆண்டுகளில் தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்களிப்பை அவரது ஆய்வு வெளிக்கொணர்ந்துள்ளது.
- 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சுமார் 20 சதவீத பெண்கள் மட்டுமே வேலை வாய்ப்பினை பெற்றிருந்தனர் என்று கோல்டினின் ஆய்வு கண்டறிந்துள்ளது.
- ஆனால், இதில் திருமணமான பெண்களின் பங்கு ஐந்து சதவீதம் மட்டுமே ஆகும்.
- "திருமணம் சார்ந்த தடைகள்" எனப்படும் விதி பெரும்பாலும் திருமணமான பெண்கள் ஆசிரியர்களாக அல்லது அலுவலக ஊழியர்களாக வேலை செய்வதைத் தடுக்கிறது என்று கோல்டின் குறிப்பிட்டார்.
- கோல்டினின் ஆராய்ச்சியானது பெண் தொழிலாளர் வளம், வருவாயில் உள்ள பாலினம் சார்ந்த இடைவெளி, வருமான சமத்துவமின்மை, தொழில்நுட்ப மாற்றம், கல்வி மற்றும் புலம் பெயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியது.
- 2009 ஆம் ஆண்டில் எலினோர் ஆஸ்ட்ரோம் மற்றும் 2019 ஆம் ஆண்டில் எஸ்தர் டஃப்லோ ஆகிய இரண்டு பெண்களைத் தொடர்ந்து பொருளாதார அறிவியலுக்கான பரிசு மூன்றாவதாக கோல்டினுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு ஆனது 1895 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஆல்ஃபிரட் நோபல் பரிசின் ஒரு பகுதி அல்ல.
- பொருளாதார அறிவியல் விருது ஆனது சுவீடனின் மத்திய வங்கியால் 1968 ஆம் ஆண்டில் தான் சேர்க்கப்பட்டது.



## இந்தியாவின் முதல் செவித்திறன் குறைபாடுள்ள வழக்கறிஞர்

- சாரா சன்னி என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக நியமிக்கப் பட்டதை அடுத்து இந்தியாவின் முதல் செவித்திறன் குறைபாடுள்ள வழக்கறிஞர் என்ற ஒரு வரலாற்றினைப் படைத்துள்ளார்.
- நீதிமன்ற வரலாற்றில் முதன்முறையாக செல்வி சன்னி அவர்களுக்காக என்று அவரது உரைப் பெயர்ப்பாளரை நீதிமன்றம் நியமித்துள்ளது.
- முன்னதாக, செவித்திறன் குறைபாடுள்ள வழக்கறிஞர் சௌதாமினி பெத்தே என்பவருக்கு ஒரு வழக்கில் வாதாடுவதற்காக டெல்லி உயர்நீதிமன்றமானது அனுமதி அளித்து முன்னோடியாக உள்ளது.



**SILENT HEARING**

➤ Advocate-on-record Sanchita Ain makes unusual request to a CJI-led bench — deaf advocate Sarah Sunny be permitted to **virtually argue a case** concerning rights of PwDs **with help of sign language interpreter**

➤ **CJI agrees** & Sarah and interpreter Saurav Roychowdhury log in

➤ When the case is called out, duo do a rapid tango of **silent sign language converted to arguments**

## இராணி துர்காவதியின் 500வது பிறந்தநாள்

- இராணி துர்காவதி அவர்களின் 500வது பிறந்தநாளானது அக்டோபர் 05 ஆம் தேதி அன்று மத்திய அரசினால் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.
- மத்தியப் பிரதேசத்தின் ஜபல்பூரில் அவருக்குப் பிரம்மாண்டமான நினைவிடத்தினை அமைப்பதற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.
- அவரது நினைவாக தபால் தலை மற்றும் வெள்ளி நாணயம் ஆகியவை வெளியிடப் பட்டன.

- அவர் 16 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கோண்டுவானாவின் இராணியாக ஆட்சி செய்தார்.
- 1548 ஆம் ஆண்டில் அவரது கணவர் தல்பத் ஷா மறைந்ததையடுத்து இராணி துர்காவதி அவர்கள் அப்பேரரசினை ஆட்சி செய்தார்.
- அவர் ரானிடால், செரிட்டால், அதர்தால் போன்ற நீர்த்தேக்கங்களைக் கட்டமைத்து உள்ளார்.




## சரஸ்வதி சம்மான் 2022

- தமிழ் எழுத்தாளர் சிவசங்கரி அவர்களுக்கு சூர்ய வம்சம் என்ற நினைவுப் புத்தகத்திற்காக 2022 ஆம் ஆண்டு ‘சரஸ்வதி சம்மான்’ விருது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது K.K. பிர்லா அறக்கட்டளையினால் நிறுவப் பட்டது.
- இவர் 36 புதினங்கள், 48 குறு புதினங்கள், 150 சிறுகதைகள், ஐந்து பயணக் கட்டுரைகள், ஏழு கட்டுரைத் தொகுப்புகள் மற்றும் மூன்று சுயசரிதைகளை எழுதியுள்ளார்.
- சரஸ்வதி சம்மான் விருதானது, ஆண்டுதோறும் வழங்கப்படும் மிகவும் மதிப்புமிக்க விருதுகளில் ஒன்றாகும்.
- கடந்த 10 ஆண்டுகளில் இந்திய அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் சேர்க்கப் பட்டுள்ள மொழிகளில் ஏதேனும் ஒன்றில் வெளியிடப்பட்ட இந்தியக் குடிமகனின் சிறந்தவொரு இலக்கியப் படைப்பிற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.
- இதுவரை 32 விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

## முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் - MS கில்

- முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் மனோகர் சிங் கில் சமீபத்தில் காலமானார்.
- அவர் 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை இந்திய தலைமை தேர்தல் ஆணையராக பணியாற்றி ஓய்வு பெற்றார்.

- அவர் தலைமை தேர்தல் ஆணையராகப் பணியாற்றிய போது தான், இந்தியத் தேர்தல் ஆணையம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை (EVM) அறிமுகப்படுத்தியது.
- அவர் ஓய்வு பெற்ற பிறகு, இந்தியத் தேசிய காங்கிரஸில் இணைந்த அவர் 2004 முதல் 2016 ஆம் ஆண்டு வரை மாநிலங்களவையில் பஞ்சாப் மாநிலப் பிரதிநிதியாகப் பணியாற்றி வெற்றிகரமாக இரண்டு முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்து உள்ளார்.
- அரசியலில் இணைந்த முதல் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் இவரே ஆவார்.
- அந்தக் காலகட்டத்தில், அவர் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் மற்றும் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சராக பணியாற்றினார்.
- கில் அவர்களுக்கு, தலைமைத் தேர்தல் ஆணையராக ஆற்றியப் பங்களிப்பிற்காக பத்ம விபூஷண் விருதும், கால்சா பந்தின் 300வது ஆண்டு விழாவில் 'நிஷான்-இ-கல்சா' விருதும் வழங்கப்பட்டது.

## கேம்ப்ரியன் ரோந்து இராணுவப் பயிற்சி

- சர்வதேச ராணுவப் பயிற்சி போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்று இந்திய இராணுவமானது தனது தனித்துவமான ராணுவத் திறமையினைச் சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தியுள்ளது.
- வேல்ஸில் உள்ள பிரித்தானிய ராணுவத்தின் தலைமையகமான ப்ரெகானை தளமாகக் கொண்ட 160வது (வெல்ஷ்) படைப்பிரிவினால் இந்த நிகழ்ச்சியானது ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.
- 1959 ஆம் ஆண்டு முதல் முன்னாள் கேம்ப்ரியன் ரோந்துப் பயிற்சியானது ஆண்டு தோறும் நடத்தப் படுவதோடு உலகம் முழுவதும் உள்ள ராணுவக் கூட்டாண்மை நாடுகளும் கலந்து கொண்டு சிறப்பிக்கிறது.
- இது நேட்டோவால் நடத்தப்படும் கடினமான ரோந்து சோதனைப் பயிற்சி என்று குறிப்பிடப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிலும், இங்கிலாந்தில் நடைபெற்ற இதே நிகழ்ச்சியில் இந்திய ராணுவமானது தங்கப் பதக்கத்தினை வென்றது.

## இந்தியா சிறந்த நகரங்களுக்கான மாநாடு 2023

- 2023 ஆம் ஆண்டு இந்தியாவின் பொலிவுறு நகரங்களுக்கான மாநாடானது இந்தூரில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்தூர் நகரமானது 'சிறந்த பொலிவுறு நகரம்' என்ற மதிப்புமிக்க கௌரவத்தைப் பெற்றது.
- இந்தியாவின் சிறந்த நகரங்களுக்கான விருதுகளில் குஜராத்தின் சூரத் இரண்டாவது இடத்தையும், உத்தரபிரதேசத்தின் ஆக்ரா மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.
- இம்மாநாட்டில் நாட்டின் சிறந்த மாநிலமாக மத்தியப் பிரதேசம் ஆனது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இதில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

- ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை இணைந்து இதில் மூன்றாவது இடத்தைப் பிடித்தன.
- நிதிச் செயல்பாடுகள், மாதிரிச் சாலைகள், ஏரிகள் புனரமைப்பு ஆகிய செயல்பாடுகளில் சிறப்பாகச் செயலாற்றியதற்காக மூன்று முதல் பரிசுகளை கோயம்புத்தூர் மாநகராட்சியானது பெற்றுள்ளது.
- கலாச்சார மேம்பாடு மற்றும் நகரத்தின் வரலாற்றைப் பேணுதல் தொடர்பான திட்டங்களுக்காக மூன்றாம் பரிசினை தஞ்சாவூர் மாநகராட்சியானது பெற்றுள்ளது.
- பள்ளிகளை எண்ம மயமாக்கியதற்காக தூத்துக்குடி மாநகராட்சிக்கு மூன்றாம் பரிசானது கிடைத்துள்ளது.

## பிஷன் சிங் பேடி

- இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவரும், சுழற்பந்து வீச்சு ஜாம்பவானும் ஆன பிஷன் சிங் பேடி சமீபத்தில் காலமானார்.
- அவர் 1967 மற்றும் 1979 ஆகிய ஆண்டுகளுக்கு இடையிலான அவரது 12 வருட தொழில் முறை வாழ்க்கையில் 67 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.
- 22 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் தலைவராகவும் இருந்த இவர், 1975 ஆம் ஆண்டில் கிழக்கு ஆப்பிரிக்கா அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் முதல் முறையாக பங்கேற்ற இந்திய அணியில் பங்கேற்று விளையாடினார்.
- 1976 ஆம் ஆண்டில் பேடி இந்திய அணியின் அணித் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- அவர் 1970 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதினைப் பெற்றார்.


## உலக காபி மாநாடு 2023

- 2023 ஆம் ஆண்டு உலக காபி மாநாடு & கண்காட்சி முதல் முறையாக ஆசியாவில் பெங்களூரு நகரில் நடைபெற்றது.
- இந்நிகழ்வின் 5வது பதிப்பு ஆனது இந்திய காபி வாரியத்துடன் இணைந்து சர்வதேச காபி அமைப்பினால் (ICO) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- 5வது உலக காபி மாநாடு & கண்காட்சியின் அதிகாரப் பூர்வ உருவச் சின்னமான காபி சுவாமி, இந்தியப் பாரம்பரியத்தைச் சமகால அம்சங்களுடன் இணைக்கும் வகையில் உள்ளது.




## SBSTTA 25 மற்றும் COP-15

- உயிரியல் பன்முகத்தன்மை மீதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ள உறுப்பினர் நாடுகளின் பதினைந்தாவது சந்திப்பு (COP 15) மற்றும் அறிவியல், தொழில் நுட்பம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் (SBSTTA 25) தொடர்பான துணை அமைப்பின் 25வது சந்திப்பு ஆகியவை கென்யாவின் தலைநகரான நைரோபியில் நடைபெற்றன.
- இந்தக் குழுவின் 25வது மாநாடானது, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தக் கட்டமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு நடைபெறும் முதல் சந்திப்பாகும்.
- இந்த சந்திப்பில் பங்கேற்பதற்காக 135 நாடுகளிலிருந்து சுமார் 670 பங்கேற்பாளர்கள் நைரோபி வந்தடைந்தனர்.





## சர் சையத் அகமது கான் பிறந்தநாள்



- சர் சையது அகமது கான், சமூக முன்னேற்றத்திற்கான பல்வேறு சீர்திருத்தங்களைப் பரிந்துரைப்பதிலும், இஸ்லாமியர்களிடையே நவீனக் கல்வியின் முக்கியத்துவத்தை பிரச்சாரம் செய்வதிலும் புகழ் பெற்றவர் ஆவார்.
- அவர் 1864 ஆம் ஆண்டில் காசிபூரில் அறிவியல் சங்கத்தை நிறுவினார்.
- அவர் இஸ்லாமியர்களிடையே நவீனச் சிந்தனைகள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக 1870 ஆம் ஆண்டில் தஹ்சிப்-உல்-அக்லாக் என்ற புகழ்பெற்ற மாத இதழினையும் தொடங்கினார்.
- 1875 ஆம் ஆண்டில் அவர் ஏழு மாணவர்களைக் கொண்டு, பின்னர் அலிகார் இஸ்லாமிய பல்கலைக் கழகம் என்று அழைக்கப்படுகின்ற மதரஸா-துல்-உலூம் எனப்படும் (AMU) கல்வி நிறுவனத்திற்கான அடித்தளத்தினை அமைத்தார்.
- 1877 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் தேதியன்று முகமதிய ஆங்கிலோ-ஓரியண்டல் (MAO) கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- 1920 ஆம் ஆண்டில் இந்தக் கல்லூரியானது அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகமாக மாற்றம் செய்யப்பட்டுப் பல்கலைக்கழக அந்தஸ்தினை அடைந்தது.

## UNTOC அமைப்பின் 20வது ஆண்டு விழா

- பன்னாட்டு குழுக் குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையின் (UNTOC) 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இத்தாலியில் உள்ள பலேர்மோ நகரில் இரண்டு நாட்கள் அளவிலான மாநாடு நடத்தப் பட்டது.
- UNTOC என்பது பன்னாட்டு குழுக் குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் நிதியுதவி பெற்ற பலதரப்பு ஒப்பந்தமாகும்.
- 2000 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஒரு தீர்மானத்தின் மூலம் இந்த உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்தியா 2002 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதியன்று இணைந்தது.
- இந்த உடன்படிக்கையானது 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.



### உலக ஆசிரியர் பரிசு 2023



- மேற்கு வங்காளத்தின் அசன்சோல் பகுதியினைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் தீப் நாராயண் நாயக், 2023 ஆம் ஆண்டிற்கான உலக ஆசிரியர் பரிசுக்கான முதல் 10 இறுதிப் போட்டியாளர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- உலக ஆசிரியர் பரிசு ஆனது மகத்தான கல்வியாளர்களை அங்கீகரிப்பதோடு, அந்தத் துறையில் அவர்கள் ஆற்றிய சிறந்தப் பங்களிப்புகளுக்காக 1 மில்லியன் டாலர் பரிசுத் தொகை வழங்கி அவர்களை கௌரவிக்கிறது.
- திரு நாயக் அவர்கள் மண் சுவர்களைக் கரும்பலகைகளாகவும், சாலைகளை வகுப்பறைகளாகவும் மாற்றி, கல்வி கற்பதிலிருந்து விடுபட்ட குழந்தைகளுக்கு கல்வி அளித்தார்.
- கல்வியறிவின்மை சுழற்சியை முறியடிக்கும் பெரும் குறிக்கோளுடன் பெற்றோருக்கு, குறிப்பாக தாய்மார்கள் மற்றும் பாட்டிகளுக்கு என்று கல்வி கற்பிப்பதற்கான பல முயற்சிகளையும் அவர் மேற்கொண்டார்.

## விளையாட்டுச் செய்திகள்

### ஆசிய விளையாட்டுப் போட்டிகள் - மகளிர் கிரிக்கெட் போட்டி 2023

- இந்திய மகளிர் அணியானது இறுதிப் போட்டியில் இலங்கை மகளிர் அணியினை வீழ்த்தி தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய அணி பெற்ற இரண்டாவது தங்கப் பதக்கம் இதுவாகும்.
- பதக்கம் வென்ற நாடுகள்
    - இந்தியா அணி - தங்கம்
    - இலங்கை அணி - வெள்ளி
    - வங்காளதேசம் - வெண்கலம்

## இந்திய கிராண்ட் பிரிக்ஸ் போட்டி 2023

- 2023 ஆம் ஆண்டு மோட்டோஜிபி போட்டித் தொடரின் தொடக்க இந்திய கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் இத்தாலியப் பந்தைய வீரர் மார்கோ பெஸ்செச்சி வெற்றி பெற்றுள்ளார்.
- ஜார்ஜ் மார்ட்டின் இதில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.
- யமஹா நிறுவனம் சார்பாக பங்குபெற்ற ஃபேபியோ குவார்டராரோ மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

## ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023

- சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் மகளிருக்கான 25 மீட்டர் (துப்பாக்கிச் சுடுதல்) பிஸ்டல் குழு போட்டியில் மனு பாக்கர், இஷா சிங் மற்றும் ரிதம் சங்வான் ஆகிய மூன்று இந்திய வீராங்கனைகள் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.
- இஷா சிங் தலைமையிலான மகளிர் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் மூவர் அணியானது வெள்ளிப் பதக்கத்தினை வென்றனர்.
- இந்த கண்ட அளவிலான துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியா ஒன்பது தங்கம் உட்பட மொத்தம் 58 பதக்கங்களை வென்றுள்ளது.

## வித்யா ராம்ராஜ் - தேசிய சாதனை

- ஓட்டப் பந்தய வீராங்கனை வித்யா ராம்ராஜ், 400 மீட்டர் தடை ஓட்டத்தில் P.T. உஷாவின் தேசிய சாதனையை சமன் செய்தார்.
- அவர் சீனாவின் ஹாங்சூவில் நடைபெற்ற 2022 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 400 மீட்டர் தடை ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.
- அவர் அந்தத் தூரத்தினை 55.42 வினாடிகளில் கடந்து முதல் ஐந்து தடகள வீராங்கனைகளில் ஒருவராக இடம் பிடித்தார்.
- 1984 ஆம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 55.42 வினாடிகள் என்ற சாதனையினை உஷா படைத்திருந்தார்.



## ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023

Competition Medal Count

All Sports | All Medallists | Search

| Rank | Team/NOC | Gold | Silver | Bronze | Total | Rank by Total |
|---|---|---|---|---|---|---|
| 1 | People's Republic of China | 187 | 104 | 63 | 354 | 1 |
| 2 | Japan | 47 | 57 | 65 | 169 | 3 |
| 3 | Republic of Korea | 36 | 50 | 85 | 171 | 2 |
| 4 | India | 25 | 35 | 40 | 100 | 4 |
| 5 | Uzbekistan | 20 | 18 | 26 | 64 | 6 |
| 6 | Chinese Taipei | 17 | 17 | 25 | 59 | 7 |
| 7 | Democratic People's Republic of Korea | 11 | 18 | 10 | 39 | 11 |

- தற்போது நடைபெற்று வரும் 19வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா முன்னெப்போதும் எட்டாத வகையில் 100 பதக்கங்களை வென்று ஒரு முக்கியமான சாதனையைப் படைத்துள்ளது.
- இந்தியா இதுவரை 25 தங்கப் பதக்கங்கள், 35 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 40 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.
- இந்தியாவின் மகளிர் கபடி அணி சமீபத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சீன தைபே அணியினை வீழ்த்தி தங்கம் வென்றதன் மூலம் 100வது பதக்கம் என்ற இலக்கை எட்டியது.
- தடகளம் (29 பதக்கங்கள்) மற்றும் துப்பாக்கி சுடுதல் (22) ஆகியவை இந்தியாவின் இந்தப் புகழ்மிக்க சதத்திற்கு மிகப்பெரியப் பங்களிப்பை அளித்துள்ளன.
- ஒலிம்பிக், காமன்வெல்த் விளையாட்டு மற்றும் ஆசிய விளையாட்டு ஆகிய மூன்று பெரிய விளையாட்டுகளில் இந்தியா 100 பதக்கங்களுக்கு மேல் வென்றது இது இரண்டாவது முறையாகும்.
- 2010 ஆம் ஆண்டில் புது டெல்லியில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்தியா 101 பதக்கங்களை வென்றிருந்தது.

## ஒருநாள் கிரிக்கெட்டில் 3000 சிக்ஸர்கள்

- இந்தூர் நகரில் நடைபெற்ற ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 3000 சிக்சர்களுக்கு மேல் அடித்துள்ளது.
- இதன்மூலம் ஒருநாள் போட்டியில் 3000 சிக்சர்களை அடித்த முதல் அணி என்ற பெருமையை இந்தியா பெற்றது.
- மேற்கிந்திய தீவுகள் அணியானது 2953 சிக்ஸர்களுடன் இரண்டாவது இடத்திலும், பாகிஸ்தான் அணியானது 2566 சிக்ஸர்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

| Team Name | Number Of Sixes Hit In ODIs |
|---|---|
| India | 3007+ |
| West Indies | 2953+ |
| Pakistan | 2566+ |
| Australia | 2476+ |
| New Zealand | 2387+ |
| England | 2032+ |
| South Africa | 1947 |
| Sri Lanka | 1779+ |

## 19வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் சாதனை

| Rank | Team/NOC | | | | Total | Rank by Total |
|---|---|---|---|---|---|---|
| 1 | People's Republic of China | 196 | 108 | 70 | 374 | 1 |
| 2 | Japan | 49 | 63 | 68 | 180 | 3 |
| 3 | Republic of Korea | 39 | 57 | 89 | 185 | 2 |
| 4 | India | 28 | 38 | 41 | 107 | 4 |
| 5 | Uzbekistan | 21 | 18 | 30 | 69 | 6 |
| 6 | Chinese Taipei | 18 | 19 | 28 | 65 | 7 |
| 7 | Islamic Republic of Iran | 13 | 20 | 19 | 52 | 10 |
| 8 | Thailand | 12 | 14 | 31 | 57 | 8 |
| 9 | Democratic People's Republic of Korea | 11 | 18 | 10 | 39 | 11 |
| 10 | Bahrain | 11 | 3 | 5 | 19 | 16 |
| 11 | Kazakhstan | 10 | 20 | 45 | 75 | 5 |
| 12 | Hong Kong, China | 8 | 16 | 29 | 53 | 9 |
| 13 | Indonesia | 7 | 11 | 18 | 36 | 12 |

- 2023 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய அணி ஒட்டு மொத்தப் பதக்கப் பட்டியலில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.
- கடந்த 60 ஆண்டுகளில், நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் போட்டியில் இந்தியாவின் மிக அதிகப் பதக்கக் குவிப்பு இதுவாகும்.
- இந்திய அணியானது 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கலம் என 107 பதக்கங்களுடன் இந்தப் பதக்கப் பட்டியலில் இடம் பிடித்தது.
- ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஒற்றைப் போட்டியில் 100 அல்லது அதற்கு மேற்பட்ட பதக்கங்களை வென்ற சீனா, ஜப்பான் மற்றும் கொரியக் குடியரசு ஆகிய நாடுகளுக்குப் பிறகு இந்தப் பதக்கப் பட்டியலில் இடம் பெற்ற நான்காவது நாடாக இந்தியா ஆனது.
- 1962 ஆம் ஆண்டில் ஜகார்த்தாவில் நடைபெற்ற போட்டியில் இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்ததற்குப் பிறகு, தற்போது இந்திய அணி இந்தத் தரவரிசையில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.

- ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சிராக் ஷெட்டி மற்றும் சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி ஜோடி பேட்மிண்டன் போட்டியில் தனது முதல் தங்கப் பதக்கத்தை வென்றது.
- இந்திய ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் அணிகளும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்களது முதல் பங்கேற்பில் தங்கள் முதல் தங்கப் பதக்கங்களை வென்று உள்ளன.

## லாஸ் ஏஞ்சல்ஸ் - ஒலிம்பிக் போட்டி 2028

- 2028 ஆம் ஆண்டில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் போட்டியும் சேர்க்கப்பட உள்ளது.
- ஐந்து ஆண்டுகளில், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் சேர்ப்பதற்காக ஐந்து விளையாட்டுப் போட்டிகள் @LA28 ஒழுங்கமைப்புக் குழுவால் முன்மொழியப் பட்டுள்ளன.
  - பேஸ்பால்-மென்பந்து
  - கிரிக்கெட்
  - கொடி கால்பந்து
  - லாக்ரோஸ்
  - ஸ்குவாஷ்
- 1900 ஆம் ஆண்டில் பாரீசு நகரில் நடைபெற்ற ஒரே ஒரு ஒலிம்பிக் போட்டியில் மட்டுமே கிரிக்கெட் போட்டி விளையாடப்பட்டுள்ள நிலையில், இதன் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து மற்றும் பிரான்சு ஆகிய அணிகள் மோதின.

## மராத்தான் உலக சாதனை

- கென்யா நாட்டினைச் சேர்ந்த கெல்வின் கிப்டம் சமீபத்தில் நடைபெற்ற சிகாகோ மராத்தான் ஆடவர் போட்டியில் பட்டத்தை வென்று உலக சாதனை படைத்துள்ளார்.
- அவர் ஓட்டப் பந்தயத்தை இரண்டு மணி நேரம் 35 வினாடிகள் என்ற வகையில் ஒரு அதிகாரப் பூர்வமற்ற நேரக் கணக்கில் நிறைவு செய்தார்.
- 2022 ஆம் ஆண்டு பெர்லின் மாரத்தான் போட்டியில் 2:01:09 என்ற நேரத்தில் பந்தயத்தினை நிறைவு செய்து வெற்றி பெற்ற கென்யா நாட்டினைச் சேர்ந்த எலியுட் கிப்சோஜ் என்பவரின் பழைய உலக சாதனையை இவர் முறியடித்துள்ளார்.
- பழைய சிகாகோ மராத்தான் சாதனையானது 2013 ஆம் ஆண்டில் 2:03:45 என்ற நேரக் கணக்கில் கென்யா நாட்டினைச் சேர்ந்த டென்னிஸ் கிமெட்டோ என்பவரால் நிகழ்த்தப் பட்டது.
- நெதர்லாந்து நாட்டு ஓட்டப் பந்தய வீராங்கனையான சிஃபான் ஹசன் சிகாகோ மராத்தான் மகளிர் போட்டியில் இரண்டு மணி நேரம், 13 நிமிடங்கள் மற்றும் 44 வினாடிகள் ஒரு அதிகாரப் பூர்வமற்ற நேரக் கணக்கில் நிறைவு செய்து பட்டத்தினை வென்றார்.
- மராத்தான் போட்டியின் வரலாற்றில் எத்தியோப்பியன் டிஜிஸ்ட் அசெபாவுக்குப் பிறகு அதிவிரைவான நேரத்தில் பந்தயத்தினை நிறைவு செய்த இரண்டாவது பெண்மணி இவர் ஆவார்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச முதியோர் தினம் - அக்டோபர் 01

- நமது சமூகத்தில் முதியோர்களின் மதிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அவர்களின் பங்களிப்புகளுக்காக வேண்டி நமது மரியாதையினைத் தெரிவிப்பதும் இந்த நாளின் நோக்கமாகும்.
- முதியோர்களின் நல்வாழ்வு, கண்ணியம் மற்றும் உரிமைகளை ஆதரிக்கும் பல்வேறு கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஒரு அவசியத்தை நினைவூட்டுவதாக இந்த அனுசரிப்பு மேற்கொள்ளப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "உலகளாவிய முதியோர் மனித உரிமைகள் பிரகடனத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்தல் : அனைத்து தலைமுறைகளிலும்" என்பதாகும்.

## சர்வதேச காபி தினம் - அக்டோபர் 01

- சிறந்த காபி கொட்டைகளைப் பயிரிடுவதற்காக இரவு பகலாகப் பணியாற்றும் காபி விவசாயிகளை மதிப்பதையும் கௌரவிப்பதையும் நினைவூட்டும் விதமாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது காபியின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தையும், நிலையான காபி உற்பத்தி நடைமுறைகள் பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "காபி விநியோகச் சங்கிலியில் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச்சூழலுக்கான முக்கிய உரிமையை ஊக்குவித்தல்" என்பதாகும்.

## உலக சைவ தினம் - அக்டோபர் 01

- சைவ உணவின் நன்மைகள் மற்றும் இயற்கை வளங்கள் மீதான தேவை சுருங்குவதில் அது எவ்வாறு முக்கியப் பங்கு வகிக்கிறது என்பது பற்றிய விழிப்புணர்வை பரப்பச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது 1977 ஆம் ஆண்டில் வட அமெரிக்க சைவச் சங்கத்தால் நிறுவப் பட்டு 1978 ஆம் ஆண்டில் சர்வதேச சைவ ஒன்றியத்தால் அங்கீகரிக்கப்பட்டது.
- உலக மக்கள்தொகையில் சுமார் 22% பேர் சைவ உணவு உண்பவர்கள் மற்றும் இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் 38% பேர் இறைச்சி சாரா உணவு முறையினைப் பின்பற்றுகிறார்கள்.

## சர்வதேச இசை தினம் - அக்டோபர் 01

- இந்தத் தினமானது பல்வேறு உலக கலாச்சாரங்களுக்கிடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கிறது.
- இது 1975 ஆம் ஆண்டு இதே நாளில் தான் முதன்முதலில் கொண்டாடப் பட்டது.

- 1949 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ அமைப்பானது இசை துறை குறித்த ஆலோசனை வழங்குவதற்காக சர்வதேச இசை சபை என்ற ஆலோசனைக் குழுவை நிறுவியது.
- உலக இசை தினம் ஜூன் 21 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.

## சர்வதேச அகிம்சை தினம் - அக்டோபர் 02

- 2007 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது காந்தி அவர்களின் கொள்கைகளுக்கு மரியாதை அளிக்கும் வகையில் இந்த நாளினை நியமித்தது.
- இந்த நாள் "கல்வி மற்றும் பொது விழிப்புணர்வு மூலம் அகிம்சை செய்தியை பரப்பச் செய்வதற்கான" ஒரு நிகழ்வாகும்.
- இது "உலகளவில் பொருந்தும் அகிம்சை கொள்கை" மற்றும் "அமைதி, சகிப்புத்தன்மை, புரிதல் மற்றும் அகிம்சை ஆகியவற்றின் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்கான" அதன் விருப்பத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.
- மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அவர்கள் 1869 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதி குஜராத்தின் போர்பந்தர் எனுமிடத்தில் பிறந்தார்.
- 1930 ஆம் ஆண்டில், காந்தி அவர்கள் டைம் இதழால் ஆண்டின் சிறந்த நபராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## உலகப் பண்ணை விலங்குகள் தினம் - அக்டோபர் 02

- இது பண்ணை விலங்குகளைத் துன்புறுத்துதல் மற்றும் அதனைத் தவறான முறையில் கையாளுதல் ஆகியவற்றினை தடுக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது.
- இந்த நாளின் அனுசரிப்பானது சர்வதேசப் பண்ணை விலங்கு உரிமை இயக்கத்தின் ஒரு பகுதியாக 1983 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- பண்ணை விலங்குகளை மிருகத்தனமான முறையில் படுகொலை செய்வது உட்பட, நீண்டகாலமாக அவை எதிர்கொள்ளும் துன்பங்கள் மற்றும் கடுமையான சூழ்நிலைமைகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு தளமாக இது செயல் படுகிறது.

## உலக வாழ்விட தினம் - அக்டோபர் 02

- ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமையன்று உலக வாழ்விட தினம் கொண்டாடப்படுகிறது.
- நமக்கென்று ஒரு வசிப்பிடம் அல்லது சொந்த வீடு இருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவற்றின் முக்கியமான அம்சங்களைப் பற்றி விவாதிக்கவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- 1986 ஆம் ஆண்டில், கென்யாவின் நைரோபியில் முதல் உலக வாழ்விட தினம் கொண்டாடப் பட்டது.
- அந்த ஆண்டு உலக வாழ்விட தினத்தின் கருத்துரு “வாழ்விடம் எனது உரிமை” என்பது ஆகும்.

## உலக விண்வெளி வாரம் - அக்டோபர் 04/10

- விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்களிப்பை நன்குச் சிறப்பிக்கும் வகையில் இந்த வார அளவிலான கொண்டாட்டம் அனுசரிக்கப்படுகிறது.
- 1957 ஆம் ஆண்டு அக்டோபர் 04 ஆம் தேதியன்று, மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் புவி செயற்கைக் கோள் ஸ்புட்னிக் 1 விண்ணில் ஏவப்பட்டது.
- 1967 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதியன்று, நிலவு மற்றும் பிற வானியல் அமைப்புகளை உள்ளடக்கிய விண்வெளியை அமைதியான முறையில் பயன்படுத்தச் செய்வதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இது "விண்வெளியின் மகா சாசனம்" என்றும் அழைக்கப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டு உலக விண்வெளி வாரத்தின் கருத்துரு, "விண்வெளி மற்றும் தொழில் முனைவு" என்பதாகும்.




## உலக இயற்கை தினம் - அக்டோபர் 03

- இந்த நாள் உலக இயற்கை அமைப்பினால் (WNO) நிறுவப்பட்டது.
- பருவநிலை மாற்றம் காரணமாக நமது சுற்றுச்சூழல் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'காடுகள் மற்றும் வாழ்வாதாரங்கள்: மக்களின் வாழ்வினையும் கிரகத்தையும் நிலை நிறுத்துதல்' என்பதாகும்.

## உலக விலங்குகள் நல தினம் - அக்டோபர் 04

- இந்த நாள் உலகம் முழுவதும் விலங்கு உரிமைகள் மற்றும் நலனைக் கொண்டாடச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் விலங்குகள் நல இயக்கத்தை ஒன்றிணைத்து, உலகினை அனைத்து விலங்குகளுக்கும் சிறந்ததாக விளங்கும் வகையில் அதனை மாற்றச் செய்வதற்கான ஒரு உலகளாவிய சக்தியாக அணி திரட்டுகிறது.
- 2023 ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "பெரியதோ சிறியதோ, அனைத்து வித விலங்குகளையும் நாம் நேசிப்போம்" என்பதாகும்.

## உலக ஆசிரியர் தினம் - அக்டோபர் 05

- ❖ இந்த நாள் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பேராசிரியர்களின் உள்ளிட்ட கல்வியாளர்களை அங்கீகரித்துக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ஆசிரியர்களின் நிலை தொடர்பான 1966 ஆம் ஆண்டு சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு மற்றும் யுனெஸ்கோ அமைப்பு ஆகியவற்றின் ஒரு பரிந்துரையை ஏற்றுக் கொண்டதன் ஆண்டு நிறைவை இது குறிக்கிறது.
- ❖ 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நமக்கான கல்விக்கு அவசியமான ஆசிரியர்கள்: ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான உலகளாவிய நடவடிக்கைக்கான அவசியம்" என்பதாகும்.
- ❖ இந்த தினம் 1994 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப் படுகிறது.

## தேசிய வனவிலங்கு வாரம் 2023 – அக்டோபர் 02/08

- ❖ இந்தியாவில் வனவிலங்குப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த வார அளவிலான அனுசரிப்பு மேற்கொள்ளப் படுகிறது.
- ❖ இந்திய வனவிலங்கு வாரியமானது, 1952 ஆம் ஆண்டில் இந்த கருத்தாக்கத்தை முதன் முதலில் உருவாக்கியது.
- ❖ 2023 ஆம் ஆண்டிற்கான இந்த அனுசரிப்பிற்கான கருத்துரு, “வனவிலங்குப் பாதுகாப்பிற்கான கூட்டாண்மை” என்பதாகும்.
- ❖ இது 1957 ஆம் ஆண்டில் ஒரு வார கால அளவிலான கொண்டாட்டமாக உருவானது.

## மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் – அக்டோபர் 01/31





- ❖ இந்த வருடாந்திர சர்வதேச சுகாதாரப் பிரச்சாரமானது, இந்த நோயைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதையும், அதற்கான காரணம், தடுப்பு, நோயறிதல், சிகிச்சை மற்றும் நலமடைதல் குறித்த ஆராய்ச்சிக்கு நிதி திரட்டுவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இளஞ்சிவப்பு நிற நாடா, மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்விற்கான சர்வதேச சின்னமாகும்.

- இது 1985 ஆம் ஆண்டில் அமெரிக்கப் புற்றுநோய் சங்கம் மற்றும் மேன்மைமிக்க வேதியிய தொழில்துறை மருந்தியல் அமைப்பு ஆகியவற்றால் நிறுவப்பட்டது.
- மார்பகப் புற்றுநோய் என்பது மார்பகத்தின் சுரப்பி திசுக்களில் உள்ள குழாய்கள் அல்லது முடிச்சுகளின் புறத்திசுக்களில் (அக உறை செல்கள்) உருவாகும் ஒரு வகை புற்றுநோயாகும்.

## உலக கட்டிடக்கலை தினம் - அக்டோபர் 02


- சர்வதேச கட்டிடக் கலைஞர்கள் சங்கம் (IUA) ஆனது இந்த வருடாந்திர விழாவினை அனுசரிக்கிறது.
- உலக கட்டிடக்கலை தினம் ஆனது 1985 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் (UN) உலக வாழ்விட தினத்துடன் ஒன்றி வரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அனைவருக்குமான பாதுகாப்பான இடங்கள்: அணுகக்கூடிய வடிவமைப்பு வழிவகுக்கிறது" என்பதாகும்.

## உலகப் புன்னகை தினம் - அக்டோபர் 06




- ஹார்வி பால், மாசசூசெட்ஸின் வொர்செஸ்டர் நகரைச் சேர்ந்த வணிகக் கலைஞர் 1963 ஆம் ஆண்டில் சிரிக்கும் முகம் கொண்ட ஒரு உருவப்படத்தினை (ஸ்மைலி) உருவாக்கினார்.
- இந்தப் படம் ஆனது புவியில் அனைவராலும் அடையாளம் காணக் கூடிய நல்லெண்ணம் மற்றும் நல்ல உற்சாகமூட்டலின் அடையாளமாக மாறியது.
- முதல் உலகப் புன்னகை தினக் கொண்டாட்டமானது 1999 ஆம் ஆண்டில் மாசாசூசெட்ஸின் வொர்செஸ்டர் எனுமிடத்தில் நடைபெற்றது.

## உலகப் பெருமூளை வாதம் தினம் - அக்டோபர் 06




- 2012 ஆம் ஆண்டில், பெருமூளை வாத நோய் கூட்டணி அமைப்பானது உலகப் பெரு மூளை வாத தினத்தை அறிவித்தது.
- இத்தினம் இந்தக் கோளாறு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், பெருமூளை வாதம் உள்ளவர்களும் உலகின் இதர மக்களைப் போலவே சம உரிமைகள், அணுகல் மற்றும் வாய்ப்புகளை கொண்டிருப்பதை உறுதி செய்வதற்கான பல்வேறு வழிகளைக் கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெருமூளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினர், சமூகத்தில் அவர்களின் முழு ஈடுப்பாட்டினைத் தடுக்கும் வகையிலான சவால்களை எதிர்கொள்கின்றனர்.
- பெருமூளை வாதம் வராமல் தடுப்பதற்கு எந்தவிதத் தடுப்பு முறைகளும் இல்லை.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "வலிமையாக இணைந்திருங்கள்" என்பதாகும்.

## உலகப் பருத்தி தினம் - அக்டோபர் 07

- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் அமைந்த பெனின், புர்கினா பாசோ, சாட் மற்றும் மாலி ஆகிய நான்கு முக்கியப் பருத்தி உற்பத்தியாளர்கள் 2012 ஆம் ஆணடில் இந்த நாளை முன்மொழிந்தன.
- இது 2019 ஆம் ஆண்டில் உலக வர்த்தக அமைப்பினால் (WTO) நிறுவப்பட்டது.
- இது உலகளாவியப் பொருளாக விளங்கும் பருத்தியின் முக்கியத்துவத்தை வெகுவாக அங்கீகரிப்பது மற்றும் உலகம் முழுவதும் உள்ள பருத்தி விவசாயிகள் மற்றும் பருத்தி தொழில்துறை எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'பருத்தியை அனைவருக்கும் நியாயமான விலையிலும் நிலையான முறையிலும் கிடைக்கப்பெறச் செய்தல்: வயலில் இருந்து ஆடை வடிவமைப்பு வரை' என்பதாகும்.




## இந்திய விமானப்படை தினம் - அக்டோபர் 08

- 1932 ஆம் ஆண்டில் இந்திய விமானப்படை (IAF) நிறுவப்பட்டதன் நினைவாக இந்த வருடாந்திர நிகழ்வு அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'இந்திய விமானப் படை- எல்லைகளுக்கு அப்பாற்பட்ட விமானப் படை ஆற்றல்' என்பதாகும்.
- இந்திய விமானப்படை ஆனது 1932 ஆம் ஆண்டு அக்டோபர் 08 ஆம் தேதியன்று நிறுவப் பட்ட ராயல் இந்திய விமானப் படையிலிருந்து உருவானது.
- 1950 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்திய விமானப் படையானது இன்றும் செயல் பாட்டில் உள்ளது.
- 1947-1948, 1965, 1971 (வங்காளதேசப் போர்) மற்றும் 1999 (கார்கில் போர்) ஆகிய ஆண்டுகளில் இந்திய விமானப் படை பாகிஸ்தானுடன் நான்கு மோதல்களை மேற் கொண்டது.
- இது 1961 ஆம் ஆண்டில், கோவாவினை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கையில் உதவியாக இருந்தது.
- 1962 ஆம் ஆண்டில், சீன இராணுவத்திற்கு எதிரான போரில் இந்திய ஆயுதப் படைகளுக்கு இந்திய விமானப் படை முக்கியமான விமான சேவைகளை வழங்கியது.
- 1984 ஆம் ஆண்டில், சியாச்சின் பகுதியினைக் கைப்பற்ற இந்திய விமானப் படை உதவியது.
- 1988 ஆம் ஆண்டில், தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட மாலத்தீவு அரசாங்க ஆட்சிக் கவிழ்ப்பினை இந்திய விமானப் படை தடுத்தது.

## உலக அஞ்சல் தினம் - அக்டோபர் 09





- 1874 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தின் பெர்ன் நகரில் உலக அஞ்சல் ஒன்றியம் நிறுவப் பட்டதை நினைவு கூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- 1969 ஆம் ஆண்டு ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்ற உலக அஞ்சல் ஒன்றிய மாநாட்டினால் முதன்முதலில் உலக அஞ்சல் தினம் அறிவிக்கப் பட்டது.
- இந்தியாவில், அக்டோபர் 09 முதல் அக்டோபர் 15 ஆம் தேதி வரை கொண்டாடப்படும் தேசிய அஞ்சல் வாரத்தின் தொடக்கத்தை இந்த நாள் குறிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு "நம்பிக்கைக்காக ஒன்றிணைதல்: பாதுகாப்பான மற்றும் இணைந்த எதிர்காலத்திற்காக ஒத்துழைத்தல்" என்பதாகும்.

## இந்திய வெளியுறவுப் பணி தினம் - அக்டோபர் 09





- இந்திய அரசாங்கம் ஆனது, 1946 ஆம் ஆண்டு அக்டோபர் 09 ஆம் தேதியன்று இந்திய வெளியுறவுப் பணியை நிறுவியது.
- இந்தியாவின் அரசு முறை, தூதரக மற்றும் வணிகப் பிரதிநிதித்துவத்திற்கான முக்கிய அமைப்பினை உலகளவில் இந்த நாள் கௌரவிக்கின்றது.
- ஆங்கிலேய ஆட்சியின் போது, "வெளிநாட்டு ஐரோப்பிய நாடுகளுடனான பல்வேறு தொடர்புகளை மேலாண்மை செய்வதற்காக வெளியுறவுத் துறை உருவாக்கப்பட்டது.
- இந்திய வெளியுறவுப் பணி அதிகாரிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இந்திய நலன் சார்ந்த கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழில்முறை தூதர்கள் ஆவர்.

## உலக ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் கல தினம் - அக்டோபர் 08




- இந்த உலகளாவிய முன்னெடுப்பானது, ஹைட்ரஜனை ஒரு தூய்மையான மற்றும் நிலையான ஆற்றல் மூலமாகப் பயன்படுத்துவது பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாதம்/தேதி வடிவத்தில் (10/08) எழுதப்பட்ட அக்டோபர் 08 ஆம் தேதியானது ஹைட்ரஜனின் அணு எடையைக் குறிக்கிறது (1.008).
- எனவே, ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் கல தினத்தினை அனுசரிப்பதற்கு இந்தத் தேதியானது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்த நாள் நெருக்கடி மிக்க உலகளாவியச் சவால்களை எதிர்கொள்வதில் ஹைட்ரஜன் மற்றும் எரிபொருள் கலங்களின் திறனை அங்கீகரிக்கச் செய்வதற்கான ஒரு தளமாக செயல்படுகிறது.

## உலக மனநல தினம் - அக்டோபர் 10




- இந்த நாள் ஆனது, உலகம் முழுவதும் மன நலனை மேம்படுத்துவதற்கான தினமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'மன நலம் ஒரு உலகளாவிய மனித உரிமை' என்பதாகும்.


- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, பாதிக்கும் மேலான மனநலப் பிரச்சினைகள் 14 வயதிற்கு முன்பான காலகட்டத்திலேயே தொடங்குகிறது.
- 70 முதல் 92% இந்தியர்கள் வெவ்வேறு மன நிலைப் பிரச்சினைகளுக்கான மருந்து அல்லது சிகிச்சை பெறுவதில்லை என்று மதிப்பீடுகள் குறிப்பிடுகின்றன.
- உளவியலாளர்கள் மற்றும் மனநல மருத்துவர்களின் ஆலோசனை, கலந்துரையாடல் மற்றும் பரிந்துரைகளைப் பெற இந்திய அரசானது Tele-MANAS அல்லது தேசிய தொலை தொடர்பு மனநல சேவைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 32 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள Tele-MANAS சேவையின் 51 பிரிவுகளில் 3,40,000 அழைப்புகள் (அக்டோபர் 08 வரை) பதிவாகியுள்ளன.

## தேசிய அஞ்சல் தினம் - அக்டோபர் 10

- 150 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய அஞ்சல் துறை ஆற்றிய பங்கைக் கௌரவிக்கும் வகையில் தேசிய அஞ்சல் தினம் கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவில் ஆங்கிலேயர்களால் தபால் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது 1854 ஆம் ஆண்டில் டல்ஹவுசி பிரபுவால் நிறுவப்பட்டது.
- இந்தியாவில் இராணுவத் தபால் அலுவலகம் உட்பட 23 அஞ்சல் வட்டங்கள் மற்றும் 9 அஞ்சல் மண்டலங்கள் உள்ளன.
- இந்தியாவில் உள்ள தபால் நிலையங்கள் 1972 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட 6 இலக்க தனிப்பட்ட அடையாள எண் குறியீடு முறையைப் பின்பற்றுகின்றன.
- இந்தியத் தபால் துறையானது அக்டோபர் 09 முதல் 13 வரை 'தேசிய அஞ்சல் வாரத்தை' கொண்டாடுகிறது.
- தபால் வாரத்தின் கருத்துரு, 'நம்பிக்கைக்காக ஒன்றுபடுதல்' என்பதாகும்.




## உலக டிஸ்லெக்ஸியா தினம் - அக்டோபர் 08




- இத்தினமானது உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான நபர்களைப் பாதிக்கும் கற்றல் திறன் சார்ந்த வேறுபாட்டு நிலையான டிஸ்லெக்ஸியா (வாசிப்புத் திறன் குறைபாடு) குறித்தத் தகவல்களை வெளிக் கொணர்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது.
- டிஸ்லெக்ஸியா விழிப்புணர்வு வாரம் ஆனது ஆண்டுதோறும் அக்டோபர் 02 முதல் 08 ஆம் தேதி வரை கொண்டாடப்படுகிறது.
- டிஸ்லெக்ஸியா குறைபாடு உள்ளவர்கள் வாசிப்பு, எழுதுதல், சொற்களஞ்சியம் மற்றும் கை-கண் ஒருங்கிணைப்பு தேவைப்படும் பணிகளில் சிரமப்படுவர்.
- உள்ளடக்கம், கல்விக்கான அணுகல் மற்றும் டிஸ்லெக்ஸியா உள்ளவர்களுக்கு அவர்களின் கற்றல் திறன் முயற்சிகளில் உதவி வழங்குவதற்கான பயனுள்ள உத்திகளை செயல்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்தச் செய்வதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'தனித்துவமாக மனிதர்கள்' என்பதாகும்.

## மரண தண்டனைக்கு எதிரான உலக தினம் - அக்டோபர் 10





- இந்த நாள் மரண தண்டனை நடைமுறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்கான உலகளாவிய தளமாக செயல்படுகிறது.
- இது உலகளவில் மரண தண்டனையினை ஒழிப்பதற்காகவும், மனித உரிமைகள் மற்றும் நீதிக்காகவும் ஆதரவு அளிக்கிறது.

- 112 நாடுகள் அனைத்து வகையான குற்றங்களுக்கும் மரண தண்டனையை விதிக்கும் நடைமுறையை ரத்து செய்துள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் உலகில் அதிக மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்ட 5 நாடுகள்: சீனா, ஈரான், சவுதி அரேபியா, எகிப்து மற்றும் அமெரிக்கா ஆகியனவாகும்.
- 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உலகம் முழுவதும் 28,282 நபர்கள் மரண தண்டனை பெற்றுள்ளதாக அறியப்படுகிற நிலையில் அவர்களில் 5%க்கும் குறைவானவர்கள் பெண்கள் ஆவர்.

## சர்வதேசப் பெண் குழந்தை தினம் - அக்டோபர் 11

- இத்தினமானது பாலினச் சமத்துவமின்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்கும், பெண் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதனை ஆதரிப்பதற்கும் முதன்முதலில் 2012 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- இந்த நாள் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்வதற்கும், பெண்களின் அதிகாரம் மற்றும் அவர்களின் மனித உரிமைகளை முழுமையாக கிடைக்கப் பெறச் செய்வதை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "பெண்கள் உரிமைகளில் முதலீடு செய்யுங்கள்: நமது தலைமை, நமது நல்வாழ்வு" என்பதாகும்.

## உலக மூட்டழற்சி தினம் - அக்டோபர் 12




- இந்த நாள் மூட்டழற்சி பாதிப்பு, ஒருவரது வாழ்க்கையில் அதன் தாக்கம் மற்றும் அறிகுறிகள், தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மூட்டழற்சி என்பது மூட்டுவலி அல்லது மூட்டு நோய், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மூட்டுகளின் வீக்கம் அல்லது அழற்சி ஆகியவற்றை குறிக்கிறது.
- இது போன்ற 100க்கும் மேற்பட்ட பாதிப்பு நிலைகள் இருந்தாலும், முதுமை மூட்டழற்சி மற்றும் முடக்கு வாதம் ஆகிய இரண்டு பாதிப்புகள் பொதுவாக அதிகளவில் ஏற்படுபவை ஆகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, " Living with an RMD at all stages of life" என்பதாகும்.
- இந்த நாள் முதுமை மூட்டழற்சி மற்றும் முடக்கு வாத அமைப்பினால் (ARI) நிறுவப் பட்டது.
- இத்தினம் முதன்முதலில் 1996 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதியன்று அனுசரிக்கப் பட்டது.

## உலக கண் பார்வை தினம் - அக்டோபர் 12

- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வியாழக் கிழமையன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- இது கண் பார்வை இழப்பு மற்றும் பார்வைக் குறைபாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு 'love your eyes at work' என்பதாகும்.




## ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச இயற்கைப் பேரிடர் குறைப்பு தினம் - அக்டோபர் 13

- பேரிடர்கள், உயிரினங்கள் மீதான அவற்றின் தாக்கம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது, உலகம் முழுவதும் இடர் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பேரழிவு குறைப்பு கலாச்சாரத்தை மேம்படுத்தச் செய்வதற்காக 1989 ஆம் ஆண்டில் இந்த நாளினை நிறுவியது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "ஒரு நெகிழ்திறன் மிக்க நல்ல எதிர்காலத்திற்காக சமத்துவமின்மையை எதிர்கொள்ளுதல்" என்பதாகும்.
- 2015 ஆம் ஆண்டில் ஜப்பானின் சென்டாய் நகரில் பேரிடர் அபாயத்தைக் குறைக்கச் செய்வதற்கான மூன்றாவது ஐக்கிய நாடுகள் சபையின் உலக மாநாடு நடைபெற்றது.

## உலக முட்டை தினம் - அக்டோபர் 13

- ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமையன்று உலக முட்டை தினம் கொண்டாடப்படுகிறது.
- உலக முட்டை தினமானது, 1996 ஆம் ஆண்டு சர்வதேச முட்டை ஆணையத்தினால் நிறுவப் பட்டது.
- இந்தத் தினமானது மனித ஊட்டச்சத்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஒட்டுமொத்த நல் வாழ்வில் முட்டைகளின் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதற்கான ஒரு வருடாந்திர வாய்ப்பாக திகழ்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'நல்ல ஆரோக்கியமான எதிர் காலத்திற்கான முட்டை' என்பதாகும்.

## உலகத் தர நாள் - அக்டோபர் 14




- தரப்படுத்தலின் முக்கியத்துவத்தைப் பற்றி நுகர்வோர், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்குக் கற்பிப்பதே இந்த நாளின் முதன்மையான நோக்கமாகும்.
- இத்தினமானது 1946 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- இது நாடுகள் மற்றும் அந்நாடுகளின் குடிமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக செயல்படுகிறது.
- மேலும், சிறந்த வாழ்க்கைத் தரத்தை நோக்கி முன்னேற அவர்களை ஊக்குவிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்திற்கான கருத்துரு, "ஒரு சிறந்த உலகத்திற்கான பகிரப்பட்ட நோக்கம்: நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்விற்காக நிலையான மேம்பாட்டு இலக்கை ஒருங்கிணைத்தல்."

## உலக வலசைப் பறவைகள் தினம் - அக்டோபர் 14

- உலக வலசைப் பறவைகள் தினம் ஆனது ஆண்டிற்கு இருமுறை கடைபிடிக்கப்படும் உலகளாவிய தினமாகும்.
- பல்வேறு நாடுகளில் மே மற்றும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது சனிக் கிழமைகளில் இந்தத் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாள் அமெரிக்காவிலும் கனடாவிலும் மே மாதத்திலும், மற்ற நாடுகளில் இது அக்டோபர் மாதத்திலும் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "நீர்: பறவை வாழ்வை நிலை நிறுத்துதல்" என்பதாகும்.

## சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் - அக்டோபர் 15

- சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் ஆனது முதன்முதலில் 2008 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- கிராமப்புறப் பெண்கள் தங்கள் சமூகங்களுக்கும் உலகப் பொருளாதாரத்திற்கும் ஆற்றும் முக்கியப் பங்களிப்பை அங்கீகரிக்கும் நாள் ஆக இது கருதப் படுகிறது.
- மேலும், வேளாண்மை, உணவு உற்பத்தி மற்றும் கிராமப்புற மேம்பாட்டில் கிராமப் புறப் பெண்கள் வகிக்கும் முக்கியப் பங்கினை இத்தினம் கொண்டாடுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அனைவருக்குமான நல்ல உணவைப் பயிரிடும் கிராமப்புறப் பெண்கள்" என்பதாகும்.

## உலகப் பார்வையற்றோர் கைத்தடி (வெண்பிரம்பு) தினம் - அக்டோபர் 15




- பார்வைத் திறன் குறைபாடுள்ளவர்களின் முக்கியத்துவத்தையும், சமூகத்தில் அவர்களின் அதீதப் பங்கேற்பினையும், அவர்களின் சுதந்திரத்தைக் கொண்டாடச் செய்வதற்காகவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- 1964 ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க அதிபர் லிண்டன் B ஜான்சன் இந்த நாளை முதல் முறையாகக் கொண்டாடினார்.


- ❖ வெண்பிரம்பு என்பது பார்வைத் திறன் குறைபாடுள்ளவர்களுக்காக கண்டுபிடிக்கப் பட்டு பல நூற்றாண்டுகளாகப் பயன்பாட்டில் உள்ள ஒரு முக்கியமான நடமாட உதவுக் கருவியாகும்.

## உலக கை கழுவுதல் தினம் - அக்டோபர் 15

- ❖ முதலாவது உலக கை கழுவுதல் தினம் ஆனது 2008 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.
- ❖ நோய்களைத் தடுப்பதற்கும் உயிர்களைக் காப்பதற்குமான பயனுள்ள மற்றும் மலிவு விலையிலான ஒரு வழியாக சோப்பு கொண்டு கை கழுவும் பழக்கம் விளங்குவதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் அதிகரிப்பதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தூய்மையான கைகள் கைக்கு எட்டும் தூரத்தில் உள்ளன" என்பதாகும்.

## உலக மாணவர் தினம் – அக்டோபர் 15


- ❖ இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இத்தினமானது கொண்டாடப்படுகிறது.
- ❖ முன்னாள் குடியரசுத் தலைவர் கலாம் அவர்கள் கல்வித் துறையில் ஆற்றிய முக்கியப் பங்களிப்பிற்கு மதிப்பளிக்கும் விதமாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- ❖ ஒரு சிறந்த ஆசிரியர், சிறந்த விஞ்ஞானி மற்றும் சிறந்த அரசியல்வாதியான அவர் 2002 முதல் 2007 ஆம் ஆண்டு வரை 11வது இந்தியக் குடியரசுத் தலைவராக அவர் பணி ஆற்றினார்.
- ❖ இந்தியாவின் 11வது குடியரசுத் தலைவராக பதவி வகித்த பிறகு, டாக்டர் கலாம் அவர்கள் மீண்டும் தனது ஆசிரியர் பணியை மேற்கொண்டார்.



## உலக உணவு தினம் – அக்டோபர் 16

- இந்த நாள் 1945 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) நிறுவப்பட்டதைக் குறிக்கிறது.
- உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்கள் எதிர்கொள்ளும் உணவுப் பற்றாக்குறை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு ஆகியவற்றின் சவால்கள் குறித்து மனித குலத்திற்கு நினைவூட்டுவதற்கு இந்த நாள் உதவுகிறது.
- சாத்தியமான வேளாண் நடைமுறைகள், சமமான உணவுப் பங்கீடு மற்றும் அனைவருக்கும் சத்தான உணவு கிடைப்பதற்கான தேவைகள் குறித்து இந்த நாள் கவனம் செலுத்துகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'தண்ணீரே உயிர், தண்ணீரே உணவு. ஒருவரும் விடுபட்டு விடக் கூடாது' என்பதாகும்.

## உலக மயக்க மருந்து தினம் – அக்டோபர் 16




- மருத்துவச் சிகிச்சையில் மயக்க மருந்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- மயக்க மருந்து ஆனது முதன்முதலில் 1846 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் தேதியன்று பயன்படுத்தப்பட்டது.
- அமெரிக்காவின் பாஸ்டனில் வில்லியம் தாமஸ் கிரீன் மார்டன் என்பவரால் ஈதர் மயக்க மருந்தின் முதல் செயல்விளக்கம் ஆனது வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது.
- மயக்க மருந்து கண்டுபிடிப்பு ஆனது, நோயாளிகள் எந்த வலியும் இல்லாமல் அறுவை சிகிச்சை செய்து கொள்ள உதவுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'மயக்க மருந்து மற்றும் புற்றுநோய் பராமரிப்பு' என்பதாகும்.

## சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் – அக்டோபர் 17

- வறுமையில் வாடும் மக்கள் மற்றும் பரந்த சமுதாயத்தினரிடையே புரிதல் மற்றும் பேச்சு வார்த்தையினை மேம்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 1987 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் தேதியன்று முதன் முதலாக இத்தினம் அனுசரிக்கப் பட்டதாக அறியப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'ஏற்புமிக்க வேலை மற்றும் சமூகப் பாதுகாப்பு: அனைவருக்கும் கண்ணியத்தை நடைமுறைப்படுத்துதல்' என்பதாகும்.

## உலகப் புள்ளியியல் தினம் - அக்டோபர் 20

- உலக நாடுகளின் வளர்ச்சியில் மேம்பட்ட, நம்பகமான மற்றும் நல்ல தரமான புள்ளி விவரங்களின் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று இந்த தினமானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் அறிவிக்கப்பட்டது.
- இந்தத் தினமானது தேசியப் புள்ளியியல் அமைப்புகளின் மிகப்பெரிய அளவிலான மகத்தான சாதனைகளை எடுத்துரைப்பதோடு மேலும் சமூக அம்சங்களில் உள்ள பல்வேறு கோணங்களில் புள்ளி விவரங்களின் முக்கியத்துவத்தினையும் வளர்க்கிறது.
- "நாம் நம்பக் கூடியத் தரவுகளுடன் உலகை இணைப்பது" என்பது 2023 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் ஆகும்.

## உலக எலும்புப் புரை தினம் - அக்டோபர் 20




- இந்த தினமானது எலும்புப்புரை (ஆஸ்டியோபோரோசிஸ்) தடுப்பு, கண்டறிதல் மற்றும் சிகிச்சை பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆஸ்டியோபோரோசிஸ் என்பது எலும்புகளில் திடீரென்று உருவாகும் கட்டமைப்பு மாற்றங்களால் ஏற்படும் ஒரு வகையான எலும்புக்கோளாறு என்று வகைப்படுத்தப் படுகிறது.
- இதன் விளைவாக எலும்புகளில் நிறை மற்றும் எலும்புகளின் தாது அடர்த்தி ஆகியவை குறைகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் என்பது "வலுவான எலும்புகளைக் கட்டமைத்து, எலும்புகளுக்கான ஆரோக்கியமான வாழ்வினை மேம்படுத்துதல்" ஆகும்.

## காவல்துறை தியாகிகளுக்கான தினம் - அக்டோபர் 21

- 1959 ஆம் ஆண்டில் சீனாவுடனான எல்லைப் பகுதிகளைப் பாதுகாப்பதில் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த 10 காவல்துறை வீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- லடாக்கிலுள்ள வெந்நீர் ஊற்றுப் பகுதிக்கு அருகில் இந்த தாக்குதலானது நடைபெற்றது.
- லடாக்கின் அக்சாய் சின் பகுதியில் உள்ள வெந்நீர் ஊற்றானது இந்திய-திபெத் எல்லை பகுதியில் கடல் மட்டத்திலிருந்து 15,000 முதல் 16,000 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- காவல்துறை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் தியாகத்தினைப் போற்றும் தினமாக இது அனுசரிக்கப்படுகிறது.
- உயிர்த் தியாகம் செய்த அனைத்துக் காவல்துறையினருக்கும் மரியாதை செலுத்தும் வகையில் இந்தத் தினமானது கொண்டாடப் படுகிறது.

## சர்வதேச சமையல் வல்லுனர்கள் தினம் - அக்டோபர் 20

- இந்த தினம் தங்கள் வாழ்க்கையில் ஒரு சமையல் வல்லுனரின் முக்கியத்துவத்தைப் பற்றியும் சமையல் கலை ஒரு இன்றியமையாத திறமை என்பது பற்றியும் மக்கள் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது.
- உலக சமையல் வல்லுனர் சங்கத்தின் (உலக சமையல்காரர்கள்) முன்னாள் தலைவர் டாக்டர் பில் கல்லாகர் 2004 ஆம் ஆண்டில் இந்த தினத்தை நிறுவினார்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு என்பது 'வளர்ந்து வரும் சிறந்த சமையல் வல்லுனர்கள்' ஆகும்.




## சர்வதேச திக்குப் பேச்சு விழிப்புணர்வு தினம் - அக்டோபர் 22


- திக்குப் பேச்சு என்பது ஒரு நபரின் பேச்சில் உள்ள குறைபாடுகளை உள்ளடக்கிய பேச்சு முறையில் ஏற்படும் இடையூறுகள் ஆகும்.
- சர்வதேச திக்குப் பேச்சு சங்கம் (ISA) ஆனது 1998 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக தொடங்கப் பட்டது.

- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "ஒரே பாங்கு அனைவருக்கும் பொருந்தாது" என்பதாகும்.





## மோல் தினம் - அக்டோபர் 23

- இது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 23 ஆம் தேதியன்று காலை 6:02 மணி முதல் மாலை 6:02 மணி வரை கொண்டாடப்படுகிறது.
- இது "அவோகாட்ரோ எண்" (6.02 x 1023) எனப்படும் வேதியியலின் அளவீட்டு அலகினை நினைவு கூர்கிறது.
- பொதுவாக, எந்த ஒரு பொருளின் ஒரு மோல் ஆனது, அவோகாட்ரோ மூலக்கூறுகள் அல்லது அந்த பொருளின் அணுக்களின் எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.
- இந்தத் தொடர்பினை முதன் முதலில் அமெடியோ அவகாட்ரோ என்பவர் (1776-1858) கண்டறிந்தார்.




## உலகளாவிய அயோடின் குறைபாடு கோளாறுகள் தடுப்பு நாள் - அக்டோபர் 21

- நமது ஆரோக்கியத்தில் அயோடினின் முக்கிய பங்கினைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக இந்த தினமானது அர்ப்பணிக்கப்படுகிறது.
- நமது உடல் செயல்பாடுகளில் முக்கியப் பங்கினை வகிக்கும் தைராய்டு ஹார்மோன் உற்பத்திக்குத் தேவையான அத்தியாவசிய தாதுக்களை அயோடின் கொண்டுள்ளது.
- தைராய்டு சுரப்பிகளின் வீக்கம் (காய்ட்டர்), சோர்வு, மெதுவான வளர்சிதை மாற்றத்தால் எடை அதிகரித்தல், மலச்சிக்கல், முகத்தில் வீக்கம், தசை பலவீனம், வறண்ட சருமம் போன்ற அறிகுறிகளின் மூலம் அயோடின் குறைபாடானது வெளிப் படுகிறது.




## உலகளாவிய ஊடகம் மற்றும் தகவல் குறித்த அறிவு வாரம் - அக்டோபர் 24/31

- இன்றைய டிஜிட்டல் உலகத்தில் ஊடகம் மற்றும் தகவல் குறித்த அறிவின் (MIL) பெரும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த தினமானது அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மொராக்கோவின் ஃபெஸ் நகரில் முதல் உலகளாவிய ஊடகம் மற்றும் தகவல் குறித்த அறிவு வாரமானது நடைபெற்றது.
- இந்த ஆண்டின் கருப்பொருள்: "Media and Information Literacy in Digital Spaces: A Collective Global Agenda" என்பதாகும்.




## ஆயுதக் குறைப்பு வாரம் - அக்டோபர் 24/30

- ஆயுதக்குறைப்பின் முக்கியத்துவத்தினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்தலையும், அணு ஆயுதங்கள் மற்றும் பிற பேரழிவு ஆயுதங்களை அகற்றச் செய்வதையும் ஊக்குவிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்தத் தினமானது கொண்டாடப் படுகிறது.
- அணு ஆயுதங்கள் மற்றும் பிற பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களினால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து பொதுமக்களுக்கு கற்பிப்பதற்கும், அவற்றை அகற்றுவதற்காக செயல்படுவதற்கும் இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.
- ஆயுதக் குறைப்பு தொடர்பான ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 10வது சிறப்பு அமர்வின் போது, 1978 ஆம் ஆண்டு இந்தக் கண்காணிப்பு வாரமானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் நிறுவப்பட்டது.

## அரச தூதுவர்களுக்கான சர்வதேச தினம் - அக்டோபர் 24

- பண்டைய காலத்திலிருந்தே உலகை வடிவமைப்பதிலும், நமது கிரகத்தைச் சிறந்த இடமாக மாற்றுவதில் அரசத் தூதுவர்கள் ஆற்றியப் பங்களிப்பினை நினைவு கூருவதை இந்த தினமானது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இது பொது மக்களிடையே அரச தூதுவர்கள் வாழ்க்கை தொடர்பான கருத்து மற்றும் யதார்த்தத்தில் உள்ள இடைவெளியைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று முதன் முதலில் பிரேசிலியாவில் இந்த சர்வதேச தினமானது கொண்டாடப்பட்டது.


## ஐக்கிய நாடுகள் தினம் - அக்டோபர் 24




- ஐக்கிய நாடுகளின் சாசனமானது 1945 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்ததன் ஆண்டு நிறைவைக் குறிக்கும் தினமாக இந்த நாளானது கொண்டாடப்படுகிறது.

- 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று ஐக்கிய நாடுகளின் சபையானது அதிகாரப் பூர்வமாக நிறுவப் பட்டது.
- "The Frontlines of Climate Action" என்ற கருப்பொருளில் இந்த ஆண்டின் ஐக்கிய நாடுகள் தினத்தின் நிகழ்ச்சியானது நடத்தப்பட்டது.


## உலக பனிச் சிறுத்தை தினம் - அக்டோபர் 23





- இந்த நாள் ஆனது பனிச்சிறுத்தைகளைக் கொண்டாடுவதையும் அந்த இனங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பனிச் சிறுத்தைகளைப் பாதுகாப்பதற்கான பிஷ்கெக் பிரகடனமானது 2013 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் தேதியன்று 12 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்தியா, நேபாளம், பூடான், சீனா, மங்கோலியா, ரஷ்யா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியவை இந்த 12 நாடுகளாகும்.

## இந்திய-திபெத்திய எல்லைக் காவல் படை உருவாக்க தினம் - அக்டோபர் 24

- 62வது இந்திய-திபெத்திய எல்லைக் காவல் (ITBP) படை எழுச்சி தினம் ஆனது இந்த ஆண்டு அனுசரிக்கப்பட்டது.
- இந்த நாள் ஆனது இந்த காவலர்களின் வீரம் மற்றும் தியாகத்தை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.
- இந்திய-திபெத்திய எல்லையில் எல்லை உளவுத்துறை மற்றும் பாதுகாப்பினை மறு சீரமைப்பதற்காக 1962 ஆம் ஆண்டில் இந்திய-திபெத்திய எல்லைக் காவல் (ITBP) படை உருவாக்கப்பட்டது.
- லடாக்கின் காரகோரம் கணவாய் முதல் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள திபுலா கணவாய் வரையிலான இந்திய-சீன எல்லையில் ரோந்துப் பணிகளை மேற் கொள்ளச் செய்வதற்காக தற்போது இந்திய-திபெத்திய எல்லைக் காவல் (ITBP) படையானது பணி அமர்த்தப் பட்டுள்ளது.
- இப்படையானது 3,488 கி.மீ. நீள இந்திய-சீன எல்லையில் ரோந்துப் பணிகளை மேற் கொண்டு வருகிறது.




## உலக போலியோ தினம் - அக்டோபர் 24





- இத்தினமானது குழந்தைகளைப் பாதுகாப்பதில் போலியோ தடுப்பு மருந்தின் பெரும் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வாய்வழியிலான போலியோ தடுப்பு மருந்தானது போலியோவிலிருந்து பாதுகாப்பதில் மிகவும் பயனுள்ள வழியாக உள்ளது.
- 1988 ஆம் ஆண்டில், ரோட்டரி இன்டர்நேஷனல் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவை உலகளாவிய போலியோ ஒழிப்பு முன்னெடுப்பினை (GPEI) நிறுவின.
- இந்தியாவானது போலியோ இல்லாத 12 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது மற்றும் இந்தியாவில் போலியோ பாதிப்பானது கடைசியாக 2011 ஆம் ஆண்டில் பதிவானது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு என்பது, "தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆரோக்கியமான எதிர்காலம்" ஆகும்.

## உலக மேம்பாட்டுத் தகவல் தினம் - அக்டோபர் 24

- இந்தத் தினமானது மக்களின் முதல் கவனத்தை மேம்பாட்டுப் பிரச்சனைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கு வேண்டி சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் ஆகியவை மீது நோக்கி ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 1972 ஆம் ஆண்டில் இந்த நாளை நிறுவியது.
- வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான சர்வதேச ஒத்துழைப்புத் துறையில் முயற்சிகளை ஊக்குவித்தல், மேம்பாட்டினைச் சுற்றியுள்ள பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கச் செய்தல் மற்றும் பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், தகவல்களைப் பரப்புவது மற்றும் பொதுக் கருத்தைத் திரட்டுவது ஆகியவை இந்த நாளின் முக்கிய நோக்கமாகும்.

## உலக அதிர்ச்சி தினம் - அக்டோபர் 17

- அதிர்ச்சிகரமான சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக வேண்டி, அதிர்ச்சியால் பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்புவதும், அவர்கள் தங்கள் வாழ்வில் தடுப்பு நடவடிக்கைகளை கடைபிடிப்பது குறித்து கற்பிப்பதும் உலக அதிர்ச்சி தினத்தினைக் கடைபிடிப்பதன் முக்கிய நோக்கமாகும்.
- வருடாந்திர உலக அதிர்ச்சி தினமானது முதல் முறையாக 2011 ஆம் ஆண்டில் இந்தியாவின் புது டெல்லியில் நிறுவப்பட்டு ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் 50 லட்சத்திற்கும் அதிகமானோர் விபத்துகளால் ஏற்படும் காயத்தால் நேரடியாக பாதிக்கப்பட்டு இறக்கின்றனர்.
- இது ஒவ்வொரு ஆறு வினாடிக்கும் ஒரு மரணம் நிகழ்வதற்கு இணையாக உள்ளது. என்பதோடு, இது உலகளவில் ஏற்படும் இறப்புகளில் 9 சதவிகிதமாகவும் உள்ளது.
- ஆண்டுதோறும் இந்தியாவில் 10 லட்சம் பேர் சாலை விபத்துக்களால் உயிரிழப்பார்கள் என்றும், மேலும் 2 கோடி பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.





## தேசிய ஒருமைப்பாடு தினம் - அக்டோபர் 20

- 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற சீன-இந்தியப் போரின் போது போரிட்ட வீரர்களை கௌரவிக்கும் விதமாக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- 1962 அக்டோபர் 20 ஆம் தேதியன்று, சீன நாடானது இந்தியா மீது ஒரு பயங்கரமான தாக்குதலை நடத்தியது.
- 1962 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதியன்று, இரண்டாவது சீனத் தாக்குதலானது தொடங்கப்பட்டது.
- 1962 ஆம் ஆண்டு நவம்பர் 20/21 ஆம் தேதிகளில் இந்த மோதல் இறுதியாக கைவிடப் பட்டது.
- 1966 ஆம் ஆண்டில், பிரதமரான இந்திரா காந்தி அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவானது, இப்போருக்காக என்று தம் உயிரைத் தியாகம் செய்த வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரைக் கௌரவிக்கும் விதமாக இந்தத் தினத்தை நிறுவியது.




## சர்வதேச ஈயநஞ்சேறல் தடுப்பு வாரம் - அக்டோபர் 22 முதல் 29 வரை





- இந்த அனுசரிப்பானது, ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் மூன்றாவது வாரத்தில் நடைபெறுகிறது.

- ஈயநஞ்சேற்றத்தினால் ஏற்படும் உடல்நலப் பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் ஈயநஞ்சேற்றத்தினை குறிப்பாக குழந்தைகளில், ஈயநஞ்சேறல் பாதிப்பினை தடுப்பதற்கான நாடுகள் மற்றும் பங்குதார நாடுகளின் பல்வேறு முன்னெடுப்புகளை முன்னிலைப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டின் பிரச்சாரமானது, "குழந்தைப் பருவ ஈயநஞ்சேற்றத்தினை முடிவுக்குக் கொண்டு வருதலில்" கவனம் செலுத்துகிறது.

## கேட்பொலி காட்சிப் பதிவு பாரம்பரியத்திற்கான உலக தினம் - அக்டோபர் 27

- கேட்பொலி காட்சிப் பதிவு ஆவணங்களின் மீதான ஒரு பெரும் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்காகவும், அதற்கான அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய ஒரு பொதுவான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் ஒரு வாய்ப்பாக இந்த நாள் அமைகிறது.
- கேட்பொலி காட்சிப் பதிவு என்பது நமது கூட்டு நினைவகத்தை உறுதியுரையாகவும் மற்றும் அறிவின் மதிப்புமிக்க ஆதாரமாகவும் விளங்கும் ஒரு விலை மதிப்பற்றப் பாரம்பரியத்தைக் குறிக்கிறது,
- 2005 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பின் பொது மாநாட்டின் 33வது அமர்வு ஆனது இந்த நாளை அறிவித்தது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உலகத்திற்கான உங்கள் சாளரம்" என்பதாகும்.

## உலக பக்கவாதம் தினம் - அக்டோபர் 29





- இந்த நாள் பக்கவாதத்தின் தீவிர தன்மை மற்றும் அதிக பாதிப்பு விகிதங்களை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பக்கவாத தடுப்பு மற்றும் சிகிச்சைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காகவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- உலகளவில் மூளை பக்கவாதம் இறப்புக்கான இரண்டாவது முக்கியக் காரணமாகவும், உடல் உறுப்பு இயலாமைக்கான மூன்றாவது முக்கியக் காரணமாகவும் மற்றும் இறப்புக்கான இரண்டாவது முக்கியக் காரணமாகவும் உள்ளது.

- ஒவ்வோர் ஆண்டும் சுமார் 18 லட்சம் பேர் பக்கவாதத்தினால் பாதிக்கப் படுகின்றனர்.
- இந்தியாவில் பக்கவாதம் ஏற்படும் சராசரி பாதிப்பு நிகழ்வு விகிதம் ஒரு லட்சம் (1,00,000) மக்கள்தொகைக்கு 145 ஆகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒன்றுபட்டால் #பக்கவாதத்தை விட நாம் பெரும்பங்கினர்" என்பதாகும்.

## சர்வதேசப் பராமரிப்பு மற்றும் ஆதரவு தினம் - அக்டோபர் 29

- 2023 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் சபையின் (UN) பொதுச் சபை இந்த நாளுக்கான ஐக்கிய நாடுகள் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்த நாள் பராமரிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது, பராமரிப்பாளர்களின் பங்களிப்புகளை அங்கீகரிப்பது மற்றும் அதன் அனைத்து வடிவங்களிலும் பராமரிப்பை ஆதரிக்கும் மற்றும் அதனை மேம்படுத்தும் கொள்கைகள் மற்றும் பல முன்னெடுப்புகளுக்காகப் போராடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெண்கள் மற்றும் சிறுமிகளால் மேற்கொள்ளப்படும் ஊதியமற்றப் பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகளின் ஏற்றத்தாழ்வு சுமையை இத்தினம் வெளிக் கொணர்கிறது.




## உலக சிக்கன தினம் - அக்டோபர் 30

- இத்தினமானது அக்டோபர் 31 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- ஆனால் இந்தியாவில் இத்தினம் அக்டோபர் 30 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- சிக்கனப் படுத்தும் பழக்கத்தை நன்முறையில் ஊக்குவிப்பதற்காகவும், பணத்தையும் செல்வத்தையும் சிறந்த முறையில் நிர்வகிப்பதை ஊக்குவிப்பதற்காகவும் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.
- முதலாவது உலக சிக்கன தினமானது, 1924 ஆம் ஆண்டில் இத்தாலியின் மிலன் நகரில் கொண்டாடப் பட்டது.
- இந்த நிகழ்வில் உலக சேமிப்பு மற்றும் சில்லறை வங்கி நிறுவனம் தொடங்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, சேமிப்பு மூலம் "உங்கள் நாளைய தினத்தை வெல்லுங்கள்!" என்பதாகும்.





## சர்வதேச குள்ளத் தன்மை விழிப்புணர்வு தினம் - அக்டோபர் 25

- குள்ளத் தன்மையை ஏற்படுத்தும் எலும்பு வளர்ச்சிக் கோளாறான அகோண்ட்ரோ பிளாசியா பற்றிய விழிப்புணர்வினை இந்த நாள் பரப்புகிறது.
- அகோண்ட்ரோபிளாசியா என்றால் "குருத்தெலும்பு உருவாக்கம் இல்லாமல்" என்று பொருள் ஆகும்.
- இது 15,000 குழந்தையில் ஒன்று என்ற வீதம் முதல் 40,000 குழந்தை பிறப்புகளில் ஒன்று என்ற வீதத்தில் ஏற்படுகிறது.
- இந்நிலை உள்ளவர்கள் குள்ளர்கள் என்று அழைக்கப்படுவதால், இந்த நிலை குள்ளத் தன்மை என்றும் அழைக்கப்படுகிறது.

## ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் - அக்டோபர் 31

- சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் பிறந்த நாள் ஆனது தற்போது ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் அல்லது தேசிய ஒற்றுமை தினமாக கொண்டாடப் படுகிறது.
- 550க்கும் மேற்பட்ட சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்தில் ஒருங்கிணைத்த அவரது மகத்தான சாதனையைக் கௌரவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அவர் இந்தியாவின் பிஸ்மாக் என்றும் "இந்தியாவின் இரும்பு மனிதர்" என்றும் பிரபலமாக அறியப்படுகிறார்.
- ஏக்தா திவாஸ் கொண்டாட்டம் குறித்த அறிவிப்பானது 2014 ஆம் ஆண்டில் அறிவிக்கப் பட்டது.




## ஹாலோவீன் தினம் - அக்டோபர் 31

- இந்த பண்டிகை ஐரோப்பாவில் கொண்டாடப்படுவதோடு இது கோடை மற்றும் குளிர் காலத்திற்கு இடையிலான வேறுபாட்டைக் குறிக்கிறது.
- இது சம்ஹைன் எனப்படும் பண்டைய செல்டிக் மொழி மக்களின் திருவிழாவில் இருந்து தோன்றியதாக கருதப்படுகிறது.
- சம்ஹைன் என்பது அறுவடைக் காலம் நிறைவடைவதையும், குளிர்காலத்தின் ஒரு தொடக்கத்தையும் கொண்டாடும் திருவிழாவாகும்.

## உலக நகரங்கள் தினம் - அக்டோபர் 31

- உலகளாவிய நகரமயமாக்கலில் சர்வதேசச் சமூகத்தின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வாய்ப்பாக இந்த நாள் விளங்குகிறது.
- இது நகரமயமாக்கலின் சவால்களை எதிர்கொள்ளச் செய்வதில் நாடுகளிடையே பெரு ஒத்துழைப்பை மேம்படுத்துவதோடு, உலகம் முழுவதுமான ஒரு நிலையான நகர்ப்புற மேம்பாட்டிற்குப் பங்களிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "அனைவருக்குமான நிலையான நகர்ப்புற எதிர்காலத்திற்கு நிதியளித்தல்" என்பதாகும்.



# இதரச் செய்திகள்

## ஹைஃபா போரின் 105வது ஆண்டு நிறைவு

- முதலாம் உலகப் போரின் போது, ஒட்டோமான் பேரரசுக்கு எதிரான சினாய் மற்றும் பாலஸ்தீனப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக ஹைஃபா போர் நடத்தப்பட்டது.
- முக்கியமாக போரில் ஈடுபட்ட மைசூர், ஹைதராபாத் மற்றும் ஜோத்பூர் ஆகிய மூன்று இந்தியக் குதிரைப்படை வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக இந்திய ராணுவம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 23 ஆம் தேதியினை 'ஹைஃபா தினமாக' அனுசரிக்கிறது.
- 15வது (அரசுக் காவல்பணி) குதிரைப்படைப் வீரர்கள் அடங்கிய படைப்பிரிவானது, முக்கியமான துறைமுகங்களைக் கைப்பற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட நிலையில் இதில் பெரும்பாலும் இந்திய வீரர்கள் இடம் பெற்றிருந்தனர்.
- தல்பத் சிங் ஷெகாவத் "ஹைஃபாவின் நாயகன்" என்ற அழியாதப் புகழைப் பெற்றார்.
- இந்தப் போர் காரணமாகப் பின்வரும் நிகழ்வுகள் நடைபெற்றன:
    - ஒட்டோமான் பேரரசின் பிரிவினை,
    - 1923 ஆம் ஆண்டில் துருக்கியக் குடியரசின் உருவாக்கத்திற்கும், 1932 ஆம் ஆண்டில் ஈராக் இராட்சியத்தின் உருவாக்கத்திற்கும் வழி வகுத்தது,
    - 1943 ஆம் ஆண்டில் லெபனான் குடியரசு உருவாக்கம்,
    - 1946 ஆம் ஆண்டில் ஜோர்டானின் ஹாஷிமைட் இராட்சியம் மற்றும் சிரிய அரபு குடியரசு உருவாக்கம் மற்றும்
    - 1948 ஆம் ஆண்டில் இஸ்ரேல் நாடு ஆகியவற்றின் உருவாக்கம்.


## டோட்டோ சப்தா சங்கிரகா அகராதி

- டோட்டோ என்ற பழங்குடி மக்களால் பேசப்படும் ஒரு சீன-திபெத்திய மொழியான டோட்டோ என்பது வங்காள எழுத்து வடிவில் எழுதப்பட்டுள்ளது.
- பூடான் எல்லையை ஒட்டிய மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளில் வசிக்கும் 1,600 பேர் பேசும் மொழிக்கு அகராதி கிடைக்கப்பெற உள்ளது.
- இதன் அகராதி என்பது இந்த மொழியின் சொற்களஞ்சியத்தை அச்சிடுவதன் மூலம் இதுவரை வாய்மொழியாக மட்டுமே உயிர் பெற்றிருந்த மொழியைப் பாதுகாக்கும் முயற்சியின் ஒரு படிநிலையாகும்.
- டோட்டோ எழுத்து வடிவம் ஆனது இன்னும் ஆரம்ப நிலையில் உள்ளதோடு இந்தப் பழங்குடியினர் வங்காள எழுத்து வடிவங்களையே நன்கு அறிந்திருக்கிறார்கள்.

## மத்திய ஆண்டு மனை விற்பனைக் கண்ணோட்ட அறிக்கை 2023

- 'இந்திய மனை விற்பனை துறை: மாபெரும் முன்னேற்றங்களை காணுதல் - மத்திய ஆண்டு மனை விற்பனைக் கண்ணோட்ட அறிக்கை 2023 என்ற அறிக்கையினை CBRE-CII என்ற அமைப்பு சமீபத்தில் வெளியிட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் முன்னணி ஆறு நகரங்களில் பசுமைச் சான்று அளிக்கப்பட்ட அலுவலக இடங்கள் 36 சதவிகிதம் அதிகரித்துள்ளன.

- இது சுமார் 342 மில்லியன் சதுர அடி அளவாகும்.
- பெங்களூர், டெல்லி-தேசிய தலைநகரப் பகுதி மற்றும் மும்பை ஆகியவை பசுமை அலுவலகங்கள் முன்னெடுப்பில் முன்னணியில் உள்ளன.




## "வாக் நாக்" ஆயுதத்தினை மகாராஷ்டிரா கொண்டு வருவதற்கு ஒப்பந்தம்



- விக்டோரியா மற்றும் ஆல்பர்ட் (V மற்றும் A) அருங்காட்சியகம் ஆனது மகாராஷ்டிரா அரசாங்கத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, 17 ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற 'புலி நகம்' என்ற ஆயுதத்தினை இந்திய அரசு 3 ஆண்டுகளுக்கு மும்பை அருங்காட்சியகத்தில் காட்சிப் படுத்த முடியும்.
- இந்த ஆயுதம் ஆனது, ஒரு காலத்தில் மராட்டிய அரசர் சத்ரபதி சிவாஜி அவர்களால் பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படுவதால் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- இந்த 'புலி நகங்கள்' வாக் நாக் என்றும் அழைக்கப் படுகின்றன.
- நாட்டுப்புறக் கதைகளில் கூறப்படும் இந்த ஆயுதங்கள், வியத்தகு இராணுவப் போர்களில் முக்கியப் பங்கு வகித்ததாகக் கூறப்படுகிறது.
- 1659 ஆம் ஆண்டில், சத்ரபதி சிவாஜி அவர்கள், இந்த உலோக நகங்களைத் தனது கையில் மறைத்து, பீஜப்பூர் இராணுவத் தளபதியான அப்சல் கானுக்கு எதிரானப் போரில் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.


## வெள்ளப் பாதிப்பு அபாய மண்டலங்களில் மனிதக் குடியிருப்புகள்




- உலக வங்கியின் அறிக்கையின்படி, 1985 ஆம் ஆண்டிலிருந்து உலகின் அபாயகரமான வெள்ளப் பகுதிகளில் நிறுவப்படும் மக்கள் குடியேற்றம் 122 சதவீதம் அதிகரித்துள்ளது.
- உலகின் ஒட்டுமொத்தக் குடியிருப்பு கட்டமைப்புப் பகுதிகள் 1985 முதல் 2015 ஆம் ஆண்டு வரை 85 சதவீதம் அதிகரித்துள்ளன.
- அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகள் போன்ற செல்வ வளம் மிக்க நாடுகளில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளை விட பாதுகாப்பான பகுதிகளில் தான் குடியிருப்புகள் அதிகளவில் உள்ளன.
- சீனா மற்றும் வியட்நாம் ஆகிய இரண்டு நாடுகளில் குடியிருப்புகளின் பரவல் கடந்த 30 ஆண்டுகளில் மும்மடங்காக அதிகரித்துள்ளன.
- பெரும்பாலான நாடுகளில், குறிப்பாக கிழக்கு ஆசியாவில், வறண்ட பகுதிகளை விட வழக்கமாக வெள்ளப் பாதிப்பு ஏற்படும் மண்டலங்கள் மற்றும் வெள்ளப் பாதிப்பு ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புள்ள மண்டலங்களில் மிகவும் அதிகக் குடியிருப்புகள் அமைக்கப் பட்டுள்ளன.
- கடந்த மாதம் பேரழிவுகரமான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட லிபியா நாட்டின் மோசமான வெள்ளப் பாதிப்பு ஏற்படக் கூடிய மண்டலங்களில் அமைந்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 83 சதவீதம் அதிகரித்துள்ளது.
- கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டில் பேரழிவுகரமான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் நாட்டிலும் அவற்றின் எண்ணிக்கை 89 சதவீதம் அதிகரித்துள்ளது.

## உலகப் பிரதானக் குடியிருப்பு குறியீடு 2023

- நைட் ஃபிராங்க் எனப்படும் லண்டனைச் சேர்ந்த மனை விற்பனை ஆலோசனை வழங்கீட்டு நிறுவனமானது உலகப் பிரதானக் குடியிருப்பு குறியீட்டினை வெளியிட்டு ள்ளது.
- இந்த அறிக்கையானது மும்பை நகரினை 19வது இடத்திலும், பெங்களூருவினை 22வது இடத்திலும், புது டெல்லியினை 25வது இடத்திலும் தரவரிசைப்படுத்தியுள்ளது.
- துருக்கிய தலைநகர் அங்காரா 105.9 சதவீத வளர்ச்சி விகிதத்துடன் இக்குறியீட்டில் முன்னணியில் உள்ள நிலையில் இஸ்தான்புல் 85.1 சதவீதத்துடன் இதில் இரண்டாவது இடத்தில் உள்ளது.




## உலகின் சிறந்த வேலையளிப்பு நிறுவனங்கள் 2023 – NTPC





- இந்தியாவில் உள்ள எரிசக்தி நிறுவனமான தேசிய அனல்மின் கழக நிறுவனமானது (NTPC), "2023 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த வேலையளிப்பு நிறுவனங்களில்" ஒன்று எனும் சிறப்பைப் பெற்றுள்ளது.
- உலகின் தலைசிறந்த 700 நிறுவனங்களில் NTPC நிறுவனம் 261வது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரே இந்திய அரசின் நிறுவனம் இதுவாகும்.

## பண்டைய மகரந்த பகுப்பாய்வு

- மகரந்தத் தூள்களின் பகுப்பாய்வு ஆனது, ஆப்பிரிக்காவில் இருந்த ஆதி மனிதர்கள் ஐரோப்பா மற்றும் ஆசியா போன்ற பகுதிகளுக்கு எப்படி இடம்பெயர்ந்தார்கள் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது.
- அதிகரித்த வெப்பநிலையானது சைபீரியா வரை காடுகள் பரவ வழி வகுத்து, அங்கு ஆதி மனிதர்கள் இடம்பெயர்வதை எளிதாக்கியதாக மகரந்தத் தூள் தரவு குறிப்பிடச் செய்கிறது.
- அவர்கள் ரஷ்யாவின் சைபீரியாவில் உள்ள பைக்கால் ஏரியைச் சுற்றியுள்ள ப்ளீஸ்டோசீன் காலத்திய தாவரச் சமூகங்களை அந்தப் பகுதியில் உள்ள ஹோமோ சேபியன்ஸின் பழமையான தொல்பொருள் தடயங்களுடன் ஒப்பிட்டனர்.

- ப்ளீஸ்டோசீன் காலம் ஆனது இரண்டு மில்லியன் முதல் 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையதாகவும், மனித பரிணாம வளர்ச்சியின் காலமாகவும் கருதப்படுகிறது.
- ஏறத்தாழ 45,000-50,000 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த புலம் பெயர்வு நிகழ்வில் இந்த ஆய்வு கவனம் செலுத்துகிறது.




## முஷ்க் புட்ஜி அரிசி உற்பத்தி





- ஜம்மு மற்றும் காஷ்மீர் அரசு அதிகாரிகளின் முன்னெடுப்பினால் முஷ்க் புட்ஜி அரிசி விளைச்சலில் பெரும் ஊக்கம் பெற உள்ளது.
- அடுத்த மூன்று ஆண்டுகளில் அதன் சாகுபடி பரப்பை 5,000 ஹெக்டேராக விரிவுபடுத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.
- இது காஷ்மீரைச் சேர்ந்த உள்நாட்டு நறுமண அரிசி வகையாகும்.
- முஷ்க் புட்ஜி அரிசிக்கு சமீபத்தில் புவிசார் குறியீடு வழங்கப் பட்டது.

## சிறிய பனியுகப் பருவநிலை பற்றிய வழக்கமான கருத்துக்கள்

- பொது ஆண்டு 1671-1942 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட உலகளாவிய பருவநிலை நிகழ்வான சிறியப் பனி யுகம் (LIA) பற்றிய ஒரு புதிய ஆய்வானது, இந்த யுகமானது ஈரநிலையோடு இருந்ததாகவும், எல்லா இடத்திலும் ஒரே சீரான குளிர் மற்றும் வறண்ட நிலையில் காணப்படவில்லை என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

- இந்த காலகட்டத்தில் பருவமழை குறைந்ததையடுத்து ஒரே சீரான குளிர் மற்றும் வறண்டப் பருவநிலை அப்போது திகழ்ந்தது என்ற வழக்கமான நம்பிக்கைகளுக்கு இது சவால் விடுக்கிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளானது கோடைகாலத் தென்மேற்குப் பருவமழை (SWM) மற்றும் குளிர்கால வடகிழக்குப் பருவமழை (NEM) ஆகிய இரண்டையும் பெறுகிறது.
- கடந்த ஆயிரம் ஆண்டு காலத்திலிருந்தப் பருவமழையில் பதிவான பல்வேறு ஏற்ற இறக்கங்களைப் புரிந்து கொள்வதற்கு SWM மற்றும் NEM ஆகிய இரண்டின் தாக்கங்கள் பெற்ற பகுதிகளில் உள்ள தாவரங்களின் மாறுநிலை இயக்கங்கள் மற்றும் அது தொடர்பான நீரியல் பருவ நிலை மாறுபாடுகளை ஆராய்வது மிக இன்றியமையாதது ஆகும்.
- பொது ஆண்டு 1219 முதல் 1942 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மகரந்தம் சார்ந்தத் தாவரங்களின் மாறுநிலை இயக்கங்கள் மற்றும் சமகால பருவ நிலை மாற்றம் பருவமழை மாறுபாடு பற்றிய ஒரு ஆய்வானது மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து பெறப்பட்டுள்ளது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில், NEM தாக்கத்தின் அதிகரித்ததன் காரணமாக சிறு உறை பனிக்காலத்தின் (LIA) போது ஈரமான நிலைகள் இருந்ததை இந்த ஆய்வானது எடுத்துரைக்கிறது.
- இந்த ஈரமான சிறு உறைபனிக்காலமானது அந்தக் காலத்துடன் தொடர்புடைய எதிர் பார்க்கப் பட்ட வறண்டப் பருவநிலைக்கு முரணாக உள்ளது.
- வெப்ப மண்டலத்திடை காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் (ITCZ) வடக்கு நோக்கி நகர்தல், நேர்மறையான வெப்பநிலை முரண்பாடுகள், அதிகரித்தச் சூரிய செறிவுப் பகுதிகள் மற்றும் அதிக சூரிய செயல்பாடு ஆகியவை பருவநிலை மாற்றம் மற்றும் SWM தாக்கம் ஆகியவற்றை அதிகரித்திருக்கலாம்.
- வடக்கு அரைக்கோளத்தில் குளிர் சூழல் நிலவும்போது, பூமத்திய ரேகைப் பகுதிகள் முழுவதும் வடக்கு நோக்கிய ஆற்றல் பாய்ச்சலின் விளைவாக வெப்ப மண்டலத்திடை காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் தெற்கு நோக்கி நகர்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★